# ஆண்டறிக்கை
# 2020

## இலங்கை மகாவலி அதிகார சபை

## இலகை மகாவலி அதிகார சயின் ஆண்டறிக்கை – 2020

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | |
|---|---|
| நோக்கு மற்றும் குறிக்கோள் | 1 |
| வரலாற்றுப் பின்னணி | 2-6 |
| 2020 ஆண்டில் பணிப்பாளர் சபையின் அமைப்பு | 7 |
| சிரேஷ்ட முகாமைத்துவம் | 8-10 |
| 2020 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் நாயகத்தின் மதிப்புரை | 11-12 |
| பணிப்பாளர் சபையின் சுருக்கக் குறிப்பு | 13 |
| 2020 ஆண்டின் கணக்காய்வுக் குழு அறிக்கை | 14-15 |
| கடந்த 07 ஆண்டுகளுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் | 15-17 |
| இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கங்களின் | 18 |

| | | |
|---|---|---|
| **பாகம் 01** | **நிர்வாக அறிக்கை** | |
| **முதலாவது அத்தியாயம்** | **இலங்கை மகாவலி அதிகார சபையை நிருவுதல்** | **20-44** |
| | இலங்கை மகாவலி அதிகார சபையின் அமைப்பு மற்றும் பணி வினைகள் கட்டமைப்பு | 21 |
| | மகாவலி வலயங்களின் கட்டமைப்பு மற்றும் | 23-37 |
| | நிருவாகம்<br>திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு | 37 |
| | உள்ளக கணக்காய்வுப் பிரிவு | 38 |
| | நீரியல் முகாமைத்துவச் செயலகம் | 38-43 |
| | கொள்முதல் பிரிவு | 43-44 |
| **இரண்டாம் அத்தியாயம்** | **தொழில்நுட்ப சேவைப் பிரிவு** | **45-95** |
| | வகிபாகங்கள் | 45 |
| | செயற்திட்ட திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துதல் | 45-47 |
| | தாழ் பள்ளத்தாக்கு அபிவிருத்திப் பிரிவு | 48-49 |
| | பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் | 49-52 |

| | **உள்ளடக்கம்** | **பக்கம்** |
|---|---|---|
| | ஆற்று வடிநில முகாமைத்துவ அலுவலகம் | 52-56 |
| | மின் மற்றும் இயந்திரவியல் பிரிவு | 57-69 |
| | பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு பிரிவு | 70-79 |
| | காணி உபயோக திட்டமிடல் பிரிவு | 80-83 |
| | வன மற்றும் சுற்றாடல் பிரிவு | 84-95 |
| **மூன்றாம் அத்தியாயம்** | **அபிவிருத்திப் பிரிவு** | **95-137** |
| | காணிப் பிரிவு | 97-97 |
| | விவசாய அபிவிருத்திப் பிரிவு | 98-110 |
| | மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு | 111-122 |
| | தாபன அபிவிருத்திப் பிரிவு | 122-126 |
| | வியாபார அபிவிருத்திப் பிரிவு | 127-133 |
| | ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் விசேட செயற்திட்டப் பிரிவு | 134-137 |
| **நான்காம் அத்தியாயம்** | **மனித வள மற்றும் நிதி முகாமைத்துவப் பிரிவு** | **138-161** |
| | ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவு | 138-140 |
| | சட்டப் பிரிவு | 140-141 |
| | நிதிப் பிரிவு | 141-143 |
| | மகாவலி பாதுகாப்புப் படையணி | 144-146 |
| | மகாவலி கேந்திர மையம் | 147-155 |
| | போக்குவரத்துப் பிரிவு | 156-161 |
| **ஐந்தாம் அத்தியாயம்** | இ.ம.அ.சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள் | 162-163 |
| **பாகம் 02 -** | வருடாந்த கணக்குகள் | 164-181 |
| **பாகம் 03 -** | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 182-200 |
| **பாகம் 04** - | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் வாதுரை | 201-214 |
| **பாகம் 05 -** | இ.ம.அ.சபையின் மொத்த செயலாற்றுகை | 215-228 |

## நோக்கு

நிலைபெறுதகு விவசாயம், புதுப்பிக்கத்தகு வலு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் மகாவலி அதிகார பிரதேசங்களில் வசிக்கின்ற பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக நிலத்தை மற்றும் நீரை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான இலங்கையின் அதி சிறந்த தாபனமாக மாறுதல்.

## குறிக்கோள்

மகாவலி சமூகம் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக புதுப்பிக்கத்தகு வலுவை தோற்றுவித்தல், பசுமைச் சூழல் மற்றும் சூழற் தோழமையுடைய சுற்றுலா தொழில்துறையை உதவியாகக் கொண்டு நவீன தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புத்தாக்க மற்றும் நிலைபெறுதகு விவசாய உற்பத்தித் திறனிற்காக நிலம் மற்றும் நீர் வளத்தை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக நெறிப்படுத்துதல்.

## வரலாற்றுப் பின்னணி

மகாவலி அபிவிருத்தித் திட்டமானது இலங்கையில் இதுவரையில் செயற்படுத்தப்பட்டுள்ள மாபெரும் பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகும். அடிப்படையாக உலர் வலயங்களில் கிராமிய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட இச்செயற்திட்டமானது 1968 ஆம் ஆண்டு அக்காலத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கத்தால் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்/ உணவு மற்றும் விவசாயத் தாபனத்தின் (UNDP/FAO) மூலம் வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவிகளுடன் திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய மலைநாட்டில் காணப்படுகின்ற இயற்கை நீர் வளத்தை உலர் வலயங்களின் விவசாயத்திற்காக மற்றும் குடியிருப்பு அபிவிருத்திகளுக்காக பயன்படுத்தும் செயல்பாட்டில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பாரிய வகிபாகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் சனத்தொகை அதிகரிப்பானது சடுதியாக அதிகரித்தமையால் எழுந்த இடைப் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடும் பொழுது உற்பத்தி வேகத்தை அதிகரிப்பது தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டி ஏற்பட்டது. 1969 ஆம் ஆண்டு இலங்கையின் சனத்தொகை 11.8 மில்லியனாக காணப்பட்டது. இது 1940 ஆம் ஆண்டு காணப்பட்ட சனத்தொகையின் இரு மடங்காகுவதுடன் வருடாந்த சனத்தொகை விருத்தி அதிகரிப்பு 3.1% ஆக காணப்பட்டது. இவ்வாறு சனத்தொகை அதிகரித்தமையால் உணவிற்காக 1980 ஆம் ஆண்டாகும் போது அரிசி 1.8 மில்லியன் மெட்ரிக் தொன் தேவைப்படும் என ஊகிக்கப்பட்டது. எனினும், 1969 ஆம் ஆண்டில் அரிசி 0.7 மில்லியன் மெட்ரிக் தொன் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டது. அதைப் போலவே, தொழிற்சாலை மேம்பாட்டிற்கு மற்றும் வீட்டுப் பயன்பாட்டிற்காக மின்சாரமானது மணித்தியாலத்திற்கு 2000 கிகா வொட் தேவைப்பட்டது. எனினும், 1969 ஆம் ஆண்டாகும் போது மின் உற்பத்தியானது வருடத்திற்கு 470 கிகா வொட்டாக மாத்திரமே காணப்பட்டது. அதில் 388 மணித்தியால கிகா வொட்டானது நீர் மின் உற்பத்தியின் மூலமாகவும், எஞ்சிய தொகை பெற்றோலிய தகனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அனல் மின் உற்பத்தியாகும். மேலும், 1960 – 1967 கால எல்லையில் அரிசி 466,000 மெட்ரிக் தொன் வருடாந்தம் இறக்குமதி செய்யப்பட்டதுடன், அதற்காக ஆண்டொன்றிற்கு 200 மில்லியன் ரூபாய் வீதம் வெளிப்பாய்ச்சல் இடம்பெற்றுள்ளது. இதைத் தவிர, உப உணவுப் பயிர்களுக்காக 139 மில்லியன் ரூபாயும் வருடாந்தம் செலவாகி உள்ளது. அச்செலவானது மிக அதிகமான பெறுமதியாகும்.

இலங்கையில் ஈர வலயத்தின் பக்கம் மக்கள் ஒன்றுதிரள்வது காணக்கூடிதாக இருந்தது. ஈர வலயத்தில் சனத்தொகையானது சதுர கிலோமீட்டரிற்கு 465 ஆக காணப்பட்டதுடன் உலர் வலயத்தில் சதுர கிலோமீட்டரிற்கு 80 ஆக மாத்திரமே காணப்பட்டது. நாட்டில் முழு நிலப் பரப்பில் 66% உலர் வலயத்திற்கு உட்படுவதுடன் சனத்தொகையில் 70% மக்கள் ஈர வலயத்திலேயே வாழ்ந்தனர். இதற்கமைய, உலர் வலயத்தில் பாரிய நிலப் பரப்பில் மிகக் குறைந்த சனத்தொகைப் பரவலே காணக்கூடியதாக இருந்தது. அதற்கமைய, இலங்கையில் ஏனைய ஆறுகளுடன் ஒப்பிடும் பொழுது ஈர வலயத்தில் மத்திய மலைநாட்டில் ஊற்றெடுக்கும் மகாவலி கங்கையானது நாட்டின் முழு நிலப் பரப்பில் 6 இல் 1 இற்குக் கிடைக்கின்ற மழை நீரை தனது பிடிக்குள் கொண்டு உலர் வலயத்தின் ஊடாக கடலை நோக்கி வழிந்தோடுகின்ற மகாவலி கங்கையானது வருடத்தின் அனைத்து காலங்களிலும் வளம்பொருந்திய நதியாகும். இதற்கமைய, மகாவலி கங்கையை உலர் வலயத்திற்குத் திசை திருப்புவதன் மூலம் கிடைக்கப் பெறுகின்ற நீரின் மூலம் உலர் வலயத்தின் விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும், மேல் மகாவலி அதிகார பிரதேசத்தை அண்மித்து நீர்மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதன் மூலம் இலங்கையின் எதிர்கால தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என உணரப்பட்டது. இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் பெறுபேறாக அரசாங்கம் மேற்கொண்ட கோரிக்கைக்கு அமைய இலங்கைக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் தூதுக் குழுவொன்று உலர் வலயத்தில் காணி அபிவிருத்திக்கான வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கென 1956 ஆம் ஆண்டு இயலுமை ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளது. அத்துடன் இலங்கையில் நீர்ப்பாசன மற்றும் நில அளவீட்டுத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கனேடிய அரசின் தொழில்நுட்ப உதவியுடன் கனேடியன் ஹன்டின் சேர்வே கோர்பரேஷன் நிறுவனமும் இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமைய மகாவலி கங்கை தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. இந்நிறுவனம் அவ்வாய்வு தொடர்பாக சுயாதீன

அறிக்கைகள் இரண்டை 1961 ஆம் ஆண்டு முன்வைத்துள்ளது. இவ்வறிக்கையானது அங்கீகாரத்திற்காக 1962 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

ஒட்டுமொத்த மகாவலி வடிநிலத்தினதும் நீர் வளம் தொடர்பாக முழுமையான ஆய்வு ஒன்றை மேற்கொள்ளாமல் மகாவலி நீரின் ஒரு பகுதியை திசை திருப்புவதானது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால், இலங்கை நிபுணர்களின் அபிப்பிராயம் காரணமாக பாராளுமன்றம் இப்பிரேரணையை அங்கீகரிக்கவில்லை. அதன் பின்னர், மகாவலி கங்கை உட்பட ஏனைய நதிகளை அண்மித்த காணிகள் மற்றும் நீர் வளங்கள் தொடர்பாக ஒட்டுமொத்த ஆய்வு ஒன்றை மேற்கொண்டு அபிவிருத்தி தொடர்பாக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய செயற்திட்டங்களைத் தெரிவு செய்து சுயாதீன பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு 1962 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு கோரிக்கை முன்வைக்க வேண்டி ஏற்பட்டது. அதன் பெறுபேறாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மூலம் உணவு மற்றும் விவசாய அமைப்பின் விசேட நிபுணர்கள் உள்ளடங்கிய குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பி வைத்தது. அதற்கு மேலதிகமாக, அக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இலங்கையைச் சேர்ந்த விசேட நிபுணர்கள் குழு மற்றும் பதவியணியும் நியமிக்கப்பட்டது.

நான்கு வருடங்கள் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வின் பின்னர் 1968 ஆம் ஆண்டு 14 புறம்பான விசேட அறிக்கைகளை உள்ளடக்கிய 03 தொகுதிகளைக் கொண்ட ஆய்வு அறிக்கை பிரசுரிக்கப்பட்டது. இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டமானது 1968 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

வட மத்திய மாகாண மற்றும் கிழக்கு மாகாணத்தை அண்டிய அனுகூலங்களைப் பெறுகின்ற பிரதேசங்கள் 13 வலயங்களாக பிரிக்கப்பட்டதுடன், அதனை ஆங்கில அரிச்சுவடிப்படி A இல் இருந்து M வரை பெயரிடப்பட்டது. பொருளாதார ரீதியில் அதிகூடிய விளைத்திறனான மற்றும் குறைந்த முதலீட்டின் ஊடாக அதிகூடிய பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்ள முடியுமான செயற்திட்டங்கள் முதலாம் கட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டன.

## மகாவலி பெருந்திட்டம்.

மகாவலி பெருந்திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது யாதெனில், மகாவலி கங்கையின் நீர் வளத்தின் மூலம் சுமார் 6,900 மில்லியன் கன அடி நீரை நீர் மின் உற்பத்தி மற்றும் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காக விநியோகிப்பதாகும். 15 நீர்த் தேக்கங்களை அமைத்து அதில் 11 ஐ பிரதானமாக மின் உற்பத்திக்காக பயன்படுத்துவது இரண்டாவது நோக்கமாக காணப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் உணவு மற்றும் விவசாய அமைப்பால் முன்வைக்கப்பட்ட மகாவலி பெருந்திட்டத்திற்கு அமைய மகாவலி கங்கை வடிநிலத்தில் மற்றும் உலர் வலயத்தினுள் காணப்படுகின்ற ஏனைய நதிகளின் வடிநிலங்களில் அமைந்திருந்த நிலப்பரப்பு, 364,372 ஹெக்டயர் இற்காக சிறுபோகம் மற்றும் பெரும் போகம் ஆகிய இரு பருவங்களின் போதும் நீர்ப்பாசன நீரை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இந்த மொத்த நிலப்பரப்பில் 264,777 ஹெக்டயார் நிலப்பரப்பானது விவசாயத்திற்கு திறந்துவிடப்படவிருக்கும் புதிய நிலங்களாக காணப்பட்டன. எஞ்சிய 110,404 ஹெக்டயார் நிலப்பரப்பில் ஏற்கனவே ஒரு பருவத்தின் போது மாத்திரம் சாகுபடி செய்யப்பட்டிருந்து. திட்டமிடப்பட்டிருக்கும் நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்கள் என்பவற்றின் ஆற்றலைப் பயன்படுத்தி மணித்தியாலத்திற்கு 2037 கிகா வொட் அலகு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்ற விடயமும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. மகாவலி பெருந்திட்டத்தின் பிரகாரம் 30 வருட காலப் பிரிவின் போது இவ்வபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. நிதிகளின் உபயோகம் மற்றும் அமுலாக்கம் என்பவற்றின் வசதியைக் கருத்திற் கொண்டு, குறிப்பாக அபிவிருத்தியின் பயனானது அனைவருக்கும் கிட்ட வேண்டும் என்ற விடயத்தைக் கருத்திற் கொண்டு இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பணிகள் 03 கட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தன;

**I முதலாவது கட்டம்**

முதலாவது கட்டமானது 1969 – 1980 காலப்பரிவின் போது அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டு இருந்தது. இக்கட்டத்தின் போது 74,494 ஹெக்டயார் புதிய நிலங்களுக்கும், 58,300 ஹெக்டயார் பழைய நிலங்களுக்கும் நீர்ப்பாசன நீரை விநியோகிப்பதற்கு வருடாந்தம் மணித்தியாலத்திற்கு 820 கிகா வொட் நிலையான மின் வலுவை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்தது. இக்கட்டத்தின் நடவடிக்கைகள் 03 செயற்திட்டங்களாக மேற்கொள்வதற்குப் பிரிக்கப்பட்டு இருந்தன;

- பொல்கொல்ல திசை திருப்பல் (1969 – 1973)
- விக்டோரியா/ மினிப்பே திசை திருப்பல் (1973 – 1977)
- மொரகஹகந்த பல்நோக்கு அலகு

**II இரண்டாவது கட்டம்**

இவ் இரண்டாவது கட்டத்தின் போது மாதுறு ஓயா நீர்த்தேக்கம், பல்நோக்குக் கட்டிடத் தொகுதி, கந்தகாடு அணைக்கட்டு போன்ற முதன்மைப் பணிப் பிரிவுகளில் மகாவலி மற்றும் மாதுறு ஓயா வடிநிலங்களில் அமைந்திருக்கும் 93,117 ஹெக்டயார் நிலப்பரப்பிற்கு விவசாயம் செய்வதற்காக நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கப் பெறுவதுடன், இதில் 8502 ஹெக்டயார் நிலப்பரப்பானது ஏற்கனவே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலப்பரப்பாக கணக்கில் கொள்ளப்பட்டிருந்தது. 15 மெகா வொட் நிறுவப்பட்ட ஆற்றலைக் கொண்ட நீர் மின் உற்பத்தி நிலையத்தை தல்தெனியவில் நிர்மாணிப்பதற்கும், மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தை வளப்படுத்துவதற்காக உல்ஹிடிய ரத்கிந்த நீர்த்தேக்கத்தில் இருந்து சுரங்கப் பாதை ஒன்றை அமைப்பதற்கும், மாதுறு ஓயா நீர்த்தேக்கத்திற்கு அருகில் 4.9 மெகா வொட் நிறுவப்பட்ட ஆற்றலைக் கொண்ட சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நிர்மாணிப்பது இதன் பிரதான பணிகளாகும்.

**III மூன்றாவது கட்டம்**

இதன் மூலம் நாட்டின் வட மத்திய மாகாணத்தில் 105,668 ஹெக்டயார் புதிய நிலப்பரப்புகள் அபிவிருத்தி செய்யப்படும். நீர் மின் உற்பத்தியின் இறுதித் திட்டத்தைச் செயற்படுத்தி 293 மெகா வொட் அலகு நிறுவப்பட்ட ஆற்றல் உடைய மின் உற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்படுவதுடன், அதன் மூலம் வருடாந்தம் மணித்தியாலத்திற்கு 1169 கிகா வொட் அலகு நிலையான மின் உற்பத்தி செய்யப்படும். பழைய மினிபே இடது கரைக் கால்வாயை அபிவிருத்தி செய்தல், 164 கிலோ மீட்டர் நீளமான வட மத்திய கால்வாயை நிர்மாணித்தல், ரொடலாவல, உமா ஓயா, றண்தம்பே, கொத்மலை மற்றும் களு கங்கை ஆகிய நீர்த் தேக்கங்களை நிர்மாணத்தில் இக்கட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.
எனினும், நடப்புத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி மகாவலி பெருந்திட்ட அபிவிருத்தியானது 03 கட்டங்களின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

## மகாவலி பெருந்திட்டத்தைச் செயற்படுத்துதல் (01 ஆவது அபிவிருத்திக் கட்டம்)

மகாவலி பெருந்திட்டதின் கீழ் முதலாவது செயற்திட்டமாக பொல்கொல்ல மற்றும் போவதென்ன திட்டமானது 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், 1976 ஆம் ஆண்டாகும் பொழுது கட்டுமானப் பணிகளை பூர்த்தி செய்ய முடியுமாக இருந்தது. இதன் மூலம், முன்பு ஏற்கனவே காணப்பட்ட 16,000 ஹெக்டயார் நிலப்பரப்பிற்கு மற்றும் 23,000 ஹெக்டயார் புதிய நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசன நீரை விநியோகிப்பதற்கும், 40 மெகா வொட் நிறுவப்பட்ட ஆற்றலைக் கொண்ட நீர் மின்னை உற்பத்தி செய்தற்கும் முடியுமாக இருந்தது. இத் திட்டத்தின் கீழ் மகாவலி எச் வலயத்திற்குரிய கலா ஓயா பள்ளத்தாக்கில் 23,000 விவசாய குடும்பங்கள் 1977 ஆம் ஆண்டாகும் பொழுது குடியேற்றப்பட்டன. தற்பொழுது மகாவலி திட்டத்தின் கீழ் எச் வலயத்தில் சகல குடியேற்ற நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு குடியேற்றப்பட்டுள்ள மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 39,500 ஆகும்.

1977 ஆம் ஆண்டாகும் பொழுது இலங்கைப் பொருளாதாரம் பல சிக்கல்களுக்கு முகங்கொடுத்திருந்தது. அரிசி உட்பட விவசாய உற்பத்தி இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தமை பிரதான பிரச்சினையாக காணப்பட்டது. பயன்பாட்டிற்கு அவசியமாகின்ற அரிசியில் 69% மாத்திரமே நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதுடன், 31% இறக்குமதியிலேயே தங்கி இருந்தது. அதற்கு மேலதிகமாக அவசியமான பிற விவசாய உற்பத்திகள் பலவும் இறக்குமதி செய்யப்பட்டன.

1977 ஆம் ஆண்டாகும் பொழுது மின்சார சபையினால் உற்பத்தி செய்யப்பட்ட மின் கொள்ளளவானது சுமார் 408 மெகா வொட் அலகாக இருந்து வந்ததுடன், அது அச்சந்தர்ப்பத்தில் நாட்டில் நிலவி வந்த கேள்வியை நிறைவேற்றி வைப்பதற்குப் போதியதாக இருக்கவில்லை. மின் துண்டிப்பானது சாதாரண விடயமாக மாறி இருந்து வந்ததுடன், ஒரு வருடத்தில் மின்சாரம் துண்டிக்கப்படும் நாட்களின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்து இருந்தது.

இலங்கையில் வேலையின்மையானது 17% வரை அதிகரித்துக் காணப்பட்டது. வேலையின்மையைக் குறைக்க வேண்டியது அத்தியாவசிய அம்சமாகக் காணப்பட்டது. இப்பிரச்சினைக்கு துரிதமாக தீர்வு வழங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டு இருந்தது.

இப்பிரச்சினையைத் இயன்றளவு அவசரமாக தீர்க்கும் ஒரு படிமுறையாக மகாவலி அபிவிருத்திப் பெருந்திட்டத்தை துரிதப்படுத்த வேண்டும் என 1977.10.12 ஆம் திகதி அப்போதைய அரசாங்கம் தீர்மானித்தது.

## துரிதப்படுத்தப்பட மகாவலி நிகழ்ச்சித் திட்டம் (இரண்டாவது அபிவிருத்திக் கட்டம்)

மகாவலி பெருந்திட்டத்திற்குரிய தெரிவு செய்யப்பட்ட செயற்திட்டங்கள் பலவற்றை ஒரே தடவையில் ஆரம்பித்து சுமார் 06 வருட குறுகிய காலப் பிரிவில் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு 1977 இல் அரசாங்கம் தீர்மானித்தது. அதனைச் செயற்படுத்துவதற்காக புறம்பாக ஒரு அமைச்சும் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய, கொத்மலை, விக்டோரியா, ரன்தெனிகலை மற்றும் மாதுறு ஓயா நீர்த் தேக்கங்களுக்காக முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டு அவற்றைச் செயற்படுத்துவதற்காக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் இதற்கு றன்தம்பே செயற்திட்டமும் உள்ளடக்கப்பட்டது. இதில் மாதுறு ஓயாவைத் தவிர ஏனைய நீர்த்தேக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நீர் மின் உற்பத்தி செய்யப்பட்டதுடன், அதே நீரே நீர்ப்பாசனத் துறைக்கும் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கமைய, மகாவலி சி மற்றும் பி வலயங்களை அபிவிருத்தி செய்து விவசாயிகளை குடியேற்றுவதும் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது. அதற்கமைய பி வலயத்தில் 30,465 குடும்பங்களும், சி வலயத்தில் 45,488 குடும்பங்களும் குடியேற்றப்பட்டு உள்ளன.

இச்செயற்திட்டத்திற்காக முறையே சுவீடன், பெரிய பிரித்தானியா, ஜேர்மனி மற்றும் கனடா ஆகிய நாடுகள், கீழ் பள்ளத்தாக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உலக வங்கி, EEC, ஜப்பான் மற்றும் குவைத் ஆகிய நாடுகள் நிதி உதவிகளை வழங்கி உள்ளன. இச்செயற்திட்டத்தை தொடங்குவதற்காக 1979 ஆம் ஆண்டு இலங்கை மகாவலி அதிகார சபை நிறுவப்பட்டதுடன், பொறியியல் மற்றும் வடிவமைப்புப் பணிகளுக்காக மகாவலி பொறியியல் மற்றும் வடிவமைப்பு முகவர் நிலையமும், மீள் குடியேற்றுதல்களை மேற்கொள்வதற்காக மகாவலி பொருளாதார முகவர் நிலையமும் நிருவப்பட்டன. அதைப் போலவே, துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தியின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட பாரிய நீர்த்தேக்கங்களை முகாமைத்துவம் செய்வதற்காக முதன்மைப் பணிகளை நிர்வாகித்தல், நிறைவேற்றுதல், மற்றும் இயக்கற் பிரிவானது 1986 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டாகும் பொழுது துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்திச் செயற்திட்டமானது பூர்த்தி செய்யப்பட்டதுடன், அதன் மூலம் மின்சார துறை மற்றும் விவசாயத்தை மேம்படுத்துவதற்காக கணிசமான அளவில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் காரணமாக விவசாயத் துறையில் நேரடி முதலீடுகளை மேற்கொள்வதில் அரசாங்கம் தயக்கம் காட்டியமையால் மகாவலி பெருந்திட்டத்திற்குரிய

மொரகஹகந்தை நீர்த்தேக்க செயற்திட்டமானது இடைநிறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், நீண்ட காலமாக சார்புரீதியாக கோப்புக்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த அபிவிருத்திச் இச்செயற்திட்டமானது தற்பொழுது செயற்படுத்தப்படும் நிலைமைக்கு எட்டியுள்ளமை மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் பிரதிபலன்களை மேலும் விரிவுபடுத்துவதற்கு காரணமாக அமையும்.

## மகாவலி இயக்கத்தின் தற்போதைய வகிபாகம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள். (மூன்றாவது அபிவிருத்திக் கட்டம்)

மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நாட்டின் நாலா புறமும் விரிவுபடுத்தும் கட்டமாக மூன்றாவது அபிவிருத்திக் கட்டத்தைக் குறிப்பிடலாம். மொரகஹகந்தை களு கங்கை நீர்த்தேக்க முன்மொழிவின் ஊடாக வடக்கு, வட மத்திய, கிழக்கு, வட மேல், மத்திய மாகாணங்களில் சிறிய அளவான குளங்கள் 1200 இற்கு நீரை விநியோகிக்கும் நோக்கில் மொரகஹகந்தை மற்றும் களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டமானது செயற்படுத்தப்பட்டது. எலஹர பிரதேசத்தின் வயல்களுக்கு, பொலன்னறுவை பிரதேசத்தின் சகல நீர்த்தேக்கங்களுக்கும் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் சகல பிரதான நீர்த்தேக்கங்களுக்கும் ஆண்டு பூராகவும் தொடர்ச்சியாக நீர் விநியோகத்தை வழங்கி 81,000 ஹெக்டயார் புதிய பயிர்ச்செய்கை நிலப்பரப்பிற்காக நீரை விநியோகித்து விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டை தற்போசனை நாடாக மாற்றுவதற்கு பங்களிப்பு வழங்குவதும், மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி மூலம் தேசிய மின்சாரத் தொகுதிக்கு 25 மெகா வொட் அலகு கொள்ளளவை ஒன்று சேர்த்து தேசிய மின்சாரத் தேவைக்குப் பங்களிப்பு வழங்குவதும் இதன் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகும். அதைப் போலவே, செயற்திட்டத்தின் ஊடாக இடம்பெயர்ந்த மக்களுக்கு அவசியமான குடியேற்றங்களை அமைத்துக் கொடுப்பதுடன் மாத்திரம் நிறுத்தி விடாமல், சகல உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய லக்கல நகரத்தை புதிதாக நிர்மாணித்து மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கும் மாபெரும் பணியானது தற்பொழுது வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இச்செயற்திட்டத்தை 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமாகும் பொழுது இலங்கை மகாவலி அதிகார சபைக்குக் கையகப்படுத்திக் கொண்டதன் பின்னர் இலங்கை மகாவலி அதிகார சபையின் மாபெரும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் மற்றுமொரு படிமுறையின் வெற்றிகரமான நிறைவைக் காணக் கூடியதாக இருக்கும்.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையானது தமது பணிவினைகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் உமா ஓயா பல் நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டத்தை ஆரம்பித்து வைத்தது. இதன் மூலம் உமா ஓயா நதியின் வடிநில நீரை வெலிமடை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட இரு நீர்த்தேக்கங்களுக்கு ஒன்று சேர்த்து, நாட்டில் முதல் தடவையாக 15.6 கி.மீ. நீளமான சுரங்கப் பாதையின் ஊடாக கிரிந்தி ஓயா வடிநிலத்திற்கு திசை திருப்பி அனுப்பப்படுகின்றது. அதன் மூலம், ஆசியாக் கண்டத்தின் மாபெரும் நிலக்கீழ் மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக 120 மெகா வொட் அலகு கொள்ளளவை தேசிய மின்சாரத் தொகுதிக்கு ஒன்று சேர்த்து தேசிய மின்சாரத் தேவைக்கு பங்களிப்பு வழங்குவதற்கும், மிகவும் பின்தங்கிய வட மேல் மாகாணத்தின் விவசாய விளைத்திறனை மேம்படுத்துவதற்கும் மற்றும் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றுவதல் போன்ற தனது அடிப்படை நோக்கங்களை நோக்கி இச்செயற்திட்டமானது வெற்றிகரமாக பயணித்துக் கொண்டிருக்கின்றது. இச்செயற்திட்டமானது 2019 ஆம் ஆண்டு நிறைவடையும் பொழுது இலங்கை மகாவலி அதிகார சபையின் செயலூக்க நீர் முகாமைத்துவக் கட்டமைப்பிற்கு உட்படுத்தப்படும்.

இலங்கை மகாவலி அதிகார சபையின் மாபெரும் நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏனைய நீர்த்தேக்கங்களைச் சுத்தம் செய்யும் செயற்திட்டத்தைப் போன்றே, நீர் வளம் பொருந்திய பிரதேசங்கள், நதிகளின் வடிநிலங்களைப் பாதுகாக்கும் செயற்திட்டமும் தற்பொழுது இலங்கை மகாவலி அதிகார சபையின் சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நிலைபெறுதகு வலு நிகழ்சித் திட்டத்தின் கீழ் மகாவலி நீர்த்தேக்கங்களில் மிதக்கக் கூடிய சூரிய மின் படலத் தொகுதிகளைப் பொருத்துதல் மற்றும் சிறிய அளவான நீர் மின் உற்பத்திச் செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் முலம் சுற்றாடல் தோழமையான விதத்தில் தேசிய மின்சார தேவைக்கு பங்களிப்புச் செய்வதற்கும், அதன் மூலம் பாரிய வருமான வழிகளை ஏற்படுத்துவதன் மூலம், இலங்கை மகாவலி அதிகார சபையானது புதிய மூலோபாய வருமான வழிகளை இனங்கண்டு வருகின்றது.

இதனுடன், மாதுறு ஓயா தெற்குக் கரையின் அபிவிருத்திச் செயற்திட்டம், வலவ வலயம், ரம்பகெண் ஓயா, மகாவலி பி வலயம், மகாவலி எச் வலயம் ஆகிய வலயங்களை அண்மித்து மேலும் மாபெரும் அபிவிருத்திச் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதன் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபையின் மூன்றாவது கட்டத்தின் சகல அடிப்படை நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ளும் போது நாட்டின் நாலா புறமும் பரவலடைந்து தேசியப் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக விவசாய, நீர்ப்பாசன மற்றும் கால்நடை வளங்கள், மின்சக்தி உற்பத்தி, சுற்றாடல் பாதுகாப்பு போன்ற துறைகளினால் உயர்ந்தபட்ச பங்களிப்பை வழங்கும் கட்டத்தை நோக்கி படிப் படியாக முன்நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

## பணிப்பாளர் சபை தொடர்பான விபரம் – 2020

| தொடர் இலக்கம் | பெயர் / பதவி | காலம் |
|---|---|---|
| 01 | திரு. எச்.கே.டி.டப்.எம்.என்.பி. ஹபுதின்ன<br>செயலாளர்<br>மகாவலி, விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு | 2020 பெப்ரவரி |
| 02 | திரு. எம்.ஏ. தாஜுதீன்<br>மேலதிய செயலாளர் (நிர்வாகம்)<br>நீர்ப்பாசன அமைச்சு | 2020 ஆகஸ்ட் |
| 03 | பொறியியலாளர் திரு. பி.ஏ. சுனில் எஸ். பெரேரா<br>பணிப்பாளர் நாயகம்<br>இலங்கை மகாவலி அதிகார சபை | 2019 டிசம்பர் மாதம் தொடக்கம் |
| 04 | திருமதி. மலர்மதி கங்காதரன்<br>மேலதிக பணிப்பாளர் நாயகம்<br>நிதி அமைச்சு | 2020 ஜனவரி தொடக்கம் |
| 05 | திரு. ஏ.பீ.ஆர். ஜயசிங்ஹ<br>உறுப்பினர | 2020 ஜனவரி தொடக்கம் |
| 06 | திரு. கே.வி.ஜி. ரஞ்சித் டி சில்வா<br>உறுப்பினர் | 2020 ஜனவரி தொடக்கம் |

# <u>சிரேஷ்ட முகாமைத்துவம்</u>

**இலங்கை மகாவலி அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டு நிறைவடையும் போது இருந்த சிரேஷ்ட முகாமைத்துவம் தொடர்பான தகவல்**

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | பெயர் |
|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | பொறியியலாளர் திரு. சுனில் எஸ். பெரேரா (2019.12.24 – 2021.02.10 ஆம் திகதி வரை) |
| 02 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | - |
| 03 | பிரதி பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி) | - |
| 04 | பிரதி பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவை ) | பொறியியலாளர் திரு. பீ. ஜி. குணபால (2019.04.19 – 2021.02.06 ஆம் திகதி வரை) (பதில் கடமை) |
| 05 | பிரதி பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) | - |
| 06 | பணிப்பாளர் (ஆளணி மற்றும் நிர்வாகம்) | திருமதி. கே.ஜி. நிரோஷணா (2019.04.01 – 2020.02.12 ஆம் திகதி வரை) |
| | | திரு. எச்.எம்.கே.ஆர். ஹேரத் (2020.02.08 ஆம் திகதி தொடக்கம் 2021.04.04 ஆம் திகதி வரை) |
| 07 | பணிப்பாளர் (நிதி) | திரு. டீ.டி. பிரியந்த |
| 08 | பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு) | திருமதி. கே. ஏ. எம். சி. எம். பீரிஸ் (2017.04.24 – 2018.12.31 ஆம் திகதி வரை (ப.க), 2019.01.01. ஆம் திகதி தொடக்கம் 2020.10.01 ஆம் திகதி வரை (நிரந்தரம்) |
| 09 | பணிப்பாளர் (மகாவலி கேந்திர மையம்) | திரு. எச்.எம்.கே.ஆர். ஹேரத் (2020.02.08 ஆம் திகதி தொடக்கம் 2020.12.20 ஆம் திகதி வரை) |
| | | திரு. பீ.சி.கே. பரணகமகே (2020.12.21 – 2021.12.21 ஆம் திகதி வரை) (ஒப்பந்த அடிப்படையில்) |
| 10 | பணிப்பாளர் (விவசாயம்) | திரு. ஆர். எம். நெவில் ராஜபக்ஷ (2017.03.15 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை) |
| 11 | பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை வளம்) | திருமதி. எம். ஜி. டீ. பிரியதர்ஷனி (2018.12.20 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை) |
| 12 | பணிப்பாளர் (காணி) | திரு. டி. ஏ. ஏ. யூ. குணசேகர |

| | | |
|---|---|---|
| | | 2019.01.31 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை (வழிமொழிதலின் அடிப்படையில்) |
| 13 | பணிப்பாளர் (தாபன அபிவிருத்தி) | திரு. எம். எல்.டி.சி. அபேகுணவர்தன (பதில் கடமை) |
| 14 | பணிப்பாளர் (வணிக அபிவிருத்தி) | திருமதி. டி. கே. எச். டப்லியூ. எம். டப்லியூ. ஆர். செனவிரத்ன |
| 15 | பணிப்பாளர் (பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல்) | பொறியியலாளர் திருமதி. டீ.எம். அதபத்து (2016.05.18 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை) |
| 16 | பணிப்பாளர் (தாழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி) | பொறியியலாளர் திரு. பி. ஜீ. குணபால (2017.06.01 ஆம் திகதி தொடக்கம் 2021.02.06 ஆம் திகதி வரை) |
| 17 | பணிப்பாளர் (அடிப்படைப் பணி நிர்வாக இயக்கல் மற்றும் தாபரிப்பு) | பொறியியலாளர் திரு. எஸ். ஆர். கே. அருப்பொல (2017.02.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை) |
| 18 | பணிப்பாளர் (ஆற்று வடிநில முகாமைத்துவம்) | பொறியியலாளர் செல்வி. சந்திரா செனரத் |
| 19 | பணிப்பாளர் (காணி உபயோக திட்டமிடல்) | திருமதி. ஜே.எம்.ஐ.எச். ஜயவர்தன (பதில் கடமை) |
| 20 | பணிப்பாளர் (வன மற்றும் சுற்றாடல்) | திரு. ஏ.எம்.கே.பி. அத்தநாயக்க |
| 21 | பணிப்பாளர் (நீரியல் முகாமைத்துவ செயலகம்) | பொறியியலாளர் செல்வி ஜீ.கே.டீ. சமரதுங்க (2020.07.23 ஆம் திகதி வரை) |
| 22 | பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்) | திரு. பி. எல். பி. சேனாரத்ன (பதில் கடமை) |
| 23 | பணிப்பாளர் (ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விசேட செயற்திட்டம்) | திருமதி. டி.கே.வி. விஜயவீர |
| 24 | பணிப்பாளர் (மின் மற்றும் பொறிமுறை) | திரு. ஜே. ஆர். போபிடிய (பதில் கடமை) (2019.11.15 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை) |
| 25 | பணிப்பாளர் (சட்டம்) | திருமதி. ஆர். எல். ராஜபக்ஷ (2021.05.15 ஆம் திகதி வரை) |
| 26 | வதிவிட வணிக முகாமையாளர் (பி வலயம்) | திரு. டப்.எம்.எஸ். வீரசிங்ஹ (பதில் கடமை) (2020.01.16 – 2020.10.28 ஆம் திகதி வரை) |

| | | |
|---|---|---|
| | | திரு. பீ.ஜி. நொயெல் ஜயசிறி (பதில் கடமை)<br>(2020.10.29 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை) |
| 27 | வதிவிட வணிக முகாமையாளர் (சி வலயம்) | திரு. கே.ஏ.சி. விமல் குமார (ப.க)<br>(2020.01.01 – 2020.02.17 ஆம் திகதி வரை) |
| | | திரு. பீ.ஜி. நொயெல் ஜயசிறி (பதில் கடமை)<br>(2020.02.18 ஆம் திகதி தொடக்கம் 2020.10.25 ஆம் திகதி வரை) |
| | | திரு. ஐ.எம்.யூ.கே. குமார<br>(2020.10.26 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை) |
| 28 | வதிவிட வணிக முகாமையாளர் (டி வலயம்) | திரு. ஜே.பீ. ஜயதிலக்க (பதில் கடமை) |
| 29 | வதிவிட வணிக முகாமையாளர் (ஜீ வலயம்) | திரு. ஏ.ஜீ.டீ. ஹேமந்த ஜயசிங்ஹ (பதில் கடமை) |
| 30 | வதிவிட வணிக முகாமையாளர் (எல் வலயம்) | திரு. பீ.ஜீ.என். ஜயசிறி (பதில் கடமை)<br>(2019.02.28 – 2020.02.17 ஆம் திகதி வரை) |
| | | திரு. ஆர்.எம்.கே.பி. ரன்தெணிய (பதில் கடமை)<br>(2020.02.27 – 2021.03.08 ஆம் திகதி வரை |
| 31 | வதிவிட வணிக முகாமையாளர் (எச் வலயம்) | திரு. ஐ.எம்.யூ.கே. குமார<br>2016.04.29 – 2018.06.04 ஆம் திகதி வரை (பதில் கடமையாற்றுதல்)<br>2018.06.05 ஆம் திகதி தொடக்கம் 2020.10.25 ஆம் திகதி வரை (நிரந்தரம்) |
| 32 | வதிவிட வணிக முகாமையாளர் (விக்டோரியா வலயம்) | திரு. ஏ.எம்.ஏ.பீ.ஜீ. குணவர்தன<br>(2018.06.05 ஆம் திகதி தொடக்கம் 2021.02.03 ஆம் திகதி வரை |
| 33 | வதிவிட வணிக முகாமையாளர் (ஹுருளுவெவ வலயம்) | திரு. ஈ.எச். ஜயரத்ன (கடமை நிறைவேற்றுகின்ற)<br>(2020.11.09 ஆம் திகதி வரை) |
| 34 | வதிவிட வணிக முகாமையாளர் (ரம்பகெண் ஓயா வலயம்) | திரு. எச்.எம். விஜேரத்ன (பதில் கடமை)<br>(2018.11.01 ஆம் திகதி தொடக்கம் 2021.10.02 ஆம் திகதி வரை) |
| 35 | வதிவிட வணிக முகாமையாளர் (வலவ வலயம்) | திரு. ஏ.எல். ஒஸ்மன் டி சில்வா<br>(2019.08.31 ஆம் திகதி வரை – பதில் கடமையாற்றுதல்) மற்றும்<br>2019.09.24 ஆம் திகதி தொடக்கம் 2021.10.03 ஆம் திகதி வரை (நிரந்தரம்) |

# 2020 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் நாயகத்தின் மதிப்புரை.

மகாவலி அபிவிருத்திப் பல்நோக்க அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்காக 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கையின் நிலப்பரப்பில் சுமார் மூன்றிலொரு பாகத்தில் பரந்து விரிந்து காணப்படும் மகாவலி பிரதேசத்தின் குடித்தொகையானது கிட்டத்தட்ட பத்து இலட்சமாகும். மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப குறிக்கோள்களில் உலர் வலயத்தின் விவசாயம், மீன்பிடி, மின்சாரம் மற்றும் கால்நடை வளங்கள் ஆகிய துறைகளின் உற்பத்தி விளைத்திறனை அதிகரித்தல், வெள்ளத்தைக் கட்டுப்படுத்துதல், புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் உட்பட செல்வச் செழிப்பாக நாட்டை செயலூக்கப்படுத்துதல் என்பன உள்ளடங்குகின்றன.

தற்பொழுது மகாவலி பிரதேசங்களில் நிலவுகின்ற விளைத்திறன்களை அதிகரிப்பதற்காக விவசாய, விவசாய வர்த்தக, நீர் முகாமைத்துவம், விலங்கு உற்பத்திச் செயற்பாடுகள் மற்றும் நிலைபெறுதகு வலு உற்பத்திக்காக தொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு செயற்படுத்துவது தொடர்பாக உரிய நிறுவனங்களின் தலையீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக விடயப் பொறுப்பு அமைச்சு மற்றும் ஏனைய அரச திணைக்களங்களுடன் கைகோர்த்து செயற்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இத் துறைகள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுள்ள ஆய்வு நடவடிக்கைகளின் மூலம் வெற்றிகரமான பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டு அதன் மூலம் எதிர்வரும் காலங்களில் மகாவலி உற்பத்திகளின் விளைத்திறனை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய செயற்படுத்தப்பட்டுள்ள விஹிணியாகம, கொத்மலை இழைய வளர்ப்பு நிறுவனத்தின் செயற்பாடுகளின் வெற்றிகரமான பெறுபேறுகளும் இம்மகாவலி வலயங்களில் விவசாயம் போன்ற துறைகளில் விளைத்திறன்களை அதிகரிக்கும் நோக்கத்துடன் செயற்படுத்தப்படுகின்ற ஆய்வுகள் செயற்திட்டங்களில் உள்ளடங்குகின்றன. இளைஞர்களை விவசாயத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்காக ஊக்கப்படுத்தும் விதமாக எதிர்வரும் காலங்களில் விவசாயப் பிரச்சார அபிவிருத்திச் செயற்திட்டம் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்பொழுது மகாவலி திட்டத்தின் கீழ் நாட்டில் பாரிய விதைக்கும் பரவெல்லை உள்ளடங்கும் விதமாக நிறுவப்பட்டுள்ள நீர்ப்பாசனத் தொகுதியின் மூலம் நாட்டில் பாரிய பிரதேசத்திற்காக விவசாய நீர், குடிநீரைப் போலவே மின் உற்பத்திக்கும் பாரிய பங்களிப்பு வழங்கப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் நிலவக்கூடிய நீருக்கான பாரிய கேள்விக்கு மத்தியில் நீர் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய பிரதேசங்களுக்கு, விசேடமாக, அதி உலர் காலநிலை நிலவக்கூடிய நிலைமைகளில் தட்டுப்பாடு இன்றி நீர் விநியோகிக்கும் நோக்குடன் (களனி கங்கை) கெஹெல்கமு ஓயா மேல் நீரேந்து பிரதேசத்தில் இருந்து திசை திருப்பி மகாவலி கங்கையின் நீர் கொள்ளளவை அதிகரித்து உயர்ந்தபட்ச பலனைப் பெற்றுக் கொள்வதற்குள்ள இயலுமை தொடர்பான ஆரம்ப கட்ட ஆய்வு நடவடிக்கைகள் தற்பொழுது இலங்கை மகாவலி அதிகார சபையின் பொறியியலாளர்களால் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், இதன் மூலம் கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவை அதிகரிப்பதற்கு அவசியமான ஆரம்ப கட்ட திட்டங்கள்/ பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது மாபெரும் செயற்திட்டமாக பாரிய நீர்த்தேக்கங்களை சுத்திகரிக்கும் செயற்திட்டம் மற்றும் நீர் வளம் பொருந்திய பிரதேச நதிகளின் வடிநிலங்களை பாதுகாக்கும் செயற்திட்டமும், சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்பு பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தற்பொழுது இது இலங்கை மகாவலி அதிகார சபையின் மேல் மாகணத்தைத் தவிர நாட்டின் ஏனைய அனைத்து மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு மாபெரும் நிகழ்ச்சித் திட்டமாக செயற்படுத்தப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட பணிகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அவசியமான நோக்கு, வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்ற மகாவலி, விவசாயம், நீர்ப்பாசனம், கிராமிய அபிவிருத்தி மற்றும் உள்ளக வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நல கௌரவ அமைச்சரான சமல் ராஜபக்ஷ அவர்களிடம் இருந்து கிடைக்கப் பெறுகின்ற பக்கபலத்தை மிகவும் பாராட்டத்தக்க விடயமாக கருதுகின்றேன். அதைப்போலவே, கௌரவ மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், அமைச்சின் செயலாளர் உட்பட இராஜாங்க செயலாளரின் வழிகாட்டலுக்கு அமைய மேற்குறிப்பிட்ட இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கு செயற்படுகின்ற மகாவலி அதிகார சபையின் சகல பதவியணிகளுக்கும் மற்றும் சகல செயற்திட்ட பதவியணிகளுக்கும் நன்றி செலுத்துவதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றேன்.

**கீர்த்தி. பி. கொடகம**
**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை மகாவலி அதிகார சபை**

## பணிப்பாளர் சபையின் சுருக்கக் குறிப்பு.

இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் சபை அறிக்கையை 2020-12-31 ஆம் திகதிக்கு நிறுவனத்தின் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட நிதிக் கூற்றுகளுடன் சமர்ப்பிக்கின்றோம்.

**வருடம் தொடர்பான மீளாய்வு.**

**பணிப்பாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதிப்புரையில் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் தொழிற்பாடுகள் தொடர்பான விவரமான கூற்று உள்ளடக்கப்பட்டு உள்ளது.**

**அத்துடன் நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல், ஊழல், மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகள் தொடர்பாக கண்டறிதல் மற்றும் இடர்நேர்வுகளைக் குறைக்கும் நோக்குடன் உள்ளக நிர்வாகம் தொடர்பாக சிறந்தொரு முகாமைத்துவத்துடன் செயற்பட்டுள்ளது.**

**மேலும், இலங்கை மகாவலி அதிகார சபையின் சகல பதவியணிகளாலும் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதில் காட்டியுள்ள அளப்பரிய அர்ப்பணிப்பு தொடர்பாக பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் எமது பாராட்டுக்களை இத்தாள் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

திருமதி. மலர்மதி கங்காதரன்
மேலதிக பணிப்பாளர் நாயகம்
நிதி அமைச்சு

திரு. எம்.ஏ. தாஜுதீன்
மேலதிய செயலாளர் (நிர்வாகம்)
நீர்ப்பாசன அமைச்சு

திரு. ஏ.பி.ஆர். ஜயசிங்ஹ - உறுப்பினர்

திரு. கே.வி.பி. ரஞ்சித் டி சில்வா – உறுப்பினர்

# 2020 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் குழு அறிக்கை

**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு :**

இலங்கை மகாவலி அதிகார சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவானது, இலங்கை இலங்கை மகாவலி அதிகார சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவானது, இலங்கைக் குடியரசினால் வெளியிடப்பட்டுள்ள நிதிப் பிரமாணம் (Financial Reguations), நிர்வாக பிரமாணம் (Adminstration Regulations), காலத்திற்கு ஏற்ற விதத்தில் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க, இலங்கை மகாவலி அதிகார சபையின் நோக்கங்களை உறுதி செய்து கொள்வதற்காக, பரிசீலனைகள் கண்காணிப்புக்களின் மூலம் உள்ள கணக்காய்வுத் திட்டத்தை அமுல்படுத்தி, முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

**வகிபாகங்கள்**

வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் செயற்படுத்தும் போது, நிலவுகின்ற உள்ளக நிர்வாக ஒழுங்கு முறைகளுக்கு இணங்கியதாக மற்றும் நல்லாட்சிக் கொள்கைகளுக்கு இணங்கியதாக அமுல்படுத்தப்படுகின்றதா எனவும், மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் பொருளாதார ரீதியான பிரதிபலன்கள் (Value for Money) கிடைக்கின்றதா எனவும், கணக்காய்வு விசாரணைகளின் கண்காணித்தல்கள் ஒப்பீடுகள், பௌதீக பரிசீலனைகள் என்பன இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனம் (ICA) மூலம் மற்றும் சர்வதேச கணக்கியல் தர நியமங்கள் (IAS) மூலம் வெளியிடப்பட்டுள்ள தர நியமங்களுக்கு அமைவாக, கணக்காய்வை மேற்கொண்டு மேலாண்மைக்கு அறிக்கையிடுதல்.

2020 ஆம் ஆண்டில் நாட்டில் இடம்பெற்ற தொற்றுப் பரவல் நிலைமையிலும், பின்வரும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

1. உள்ளக கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 10 ஆகும்.
2. வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கைகளின் எண்ணிக்கை 08 ஆகும்.
3. நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் மேலாண்மை ஒன்று கூடல்களின் எண்ணிக்கை
    - அமைச்சுக்கள் மட்டத்திலான மேலாண்மை ஒன்று கூடல்கள் 03
    - அதிகார சபைகளின் மட்டத்திலான மேலாண்மை ஒன்று கூடல்கள் 03
4. உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்காக வழங்கப்பட்ட பதில்கள் மற்றும் விசாரணைகள் மூலம் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளை செயற்படுத்துதல், அவற்றின் பின்னரான பின்தொடர்வுகளை மேற்கொள்ளுதல்.
5. கணக்காய்வு மற்றும் மேலாண்மைக் குழுக்கள் மூலம் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக, முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக ஆலோசனைகளை வழங்குதல்.

**<u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கட்டமைப்பு</u>**

இலங்கை மகாவலி அதிகார சபையின், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பின்வரும் விதத்தில் அமைகின்றது.

1. திருமதி மலர்மதி கங்காதரன் - தவிசாளர் – திறைசேரி
2. திரு. கே.வி.பீ. ரஞ்சித் டி சில்வா – குழு உறுப்பினர்
3. திரு. ஏ.பீ.ஆர். ஜயசிங்ஹ - குழு உறுப்பினர்
4. பிரதான உள்ளக கணக்காய்வாளர் – அமைச்சு
5. கணக்காய்வாளர் நாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கணக்காய்வு அதிகார
6. பணிப்பாளர் (தொழில்நுட்ப கணக்காய்வு) – அமைச்சு

குழுவில் கலந்து கொள்கின்ற ஏனைய உத்தியோகத்தர்கள்

7. பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு)
8. பணிப்பாளர் (நிதி)
9. தேவைக்கு அமைய அழைப்பு விடுக்கப்படுகின்ற ஏனைய உத்தியோகத்தர்கள்.

**<u>குழுவின் வகிபாகம் :</u>**

- வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தை மேற்பார்வையிடுதல்.
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வுக்கு உட்படுத்துதல் மற்றும் அதன் மூலம் இனங்காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குதல்.
- 1971 ஆம் ஆண்டின் 38 இலக்க நிதி தொடர்பான சட்டத்தின் 14 (2) (இ) உப பிரிவிற்கு அமைய கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் உள்ளக நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு ஆலோசனைகளை வழங்குதல்.
- காலாண்டு ரீதியாக குழு ஒன்றுகூடலை நடாத்துதல்.

## கடந்த 07 வருடங்களுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்.

| | 2020 | 2019 | 2018 | 2017 | 2016 | 2015 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|
| | **Rs'000** | **Rs'000** | **Rs'000** | **Rs'000** | **Rs'000** | **Rs'000** | **Rs'000** |
| **சொத்துக்கள்** | | | | | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | | | | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 119,033,935 | 4,972,468 | 4,675,657 | 4,116,187 | 4,195,724 | 4,294,893 | 4,259,208 |
| முதலீடுகள் (LT) | 164,555 | 166,299 | 171,313 | 187,531 | 178,556 | 152,577 | 175,359 |
| புலனாகாத சொத்துக்கள் | 785 | | | | | | |
| மூலதன செயன்முறையிலுள்ள பணிகள் | 57,166 | 47,482 | 84,947 | 78,552 | 41,301 | 74,286 | 62,506 |
| **மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | **119,256,441** | **5,186,249** | **4,931,917** | **4,382,270** | **4,415,581** | **4,521,756** | **4,497,073** |
| | | | | | | | |
| உயிரியல் சொத்துக்கள் – மூலதனம் | 259,342 | 219,777 | 167,027 | 134,578 | 101,940 | - | - |
| முன்மொழியப்பட்ட தள்ளுபடி | - | - | - | 859 | 859 | - | - |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | | | | |
| சரக்கு இருப்புகள்/ இருப்புகள் | 166,810 | 170,983 | 180,342 | 184,815 | 168,173 | 157,428 | 180,900 |
| உயிரியல் சொத்துக்கள் – வணிகம் | 42,721 | 47,178 | 26,312 | 15,875 | 22,630 | - | - |
| வணிகம் மற்றும் ஏனைய பெறுவனவுகள் | 2,594,637 | 2,997,661 | 2,032,715 | 2,084,069 | 1,730,015 | 1,307,077 | 1,274,329 |
| தொங்கல் கணக்கு | - | - | - | - | - | - | - |
| முற்கொடுப்பனவுகள் | - | - | 4,767 | 3,896 | 8,754 | 5,172 | - |
| வங்கி உத்தரவாதங்கள் | 377 | 374 | 6,292 | 6,164 | 4,153 | 1,372 | 837 |
| முகவருக்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதிகள் | - | - | - | - | - | - | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 667,498 | 258,877 | 312,702 | 343,312 | 312,750 | 429,588 | 190,391 |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | 3,472,043 | 3,475,073 | 2,563,130 | 2,638,131 | 2,246,475 | 1,900,637 | 1,646,457 |
| **மொத்த சொத்துக்கள்** | **122,987,826** | **8,881,100** | **7,662,074** | **7,155,838** | **6,764,855** | **6,422,393** | **6,143,530** |
| | | | | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | | | | |
| கொடுப்பனவுகள் | 39,970,622 | 968,185 | 651,986 | 879,967 | 376,737 | 341,286 | 491,622 |
| குத்தகை – ஏலியன்ஸ் பினான்ஸ் | - | - | - | 2,153 | 3,080 | | |
| அட்டுறுச் செலவுகள் | 94,434 | 211,909 | 102,067 | 175,733 | 122,286 | 46,159 | 207,705 |
| முகவருக்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதிகள் | - | - | - | | | | |
| **மொத்த நடைமுறை பொறுப்புக்கள்** | **40,065,057** | **1,180,094** | **754,053** | **1,057,853** | **502,103** | **387,445** | **699,327** |
| | | | | | | | |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | | | | | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்குகள் | 1,500,519 | 1,371,814 | 1,379,494 | 1,388,101 | 1,489,288 | 1,551,379 | 1,311,876 |
| வங்கிக் கடன் | - | - | - | | 2,455 | | |
| குத்தகை கட்டணங்கள் | - | - | 219 | 271 | 2,653 | 11,247 | 14,329 |
| பிற்போடப்பட்ட வரி | 612 | 612 | 612 | 612 | 612 | 612 | 612 |
| **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | **1,501,131** | **1,372,426** | **1,380,325** | **1,388,984** | **1,495,008** | **1,563,238** | **1,326,817** |
| **மொத்த பொறுப்புக்கள்** | **41,566,188** | **2,552,520** | **2,134,378** | **2,446,837** | **1,997,111** | **1,950,683** | **2,026,144** |
| | | | | | | | |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | **81,421,638** | **6,328,579** | **5,527,696** | **4,709,001** | **4,767,744** | **4,471,710** | **4,117,386** |
| | | | | | | | |
| **தேறிய சொத்துக்கள் / உரிமையான்மை** | | | | | | | |
| நிதி கூட்டுத்தொகை | 76,926,922 | 1,837,751 | 24,649,830 | 24,407,260 | 24,066,161 | 23,702,950 | 23,383,849 |
| ஒதுக்குகள் – | (1,178,028) | (657,528) | (24,040,551) | (23,755,208) | 52,121 | 53,992 | 67,466 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வருமான மற்றும் செலவுக் கணக்கின் ஆரம்ப மீதி | | | | | | | |
| வருமான ஒதுக்குகள் - நிறுவனங்கள் | 48,288 | 48,288 | 50,865 | 4,006,082 | 4,019,027 | 4,021,721 | 3,837,266 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் – | 5,624,456 | 5,100,069 | 4,867,551 | 50,865 | (23,369,566) | (23,276,474) | (23,171,205) |
| **மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமையான்மை** | **81,421,638** | **6,328,580** | **5,527,696** | **4,708,999** | **4,767,743** | **4,502,189** | **4,117,376** |

## இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ள

### நிறுவனங்களின் பணிப்பாளர் சபை - 2020

| தொடர் இலக்கம் | நிறுவனங்கள் | தவிசாளர் | பணிப்பாளர் சபை | பிரதான அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 01 | வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம் | | 1. திரு. பராக்கிரம அபேவர்தண<br>2. திரு. எட்வர்ட் டி மெல் (பணிப்பாளர்)<br>3. திரு. ஒஸ்மன் டி சில்வா (பணிப்பாளர்) | இலக்கம் 260/20, பேஸ்லயின் வீதி, கொழும்பு 09 |
| 02 | வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் | வைத்தியர் திரு. ஹர்ஷ சமரவீர | 1.திரு. கே.எல். சஹபந்து<br>2.பொறியியலாளர் திரு. எல்.ஆர்.எச். பெரேரா | இலக்கம் 11, ஜாவத்த வீதி, கொழும்பு 05 |
| 03 | இயற்கை வள முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) நிறுவனம் | பொறியியலாளர் திரு. ஏ.ஏ.வி. டயஸ் | 1.பொறியியலாளர் திரு. பி.டப். என்.டப். செனவிரத்ன பண்டா<br>2.திரு. என்.எம்.கே.பி. அத்தநாயக்க<br>3.திரு. எல்.எம். தர்மசிறி<br>திரு. எம். ஜீ. அபேரத்ன பண்டார (நிறுவனச் செயலாளர்) | வேல்ல பிரதேசம், பொல்கொல்ல, கண்டி |

# நிர்வாக அறிக்கை

## பாகம் - 01

# முதலாவது அத்தியாயம்.

## 1.1 இலங்கை மகாவலி அதிகார சபையை ஸ்தாபித்தல் மற்றும் அதன் அமைப்பு.

1979 ஆம் ஆண்டின் இலக்கம் 23 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன், அச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் விசேட பிரதேசம் ஒன்று தொடர்பாக அதிகார சபையின் பணி வினைகள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன.

(அ) நீர்த் தேக்கங்கள், நீர்ப்பாசன நீர் விநியோக அமைப்புக்கள் என்பவற்றை நிர்மாணித்தல் மற்றும் விநியோகிப்பதற்கான இயந்திர உபகரணங்களை நிறுவுதல் மற்றும் இயக்குதல் உட்பட மகாவலி கங்கையின் அபிவிருத்தி முன்மொழிவுத் திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் செயற்பாட்டிற்குக் கொண்டு வருதல். அவ்வாறு இருப்பினும், மின்சாரத்தை விநியோகிப்பதற்குரிய பணி வினைகளை வேறு ஏதேனும் எழுத்து மூல சட்டத்தின் கீழ் அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் உள்ள வேறு ஏதேனுமொரு அதிகார சபையினால் செயற்படுத்துவதற்கு முடியும்.

(ஆ) முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த அபிவிருத்தியை போசித்து வளர்த்தல் மற்றும் அவ்வபிவிருத்தியைத் தக்க வைத்துக் கொள்ளுதல்.

(இ) விவசாய விளைத்திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு ஆற்றல்களை உயர்ந்த பட்ச நிலைமைக்கு கொண்டு வருதல் மற்றும் விவசாய பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல் மற்றும் தக்க வைத்துக் கொள்ளுதல்.

(ஈ) பௌதீக சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.

(உ) மக்களின் பொது நலன் மற்றும் கலாச்சார முன்னேற்றத்தை மேம்படுத்துதல் மற்றும் நிர்வாகித்தல்.

(ஊ) உள் மற்றம் வெளி பிரத்தியேக மூலதனத்தை விவசாய அபிவிருத்திகளில் பயன்படுத்துவதை முன்னேற்றுதல் மற்றும் தக்க வைத்துக் கொள்ளல்.

(எ) மகாவலி கங்கை அபிவிருத்தி முன்மொழிவுத் திட்டத்தை திட்டமிடும் போது மற்றும் அதனைச் செயற்படுத்தும் போது அரச திணைக்களங்கள், அரச தாபனங்கள், உள்ளூராட்சி மன்ற தாபனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட தாபனங்கள், பிரத்தியேக அல்லது வேறு நபர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் தக்க வைத்துக் கொள்ளுதல்.

## 1.2 இலங்கை மகாவலி அதிகார சபையின் பணி வினைகள்.

பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒவ்வொரு விடயத் துறைகளின் கீழ் நிறுவப்பட்டுள்ள செயற்திட்டங்கள் மற்றும் துறைகளுக்குரிய அலுவலகங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தலானது பிரதி பணிப்பாளர் நாயகங்கள், பணிப்பாளர்கள், செயற்திட்ட பணிப்பாளர்கள் மற்றும் வதிவிட வணிக முகாமையாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய பின்வரும் பணி வினைகள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் நிறைவேற்றப்படுகின்றன.

- கூட்டுத் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்திற்கு அமைய தாபனத்தின் முன்னேற்றத்தை மாதாந்தம் பரிசீலித்து அவசியமான தலையீடுகள் மூலம் உரிய இலக்கை எட்டுதல்.

- சொத்துக்களைத் தாபரித்தல் மற்றும் நிர்வாகித்தல் தொடர்பாக பொருத்தமான திட்டம் ஒன்றிற்கு அமைய செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் சொத்துக்களை கையுதிர்த்தல்.

- கால வரையறைக்கு அமைய மொரகஹகந்த களுகங்கை நீர்த்தேக்கம் மற்றும் கிவுல் ஓயா நீர்த்தேக்கம் ஆகியவற்றை நிர்மாணித்தல்.

- பி வலயத்தின் வலது கரை மற்றும் எல் வலயத்தின் நீர்ப்பாசன நிலப்பரப்பை அதிகரித்துக் கொள்வதற்காக பிரதேசங்களை இனங்கண்டு அடிப்படைச் சூழல் ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுதல்.

- விவசாய உதவிச் சேவைகள் மேம்பாடு, விவசாய மேம்பாடு மற்றும் வருமான தோற்றுவிப்புச் செயற்திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் நாட்டில் பாதுகாப்பை ஏற்படுத்துதல்.

- நீர்ப்பாசனத் தொகுதிகளை தாபரித்தல் மற்றும் முகாமைத்துவத்தை விவசாய அமைப்புக்களுக்கு ஒப்படைப்பதற்கு இயன்ற வகையில் விவசாய அமைப்புக்களை பலப்படுத்துவது தொடர்பாக உத்தியோகத்தர்கள் மற்றும் உழவர் பிரதிநிதிகளை பலப்படுத்துதல்.

- “செல்வச் செழிப்பு மிக்க தேசம் ஒன்றிற்கு மகாவலி கால்நடை உற்பத்திகள்” என்ற தொனிப் பொருளின் கீழ் மகாவலி குடியேற்ற சமூகத்தின் வாழ்வாதார அபிவிருத்திக்கு கால்நடை வளங்கள் துறையை பலப்படுத்துதல்.

- விவசாய நிலங்கள் வரையறுக்கப்பட்ட வளமாகி வருகின்றமையால் மகாவலி குடியேற்றவாசிகளின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தலைமுறைகளின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவிக்கும் பொருட்டு பாரம்பரிய விவசாயத் துறைக்கு அப்பாற்பட்ட தொழில் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்கு ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழி காட்டுதல்.

- சகல மட்டங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பதவியணியின் தகவல்களை கணினி மயப்படுத்தி (இலத்திரனியல்) e - மனித வள முகாமைத்துவ தொகுதி ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- நேரியல் தாபனங்களுடன் கலந்துரையாடி சாகுபடி பருவ செயற்பாட்டுத் திட்ட செயல்முறைகள் மூலம் பிரதான நீர்த்தேக்கங்கள் மூலம் நீர்ப்பாசன குடியேற்ற செயற்திட்ட பிரதான நீர்மின் உற்பத்தி மற்றும் வீடுகளுக்கான நீர் மின் மற்றும் வீடுகளுக்கான நீர் வழங்கலுக்காக நீரை வேறு பிரித்துக் கொடுத்தல்.

- பி, சி, எச், எல், டி, மொரகஹகந்த, ஹுருளுவெவ, வலவ, விக்டோரியா மற்றும் புதிய வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ரம்புக்கன் ஓயா ஆகிய செயற்திட்டங்களில் பயிர் பன்முகப்படுத்தல், சமூக, பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவிப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- நீர் முகாமைத்துவம், மனித வள அபிவிருத்தி, கால்நடை வள அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, மண் மற்றும் நீர்ப் பாதுகாப்பு, நீர் பிரி நிலங்களின் முகாமைத்துவம், சூழல் மாசடைதல் மற்றும் நீர் மாசடைதல் தொடர்பாக சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டுதல்.

- பிரதான நீர்த் தேக்கங்களில் திசை திருப்பல் அளவுகளை பாதுகாப்பான விதத்தில் மேற்கொள்ளும் பொருட்டு பயனுறு தொழிற்பாட்டு தாபரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் உழவர் அமைப்புக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.

## 1.3 இலங்கை மகாவலி அதிகார சபையின் நிர்வாக கட்டமைப்பு



## 1.4 மகாவலி வலயம் – கட்டமைப்பு, நிர்வாகம் மற்றும் தற்போதைய நிலைமை

மகாவலி கங்கை வடிநில அபிவிருத்திப் பெருந்திட்டத்திற்கு அமைய உருவாக்கப்பட்ட குடியேற்றங்களை நிர்வாகித்தல், நீர்ப்பாசனத் தொகுதியை இயக்குதல், தாபரித்தல் மற்றும் நிர்வகிப்பதற்காக மகாவலி அதிகார பிரதேச வலயம் என்ற அடிப்படையில் நிர்வாக அலகுகள் 10 நிறுவப்பட்டுள்ளன. மகாவலி கங்கைப் பள்ளத்தாக்கை அண்மித்து பி,சி,டி,எச், மொரகஹகந்தை, விக்டோரியா, ஹுருளு வெவ ஆகிய வலயங்களும், உடவலவ, வெலி ஓயா (எல் வலயம்) மற்றும் ரம்புக்கன் ஓயா வலயம் ஆகிய விசேட வலயங்களும் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மகாவலி வலயங்களில் மற்றும் விசேட பிரதேசங்களில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பணி வினைகள் வதிவித வணிக முகாமையாளர்களின் அதிகாரங்களுக்குக் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வதிவிட வணிக முகாமையாளர்கள் நேரடியாக பணிப்பாளர் நாயகம் மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியதுடன், பிரதி பணிப்பாளர் நாயகங்களின் மேற்பார்வையின் கீழ் வலய மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளுக்காக பிரதான அலுவலகத்தில் ஒவ்வொரு துறைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்களின் ஒத்துழைப்பு கிடைகைப் பெறும்.

அவ்வாறே, அனைத்து வலயங்களுக்கும் பிரதம நிறைவேற்று அதிகாரி வதிவிட வணிக முகாமையாளராகுவதுடன், தொழில்நுட்ப, காணிகள், விவசாயம் மற்றும் அபிவிருத்தித் துறைகளுக்காக கண்காணிப்பு உத்தியோகத்தர்களாக பிரதி வதிவிட வணிக முகாமையாளர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். அலகுகள் பலவற்றிற்காக ஒரு தொகுதி முகாமைத்துவ அலுவலகமும், அவ்வலுவலகத்திலட ஒவ்வொரு விடயத் துறைகளுக்கும் தொகுதி முகாமையாளர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் நீர்ப்பாசன பொறியியலாளர் ஒருவர், தாபன அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர், கமநல உத்தியோகத்தர் மற்றும் காணிகள் உத்தியோகத்தர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வனைத்து உத்தியோகத்தர்களினதும் கண்காணிப்பின் கீழ் சகல விடயத் துறைகளினதும் கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் ஒவ்வொரு அலகிற்கும் ஒவ்வொரு முகாமையாளர் வீதம் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு அலகானது பொதுவாக 250-300 அளவான காணி உரித்துடைய குடும்பங்களை குடியேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மகாவலி வலயங்களில் காணி நிர்வாகம் மேற்கொள்ளப்படுவது காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் மற்றும் அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தை முதன்மையாகக் கொண்ட அரசாங்கத்தின் காணிகள் கொள்கைகளுக்கு அமையவாகும். அரசாங்கத்தின் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வெளியேற்றுவதில் இருந்து பிரதான பத்திரம் வெளியிடுவது வரை அடிப்படை நடவடிக்கைகள் அக்காணிகளுக்குரிய பின் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக வணிக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுக்காக காணிகள் குத்தகை அடிப்படையில் வெளியேற்றுவதற்குரிய அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதும், ஆரம்ப குடியேற்றவாசிகளுக்கு மேலதிகமாக இரண்டாவது, மூன்றாவது தலைமுறைகளுக்கு காணிகளை வழங்குவதும் வலய அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதைப் போலவே, நீர்ப்பாசன நீர் முகாமைத்துவம், தாபன அபிவிருத்தியின் ஊடாக நீர்ப்பாசனத் தொகுதியை தாபரித்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற செயற்பாடுகளும், விவசாய அபிவிருத்தின் கீழ் விதைகளை உற்பத்தி செய்தல், பண்ணை அபிவிருத்தி, பயிற்சி மற்றும் மாதிரி நடவடிக்கைகளும், கால்நடை வள, மீன்பிடி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைச் செயற்திட்ட அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தரமான கடன் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்பாட்டிற்குக் கொண்டு வருதல், வணிக, விவசாய வியாபாரத்தை இயக்குதல், விவசாயத்திடன் தொடர்புடைய சுய தொழில் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்பாட்டிற்குக் கொண்டு வருதலும் வலய நிர்வாகத்தின் கீழ் இடம்பெறும்.

**மகாவலி வலயம் – வரைபடம்**






## <u>பி (B) வலயம்</u>

### வலயம் தொடர்பான அறிமுகம்

மகாவலி பி வலயமானது மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கீழ் பள்ளத்தாக்கின் 75,441.5 ஹெக்டாயர் பருமட்டான மொத்த நிலப்பரப்பில் பரந்து விரிந்து காணப்படுவதுடன், பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு நிர்வாக மாவட்டங்களின் கீழ் கொள்ளப்பட்டுள்ள மாபெரும் செயற்திட்டமாக இதனைக் குறிப்பிட முடியும். நீர்ப்பாசன முகாமைத்துவ நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்ட பிரதேசங்களானது 08 நிர்வாக பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | பிரிவு | 2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.) | 2020.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.) | 2020.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப சேவைகள் | 84.66 | 72.06 | 85% |
| 02 | நிதிப் பிரிவு | 15.35 | 14.48 | 94% |
| 03 | காணி உபயோக திட்டமிடல் | 0.40 | 0.40 | 100% |
| 04 | தாபன விருத்தி | 8.40 | 8.12 | 97% |
| 05 | வணிக அபிவிருத்தி | 2.00 | 1.84 | 92% |
| 06 | காலாச்சார மற்றும் விளையாட்டு பிரிவு | 0.57 | 0.53 | 93% |
| 07 | வன மற்றும் சுற்றாடல் | 7.65 | 6.48 | 85% |
| 08 | நிர்வாகம் | 6.16 | 6.14 | 100% |
| 09 | போக்குவரத்து | 4.25 | 4.02 | 95% |
| 10 | கால்நடை வளங்கள் (நிறுவன ரீதியான மூலதனம்) | 1.73 | 1.16 | 67% |
| **கூட்டுத் தொகை** | | 131.16 | 115.22 | 88% |
| 01 | விவசாயம் (செயற்திட்டம்) | 13.36 | 13.36 | 100% |
| 02 | கால்நடை வளங்கள் (செயற்திட்டம்) | 8.69 | 5.34 | 61% |
| 03 | RMMIS | 2.90 | - | - |
| **கூட்டுத் தொகை** | | 24.95 | 18.70 | 75% |
| **மொத்த கூட்டுத் தொகை** | | 156.11 | 133.92 | 86% |

# சி (C) வலயம்




## வலயம் தொடர்பான அறிமுகம்

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய அபிவிருத்தி வலயமாக ஆரம்பிக்கப்பட்ட "சி" வலயமானது மேல் மாகாணத்தில் மகாவலி கங்கையிலும், கிழக்கில் உல்ஹிடிய நீர்த்தேக்க ஒதுக்கு மற்றும் மாதுறு ஓயா வனப் பூங்காவும், வடக்கில் மகாவலி பி வலயமும், தெற்கில் மஹியங்கனை பிரதேசத்தையும் எல்லையாகக் கொண்டு, பதுளை, அம்பாறை மற்றும் பொலன்னறுவை ஆகிய நிர்வாக மாவட்டங்கள் 03 ஐயும் உள்ளடக்கி அமைந்துள்ளது. இவ்வலயத்தின் பருமட்டான மொத்த நிலப்பரப்பு 30,760 ஹெக்டயார் ஆகும்.

## வலயத்தின் அடிப்படைத் தகவல்கள்

- விவசாய காலநிலை வலயம் - $DL_1/DL_2/IL_2$
- பயிர் செய்யக்கூடிய நிலப்பரப்பு ஹெக்டயார் - 22,406
- அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டுத் தோட்டங்கள் - 35,640
- வலயத்தின் சனத் தொகை - 185,356
- பயிர் செய்யப்படுகின்ற பிரதான பயிர் - நெல்
- அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டுத் தோட்டங்கள் - 35,640
- வலயத்தின் சனத் தொகை - 185,356
- நீர் விநியோகிக்கக் கூடிய பிரதான நீர்த்தேக்கங்கள் - உல்ஹிடிய, ரத்கிந்த
- நீரைச் சேமிக்கின்ற நீர்த்தேக்கங்கள் - 56

| தொடர் இலக்கம் | பிரிவு | 2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.) | 2020.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.) | 2020.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப சேவைகள் | 78.05 | 68.09 | 87% |
| 02 | காணி | 13.51 | 11.38 | 84% |
| 03 | காணி உபயோக திட்டமிடல் | 2.06 | - | 0% |
| 04 | தாபன விருத்தி | 11.88 | 11.57 | 97% |
| 05 | வணிக அபிவிருத்தி | 6.22 | 2.93 | 47% |
| 06 | காலாச்சார மற்றும் விளையாட்டு பிரிவு | 1.17 | 1.15 | 99% |
| 07 | வன மற்றும் சுற்றாடல் | 4.25 | 3.28 | 77% |
| 08 | நிர்வாகம் | 4.40 | 2.07 | 47% |
| 09 | போக்குவரத்து | 5.22 | 5.21 | 100% |
| 10 | விவசாயம் (நிறுவன ரீதியான மூலதனம்) | 0.50 | 0.47 | 94% |
| 11 | கால்நடை வளங்கள் (நிறுவன ரீதியான மூலதனம்) | 1.79 | 1.70 | 95% |
| **கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)** | | **129.05** | **107.85** | **84%** |
| 01 | விவசாயம் (செயற்திட்டம்) | 9.45 | 7.78 | 82% |
| 02 | கால்நடை வளங்கள் (செயற்திட்டம்) | 4.54 | 2.90 | 64% |
| 03 | RMMIS | 6.80 | 4.44 | 65% |
| **கூட்டுத் தொகை (செயற்திட்டம்)** | | **20.79** | **15.12** | **73%** |
| **மொத்த கூட்டுத் தொகை** | | **149.83** | **122.97** | **82%** |




## டி (D) வலயம்

**வலயம் தொடர்பான அறிமுகம்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு மெதிரிகிரிய பிரதேசத்தில் 2004 ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ள மகாவலி “டி” வலயமானது 02 தொகுதிகளை உள்ளடக்கியுள்ளது. அவை யாதெனில் பிசோபுற மற்றும் சூரியபுற ஆகியவை ஆகும். பிசோபுற தொகுதியானது மொரகஹகந்த களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது குடியேற்றப் பெருநகர் ஆகும். பிசோபுற தொகுதியானது 04 அலகுகளை உள்ளடக்கியதாகும். வடக்கே திருகோணமலை மாவட்டத்தின் கந்தலைப் பிரதேசம் வரையிலும், கிழக்கே சேறுவில பிரதேசம் வரையிலும், தெற்கு மற்றும் மேற்கே பொலன்னறுவை மாவட்டத்தின் லங்காபுற, ஹிங்குரன்கொட பிரதேசம் வரையிலும் பரந்து விரிந்து காணப்படுகின்றது.

**விசேட செயற்திட்டங்கள்.**

தொழிற்சாலை (Mini Garment) ஒன்றை ஆரம்பித்தல், மகாவலி நாற்று மேடையை ஆரம்பிப்பத்தல் மற்றும் அலங்கார மீன் வளர்ப்புச் செயற்திட்டத்தை ஆரம்பித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன. வலயத்தின் மூலமாக முன்னெடுக்கப்படுகின்ற செயற்திட்டத்திற்கு அமைய ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியின் (UNDP) மூலம் நிதி ஏற்பாடுகள் இதற்காக வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வலயத்தில் தொழிலற்ற பெண்களுக்காக தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முடியுமாக இருந்தமை, சுய தொழில் மட்டத்தில் இருந்த விவசாயிகளை சிறிய அளவான வியாபார மட்டத்திற்குக் கொண்டு வருவதற்கு முடியுமாக இருந்தமை, அவர்களுடைய குடும்ப அலகின் வருமான நிலைமையை மேம்படுத்துவதற்கு முடியுமாக இருந்தமை மற்றும் நாட்டின பொருளாதார விருத்திக்கு இயன்றளவு தூரத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு முடியுமாக இருந்தமை முக்கியமான அம்சங்களாகும்.

| தொடர் இலக்கம் | பிரிவு | 2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.) | 2020.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.) | 2020.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப சேவைகள் | 10.21 | 10.18 | 100% |
| 02 | காணி | 9.29 | 4.40 | 47% |
| 03 | காணி உபயோக திட்டமிடல் | 0.33 | - | - |
| 04 | தாபன விருத்தி | 3.25 | 3.05 | 94% |

| | | | | |
|---|---|---|---|---|
| 05 | வணிக அபிவிருத்தி | 2.85 | 2.24 | 79% |
| 06 | காலாச்சார மற்றும் விளையாட்டு பிரிவு | 2.62 | 0.84 | 32% |
| 07 | வன மற்றும் சுற்றாடல் | 2.61 | 1.56 | 60% |
| 08 | நிர்வாகம் | 4.68 | 3.78 | 81% |
| 09 | போக்குவரத்து | 2.50 | 2.35 | 94% |
| 10 | விவசாயம் (நிறுவன ரீதியான மூலதனம்) | 0.50 | 0.13 | 26% |
| 11 | கால்நடை வளங்கள் (நிறுவன ரீதியான மூலதனம்) | 3.94 | 2.57 | 65% |
| **கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)** | | **42.78** | **31.10** | **73%** |
| 01 | விவசாயம் (செயற்திட்டம்) | 4.02 | 4.02 | 100% |
| 02 | கால்நடை வளங்கள் (செயற்திட்டம்) | 3.96 | 1.89 | 48% |
| **கூட்டுத் தொகை (செயற்திட்டம்)** | | **7.98** | **5.91** | **74%** |
| **மொத்த கூட்டுத் தொகை** | | **50.76** | **37.01** | **73%** |

## ஈ (E)வலயம்




### வலயம் தொடர்பான அறிமுகம்

### குறிக்கோள்

சுற்றாடல் தோழமைமிக்க புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்திய விவசாய மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் மூலம் பொருளாதார, சமூக ரீதியில் நிலைபெறுதகு செழுமை மிக்க வலயமான மாற்றியமைத்தல்.

### பிரதான நோக்கங்கள்

மகாவலி ஈ வலயமானது 2019 ஆம் ஆண்டின் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கொத்மலை – பொல்கொல்லை – வேல்ல – விக்டோரியா – ரண்தெனிகல – ரன்தெம்ப நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தமையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மகாவலி வலயங்களில் குடியமர்த்துதல், வேறு வலயங்களுக்குச் செல்வதற்கு விருப்பம் தெரிவிக்காத குடும்பங்களை இப்பிரதேசத்தில் மீள் குடியேற்றுதல், அவர்களுக்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மற்றும் மகாவலி மேல் நீரேந்தை பாதுகாப்பதன் ஊடாக நீர் பாதுகாப்பை ஏற்படுத்துவது இதன் பிரதான நோக்கமாகும்.

ஈ வலயத்திற்குரிய பிரதேச செயலகங்களாக மினிப்பே மற்றும் வில்கமுவ என்பன காணப்படுகின்றன. மினிப்பே தொகுதியானது 61,548 சதுர ஏக்கராக காணப்படுவதுடன் அங்கு 17,829 குடும்பங்கள் வசிக்கின்றன. வில்கமுவ தொகுதியானது 24,131 சதுர ஏக்கராக காணப்படுவதுடன் அங்கு 14,098 குடும்பங்கள் வசிக்கின்றன.

ரண்தெனிகல வன ஜீவராசிகள் வலயம் பிரகடனப்படுத்தப்படும் போது அப்பிரதேசங்களில் வசித்த குடும்பங்கள் மற்றும் துணைக் குடும்பங்கள் 5000 இற்கான காணி உரித்தை சட்டபூர்வமாக்குதல். பிரதேசத்தில் வசிக்கின்ற மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக காணிகள் அற்ற குடும்பங்களுக்கு உரிய முறையில் காணிகளை வழங்குதல். மிகவும் பின்தங்கிய இவ்வலயத்தை ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து விரைந்த சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல். பிழைப்பாதார விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயக் குடும்பங்களை வணிக விவசாயத்திற்கு ஆற்றுப்படுத்துதல். 10000 மில்லியன் ரூபாய் முதலீட்டுத் திட்டமாக உள்ளமை.

| தொடர் இலக்கம் | பிரிவு | 2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.) | 2020.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.) | 2020.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப சேவைகள் | 21.17 | 21.17 | 100% |
| 02 | காணி | 12.95 | 12.96 | 100% |
| 03 | காணி உபயோக திட்டமிடல் | 0.70 | 0.70 | 100% |
| 04 | தாபன விருத்தி | 3.37 | 3.37 | 100% |
| 05 | வணிக அபிவிருத்தி | 2.04 | 2.04 | 100% |
| 06 | காலாச்சார மற்றும் விளையாட்டு பிரிவு | 1.78 | 1.78 | 100% |
| 07 | வன மற்றும் சுற்றாடல் | 1.46 | 1.46 | 100% |
| 08 | நிர்வாகம் | 1.70 | 1.65 | 97% |
| 09 | போக்குவரத்து | 1.00 | 1.04 | 104% |
| 10 | விவசாயம் (நிறுவன ரீதியான மூலதனம்) | 0.50 | 0.56 | 112% |
| 11 | கால்நடை வளங்கள் (நிறுவன ரீதியான மூலதனம்) | 0.67 | 0.62 | 92% |
| **கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)** | | **47.34** | **47.35** | **100%** |
| 01 | விவசாயம் (செயற்திட்டம்) | 1.90 | 0.95 | 50% |
| 02 | கால்நடை வளங்கள் (செயற்திட்டம்) | 1.40 | 0.46 | 33% |
| **கூட்டுத் தொகை** | | **3.30** | **1.41** | **43%** |
| **மொத்த கூட்டுத் தொகை** | | **50.64** | **48.76** | **96%** |




# ஜீ வலயம்

**வலயம் தொடர்பான அறிமுகம்**

மகாவலி ஜீ வலயமானது எலஹர கால்வாயால் போசிக்கப்படுகின்ற பழமையான நீர்ப்பாசன நாகரிகத்திற்கு மரபுரிமை பெற்ற நிலப்பரப்பாகும்.

மக்கள் இல்லாததால் பயன்படுத்தப்படாமல் காடாக மாறியிருந்த எலஹர கால்வாயை மீண்டும் கௌரவ பிரதமர் டி. எஸ் சேனாநாயக்க அவர்களால் 1947 ஆம் ஆண்டு காணி உரித்தாளர்களை குடியமர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் மூலம் புதிய குடியேற்றங்களின் தொடக்கம் ஆரம்பமானது. 2001 ஆம் ஆண்டில் மகாவலி பி வலயத்தின் கீழ் தொகுதி முகாமைத்துவ பிரதேசத்துடன் இப்பிரதேசம் நிர்வாகிக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டின் ஆரம்ப பாதியில் மொகஹகந்த களு கங்கை நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டதுடன், அந்நீர்த்தேக்கங்களால் அடிப்படுகின்ற காணிகளில் வசிக்கின்ற குடும்பங்களை அங்கிருந்து அகற்றி மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்து குருவெல மற்றும் வெல்லேவெல ஆகிய பெயர்களில் தொகுதி முகாமைத்துவ அலுவலகங்கள் இரண்டு ஆரம்பிக்கப்பட்டன. 2013 ஆம் ஆண்டில் இவ்விரு தொகுதிகளிலும் உழவர் குடும்பங்களை குடியமர்த்துவதுடன் தொகுதி முகாமையாளர்கள் 04 பேரின் கீழ் பகமுண, அத்தனகடவல, குருவெல, வெல்லேவெல ஆகிய பெயர்களில் நான்கு தொகுதிகள் மூலம் நிர்வாகப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பிரிவு | 2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.) | 2020.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.) | 2020.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப சேவைகள் | 20.76 | 18.35 | 88% |
| 02 | காணி | 0.72 | 0.72 | 100% |
| 03 | காணி உபயோக திட்டமிடல் | 1.60 | 0.58 | 36% |
| 04 | தாபன விருத்தி | 4.80 | 4.80 | 100% |
| 05 | வணிக அபிவிருத்தி | 3.30 | 3.30 | 100% |
| 06 | காலாச்சார மற்றும் விளையாட்டு பிரிவு | 0.85 | 0.65 | 76% |
| 07 | வன மற்றும் சுற்றாடல் | 3.80 | 3.07 | 81% |
| 08 | நிர்வாகம் | 9.46 | 9.38 | 99% |
| 09 | போக்குவரத்து | 4.16 | 4.16 | 100% |
| 10 | விவசாயம் (நிறுவன ரீதியான மூலதனம்) | 2.00 | 0.30 | 15% |
| 11 | கால்நடை வளங்கள் (நிறுவன ரீதியான மூலதனம்) | 2.25 | 0.20 | 9% |
| **கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)** | | **53.70** | **45.50** | **85%** |
| 01 | விவசாயம் (செயற்திட்டம்) | 14.76 | 14.76 | 100% |
| 02 | கால்நடை வளங்கள் (செயற்திட்டம்) | 2.90 | 2.90 | 100% |
| 03 | RMMIS | 6.00 | 5.50 | 92% |
| **கூட்டுத் தொகை** | | **23.66** | **23.16** | **98%** |
| **மொத்த கூட்டுத் தொகை** | | **77.36** | **68.66** | **89%** |




## எச் வலயம்

### வலயம் தொடர்பான அறிமுகம்

கலா ஓயாவை மையமாகக் கொண்டு 1977 – 1978 காலப் பகுதியில் 31,500 குடும்பங்களுக்கு ஈர நிலத்தில் 2 ½ ஏக்கர்களும் (01 ஹெக்டயார்), உலர் நிலத்தில் ½ ஏக்கர்களும் பிரித்து வழங்கப்பட்ட மகாவலி முன்மொழிவுத் திட்டத்தின் அதி விசேட வலயமாக மகாவலி “எச்” வலயம் கருதப்படுகின்றது. இதில் விவசாய நிலங்கள் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர்களும் (நீர்ப்பாசன மற்றும் உலர்நில) காணப்படுகின்றது. மேற்கே, அநுராதபுரம் – புத்தளம் பிரதான வீதியும், வடக்கே தெற்குக் ஆற்றங்கரைக் கால்வாயும், தெற்கே பலலுவெவ ஆற்றங்கரை – உஸ்கல சியபலன்கமுவ ஊடாக ராஜாங்கன ராஜாங்கன ஆற்றங்கரைக் கால்வாயை எல்லையாகக் கொண்டுள்ளதுடன் மேலதிகமாக காகம கடியாவ மற்றும் உஸ்கல சியபலன்கமுவ ஆகிய பழமையான குடியேற்ற பிரதேசங்களையும் உள்ளடக்குகின்றது.

| **தொடர் இலக்கம்** | **பிரிவு** | **2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)** | **2020.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.)** | **2020.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%)** |
|---|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப சேவைகள் | 75.51 | 75.51 | 100% |
| 02 | காணி | 11.27 | 11.26 | 100% |
| 03 | காணி உபயோக திட்டமிடல் | 0.90 | 0.90 | 100% |
| 04 | தாபன விருத்தி | 11.56 | 11.56 | 100% |
| 05 | வணிக அபிவிருத்தி | 0.95 | 0.95 | 100% |
| 06 | காலாச்சார மற்றும் விளையாட்டு பிரிவு | 4.47 | 3.52 | 79% |
| 07 | வன மற்றும் சுற்றாடல் | 7.83 | 7.83 | 100% |
| 08 | நிர்வாகம் | 11.37 | 11.37 | 100% |
| 09 | போக்குவரத்து | 7.00 | 7.00 | 100% |
| 10 | விவசாயம் (நிறுவன ரீதியான மூலதனம்) | 5.00 | 3.17 | 63% |
| 11 | கால்நடை வளங்கள் (நிறுவன ரீதியான மூலதனம்) | 3.17 | 4.13 | 130% |
| **மொத்த கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)** | | **139.03** | **137.18** | **99%** |
| 01 | விவசாயம் (செயற்திட்டம்) | 18.89 | 18.89 | 100% |
| 02 | கால்நடை வளங்கள் (செயற்திட்டம்) | 9.23 | 9.23 | 100% |
| 03 | RMMIS | 8.50 | 11.00 | 129% |
| **கூட்டுத் தொகை** | | **36.62** | **39.12** | **107%** |
| **மொத்த கூட்டுத் தொகை** | | **175.65** | **176.30** | **100%** |




# எல் வலயம்

### வலயம் தொடர்பான அறிமுகம்

1984 ஆம் ஆண்டில் காணி ஆணையாளர் திணைக்களத்தினால் குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பிரதேசமானது 1988 ஆம் ஆண்டில் 562 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 163,000 ஹெக்டயார் ஆக இருக்கின்ற இவ்வலயத்தின் நிலப்பரப்பானது வடக்கே முல்லைதீவு – வவுனியா பிரதான வீதியும், கிழக்கே முல்லைதீவு கடற்கரையும், தெற்கே புல்மோட்டை கெபிதிகொல்லாவ பிரதான வீதியும், மேற்கே சிங்ஹயா உல்பதஹின்ன திரிகோண ஸ்தளத்தின் ஊடாக மகஹெட்டியாவஹின்ன மலைத்தொடரின் ஊடாக கோடானது புலியன்குளம் வவுனியா வீதியின் ஊடாக எல்லையைக் கொண்ட பிரதேசம் பூராக பரந்து காணப்படுகின்றது.

| **தொடர் இலக்கம்** | **பிரிவு** | **2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)** | **2020.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.)** | **2020.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%)** |
|---|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப சேவைகள் | 11.50 | 10.34 | 90% |
| 02 | காணி | 1.20 | 1.00 | 83% |
| 03 | நிர்வாகம் | 1.00 | 0.56 | 56% |
| 04 | போக்குவரத்து | 3.00 | 2.90 | 97% |
| 05 | விவசாயம் (நிறுவன ரீதியான மூலதனம்) | 3.30 | 3.20 | 97% |
| 06 | கால்நடை வளங்கள் (நிறுவன ரீதியான மூலதனம்) | 0.50 | 0.50 | 100% |
| **மொத்த கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)** | | **20.50** | **18.50** | **90%** |
| 01 | விவசாயம் (செயற்திட்டம்) | 1.00 | 0.28 | 28% |
| **கூட்டுத் தொகை** | | **1.00** | **0.28** | **28%** |
| **மொத்த கூட்டுத் தொகை** | | **21.50** | **18.78** | **87%** |




## <u>ஹுருளுவெவ வலயம்</u>

**வலயம் தொடர்பான அறிமுகம்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1997.07.16 ஆம் திகதிக்குரிய இலக்கம் 984/5 உடைய அறிவித்தல் மூலம் ஹுருளு நீர் வழங்கும் கால்வாயின் நீர் முகாமைத்துவத்தை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் 1998.05.09 ஆம் திகதி ஹுருளுவெவ வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகமானது தம்புள்ளை பெல்வெஹரவில் நிறுவப்பட்டது.

அதற்கமைய அநுராதபுர மாவட்டத்தில் கெகிராவை, பலாகல மற்றும் கலென்பிதுனுவெவ ஆகிய பிரதேச செயலாளர் தொகுதிகளுக்குரிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 49 உம், மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ளை மற்றும் நாவுல பிரதேச செயலாளர் தொகுதிகளுக்குரிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 32 உம், கல்கிரியாகம, மடாடுகம, பளுகஸ்வெவ, களுந்தேவ மற்றும் சீகிரியா ஆகிய தொகுதிகள் 05 இற்கும் உட்படுகின்றன.

**செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்கள்.**

- பொல்கொல்லையில் இருந்து போவதென்னவிற்கு திசை திருப்பப்படுகின்ற மகாவலி நீரானது லெனதொர சுரங்கப் பாதை வெளியேற்றத்தில் இருந்து 33 கிலோ மீட்டர் நீளமான ஹுருளு நீர் வழங்கும் கால்வாய் மற்றும் யான் ஓயாவின் ஊடாக தடைகள் எதுவும் இன்றி ஹுருளுவெவவிற்கு கொண்டு செல்வதற்கு திட்டமிடுதல்.
- ஹுருளு நீர் வழங்கும் கால்வாயின் இரு புறமும் பாரியளவில் மேற்கொள்ளப்படுகின்ற மேலதிக பயிர்ச்செய்கை வேளாண்மைக்காக முறையான
- ஹுருளு நீர் வழங்கும் கால்வாயின் அதிகார பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பயிர்ச்செய்கைகளை முறையாக மற்றும் உயர்ந்தபட்ச விளைத்திறனைப் பெற்றுக் கொள்ளும் விதமாக விவசாயம் மற்றும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- கண்டலம நீர்த்தேக்கத்தால் மற்றும் தம்புளுஓயா நீர்த்தேக்கத்தால் மடாடுகம மற்றும் கல்கிரியாகம தொகுதிக்கு விநியோகிக்கின்ற நீரின் மூலம் உயர்ந்தபட்ச விளைத்திறனை நோக்கி விவசாயிகளை ஆற்றுப்படுத்தி அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நீர்ப்பாசன, காணிகள், விவசாய நடவடிக்கைகள் மற்றும் சமூக அபிவிருத்தியைப் போலவே சுற்றாடல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

| தொடர் இலக்கம் | பிரிவு | 2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.) | 2020.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.) | 2020.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப சேவைகள் | 64.57 | 64.06 | 99% |
| 02 | காணி | 13.10 | 12.45 | 95% |
| 03 | காணி உபயோக திட்டமிடல் | 1.99 | 0.83 | 42% |
| 04 | தாபன விருத்தி | 11.56 | 8.35 | 72% |
| 05 | வணிக அபிவிருத்தி | 4.43 | 4.40 | 99% |
| 06 | காலாச்சார மற்றும் விளையாட்டு பிரிவு | 3.10 | 0.34 | 11% |
| 07 | வன மற்றும் சுற்றாடல் | 6.19 | 5.92 | 96% |
| 08 | நிர்வாகம் | 4.30 | 1.43 | 33% |
| 09 | போக்குவரத்து | 10.91 | 10.41 | 95% |
| 10 | விவசாயம் (நிறுவன ரீதியான மூலதனம்) | 17.00 | 16.50 | 97% |
| 11 | கால்நடை வளங்கள் (நிறுவன ரீதியான மூலதனம்) | 2.11 | 0.88 | 42% |
| **மொத்த கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)** | | **139.26** | **125.56** | **90%** |
| 01 | விவசாயம் (செயற்திட்டம்) | 16.09 | 24.33 | 151% |
| 02 | கால்நடை வளங்கள் (செயற்திட்டம்) | 8.62 | 2.58 | 30% |
| 03 | RMMIS | 5.00 | 2.50 | 50% |
| **கூட்டுத் தொகை** | | **29.71** | **29.41** | **99%** |
| **மொத்த கூட்டுத் தொகை** | | **168.97** | **154.96** | **92%** |




# ரம்பகெண்ஓயா வலயம்

### வலயம் தொடர்பான அறிமுகம்

1979 இலக்கம் 23 ஐ உடைய மகாவலி அதகார சபைச் சட்டத்தின் 3/1 ஆம் பிரிவின் கீழ் விசேட செயற்திட்ட பிரதேசமாக 2000.05.07 ஆம் திகதிக்குரிய இலக்கம் 1130 (13) ஐ உடைய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வலயமாகும். அதற்கமைய 2010.09.01 ஆம் திகதியில் இருந்து மகஓயா மற்றும் பதியதலாவ பிரதேச செயலாளர் தொகுதிகளில் நிலவுகின்ற நீர் மற்றும் ஏனைய இயற்கை வளங்களை உபயோகித்து பிரதேசத்தின் நிலைபெறுதகு அபிவிருத்தியை இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் முன்னெடுக்கப்படுவதாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் நிலவுகின்ற வறுமையைப் போக்குவதல் மற்றும் மொத்த தேசிய உற்பத்திக்கு வழங்க வேண்டிய பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ள இவ்வபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் நேரியல் தாபனங்களுடன் ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டமாக செயற்படுத்தப்படும். இதற்கமைய ரம்பகெண்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தின் நீர்ப்பாசன காணி அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

| **தொடர் இலக்கம்** | **பிரிவு** | **2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)** | **2020.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.)** | **2020.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%)** |
|---|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப சேவைகள் | 3.75 | 3.59 | 96% |
| 02 | காணி | 0.45 | 0.43 | 96% |
| 03 | காணி உபயோக திட்டமிடல் | 0.25 | 0.05 | 21% |
| 04 | தாபன விருத்தி | 0.20 | 0.20 | 99% |
| 05 | வணிக அபிவிருத்தி | 0.05 | 0.05 | 98% |
| 06 | காலாச்சார மற்றும் ஊடகப் பிரிவு | 0.05 | 0.01 | 14% |
| 07 | வன மற்றும் சுற்றாடல் | 0.35 | 0.34 | 97% |
| 08 | நிர்வாகம் | - | - | - |
| 09 | போக்குவரத்து | 0.85 | 0.84 | 99% |
| 10 | விவசாயம் (நிறுவன ரீதியான மூலதனம்) | 3.05 | 3.05 | 100% |
| **மொத்த கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)** | | **9.00** | **8.56** | **95%** |
| 01 | விவசாயம் (செயற்திட்டம்) | 1.00 | - | - |
| **கூட்டுத் தொகை** | | **1.00** | **-** | **-** |
| **மொத்த கூட்டுத் தொகை** | | **10.00** | **8.56** | **86%** |




## வலவ வலயம்

### வலயம் தொடர்பான அறிமுகம்

உடவலவ பல்நோக்கு முன்மொழிவுத் திட்டம் 1963 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், உடவலவ நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்டதும், அதற்கு இணக்கமாக குடியமர்த்தல்கள் மற்றும் விவசாய நிலங்களின் அபிவிருத்தி என்பன 1981 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டது ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் மூலமாகும்.

1979 ஆம் ஆண்டு இலக்கம் 23 ஐ உடைய இலங்கை மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய 1981/04/06 ஆம் திகதிக்குரிய இலக்கம் 137 ஐ உடைய வர்த்தமானி பத்திரிகை மூலம் கௌரவ காணி அபிவிருத்தி மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த காமிணி திஸாநாயக்க அவர்களால் வலவ வலயமானது வலவ விசேட அதிகார பிரதேசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 1982.01.01 ஆம் திகதியில் இருந்து வலவ வலயத்தில் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படுகின்றன.

வலவ வலயத்தின் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டு தற்பொழுது 34 வருடங்கள் கடந்துள்ளதுடன், இக்காலத்தினுள் வலயமானது விரைவான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. அங்குனுகொளபெலெஸ்ஸ, முரவெசிஹேன, சூரியவெவ, மயுரபுற, சந்திரிகா வெவ மற்றும் கிரிஇப்பன்வெவ ஆகிய 06 தொகுதிகளைக் கொண்டுள்ளதுடன், 39 அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | பிரிவு | 2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.) | 2020.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.) | 2020.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப சேவைகள் | 20.24 | 20.53 | 101% |
| 02 | காணி | 4.80 | 0.46 | 10% |
| 03 | காணி உபயோக திட்டமிடல் | 1.03 | 1.02 | 99% |
| 04 | தாபன விருத்தி | 6.38 | 5.94 | 93% |
| 05 | வணிக அபிவிருத்தி | 2.27 | 1.92 | 84% |
| 06 | காலாச்சார மற்றும் ஊடகப் பிரிவு | 0.82 | 0.80 | 97% |
| 07 | வன மற்றும் சுற்றாடல் | 6.86 | 5.69 | 83% |
| 08 | நிர்வாகம் | 2.37 | 2.55 | 108% |
| 09 | போக்குவரத்து | 3.05 | 2.58 | 84% |
| 10 | விவசாயம் (நிறுவன ரீதியான மூலதனம்) | 2.50 | 0.66 | 26% |
| 11 | கால்நடை வளங்கள் (நிறுவன ரீதியான மூலதனம்) | 0.83 | 0.92 | 112% |
| **மொத்த கூட்டுத் தொகை (நிறுவன ரீதியான மூலதனம்)** | | **51.14** | **43.07** | **84%** |
| 01 | விவசாயம் (செயற்திட்டம்) | 3.86 | 2.16 | 56% |
| 02 | கால்நடை வளங்கள் (செயற்திட்டம்) | 1.48 | 0.90 | 61% |
| 03 | RMMIS | 5.80 | 5.80 | 100% |
| **கூட்டுத் தொகை** | | **11.14** | **8.86** | **80%** |
| **மொத்த கூட்டுத் தொகை** | | **62.27** | **51.93** | **83%** |

## 2020.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் – வலய அடிப்படையில்

| தொடர் இலக்கம் | வலயம் | 2020 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மில்.) | 2020-12-31 ஆம் திகதிக்கு செலவு செய்யப்பட்ட தொகை (ரூ.மில்.) | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 1 | பி | 156.11 | 133.92 | 86% |
| 2 | சி | 149.83 | 122.97 | 82% |
| 3 | டி | 50.76 | 37.01 | 73% |
| 4 | ஈ | 50.64 | 48.76 | 96% |
| 5 | ஜீ | 77.36 | 68.66 | 89% |
| 6 | எச் | 175.65 | 176.30 | 100% |
| 7 | ஹுருளுவெவ | 62.27 | 51.93 | 83% |
| 8 | உடவலவ | 168.97 | 154.96 | 92% |
| 9 | ரம்பகெண்ஓயா | 10.00 | 8.56 | 86% |
| 10 | எல் | 21.50 | 18.78 | 87% |
| | **மொத்தம்** | **923.09** | **821.85** | **89%** |

### பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற பிரிவுகள்

1. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு
2. உள்ளக கணக்காய்வுப் பிரிவு
3. நீரியல் முகாமைத்துவ செயலகம்
4. கொள்முதல் பிரிவு

## 01. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

### வகிபாகங்கள்

- தாபனத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோளிற்கு அமைய ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல் மற்றும் வருடாந்த திட்டத்திற்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- விசேட செயற்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் பொருளாதார சமூக கணிப்பீடுகள் மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல்.
- செயற்பாட்டுத் திட்டத்தில் மற்றும் செயற்திட்ட அறிக்கைகளில் உள்ள முன்னேற்றத்தை மாதாந்தம், காலாண்டிற்கு ஒரு முறை மற்றும் வருடாந்தம் மீளாய்வுக்கு உட்படுத்துதல். செயற்திட்ட மதிப்பீட்டு ஒருங்கிணைப்பு மற்றும் இயக்க ஒருங்கிணைப்புத் தொகுதி ஒன்றை சான்றுப்படுத்துதல்.
- தொழில்நுட்ப அறிக்கைகள், இயல்வாய்ப்பு அறிக்கை இயக்கல்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளைப் பாதுகாத்தல் மற்றும் பயன்பாட்டிற்கு வழங்குதல்.

- மகாவலி கணினி வலையமைப்பை இயக்குதல், தாபரித்தல் மற்றும் உத்தியோகபூர்வ வலைத் தளத்தை நிறுவுதல். இற்றைப்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொள்ளுதல்.
- ஆதிக்கத்திற்கு உட்படுகின்ற துறைகள் தொடர்பான ஆயவுகளை ஒருங்கிணைத்தல்.

## 02. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

இலங்கை மகாவலி அதிகார சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவானது, இலங்கைக் குடியரசினால் வெளியிடப்பட்டுள்ள நிதிப் பிரமாணம் (Financial Reguations), நிர்வாக பிரமாணம் (Adminstration Regulations), காலத்திற்கு ஏற்ற விதத்தில் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க, இலங்கை மகாவலி அதிகார சபையின் நோக்கங்களை உறுதி செய்து கொள்வதற்காக, பரிசீலனைகள் கண்காணிப்புக்களின் மூலம் உள்ள கணக்காய்வுத் திட்டத்தை அமுல்படுத்தி, முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

**<u>வகிபாகங்கள்</u>**

வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் செயற்படுத்தும் போது, நிலவுகின்ற உள்ளக நிர்வாக ஒழுங்கு முறைகளுக்கு இணங்கியதாக மற்றும் நல்லாட்சிக் கொள்கைகளுக்கு இணங்கியதாக அமுல்படுத்தப்படுகின்றதா எனவும், மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் பொருளாதார ரீதியான பிரதிபலன்கள் (Value for Money) கிடைக்கின்றதா எனவும், கணக்காய்வு விசாரணைகளின் கண்காணித்தல்கள் ஒப்பீடுகள், பௌதீக பரிசீலனைகள் என்பன இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனம் (ICA) மூலம் மற்றும் சர்வதேச கணக்கியல் தர நியமங்கள் (IAS) மூலம் வெளியிடப்பட்டுள்ள தர நியமங்களுக்கு அமைவாக, கணக்காய்வை மேற்கொண்டு மேலாண்மைக்கு அறிக்கையிடுதல்.

2020 ஆம் ஆண்டில் நாட்டில் இடம்பெற்ற தொற்றுப் பரவல் நிலைமையிலும், பின்வரும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

1. உள்ளக கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 10 ஆகும்.
2. வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கைகளின் எண்ணிக்கை 08 ஆகும்.
3. நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் மேலாண்மை ஒன்று கூடல்களின் எண்ணிக்கை
    - அமைச்சுக்கள் மட்டத்திலான மேலாண்மை ஒன்று கூடல்கள் 03
    - அதிகார சபைகளின் மட்டத்திலான மேலாண்மை ஒன்று கூடல்கள் 03
4. உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்காக வழங்கப்பட்ட பதில்கள் மற்றும் விசாரணைகள் மூலம் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளை செயற்படுத்துதல், அவற்றின் பின்னரான பின்தொடர்வுகளை மேற்கொள்ளுதல்.
5. கணக்காய்வு மற்றும் மேலாண்மைக் குழுக்கள் மூலம் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக, முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக ஆலோசனைகளை வழங்குதல்.

## 03.நீரியல் முகாமைத்துவ செயலகம்

நீர் முகாமைத்துவ செயலகம் மூலம் வருடாந்த சிறு போகம் மற்றும் பெரும் போகங்களுக்காக இயக்கற் கொள்கைகளை பரிந்துரைத்து மகாவலி தொகுதிக்காக இயக்கற் திட்டங்களை தயாரித்தல் முன்னெடுக்கப்படுவதுடன் இது அடிப்படையாக நீர்ப்பாசன மற்றும் மின்வலுத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு பிரதானமாக நெல் மற்றும் மேலதிக பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்திக்காக விரிவான பங்களிப்பை வழங்குகின்ற தேசிய நிகழ்ச்சித் திட்டமாகும்.
இதற்கு அவசியமான தொழில்நுட்ப வல்லுனர்களின் ஆலோசனைகளை வழங்நகுகின்ற அலகாக நீரியல் நிர்வாக செயலகத்தின் மூலம் நீரியல் நிர்வாக குழுவிற்குச் சொந்தமான உறுப்பு நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் சகல இயக்கற் திட்டங்களை வாராவாரம் மேற்பார்வையிட்டு அதன் முன்னேற்றத்தை மீளாய்வுக்கு உட்படுத்துதல் மற்றும் வருகின்ற வாரங்களுக்கான நீரியல் இயக்கற் திட்டங்களை செயற்படுத்துவதற்கு அவசியமான ஆலோசனைகளை வழங்குவது முன்னெடுக்கப்படுவதுடன் அதனை விவசாய, மின்சார மற்றும் குடிநீர் தேவைகளை கருத்திற் கொண்டு மொத்தத் தொகுதியிலும் பரிந்துரைக்கப்பட்ட நீர்த் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கின்றது.

### 2019/20 பெரும் போகம் (2019 ஒக்டோபர் மாதம் 01 – 2020 மார்ச் மாதம் 31)

2019 / 2020 பெரும் போகத்திற்கான மகாவலி நீரியல் முகாமைத்துவக் குழு ஒன்றுகூடலானது 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி பேராதெனிய கன்னொருவ தாவரங்கள் மற்றும் மரபணு வள மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.
2019/2020 பெரும் போகமானது வழமையான பெரும் போகமாக எதிர்பார்க்கப்பட்ட பருவக்காற்று மழை கிடைக்கப் பெற்ற பெரும் போகமாக அமைந்ததுடன் 2020 ஜனவரி 01 ஆம் திகதியாகும் போது செயற்படு நீர் கொள்ளளவானது, கொத்மலை 83.7%, விக்டோரியா 89.7%, மொரகஹகந்த 99.7%, ஹுருளு வாவி 97.8%, கலா வாவி 94.3%, மாதுறு ஓயா 100% மற்றும் உடவலவ 96.5% ஆக காணப்பட்டது. இடைக்கிடையே கிடைக்கப் பெற்ற சிறு மழையில் இருந்து பயிர்ச் செய்கையை பாதுகாத்துக் கொள்வதற்கு மகாவலி சி மற்றும் பி வலயங்களுக்கு முடியுமானதாக இருந்தது. ஒட்டு மொத்தமாக 2019/20 பெரும் போகத்திற்கு போதியளவு நீர் கிடைக்கப் பெற்ற சாகுபடியாகவும் நாட்டில் நீர் மின் உற்பத்திக்கு பங்களிப்புச் செய்த பெரும் போகமாகவும் காணப்பட்டது.
இச்சாகுபடியில் மகாவலி முறைமையின் மூலம் மணித்தியாலத்திற்கு 366.6 கிகா வொட், களனி முறைமையின் மூலம் மணித்தியாலத்திற்கு 420.2 கிகா வொட், என்பன 2019/20 பெரும் போகத்தில் தேசிய மின்சார முறைமைக்கு ஒன்று சேர்க்கப்பட்டன. மின்சார உற்பத்தியானது 2019/20 பெரும் போகத்தில் ஜனவரி தொடக்கம் மார்ச் வரை நிலவிய விதமானது பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




நீர் நிர்வாகக் குழுவின் கீழ் உள்ள வலயங்களில் 2019/20 பெரும் போகத்தின் பயிர்ச் செய்கைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன பின்வரும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



**2020 ஆம் ஆண்டின் சிறு போகம் – (2020 ஏப்ரல் மாதம் 01 – 2020 செப்டம்பர் 30)**

2020 ஆம் ஆண்டு சிறு போகத்திற்கான மகாவலி நீர் நிர்வாக குழு ஒன்றுகூடலானது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி இலங்கை மகாவலி அதிகார சபை, பிரதான அலுவலகத்தில் இடம்பெற்றது. நிலவுகின்ற கொவிட் 19 தொற்றுப் பரவல் நிலைமை காரணமாக இவ்வாறு நடாத்த வேண்டி ஏற்பட்டதுடன், அப்பொழுது கொத்மலை நீர்த்தேக்கத்தில் செயற்படு நீர் மட்டமானது 42.1% உம், விக்டோரியா 67.9% உம், மொரகஹகந்த 73.2% உம், மாதுறு ஓயா 83.3% உம், கலா வாவி 48.6% உம், ஹுருளு வாவி 58.7% ஆகவும் குறைந்த நீர் மட்டம் காணப்பட்டதுடன் பராக்கிரம சமுத்திரத்தின் நீர் மட்டமானது உயர்ந்த பட்ச நீர் மட்டத்தை எட்டியிருந்தது.

ஆகையால் ஒட்டு மொத்தமாக பயிர்ச் செய்கையானது சுமார் 50% உயர்ந்த பட்சமானது IH மற்றும் MH வலய பயிர்ச் செய்கைகளுக்காக எதிர்பார்க்கப்பட்டதுடன் ஏனைய வலயங்களுக்காக 100% முன்மொழியப்பட்டது. அதற்கமைய 2020 சிறு போகத்தின் மொத்த விதைக்கும் பரவெல்லையானது 145,173 ஹெக்டயராக இருந்ததுடன் அது அண்ணளவாக மொத்த பயிர்ச் செய்கையில் சுமார் 76% ஆக இருந்தது.

இச் சிறு போகத்தில் மகாவலி முறைமையின் மூலம் மணித்தியாலத்திற்கு 888 கிகா வொட், களனி முறைமையின் மூலம் மணித்தியாலத்திற்கு 3479 கிகா வொட் மின்சாரமும் தோற்றுவிக்கப்பட்டது. மின்சார உற்பத்தித் திட்டம் மற்றும் 2020 சிறு போகத்தில் நிலவிய விதமானது பின்வரும் வரைபடத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது.




நீர் நிர்வாகக் குழுவின் கீழ் உள்ள வலயங்களில் 2020 சிறு போகத்தின் பயிர்ச் செய்கைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன பின்வரும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




## 2020/21 பெரும் போகம் (2020 ஒக்டோபர் மாதம் 01 – 2020 டிசம்பர் மாதம் 31 வரை)

2020/21 பெரும் போகத்திற்கான மகாவலி நீரியல் முகாமைத்துவக் குழு ஒன்றுகூடலானது 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி பேராதெனிய கன்னொருவ தாவரங்கள் மற்றும் மரபணு வள மத்திய நிலையத்தில் இடம்பெற்றதுடன், அப்பொழுது தொகுதியில் எதிர்பார்க்கப்பட்ட சகல நீர்த்தேக்கங்களினதும் செயற்படு நீர் மட்டமானது கொத்மலை 74.4%, விக்டோரியா 72.5%, மொகஹகந்த 50.2%, வலயத்திற்குச் சொந்தமான ஹுருளு வாவி 28.9%, பி வலயத்திற்குச் சொந்தமான மாதுறு ஓயா 34.0% மற்றும் வலவ வலயமானது 35.99% குறைந்த பட்ச நீர் மட்டத்தைக் கொண்டிருந்தன.

அதற்கமைய 2020/21 பெரும் போகத்தின் மொத்த விதைக்கும் பரவெல்லையானது 191,561 ஆக இருந்ததுடன் அது ஒட்டு மொத்தமாக சுமார் 98% ஆக இருந்தது. அப்பொழுது கிடைக்கப் பெற்று இருந்த இரண்டாவது பருவ இடை மழை மற்றும் வட கீழ் பருவ மழையானது எதிர்பார்க்கப்பட்ட பிரதேசங்களுக்கு கிடைக்கப் பெற்று இருக்காமையால் நீரை விநியோகிப்பதை தாமதிக்குமாறு அறிவிக்கப்பட்டதுடன் அதற்கமைய நீரை விநியோகித்தல், மகாவலி பி, சி மற்றும் வலவ வலயங்களுக்கு நவம்பர் மாதம் நடுப்பகுதி வரை தாமதப்படுத்தி ஆரம்பிக்க வேண்டி ஏற்பட்டது.

இச்சாகுபடியில் மாகவலித் தொகுதியில் மணித்தியாலத்திற்கு 476.7 கிகா வொட் மின்சாரமும், களனி தொகுதியில் மணித்தியாலத்திற்கு 567.5 கிகா வொட் மின்சாரமும் தோற்றுவிக்கப்பட்டது. மின் உற்பத்தித் திட்டம் மற்றும் 2020/21 பெரும் போகத்தில் நிலவிய விதமானது பின்வரும் வரைபடம் மூலம் காட்டப்பட்டுள்ளது.




நீர் நிர்வாகக் குழுவின் கீழ் உள்ள வலயங்களில் 2020/21 பெரும் போகத்தின் பயிர்ச் செய்கைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன பின்வரும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## 04. கொள்முதல் பிரிவு

**வகிபாகங்கள்**

1. இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் சபை ஒன்று கூடலை நடாத்துவதற்குரிய செயற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.
2. திணைக்கள கொள்முதல் குழு நடாத்துதல் மற்றும் அதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.
3. இ.ம. அதிகார சபையின் ஒன்றிணைந்த கொள்முதல் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவசியமான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
4. பிராந்திய கொள்முதல் குழு, செயற்திட்ட கொள்முதல் குழு மற்றும் சகல தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களையும் நியமித்தல் மற்றும் பின் தொடர்வுகள்.
5. கொள்முதல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அரச வழிகாட்டல்கள், சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பாக நிறுவனத்திற்கு அறிவுறுத்துதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
6. உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் நிதிசார் அதிகாரங்களை பன்முகப்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் கொள்முதன் செயன்முறைகளை மிகவும் வினைத்திறன் மிக்கதாக மற்றும் தெளிவானதாக பேணிச் செல்லுதல்.
7. இ.ம.அ. பிரதான அலுவலகம் மற்றும் வலய அலுவலகங்களுக்கு அவசியமான கொள்முதல்களை முன்னெடுத்தல் மற்றும் இயக்குதல்.
8. இ.ம. அதிகார சபையின் பிரிவுகள் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற விலை/ கேள்விலை மனுக்கள் கோருவதற்கான பகிரங்க விலை/ கேள்விலை மனுக்களைத் திறத்தலை முன்னெடுத்தல் அல்லது இயக்குதல்.
9. பணிப்பாளர் நாயகம் அவர்களால் விதிக்கப்படுகின்ற விசேட/ அவசர கொள்முதல்கள் அல்லது ஏனைய கடமைசார் பணிகளை நிறைவேற்றுதல்.
10. பணிப்பாளர் நாயகம் அவர்களின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்படுகின்ற ஆவணங்கள், கோப்புகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையை பரிசோதித்தல், சீர்செய்தல் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.
11. இ.ம. அதிகார சபையின் வருடாந்த அறிக்கைகளை இலங்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக தயாரித்தல் மற்றும் அதற்குரிய சகல பணிகளையும் செயற்படுத்துதல்.

# இரண்டாவது அத்தியாயம்

## 2.1 தொழில்நுட்ப சேவைப் பிரிவு

**வகிபாங்கள் :**

1. நிறுவனத் திட்டம்/ வருடாந்த திட்டத்திற்கு அமைய புதிய உருப்படியில் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உத்திகளுடன் கூடிய திட்டங்களைத் தயாரித்தல்.
2. தொழில்நுட்ப திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக வழிகாட்டுதல் மற்றும் இயக்குதல்.
3. பிரதான அணைகள் மற்றும் நீர் திசை திருப்பு வழிகள் மற்றும் தாழ் பள்ளத்தாக்குப் பிரதேசத்தின் நீர்ப்பாசனத் தொகுதி உட்பட பௌதீக வளங்களை உரிய முறையில் தாபரிப்பத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உகந்த செயற்பாடு ஒன்றைத் தயாரித்தல்.
4. நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளின் ஊடாக விவசாய நடவடிக்கைகள் மற்றும் ஏனைய தேவைகளுக்காக உள்ள நீரின் அளவை உரிய விதத்தில் விநியோகிப்பதற்காக முறையான திட்டங்களைத் தயாரித்தல்.
5. செயற்திட்ட திட்டமிடல், இயலுமையை மதிப்பிடுதல், இயக்குதல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்விற்கு உட்படுத்துதல்.

அடிப்படையாக மேற்குறிப்பிட்ட பிரதான செயற்பாடுகளை இலக்காகக் கொண்டு இலங்கை மகாவலி அதிகார சபையின் தொழில்நுட்ப சேவைப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அதற்கமைய 2020 ஆம் ஆண்டில் இப்பிரிவின் மூலம் மேற்குறிப்பிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### செயற்திட்ட வடிவமைப்பு மற்றும் செயற்படுத்துதல்

**புதிதாக முன்வைக்கப்படுகின்ற செயற்திட்டப் பிரேரணைகள்**

- ஒருங்கிணைக்கப்பட்ட ஆற்று வடிநிலங்கள் மற்றும் நீர் வள முகாமைத்துவச் செயற்திட்டம் (IWWRM).
- மஹகம்பிலியாவ வாவி மற்றும் வெலிஓயா நீர்ப்பாசனக் குளங்களின் அபிவிருத்திச் செயற்திட்டம். (L வலயம்).
- கிவுல் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம் (L வலயம்).
- மாதுறு ஓயா வலது கரை (RB) அபிவிருத்திச் செயற்திட்டம் (B வலயம்).
- ரிதிமாலியத்த அபிவிருத்திச் செயற்திட்டம்
- ரம்பகெண் ஓயா அபிவிருத்திச் செயற்திட்டம்.
- வெலி ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம்.
- ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் – பி வலயம்

- சிறு மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசனத் தொகுதிகளை புணர்நிர்மாணம் செய்யும் செயற்திட்டம்.
- சூரிய மின் சக்தியை கரைக் காணிகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நிறுவுதல்.

**வருமான வழிகளை மேம்படுத்துதல்.**

- வணிக விநியோகங்களுக்காக பணம் அறவிடுதல்.
- நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களின் மண்டி/ மணல்களுக்காக பணம் அறவிடுதல்.

**2020 ஆம் ஆண்டிற்காக திறைசேரியின் மூலம் அந்தந்த வலயங்களுக்காக ஒதுக்கப்பட்ட மானியங்கள் செலவு செய்யப்பட்ட விபரங்கள் பின்வருமாறு**

**I. வருடாந்த நிதிச் செலவின அறிக்கை (முன்னேற்றம்)**

**செயற்திட்டங்களின் கீழ்**

| **தொடர் இலக்கம்** | **செயற்திட்டம்** | **2020 ஆம் ஆண்டிற்காக தொ.பி. இற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி.** | **2020 ஆம் ஆண்டின் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி.** | **நிதிசார் முன்னேற்றம் %** |
|---|---|---|---|---|
| 01 | ரிதிமாலியத்த அபிவிருத்திச் செயற்திட்டம் | 21.56 | 16.21 | 75 |
| 02 | ரம்பகென் ஓயா அபிவிருத்திச் செயற்திட்டம் | 29.25 | 20.44 | 70 |
| 03 | வெலி ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் | 50.86 | 46.32 | 91 |
| 04 | ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் – பி வலயம் | 122.50 | 85.41 | 70 |
| 05 | மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திச் செயற்திட்டம் – பி வலயம்). | 10.72 | 8.45 | 79 |
| 06 | சிறு மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசனத் தொகுதிகளை புணர்நிர்மாணம் செய்யும் செயற்திட்டம் | 64 | 43.24 | 68 |
| | **உப கூட்டுத் தொகை** | **298.89** | **220.06** | **74** |

## II. தாபன மூலதனத்தின் கீழ்

| தொடர் இலக்கம் | செயற்திட்டம் | 2020 ஆண்டில் தொ. சே. பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி. | 2020 ஆண்டில் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 1 | பி வலயம் | 84.46 | 72.06 | 85 |
| 2 | சி வலயம் | 78.05 | 68.09 | 87 |
| 3 | டி வலயம் | 10.21 | 10.18 | 100 |
| 4 | ஜீ வலயம் | 20.76 | 18.35 | 88 |
| 5 | எச் வலயம் | 75.51 | 75.5 | 100 |
| 6 | எல் வலயம் | 11.50 | 10.34 | 90 |
| 7 | வலவ வலயம் | 64.57 | 64.06 | 99 |
| 8 | ஹுருளுவெவ வலயம் | 20.24 | 20.53 | 101 |
| 9 | ரம்பகெண் ஓயா வலயம் | 3.75 | 3.59 | 96 |
| 10 | விக்டோரியா வலயம் | 21.17 | 21.17 | 100 |
| 11 | பிரதான அலுவலகம் (தொ. சேவை) | 28 | 15.29 | 55 |
| 12 | இயந்திர வேலைத்தளம் – தம்புத்தேகம | 2.45 | 2.36 | 96 |
| 13 | ஆற்று வடிநில முகாமைத்துவப் பிரிவு | 2.7 | 2.58 | 96 |
| 14 | பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க இயக்கப் பிரிவு | 267.63 | 261.92 | 98 |
| 15 | கிவுல் ஓயா | 5.2 | 3.96 | 76 |
| 16 | மாதுறு ஓயா | 23.95 | 21.72 | 93 |
| | **உப கூட்டுத்தொகை 1** | **720.15** | **671.7** | **93.27** |
| | **மொத்த கூட்டுத் தொகை (உப கூட்டுத்தொகை 1 + 2)** | **1019.04** | **891.76** | **87.5** |

## 2.2 தாழ் பள்ளத்தாக்கு அபிவிருத்திப் பிரிவு

**அறிமுகம்**

மகாவலி அதிகார பிரதேசங்களில் உள்ள நீர்ப்பாசனத் தொகுதிக் குளங்களை மற்றும் நீர்த்தேக்கங்களை இயக்குதல் மற்றும் தாபரித்தல், கட்டிட வளாகங்களைத் தாபரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், வீதி அபிவிருத்தி மற்றும் அதற்கு உரிய கட்டுமானங்கள், மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல், கட்டுமான நிலைமைகளை நிர்வாகித்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு என்பன அப்பிரிவின் பிரதான பணிகளாகும்

**வகிபாகங்கள்**

அனைத்து வலயங்களிலும் மற்றும் விசேட செயற்திட்டங்கள் உட்பட பணிகள் மற்றும் சேவைகள் தொடர்பாக பெறுகைச் செயற்பாடுகளை அமுல்படுத்துதல்.

செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது ஒப்பந்த நிர்வாகத்திற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

வருடாந்த மானியங்களின் கீழ் கட்டுமானங்களை மேற்கொள்ளுதல், தாபரித்தல் மற்றும் புணர்நிர்மாணம் செய்தல் தொடர்பான வருடாந்த வரவுசெலவு திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றத்தை மீளாய்வுக்கு உட்படுத்துதல்.

மகாவலி வலயங்களில் குளங்கள் மற்றும் கால்வாய்ப் பாதை முறைமைக்குரிய செயல்பாடு மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

நீரியல் நிர்வாக முகாமைத்துவ அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து மகாவலி பிரதேசங்களின் பயிர்ச்செய்கைக்கு அவசியமான நீர் தேவைப்பாடுகளை பெற்றுக் கொள்வதை உறுதி செய்தல்.

தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக பிற நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு.

**நிதிசார் முன்னேற்றம்**

2020 ஆம் ஆண்டிற்காக திறைசேரியின் மூலம் அந்தந்த வலயங்களுக்காக ஒதுக்கப்பட்ட மானியங்கள் செலவு செய்யப்பட்ட விபரங்கள் பின்வருமாறு

1. செயற்திட்டங்களின் கீழ்

| தொடர் இலக்கம் | செயற்திட்டம் | 2020 ஆண்டில் தொ. சே. பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி. | 2020 ஆண்டில் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 1 | செயற்திட்டங்கள் | 288.17 | 211.62 | 73.44 |

2. தாபன மூலதனத்தின் கீழ்

| | | | |
|---|---|---|---|
| வலயங்கள் | 425.87 | 385.48 | 90.52 |
| செயற்திட்டங்கள் மற்றும் வலயங்கள் | 714.04 | 597.10 | 83.62 |

**<u>விசேட பணிகள் மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்கள்</u>**

2020 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன செழுமைச் செயற்திட்டத்தின் கீழ் பி, ஈ, எச், ரம்பகண் ஓயா வலயங்களில் 20 குளங்கள் 37.18 மில்லியன் ரூபாய் பெறுமதியான நிதிசார் மானியத்தின் கீழ் புணர்நிர்மாணத்தை பூரணப்படுத்துதல்.

மகாவலி வலயங்களில் குளங்கள் மற்றும் கால்வாய்ப் பாதை முறைமைக்குரிய செயல்பாடுகள் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகள்.

நாட்டிற்கு அவசியமான விவசாய உற்பத்திகள், பிரதானமாக நெல் உட்பட ஏனைய பயிர்களுக்கு அவசியமான நீரைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான நீர்ப்பாசன முறைமையை தாபரித்தல்.

ஹெல போஜுன் உணவு விற்பனை நிலையங்கள் போன்ற சிற்றுண்டிச்சாலைகளை நிர்மாணிப்பதன் மூலம் மக்களுக்கு இலகுவாக நியாயமான விலையில் போசணை மிகுந்த உணவுகளை பெற்றுக் கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

பாடசாலை கட்டிடங்கள் போன்றவற்றை வழங்குவதன் மூலம் கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

வீதிகளை மீள் திருத்தம் செய்வதன் மூலம் மிகவும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு முடியுமானதாக இருத்தல்.

## 2.3 பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பிரிவு

பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பிரிவின் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அபிவிருத்தி செய்யப்பட்ட, செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற மற்றும் முன்மொழியப்பட்டுள்ள செயற்திட்டங்களின் பொறியியல் வடிவமைப்புக்கள் மற்றும் திட்டங்களை தயாரித்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

பின்வரும் வகிபாகங்கள் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

- மாகவலி நீர் வளத் திட்டத்தை இற்றைப்படுத்துதல்.
- அரச மற்றும் தனியார் தொழில் முயற்சியாளர்களால் முன்வைக்கப்படுகின்ற சிறிய அளவிலான நீர் செயற்திட்ட முன்மொழிவுகள் மற்றும் திட்டங்களை பகுப்பாய்வுக்கு உட்படுத்துதல்.
- செயற்பாட்டில் உள்ள நீர் வளங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டங்களின் வடிவமைப்பு மற்றும் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் பகுப்பாய்வுக்கு உட்படுத்துதல்.
- வடிவமைப்பு மற்றும் திட்டமிடலுக்குரிய பொறியியல் மதிப்பீடுகள் மற்றும் அளவுகளுக்கான கட்டணப் பட்டியலை கொள்முதல் செயற்பாடுகளுக்காக தயாரித்தல்.

- இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தர நியமங்களுக்கு அமைய பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் தொடர்பாக பயிலுனர் பொறியியலாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பிரிவின் கீழ் 2020 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட பணிகள்

**1.0 <u>மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் திட்டம்</u>**



மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திப் பிரதேசம்

மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்குச் சொந்தமான 10000 ஹெக்டயர் பயிர்ச்செய்கைக் காணிகளுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு தயாரிக்கப்பட்டதுடன், அதன் மூலம் சுமார் 20000 குடும்பங்கள் பயன் பெறவுள்ளன.

1.1 மாதுறு ஓயா வலது கரை கால்வாய் முறைமை கொங்கிரீட் அடராக்கம்

பிரதான கால்வாய் முறைமையின் ஊடாக மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் இருந்து நீரைப் பாய்ச்சுவதற்காக 16 கி.மீ. நீளமுடைய கொங்கிரீட் பரப்பி நிர்மாணிப்பதற்குள்ள கால்வாய்ப் பாதையின் திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு தயாரிக்கப்பட்டது.

பிரதான கால்வாய் முறைமையைத் திட்டமிடும் போது அதற்கு குளியல் தடாகம் மற்றும் காட்டு மிருகங்களுக்கு தப்பிச் செல்ல முடியுமான கட்டமைப்பு தொடர்பாகவும் கவனத்தைச் செலுத்தி எதிர்வரும் தேவைகளுக்கு உகந்த வகையில் தயாரிக்கப்பட்டது.

1.2 இருப்புப் பாதை/ சம மட்ட சந்திக் கடவு (Level Crossing) திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு.

பின்வரும் இருப்புப் பாதை/ சம மட்ட சந்திக் கடவு (Level Crossing) 03 உடன் கூடிய கட்டமைப்புக்களின் திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு என்பன இவ்வாறு தயாரிக்கப்பட்டன. அவை,

1. கீனானி சம மட்ட சந்திக் கடவு
   - I. அணை
   - II. வடி வழி
   - III. உள் வாயில்
   - IV. வெளி வாயில்
2. அரங்கொடை சம மட்ட சந்திக் கடவு
   - V. அணை
   - VI. வடி வழி
   - VII. உள் வாயில்
   - VIII. வெளி வாயில்

3. மீமிணிகொல்ல சம மட்ட சந்திக் கடவு
    IX. அணை
    X. வடி வழி
    XI. உள் வாயில்
    XII. வெளி வாயில்

ஆகிய கட்டமைப்புக்களின் திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு என்பன சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1.3 நீர் பிரிப்புக் கட்டமைப்பு

பிரதான கால்வாய்ப் பாதைகள் நீரைப் பெற்றுக் கொள்வதற்குப் பயன்படுத்துகின்ற நீர் திசை திருப்பிக் கட்டமைப்புக்கள் 09 இற்கு திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு என்பன சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அரங்கொடை சம மட்ட சந்திக் கடவின் களப் பரிசீலனை










கீனானி, மீமிணிகொல்ல மற்றும் அரங்கொடை சம மட்ட சந்திக் கடவுகளின் களப் பரிசீலனையை மேற்கொண்டு எதிர்வரும் நடவடிக்கைகள் தொகுக்கப்பட்டன.

2 வலவ வலயத்தின் கீழ்,

2.1 அங்குணகொலபெலஸ்ஸ பஸ் தரிப்பிடம்

அங்குணகொலபெலஸ்ஸ பஸ் தரிப்பிடத்திற்குரிய திட்டமிடல் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து அதன் கட்டுமானப் பணிகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டது.

 

2.2 பொது அங்காடி

பொது அங்காடிக்கு உரியதான திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு என்பன தயாரிக்கப்பட்டு உரிய எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டது.

3.0 எல் வலயம் – வெலி ஓயா

கிவுல் ஓயா செயற்திட்டத்திற்குரிய ஆய்வுகள் மற்றும் தரவு சேகரித்தல் எனும் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

3.1 போகஸ் வாவி பாலத்தை நிர்மாணித்தல்

எல் வலயத்தின் போகஸ் வாவி பாலத்திற்குரியதாக ஜீ.என். கட்டுமான நிறுவனம் மூலம் முன்வைக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு என்பவற்றை மீளாய்வு செய்தல் முன்னெடுக்கப்பட்டது.

4.0 மொரகஹகந்த களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு உரியதாக,

- சம மட்ட சந்திக் கடவுகள் 04 இன் கீழ் வடி வழிக்கு நீர் வழிந்தோடுவதற்கான கட்டமைப்பு
- அம்பன நீர் திட்டம்
- களு கங்கை வலது கரை பிரதான கால்வாய்க்கு உரியதாக குறுக்குக் கடவைக்காக திட்டம் தயாரித்தலும் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

5.0 மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு முன்மொழிவுச் செயற்திட்டம்

மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு முன்மொழிவுச் செயற்திட்டத்திற்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் வடிவமைப்பை மீள் பரிசீலனை செய்தல் முன்னெடுக்கப்பட்டது.

6.0 புதிய பொறியியலாளர்களைப் பயிற்றுவித்தல்

இலங்கை பொறியியல் நிறுவனத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தர நியமங்களுக்கு அமைய பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் தொடர்பாக புதிய பொறியியலாளர்கள் 05 பேரை பயிற்றுவித்தல் இவ் ஆண்டில் ஒத்திசைவாக வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது.

# 2.2 ஆற்று வடிநில முகாமைத்துவ அலுவலகம்

**அறிமுகம்**

ஆற்று வடிநில முகாமைத்துவ அலுவலகமானது, மடாடுகம மகாவலி வளாகத்தில் அமைந்துள்ளதுடன் பணிப்பாளரின் (ஆற்று வடிநில முகாமைத்துவம்) கீழ் செயற்படுகின்றது. ஆற்று வடிநில முகாமைத்துவ எண்ணக்கருவிற்கு இணங்கியதாக சூழல்சார் மற்றும் இயற்கை வள முகாமைத்துவத்திற்கு உரியதான பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கட்டுமானங்கள் மற்றும் தாபரிப்புச் செயற்பாடுகளின் தரத்தைப் பரிசீலித்தல் இவ்வலுவலகத்தின் அடிப்படைப் பொறுப்பாகும்.

அதற்கமைய இவ்வலுவலகத்தின் கீழ் நடாத்தப்பட்டு வருகின்ற நீரின் தரத்தை ஆராயும் ஆய்வு கூடத்தின் மூலம் மகாவலி கங்கை மற்றும் மகாவலித் தொகுதி மற்றும் அதனுடன் தொடர்புள்ள ஆற்று வடிநிலங்களில் அமைந்துள்ள நீர் மூலங்களிலுள்ள நீரின் தன்மையை பரிசோதித்தல் மேற்கொள்ளப்படுவதுடன் அத்தரவுகளுக்கு அமைய நீரின் தன்மையானது இடத்திற் ஏற்றவாறு மற்றும் காலத்திற்கு ஏற்ப மாறுகின்ற விதத்தை ஆய்வு செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் கீழ்,

- கலா வாவி, கண்டலம, தம்புளு ஓயா, போவதென்ன, உடவலவ மற்றும் சந்திரிகா வாவி ஆகிய மகாவலி நீர்த்தேக்கங்களின் நீரின் தன்மை தொடர்பாக மாதாந்தம் பரிசீலித்தல்.
- மகாவலி வலயங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட சிறு குளங்களின் நீரின் தன்மையை மாதந்தம் பரிசீலித்தல்.
- மகாவலி கங்கை மற்றும் மாகவலித் தொகுதியுடன் தொடர்புபட்ட தெரிவு செய்யப்பட்ட நீர்த் தாரைகளின் நீரின் தன்மை தொடர்பாக பரசீலனைகளை செய்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றது.





- அதைப் போலவே மகாவலி வலயம் மற்றும் அதன் வெளிப் பிரதேசங்களில் பயன்படுத்துகின்ற குடிநீர் மூலங்களின் நீர் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்துவதுடன் குடிநீரின் தன்மை தொடர்பாக சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.
- இதற்கு மேலதிகமாக நீரின் தன்மை தொடர்பாக மற்றும் அதற்குரிய தர நியமங்களை அளவிடுவது தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடைமுறைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன.
- எமது பிரிவுக்குச் சொந்தமான வருகின்ற நீரின் தரத்தை ஆராயும் ஆய்வு கூடமானது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரம் பெற்ற ஆய்வு கூடம் என்பதால் தொழிற்சாலைகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்கும்

போது அந்நிறுவனத்தின் ஊடாக சூழலிற்கு விடுவிக்கப்படும் கழிவு நீரின் நிலைமை பரிசீலிக்கப்பட்டு பரிந்துரை வழங்குவதும் மேற்கொள்ளப்படுகின்றது. இதில் அந்நிறுவன உரிமையாளர்கள் விடுக்கின்ற கோரிக்கைகளுக்கு அமைய பரிசீலனைகள் முன்னெடுக்கப்பட்டு கழிவு நீரின் அமைப்பு தொடர்பாக அறிக்கை வழங்கப்படுவதுடன் அதற்காக கட்டணம் அறவிடப்படும்.



- இதற்கு மேலதிகமாக வெளி நிறுவனங்கள் மூலம் விடுக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமைய நீர் மாதிரிகள் பரிசோதிக்கப்படுவதுடன் அதன் கீழ் விசேடமாக மேல் எலஹர கால்வாய் செயற்திட்டத்தின் கோரிக்கைக்கு அமைய அச்செயற்திட்டம் செயற்படுத்தப்படுகின்ற பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட நீர் மூலங்களில் நீரின் தன்மை பரிசீலிக்கப்படும்.
- அதற்கமைய, 2020 ஆம் ஆண்டில் கட்டணம் அறவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை மூலம் 948,805.00 வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், மகாவலி அதிகார சபைக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரிசோதனைகளின் பெறுமதி 2,157,933.00 ஆகும்.
- தரக் கட்டுப்பாட்டு ஆய்வு கூடம் மூலம் மகாவலி அதிகார சபையின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற கட்டுமானங்களின் தரத்தை உயர் மட்டத்தில் நடாத்திச் செல்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதில் மகாவலி வலயங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கட்டுமானங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற பொருட்களின் பொருத்தமுடைமையை பரீட்சிப்பதற்காக ஆய்வு கூட பரிசோதனைகள் மேற்கொள்வதும், அக்கட்டுமானங்களின் தரத்தைப் பரிசீலிப்பதற்காக களப் பரிசீலனை மேற்கொள்வதும் வலய அலுவலகங்களால் விடுக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும். அக்கட்டுமானங்கள் ஒப்பந்தக்காரர்கள் மூலம் முன்னெடுக்கப்படுமாயின் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக கட்டணம் அறவிடப்படும். அவ்வாறு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகள் மூலம் 2020 ஆம் ஆண்டில் 341,335.00 ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டது.
- அதைப் போலவே, பிரதி பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவை) இனால் விசேடமாக அறிவிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மகாவலி வலய அலுவலகத்தின் மூலம்



முன்னெடுக்கப்படுகின்ற கட்டுமானங்களின் தரம் பரிசோதிக்கப்படுவது மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய, கட்டணம் அறவிடப்படாமல் முன்னெடுக்கப்பட்ட தரப் பரிசோதனைகளின் பெறுமதி ரூ. 77,910.00 ஆகும்.

- அலுவலகத்தினால் நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்ற மூலிகைத் தோட்டத்தை அண்டியதாக மற்றும் ஆயுர்வேத வைத்தியர்களின் பங்களிப்புடன் மூலிகைத் தாவரங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் நடாத்துதல் இடம்பெற்றது. கொரோனா தொற்றுப் பரவல் நிலைமையின் காரணமாக அந்நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்த வேண்டி ஏற்பட்டது.





**1. மேற்குறிப்பிட்ட கடமைகளுக்குரிய 2020 ஆம் ஆண்டின் முன்னேற்றம் பின்வருமாறு.**

நிதிசார் முன்னேற்றம்

| தொடர் இலக்கம் | விபரம் | ஒதுக்கீடுகள் | முன்னேற்றம் (ரூ. மி) |
|---|---|---|---|
| 1 | மூலதன செவினங்கள் | 2.700 | 2.582 |
| 2 | செவினங்கள் | 28.648 | 20.245 |

**2020 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றம்.**



**தேசிய பொருளாதார மற்றும் சமூகத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்புக்கள்**

- ஆற்று வடிநில முகாமைத்துவ அலுவலகம் மூலம் கணிசமான நிதிசார் உழைப்பை நேரடியாக மேற்கொள்ளாமல் எனினும், தேசிய அபிவிருத்தி மற்றும் சமூக விருத்தி தொடர்பாக மறைமுகமான பங்களிப்பை வழங்குகின்றது.

- நீர் தரம் தொடர்பான ஆய்வு கூடத்தில் செயற்படுவதன் மூலம் சூழல்சார் ரீதியில் நீரில் ஏற்படுகின்ற தன்மை மாற்றத்தை இலகுவாக இனங்காணும் இயல்பு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இம்மாற்றங்களின் நீண்ட கால இயல்புகளை ஆய்வு செய்வதன் மூலம் சூழலிற்கு அடிப்படையாக ஒன்று சேர்ந்துள்ள சூழல் மாசுகளை உய்த்தறியும் இயலுமை கிடைக்கின்றது. அதனை மிகவும் சரியான முறையில் இனங்காண்பதன் மூலம் அதற்கு உகந்த நடவடிக்கைகளுக்கு எட்டும் இயலுமை கிடைக்கப் பெறுவதுடன் அதனை எதிர்கால சந்ததிகளுக்கான சூழல்சார் முதலீடும் ஆகும்.

- சுகாதாரம் பொருந்திய சமூகம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்காக நீரின் தன்மையை பராமரிக்க வேண்டிய தேவைப்பாடு, நீர் மாசடைவை தடுக்க வேண்டிய அதி முக்கியத்துவம் மற்றும் அதற்காக எடுக்க முடியுமான நடவடிக்கைகள் தொடர்பாக சமூகத்தை மற்றும் விசேடமாக பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுவதன் ஊடாக மனப்பாங்கு மாற்றத்தின் ஊடாக நீர் மூலங்களின் சுத்தத்தைப் பேணுவதற்கு பங்களிப்புக் கிடைக்கும். இவ்விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை அனேகமாக கிராமிய மற்றும் சிறுநீரக நோய்களால் அவதியுறுகின்ற பிரதேசங்களில் தொடங்குவதன் மூலம் அப்பிரதேச மக்களின் சுகாதார நிலைமையை கட்டியெழுப்புவதற்கு கடும் உதவிகளும் வழங்கப்படுகின்றன.

- தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனையை மேற்கொள்வதன் மூலம் தர நியமம் உரிய மட்டத்தில் அற்ற கட்டுமானங்களை இனங்காண்பதற்கு முடியுமாக இருப்பதுடன் அவற்றை சீராக்குவதற்காக அச்சந்தர்ப்பத்திலேயே மாற்றுத் தீர்வுகளைப் பயன்படுத்துவதற்கு முடியுமானதாக இருக்கும். அதன் மூலம் கட்டமைப்புக்களின் ஆயுட்காலத்தை திட்டமிட்டபடி பராமரிப்பதற்கு முடியுமாக இருப்பதுடன் அடிக்கடி பழுதுபார்க்கும் தேவைப்பாட்டை இயன்றளவு குறைக்கும். அதனால் அவற்றின் பிரதிபலன்கள் மக்களுக்கு தொடர்ந்தும் வழங்குவதற்கு முடியுமாக இருப்பதுடன் புணரமைப்புப் பணிகளுக்காக ஏற்க வேண்டிய செலவினங்களை இயன்றளவு குறைத்துக் கொள்வதற்கும் முடியுமாக இருக்கும். அது நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

g. அடர் கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீரை மகாவலி கங்கைக்கு ஒன்று சேர்ப்பதை இயன்றளவு குறைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 2020 ஆம் ஆண்டின் பிரதான செயற்பாடுகளுக்கான நிதிசார் முன்னேற்றம் (சுற்றாடல் பிரிவு – கொத்மலை)

- 2020 ஆம் ஆண்டில் இப்பிரிவின் வருடாந்த மூலதன மற்றும் மீண்டு வரும் செலவின முன்னேற்றமானது பின்வருமாறு சாராம்சப்படுத்தப்படுகின்றது.

**மூலதன செலவினங்கள்**

| கணக்குக் குறியீடு | தொ.இ | பிரிவு/ நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மி.) | செலவின தொகை (ரூ.மி.) | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 2965 | 1 | இயற்கை வளப் பாதுகாப்புப் பிரிவு | 4.425 | 4.372 | 98.8 |
| 2965 | 2 | சுத்தமான கங்கைகள் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் நீரியல் விஞ்ஞான ஆய்வுப் பிரிவு | 2.406 | 1.142 | 47.5 |
| 2965 | 3 | நாற்று மேடைகள் முகாமைத்துவம் – நவதெவிட மரக்கன்று நாற்று மேடை | 3.734 | 3.540 | 94.8 |
| 2965 | 4 | சூழலியல் மேம்பாட்டு மத்திய நிலையம் மற்றும் மரக்கன்று நாற்று மேடை – தொரகல | 3.964 | 3.961 | 99.9 |
| 2965 | 5 | சூழலியல் மேம்பாட்டு மத்திய நிலையம் மற்றும் மரக்கன்று நாற்று மேடை – பல்லேகலை | 3.544 | 3.460 | 97.6 |
| 2965 | 6 | சுற்றாடல் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு | 0.576 | 0.531 | 92.1 |
| 2966 | 7 | இழைய வளர்ப்புப் பிரிவு | 3.219 | 3.164 | 98.3 |
| 2965 | 8 | மகாவலி வலய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள், சூழலியல் | 0.145 | 0.134 | 92.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | முறைப்பாடுகள் மற்றும் பின் தொடர்வு நடவடிக்கைகள் | | | |
| 2385 | 09 | கட்டிட தாபரிப்புப் பிரிவு | 0.462 | 0.460 | 99.6 |
| 2385 | 10 | அலுவலக நிலத்தோற்ற அலங்காரம் | 0.055 | 0.054 | 99.8 |
| 2383 | 11 | வாகன தாபரிப்பு மற்றும் மீள் திருத்தங்கள் | 0.465 | 0.464 | 99.9 |
| 2113 | 12 | நிலையான சொத்துக்களை கையகப்படுத்தல் | 0.060 | 0.060 | 100 |
| 2386 | 13 | அலுவலக உபகரணங்களை மீள் திருத்துதல் | 0.045 | 0.037 | 81.7 |
| **கூட்டுத் தொகை** | | | **23.100** | **21.380** | **92.6** |

## பௌதீக முன்னேற்றம்

| தொ.இ. | செயற்பாடுகள் | அலகு | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1 | மண் பாதுகாப்பு | மீட்டர் | 16,100 | 17,789 |
| 2 | நீரேந்துகளின் பாதுகாப்பிற்காக மரக்கன்றுகளை நடுதல் | மரக்கன்றுகள் | 100,000 | 102,715 |
| 3 | நீரேந்துகளின் பாதுகாப்பிற்காக விவசாயிகளை ஊக்கப்படுத்துதல் | | | |
| | 1. கொம்போஸ்ட் பசளை தயாரித்தல் மற்றும் கொள்வனவு செய்தல் | கிலோ கிராம் | 15,000 | 15,443 |
| | 2.பசுமைச் தொழில் மேம்பாட்டிற்காக விவசாயிகள் மூலம் மரக்கன்றுகளை உற்பத்தி செய்தல் | மரக் கன்றுகள் | 12,000 | 10,271 |
| 4 | மகாவலி சுத்தமான கங்கை நிகழ்ச்சித் திட்டம் | | | |
| | 1.நீரியல் விஞ்ஞான ஆய்விற்காக தானியங்கி முறைமை மூலம் நீர் மட்டத்தைப் பெற்றுக் கொள்ளுதல் | இடங்கள் | 07 | 07 |
| | 2. நீரின் தரத்தை அளவிடும் நிகழ்ச்சித் திட்டம் | இடங்கள் | 22 | 22 |
| 5 | மரக்கன்று உற்பத்தி/ நவதெவிட நாற்றுமேடை | மரக்கன்றுகள் | 231,000 | 66,909 |
| 6 | மரக்கன்று உற்பத்தி/ பல்லேகலை நாற்றுமேடை | மரக்கன்றுகள் | 300,000 | 185,374 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | சுற்றாடல் கல்வி மற்றும் பயிற்சி/ சிறுவர் பசுமை தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல் – மரங்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டம் | மரக்கன்றுகள் | 5,000 | 3,695 |
| 8 | சூழலியல் மேம்பாட்டு மத்திய நிலையம் – தொரகல | தாபரிப்பு அலகுகள் | 64 | 64<br>விற்பனை வருமானம் – ரூ. 435,616<br>பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் - 7 |
| 9 | இழைய வளர்ப்பு விஞ்ஞான கூடம் | மரக்கன்றுகள் | 400,000 | 128,741 |
| 10 | சுற்றாடல் கல்வி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு | நிகழ்ச்சித் திட்டங்கள் | 9 | 8 |

## மகாவலி வலயத்தில் அமுல்படுத்தப்பட்ட சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்.

மகாவலி துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயன்முறைகள் காரணமாக ஆதிக்கத்திற்கு உள்ளான இயற்கை சூழல் தொகுதிகளைப் பாதுகாப்பதை விசேடமாக அவ்வலயங்களில் அதிகரித்து வருகின்ற சனத்தொகை காரணமாக முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திப் பணிகள் காரணமாக சூழலியல் மற்றும் சமூக ரீதியாக ஏற்படுகின்ற தாக்கங்களை இயன்றளவு குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதானது சுற்றாடல் பிரிவின் வழிகாட்டவின் கீழ் முன்னெடுக்கப்படும்.

அதன் கீழ் அடிப்படையாக பின்வரும் சுற்றாடல் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது.

I. காடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அவசியமான மரக்கன்று நாற்றுமேடைகளை ஆரம்பித்தல், தாபரித்தல்.
II. நுண் நீரேந்து பிரதேசங்கள், நீர்த்தேக்க ஒதுக்குகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் காடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மரம் நடும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.
III. மகாவலி குடியேற்றவாசிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு சுற்றாடல் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.
IV. நீரின் தரத்தைப் பேணுவதற்காக நீரின் தன்மையைப் பரிசீலித்தல் மற்றும் அடிப்படை தரவு முறைமையை நடாத்திச் செல்லுதல் மற்றும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.
V. தாழ் பள்ளத்தாக்கு அதிகார பிரதேசத்தில் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தியை உறுதி செய்வதற்காக களப் பரிசோதனையை மேற்கொள்ளல் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.

VI. காட்டு மரக்கன்றுகள், பழக் கன்றுகள், மூலிகைத் தாவரங்கள் உற்பத்தி செய்தல் மற்றும் அதன் மூலம் நாட்டில் வன மூடுதலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

VII. மகாவலி அதிகார பிரதேசத்தில் உயிரியல் பல்வகைமைப் பாதுகாத்தல் மற்றும் உயிரியல் உற்பத்தியை நிலைகுன்றச் செய்யக் கூடிய ஆக்கிரமிப்பு மிக்க உயிரினங்களை பரவலைக் கட்டுப்படுத்துதல்.

VIII. மகாவலி கங்கை மற்றும் ஏனைய ஆற்றங் கரைகளை அண்டிய பகுதிகளை பாதுகாக்கும் நடவடிக்கைகள்.

IX. மனிதர்கள் மற்றும் ஜீவராசிகளுக்கு இடையிலான மோதல்களை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக வன ஜீவராசிகளுடன் ஒன்றியவாழ்வின் இருப்பை உறுதி செய்தல். யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல்களை இயன்றளவு குறைப்பதற்காக மின் வேலிகளை நிர்மாணித்தல், உயிர் வேலிகளை நிர்மாணித்தல் மற்றும் தாபரித்தல்.

X. சுற்றாடல் தோழமை மிக்க மேம்பாடு மற்றும் பசுமைத் தொழில் மேம்பாடு.

XI. சுற்றாடல் தோழமை மிக்க வாழ்க்கைக் கோலத்திற்கு மக்களைப் பழக்கப்படுத்துதல் மற்றும் பசுமையான நகரங்கள் மற்றும் பசுமையான கிராமங்களை மகாவலி கிராமங்களில் மேம்படுத்துதல்.

**2020 ஆம் ஆண்டிற்காக மானியங்களை ஒதுக்குதல் மற்றும் நிதிசார் முன்னேற்றம்**
**(நிறுவன ரீதியான மூலதன வரவு செலவு)**

மானியங்களை ஒதுக்குதல் மற்றும் முன்னேற்றம் – 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை (வலயங்கள்)

| தொ.இ. | வலயம் | மானியம் ஒதுக்குதல் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) | சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| 1 | பி | 7.65 | 6.48 | 85 |
| 2 | சி | 4.25 | 3.28 | 77 |
| 3 | டி | 2.61 | 1.56 | 60 |
| 4 | ஈ | 1.46 | 1.47 | 101 |
| 5 | ஜீ | 3.80 | 3.07 | 81 |
| 6 | எச் | 7.83 | 7.83 | 100 |
| 7 | ஹுருளு வாவி | 6.86 | 5.68 | 83 |
| 8 | வலவ | 6.19 | 5.92 | 96 |
| 9 | ரம்பகண் ஓயா | 0.35 | 0.34 | 97 |
| | **மொத்தம்** | **41.00** | **35.63** | **87** |

**2020 ஆம் ஆண்டிற்காக மானியங்களை ஒதுக்குதல் மற்றும் நிதிசார் முன்னேற்றம் (செயற்திட்டங்கள்)**

| | ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் | வருடாந்த மானிய ஒதுக்கீடு (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) | சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| 1 | ரம்பகண் ஓயா | 1.72 | 1.705 | 99 |
| 2 | ரிதிமாலியத்த | 0.30 | 0.025 | 8 |
| 3 | எல் | 2.39 | 0.660 | 28 |
| | **கூட்டுத் தொகை** | 4.41 | 2.390 | 54 |

**<u>கருத்துக்களும் பிரேரணைகளும்</u>**

உலகம் பூராகவும் பரவிய கொவிட் 19 தொற்று காரணமாக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் சில செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் போனமை அல்லது பூரணப்படுத்த முடியாமல் போனமையினால் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக இலக்குகளை நோக்கி நெருங்குவதற்கு முடியாமல் போனது. இந்நிலைமையினால் இழைய வளர்ப்பு விஞ்ஞான ஆய்வு கூடத்தின் பணிகளை உரிய முறையில் நடாத்திச் செல்வதற்கு தடங்கல்கள் ஏற்பட்டன. பல மகாவலி வலயங்களில் மற்றும் சுற்றாடல் பிரிவிற்கு தகைமைகளை உடைய உத்தியோகத்தர்கள் இல்லாமையினால் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டன.

எனினும், நிகழ்நிலை முறைமையின் ஊடாக சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஒன்று கூடல்களை நடாத்தி இம்முன்னேற்றத்தை அடைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# மூன்றாவது அத்தியாயம்

## 3.0 அபிவிருத்திப் பிரிவு

### 3.1 காணிப் பிரிவு

### அறிமுகம்

மட்டுப்படுத்தப்பட்ட வளமான காணி நல முகாமைத்துவ ஒழுங்களுகள் மூலம் மகாவலி அதிகார பிரதேசத்தினுள் வசிக்கின்ற நலன் பெறும் மக்களின் காணி உரிமையை உறுதி செய்வதன் ஊடாக அவர்களின் பொருளாதாரம் மற்றும் சமூக நிலைமையை மேம்படுத்துவதற்காக பங்களிப்பு வழங்குதல்.

**காணிப் பிரிவின் வகிபாகம்**

**01. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் தனி நபர்களுக்கு காணிகளை வழங்குதல் மற்றும் அதன் பிந்திய நடவடிக்கைகள்.**

மகாவலி விசேட அதிகார பிரதேசங்களில் அமைந்துள்ள அரச காணி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பன காணிப் பிரிவின் பிரதான வகிபாகம் ஆகும். காணிகள் இல்லாத நபர்களுக்கு காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வசிப்பதற்கும், விவசாய நடவடிக்கைகளுக்கும் காணிகளை பிரித்து வழங்குதல், அதற்குரிய பிந்திய நடவடிக்கைகள் என்பன மேற்கொள்ளப்படும்.

**02. அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு காணிகளை வழங்குதல் மற்றும் அதன் பிந்திய நடவடிக்கைகள்.**

வர்த்தக முதலீட்டுச் செயற்திட்டங்கள், வீடுகள், அரச நிறுவனங்கள் மற்றும் மத ஸ்தளங்கள் ஆகியவற்றிற்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் காணிகளை கையுதிர்ப்பதைப் போன்றே குத்தகை வருமானத்தைச் சேகரித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிந்திய நடவடிக்கைகளானது அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் முன்னெடுத்து இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**கொடைப்பத்திரங்களை வழங்குதல்**

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் – 2020**

| வலயம் | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| பி | 3,447 | 3,501 |
| சி | 5,966 | 2,447 |
| டி | 445 | 688 |
| எச் | 6,000 | 1,706 |
| எல் | 3,000 | 2,308 |
| விக்டோரியா | 150 | 72 |
| ஹுருளுவெவ | 1,300 | 180 |
| மொரகஹகந்த | 2,500 | 1,029 |
| வலவ | 3,000 | 3,280 |
| ரம்பகெண் ஓயா | 550 | 380 |
| **கூட்டுத் தொகை** | **26,358** | **15,591** |

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கொடுப்பனவுப் பத்திரம்/ குத்தகை வழங்குதல் – 2020**

| வலயம் | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| பி | 217 | 21 |
| சி | 227 | 6 |
| டி | 1 | - |
| எச் | 1,050 | - |
| எல் | 540 | - |
| விக்டோரியா | 350 | - |
| ஹுருளுவெவ | 80 | - |
| மொரகஹகந்த | 80 | 18 |
| வலவ | 160 | 81 |
| ரம்பகெண் ஓயா | 10 | - |
| **கூட்டுத் தொகை** | **2,715** | **126** |

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விகாரைகளுக்கு கொடுப்பனவுப் பத்திரம் வழங்குதல் – 2020**

| வலயம் | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| பி | 45 | 7 |
| சி | 29 | 1 |
| டி | 4 | - |
| எச் | 10 | - |
| எல் | 5 | - |
| விக்டோரியா | 5 | - |
| ஹுருளுவெவ | 5 | - |
| மொரகஹகந்த | 10 | 2 |
| வலவ | 4 | 2 |
| ரம்பகென் ஓயா | 5 | - |
| **கூட்டுத் தொகை** | **127** | **12** |

**அரச நிறுவனங்களுக்காக காணிகளை வழங்குதல் – 2020**

| வலயம் | கையளிப்புக் கட்டளை | | காணிகளைக் கையளித்தல் | |
|---|---|---|---|---|
| | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| பி | 48 | 12 | 129 | - |
| சி | 53 | 50 | 31 | 1 |
| டி | 1 | - | 10 | - |
| எச் | 40 | - | - | - |
| எல் | 5 | - | - | - |
| விக்டோரியா | 50 | - | - | - |
| ஹுருளுவெவ | 5 | - | - | - |
| மொரகஹகந்த | 10 | 1 | - | - |
| வலவ | 5 | 4 | - | 3 |
| ரம்பகென் ஓயா | 5 | - | 1 | 2 |
| **கூட்டுத் தொகை** | **222** | **67** | **171** | **6** |

## 3.2 விவசாய அபிவிருத்திப் பிரிவு

**வகிபாகம்**

- இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான மகாவலி வலயங்களில் வசிக்கின்ற விவசாயிகளின் பொருளாதாரத்தை விளைத்திறன் மிக்கதாக மேம்படுத்துவதற்காக சுற்றாடல் தோழமை மிக்க விவசாய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் பழக்கப்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல்.
- உணவு உற்பத்திக்கான தேசிய இலக்கு அமைய மகாவலி நீர்ப்பாசன மற்றும் நீர்ப்பாசனம் அல்லாத காணிகளில் பயிர்ச் செய்கை, கால்நடை உற்பத்தி மற்றும் விவசாய வணிகத்தை உருவாக்குவதற்காக வருடாந்த இலக்குகளைத் தயாரித்துக் கொள்ளுதல்.
- வருடாந்த பயிர் உற்பத்தி இலக்கை அணிமித்துக் கொள்வதற்காக வழங்கப்படுகின்ற வருடாந்த ஏற்பாடுகளுக்கு இணங்க பரம்பிய இலக்குகள் மற்றும் உத்தித் திட்டங்களைத் தயாரித்தல், அவற்றை வலய மட்டத்தில் ஏற்பாடு செய்தல், செயற்படுத்துதல், பின் தொடர்வை கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல்.
- விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, விவசாய, கிராமிய விவகாரங்கள், கால்நடை வளங்கள், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு, கமநலத் திணைக்களம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் சகல வெளி நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்.

| | | |
|---|---|---|
| பதவியணி | 1. பணிப்பாளர் (விவசாயம்) – சகல மட்டங்களுக்குமான விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளை பின் தொடர்தல் மற்றும் மேற்பார்வை | 01 |
| | 2. உதவிப் பணிப்பாளர் – விதைகள் மற்றும் வளர்ப்புத் திரவியங்கள்/ விவசாய பரம்பல்/ பண்ணைகள் | 03 |
| | 3. பயிலுனர் விஞ்ஞானிகள் – பயிர்ச்செய்கை முன்னேற்ற அறிக்கை/ நிதிசார் முன்னேற்ற அறிக்கை/ ஏனைய நடவடிக்கைகள் | 03 |
| | 4. அபிவிருத்தி உதவியாளர் | 01 |
| | 5. முகாமைத்துவ உதவியாளர் | 03 |
| | 6. சாரதி | 01 |
| | 7. அலுவலக உதவியாளர் | 01 |

### 3.2.1 2020 ஆண்டின் பாதீட்டின் மூலம் விவசாய விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டத்திற்கு நிதிசார் ஏற்பாடுகளை வழங்குதல்.

2020 ஆம் ஆண்டிற்காக விவசாய உற்பத்தி விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டத்திற்கு இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் 95.6 மில்லியன் ரூபாய் நிதி ஏற்பாடு அங்கீகரிப்பட்டதுடன், அவை பின்வரும் விதமாக மகாவலி வலயங்களுக்காக ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டன.

| வலயம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூ.மி. |
|---|---|
| பி | 13.36 |
| சி | 9.45 |
| டி | 4.02 |
| ஜீ | 14.76 |
| எச் | 18.89 |
| ஹுருளுவெவ | 3.86 |
| வலவ | 16.09 |
| விக்டோரியா/ கொத்மலை | 1.90 |
| பிரதான அலுவலகம் | 12.77 |
| **கூட்டுத் தொகை** | 95.6 |

## 2020 விவசாய விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டத்திற்காக மானியங்களை ஒதுக்குதல்.

மேற்குறிப்பிட்ட விதமாக விவசாய விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக வலயத்திற்காக ஒதுக்கப்பட்ட மானியங்களை அந்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படைத் திட்டங்களுக்கு அமைய செலவு செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்தது.

| | செயற்பாடுகள் | ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி. |
|---|---|---|
| 1 | ஏனைய களப் பயிர் விதைக்களின் உற்பத்தி | 5.1 |
| 2 | பயிர்களை பன்முகப்படுத்துவதற்கான மாதிரியமைப்பு | 9.0 |
| 3 | காலநிலை மாற்றத்திற்காக நெகிழ்வடையும் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் | 7.1 |
| 4 | நெல் உற்பத்தி விளைத்திறன் மேம்பாடு | 2.2 |
| 5 | பழப் பயிர்களின் அபிவிருத்தி | 1.1 |
| 6 | வீட்டுப் பொருளாதார அபிவிருத்தி | 6.1 |
| 7 | உணவு மதிப்புச் சங்கிலி மற்றும் விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.5 |
| 8 | விவசாய ஆராய்ச்சிகள் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் | 1.0 |
| 9 | பண்ணை விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 56.0 |
| 10 | விவசாய பரம்பல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 5.1 |
| 11 | முகாமைத்துவச் செலவினங்கள் | 2.4 |
| **கூட்டுத் தொகை** | | **95.6** |

2020 ஆம் ஆண்டின் விவசாய விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட அமுல்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு அமைய முழுமையான முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

| **2020 ஆம் ஆண்டின் விவசாய விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டத்தின் பௌதிக முன்னேற்றம்.** | | | |
|---|---|---|---|
| **செயற்பாடுகள்** | **அலகு** | **இலக்கு** | **முன்னேற்றம்** |
| நெற் பயிர்ச்செய்கை மேம்பாடு | | | |
| வயல்வெளி நிகழ்ச்சித் திட்டங்கள் | எண்ணிக்கை | 10 | 14 |
| களப் பாடசாலைகள் | எண்ணிக்கை | 60 | 78 |
| அறுவடைக் கணிப்பீடு | கணிப்பீடுகள் | 100 | 90 |
| பரக்குடை தட்டுகள் வழங்குதல் | எண்ணிக்கை | 40,000 | 30,000 |
| சுய விதை நெல் உற்பத்தி | ஹெக்டயார் | 100 | 100 |
| ஏனைய துறைகளின் போகங்கள் | | | |
| பயிர்ச் செய்கை படிமமைப்பு (சோளம், சோயா, பி. வெங்காயம், மிளகாய், பயறு, நிலக்கடலை, உழுந்து, கவ்பி, குரக்கன்) | எண்ணிக்கை | 100 | 103 |
| சலுகை அடிப்படையில் விதைக்களை பகிர்ந்தளித்தல். (சோளம், சோயா, பி. வெங்காயம், மிளகாய், பயறு, நிலக்கடலை, உழுந்து, கவ்பி, குரக்கன்) | கிலோ கிராம் | 31,496 | 46,382 |
| பாதுகாப்பான வீட்டு/மழைக் காப்பு வழங்குதல் | எண்ணிக்கை | 20 | 20 |
| விவசாய கிணறுகளை வழங்குதல். | எண்ணிக்கை | 13 | 13 |
| விவசாய கிணறுகளை புணர்நிர்மாணம் செய்தல் | எண்ணிக்கை | 125 | 125 |
| நுண் நீர் வளத் தொகுதிகளை வழங்குதல் | எண்ணிக்கை | 70 | 59 |
| பழப் பயிர்களின் விருத்தி | | | |
| மா மர புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்கள் | எண்ணிக்கை | 15 | 20 |
| பழ ஈக்களை கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் | எண்ணிக்கை | 20 | 16 |
| வீட்டுத் தோட்ட விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | | | |
| மரக்கறிக் கன்றுகள் விநியோகித்தல் | வீட்டுத் தோட்டங்கள் | 110,500 | 99,100 |
| மரக்கறிக் கன்றுகள் விநியோகித்தல் | வீட்டுத் தோட்டங்கள் | 90,400 | 61,309 |
| தேன் உற்பத்தி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் தேனீ பெட்டிகள் வழங்குதல் | தேனீ பெட்டிகள் | 200 | 170 |
| காளான் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | எண்ணிக்கை | 15 | 14 |
| விவசாயப் பரம்பல் நிகழ்ச்சித் திட்டங்கள் | | | |
| விவசாயப் பயிற்சிகள் | எண்ணிக்கை | 500 | 430 |
| உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் | | | |
| விவசாய ஆராய்ச்சி மற்றும் பரம்பல் தொடர்பான உரையாடல்கள் | | | |
| பயிர் சிகிச்சைகள் | | | |

சகல வலங்களிலும் 2020 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ள மானியங்களுக்கு அமைய பௌதீக செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு பதவியணியானது மிகவும் அக்கறையுடன் இப்பௌதீக முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்காகச் செயற்பட்டுள்ளது. (புகைப்படங்களுக்காக பின்னிணைப்பு – 01)

| பயிர் | 2019/20 பெரும் போகம் | | 2020 சிறு போகம் | | 2020 கூட்டுத் தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | விதைக்கும் பரவெல்லை (ஹெக்.) | உற்பத்தி (மெ.தொ.) | விதைக்கும் பரவெல்லை (ஹெக்.) | உற்பத்தி (மெ.தொ.) | விதைக்கும் பரவெல்லை (ஹெக்.) | உற்பத்தி (மெ.தொ.) |
| நெல் | 94,778 | 549,712 | 74,363 | 431,303 | 169,141 | 981,015 |
| சோளம் | 1,487 | 8,920.74 | 1,344 | 8,065.20 | 2,831 | 16,986 |
| மிளகாய் | 283 | 2,099 | 548 | 4,384 | 831 | 6,483 |
| சோயா | 65 | 149 | 3,163 | 7,274 | 3,228 | 7,423 |
| பெரிய வெங்காயம் | 2 | 34 | 1,174 | 23,485 | 1,177 | 23,519 |
| பயறு | 90 | 124 | 1,162 | 2,092 | 1,252 | 2,216 |
| கவ்பி | 189 | 206 | 723 | 939 | 911 | 1,146 |
| நிலக்கடலை | 327 | 596 | 834 | 1,668 | 1,161 | 2,264 |
| உழுந்து | 29 | 30 | 1,349 | 2,023 | 1,378 | 2,053 |
| குரக்கன் | 177 | 236 | 183 | 438 | 360 | 674 |
| எள்ளு | 58 | 41 | 196 | 166 | 254 | 207 |
| கிழங்கு வகை | 777 | 11,530 | 1,051 | 15,771 | 1,828 | 27,301 |
| மரக்கறி | 3,161 | 40,239 | 5,114 | 66,481 | 8,275 | 106,720 |
| பழங்கள் | - | - | 13,298 | 199,465 | 13,298 | 199,465 |

## பயிர் உற்பத்தியின் முன்னேற்றம் மற்றும் பங்களிப்பு – 2019/20 பெரும் போகம் மற்றும் 2020 சிறு போகம்

தேசிய உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக இலங்கை மகாவலி அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்ட விவசாய விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தேசிய உணவு உற்பத்திக்கு பங்களிப்புச் செலுத்தி அல்லது பொருளாதாரத்தை வளமாக்குதல் மற்றும் உற்பத்தி விளைத்திறனை அதிகரித்தல் என்பன மிக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு உள்ளது.

### <u>நெற் பயிர்ச்செய்கை மாதிரி வயல்வெளி நிகழ்ச்சித் திட்டம்</u>



நாற்று நடும் இயந்திரப் பயன்பாடு



பரக்குடை முறையில் நாற்றுக்களை விசுறுதல்





இலை வர்ண அட்டைப் பயன்பாட்டின் மூலம் யூரிய பசளை பயன்பாட்டை குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம்.



ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்



பண்ணை இயந்திரங்களை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்




நெற் பயிர்ச்செய்கையில் பீடைக் கட்டுப்பாட்டுச் செயலமர்வு




விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்



குரக்கன் விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்




பி வெங்காய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்





எள்ளு விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்

கலப்பின மிளகாய் விதை உற்பத்தி



சோயா அவரை பயிர்ச் செய்கை முன் ஒப்பந்தமிடும் செயலமர்வு





சுபீட்சம் மிக்க உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித் திட்டம்





சேதன வலய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்




சோளக பயிர்ச் செய்கை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்




பாதுகாப்பு வீடுகளுக்குள் பயிர்ச் செய்கை




மரக்கறி பயிர்ச் செய்கைக்காக நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடு




பயிர்ச் செய்கைகளின் நோய்கள், பீடைகளை இனங்காணுதல் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்




மா மரங்களின் கவ்வாத்து நிகழ்ச்சித் திட்டம்




பழப் பயிர்ச் செய்கை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்





சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பயன்பாடு தொடர்பான நிகழ்ச்சித் திட்டம்





வீட்டுத்தோட்ட விருத்தி நிகழ்ச்சித் திட்டம்





வீட்டுத்தோட்டத்தை அண்டிய தேனீ வளர்ப்பு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்



வீட்டுத்தோட்டத்தை அண்டிய காளான் பயிர்ச் செய்கை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்



வீட்டுத்தோட்டத்தை அண்டிய அலங்கார மலர் பயிர்ச் செய்கை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்




50% பங்களிப்பின் கீழ் நீர் பம்பிகள் விநியோகித்தல்

**<u>ஆண்டு பூராகவும் மரக்கறி பயிர்ச்செய்கையை விரிவுபடுத்துவதற்காக பயிர்ச் செய்கை கிணறுகளை நிர்மாணித்தல்</u>**




நீர் நெருக்கடிக்கு தீர்வாக விசிறல் நீர் விநியோக முறைமை மற்றும் துளி நீர் விநியோக முறைமை வழங்குதல்.




மகாவலி தொழில்நுட்ப செயலாற்றுகைக் குழு ஒன்று கூடல்



வெளிக்கள தினம்









விசேட விவசாய மேம்பாட்டு வாரம் நிகழ்ச்சித் திட்டம்



புதிய கள உதவியாளர்களுக்கான வதிவிட பயிற்சிப் பட்டறை

# 3.3 மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு

**அறிமுகம்**

விவசாயத்திற்கு மேலதிகமாக, மகாவலி குடியேற்றவாசிகளின் வருமானத்தை மேம்படுத்தும் மாற்று வழியாக மீன்பிடி மற்றும் கால்நடை வளத் துறை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. அவ்வாறே, பாற்பசு வளர்ப்பானது வீட்டுப் பொருளாதாரத்தில் பாரிய வகிபாகத்தை நிறைவேற்றுகின்றமையால் கால்நடை வளத் துறையில் அதிக முன்னுரிமையைப் பெறுகின்றது. மேலும், போசணையின் முக்கியத்துவம், கிராமிய மக்களின் போசணைத் தேவைகளை நிறைவேற்றுதல் மற்றும் உணவுப் பாதுகாப்பை கருத்திற் கொள்ளும் போது பால் மற்றும் துணை உற்பத்திகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அவ்வாறே, சீரற்ற காலநிலையின் காரணமாக பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்படக்கூடிய ஆபத்து மற்றும் பயிர் உற்பத்திக்கு நிகரான அதிக உற்பத்திச் செலவை ஏற்க வேண்டி ஏற்படுதல் போன்ற விடயங்களை கருத்திற் கொள்ளும் போது கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக மிகவும் உகந்த மாற்று வருமான மூலமாக நன்னீர் மீன்பிடி மற்றும் பால் எனும் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட முடியும் என்பதுடன் தற்பொழுது மகாவலி விவசாயிகளுக்கு மத்தியில் இத்துறையானது பரந்தளவில் விரிவடைந்து காணப்படுகின்றது.

மகாவலி அதிகார பிரதேசத்தில் கால்நடை வளம் மற்றும் மீன்பிடி ஆகிய துறைகளுக்காக நிலவுகின்ற இயல்திறன் மற்றும் பொருத்தமுடைமையை கருத்திற் கொள்ளும் போது அங்குள்ள பாற்பசுக்கள், பசுக்கள், ஆடுகள் மற்றும் கோழிகளின் தொகை உள்ளடங்கிய பாரிய கால்நடைத் தொகை காணப்படுகின்றமை, நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு உகந்த போதியளவான உள்ளக நீரின் அளவு காணப்படுகின்றமை, துறையில் ஈடுபட்ட பாரிய அளவிலான விவசாயிகள் காணப்படுகின்றமை மற்றும் மகாவலி மற்றும் ஏனைய நேரியல் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து வழங்குகின்ற தொழில்நுட்ப உதவியை அறிமுகப்படுத்த முடியும்.

இந்நிலைமைக்கு மத்தியில், மகாவலி வலயங்களில் கால்நடை வளங்கள் மற்றும் நன்னீர் மீன்பிடி மற்றும் துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், உரிய தரப்பினர்களை ஒருமைப்படுத்துதல், அவசியமான தொழில்நுட்ப தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ உதவி வழங்குதல், மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவின் மூலம் முன்னெடுக்கப்படுகின்றது.

**நோக்கம்**

கால்நடை உற்பத்தி மூலம் மகாவலி குடியேற்றவாசிகளின் குடும்பங்களின் வருமான மட்டத்தை மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் சமூகத்தின் போசணை நிலைமையை மேம்படுத்துதல்.

**குறிக்கோள்**

கால்நடை உற்பத்தி விளைத்திறன் மற்றும் இலாபப் பெறுகைகளை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு வழங்குவதற்கான நிலைபெறுதகு உற்பத்திச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**2020 ஆம் ஆண்டிற்கான இலக்குகள்**

- வருடாந்த பால் உற்பத்தியை 27 மில்லியன் லீட்டராக அதிகரித்தல் மற்றும் தேசிய பால் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பங்களிப்பை அதிகரித்தல். (தேசிய பங்களிப்பு 6%)
- வருடாந்த நன்னீர் மீன் உற்பத்தியானது 10,000 மெட்ரிக் தொன் வரை அதிகரிக்கச் செய்தல்.
- வருடாந்த முட்டை உற்பத்தியை 36 மில்லியன் வரை அதிகரித்தல்.
- வருடாந்த அலங்கார மீன் உற்பத்தியை 30 மில்லியன் சோடிகள் வரை அதிகரித்தல்.
- அவற்றின் போசணைத் தேவையை நிறைவேற்றுவதுடன் கால்நடை உற்பத்தியின் ஊடாக குடியிருப்பாளர்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- வினைத்திறன் மிக்க மற்றும் விளைத்திறன் மிக்க தொழில்நுட்ப பரம்பலை மற்றும் பயன்பாட்டை உறுதி செய்தல்.
- உரிய கால்நடை வைத்திய சேவைகளை வழங்குவதன் ஒருங்கிணைப்பின் மூலம் கால்நடைச் சுகாதார பாதுகாப்பிற்கு உறுதியளித்தல்.
- பெறுமதி சேர்க்கப்பட்ட பால் உற்பத்தி மேம்பாடடையச் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வலையமைப்பை பலப்படுத்துதல்.
- சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துதல் மற்றும் குடியிருப்பாளர்களின் வீட்டு வருமானத்தை அதிகரித்தல்.

**மீன்பிடி மற்றும் கால்நடை வள முகாமைத்துவத்தின் செயற்திட்ட செயன்முறைகளானது பிரதான துறைகள் நான்கை உள்ளடக்கியது.**

- பால் உற்பத்தி விருத்தி
- கோழி வளர்ப்பு
- நன்னீர் மீன் உற்பத்தி.
- அலங்கார மீன் உற்பத்தி.

**1. பாற்பசு விருத்தி நிகழ்ச்சித் திட்டம்.**

மகாவலி பிரதேசங்களில் செயற்படுத்தப்பட்டுள்ள பால் பண்ணைகள் பிரதானமாக 2 – 5 மிருகங்களை உள்ளடக்கிய சிறிய அளவிலான அலகுகளைக் கொண்டதாகும். குடிமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல்களுக்கு அமைய நாட்டின் மிகப் பெரிய மாடுகள் மற்றும் எருமை மாடுகளின் தொகையானது உலர் வலயத்திலும், மற்றும் இடைநிலை வலயத்திலும் அறிக்கையிடப்படுகின்றன. ஆகையால், பால் உற்பத்தித் தொழிலை தரமுயர்த்துவதற்காக மகாவலி பிரதேசங்களுக்கு பாரிய அழுத்தம் உள்ளது. வளங்களைப் பெற்றுக் கொள்ளும் இயலுமையின் அடிப்படையாகக் கொண்டு, விவசாயிகள் நுண் மற்றும் அரை நுண் மற்றும் சுயாதீன மாட்டு முகாமைத்துவ முறைகளைப் பின்பற்றுகின்றது. மாடுகளின் தொகைகள் ஜர்சி மற்றும் ஜர்சி – சஹிவால் கலப்புப்பிறப்பை போலவே தேசிய பேதங்களைக் கொண்டதாகும்.

விவசாயிகள் கால்நடைகளின் உணவுத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக புற்கள் மற்றும் செறிந்த ஊண் ஆகிய இரண்டும் பயன்படுத்தப்படுகின்றன. பயிர்ச் செய்யப்பட்ட புல்லின வேற்றுமைகளுக்கு $CO_3$, நெருப்பு மற்றும் பக்டீரியா என்பன உள்ளடங்குகின்றன. பிரதேசங்களின் பசுமையான புல்லினங்கள் மட்டுப்படுத்தப்படும் போது உலர் காலங்களுக்காக பயன்படுத்துகின்ற ஏனைய உணவுப் பாதுகாப்பு முறையாக இருப்பது யாதெனில் உலர் புல்லினம் மற்றும் இரைபேணி உற்பத்தியாகும். மகாவலி பிரதேசத்தில் பால் சேகரிப்பதற்காக பிரதானமாக பங்களிப்பு வழங்குவது மில்கோ, நெஸ்லே, கொத்மலை, பெலவத்த ஆகிய நிறுவனங்களாகும். ஏனையவை குழுக்களாக பால் சேகரிப்பவர்களின் கூட்டுறவுச் சங்கம், ரிச்லயிப், கடுவெல, சிஜசி, செலோ மற்றும் மகாவலி பண்ணை மற்றும்

பிரத்தியேக சேகரிப்பாளர்களும் இச்செயற்பாட்டுடன் தொடர்புபட்டு பால் சேகரிக்கும் வலையமைப்பை பலப்படுத்துகின்றனர்.

2020 ஆம் ஆண்டு திரவப் பால் உற்பத்தியானது 27.56 மில்லியன் லீட்டராகும். நாளாந்தம் திரவப் பால் சுமார் 75,000 உறுபத்தி செய்யப்படுவதுடன் மேற்குறிப்பிட்ட சங்கங்களின் பிரதான நோக்கம் சந்தைப்படுத்தலாகும். இதற்கு மேலதிகமாக சிறு அளவு திரவப் பால் நுகர்விற்காக பயன்பாட்டுத்தப்படுகின்றது. பொதுவாக ஒரு லீட்டர் பாலானது ரூ. 70 ஆக இருப்பதுடன் 2020 ஆம் ஆண்டில் மகாவலி விவசாயிகள் பால் உற்பத்தி மூலம் பெற்றுக் கொண்ட வருமானம் 1,929.20 மில்லியன் ரூபாயாகும்.

2019 ஆம் ஆண்டு முடிவில் இருந்து, இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் DAPH (கால்நடை உற்பத்திப் பொருட்கள் மற்றும் சுகாதார திணைக்களம்) என்பன ஒன்றிணைந்து இலங்கை பால் உற்பத்தி சிறப்புப் பயிற்சி முன்னெடுப்புச் செயற்திட்டம் (SLDETIP) அமுல்படுத்தப்பட்டதுடன் இதன் மூலம் பால் விவசாயிகளுக்கு அவசியமான தொழில்நுட்ப அறிவை வழங்குதல் இடம்பெற்றது. அதறடகமைய, "ஒருங்கிணைக்கப்பட்ட பண்ணை விருத்தி" எனும் எண்ணக்கருவை அடிப்படையாக கொண்டு ஒட்டு மொத்த பால் பண்ணைகளிலும் தொழில்நுட்பம், சூழலியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய சகல பிரிவுகளுக்கும் கவனத்தைச் செலுத்தி அதிக இலாபகரமான, நிலைபெறுதகு பண்ணை விருத்திக்காக விவசாயிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

- **பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான உத்திகள்.**

1. உட்கட்டமைப்பு வசதி விருத்தி, வளங்களை நிலைபெறுதகு விதமாக பயன்படுத்துவதன் மூலம் அரை நுண் மற்றும் நுண் மாட்டு வேளாண்மை முறையை மேம்படுத்துதல்.
2. மேம்படுத்தப்பட்ட கால்நடைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் கால்நடை இனவிருத்தியை அதிகரிப்பதன் மூலம் பசு மாடுகளின்/ எருமை மாடுகளின் மரபணு வலிமையை மேம்படுத்துதல்.
3. உரிய போசணைத் திட்டங்கள், உணவுப் பாதுகாப்பு முறைகள், பற் தரைகளை நிறுவுதல் மற்றும் வினைத்திறன் மிக்க மிருக வைத்திய சேவையை வழங்குவதை ஒருங்கிணைப்பதன் மூலம் கால்நடைகளின் போசணையை மேம்படுத்துதல் மற்றும் கால்நடைகளின் தொகையை முகாமைத்துவம் செய்தல்.
4. பால் சங்கங்கள் மற்றும் சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் பால் சங்கங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் வலையமைப்பை உறுதிப்படுத்துதல்.



பாற்பசுச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்.





மாட்டுக் கன்றுகளுக்காக போசணை நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் கால்நடைகளின் போசணையை மேம்படுத்துதல்.



நடமாடும் பால் கறக்கும் இயந்திரம் வழங்குதல்.



**2. கோழி வளர்ப்பை மேம்படுத்துதல்.**

கோழி வளர்ப்பானது பிரதானமாக முட்டை மற்றும் இறைச்சி உற்பத்திக்காகவும் மகாவலி குடியேற்றவாசிகளின் குடும்பங்களின் போசணைத் தேவையை நிறைவேற்றுவதற்காகவும் செயற்படுகின்றது. அவ்வாறே, இத்தொழிலானது கிராமிய பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான வருமான தோற்றுவிப்புக் காரணியாகும். மகாவலி வலயங்களில் கோழி வளர்ப்பானது பிரதானமாக போசாக் குறைவை இயன்றளவு குறைப்பதற்கும், கிராமியப் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கும் விசேடமாக வீட்டுப் பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கும் உதவியாக இருக்கும். கிராம மக்களின் புரதத் தேவையை பூர்த்தி செய்வதுடன் நாட்டிலுள்ள 35% ஆன போசாக் குறைவு நிலைமையை இயன்றளவு குறைப்பதற்காக வீட்டை அண்டிய கோழி வளர்ப்பானது ஒரு தீர்வாகும்.

கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் அடிப்படையாக வீட்டை அண்டிய கோழி வளர்ப்பு மற்றும் வணிக ரீதியான முட்டை மற்றும் பொயிலர் உற்பத்திகளில் ஈடுபட்டு வருகின்றனர். 2020 ஆம் ஆண்டில் முட்டை உற்பத்தியானது 38.38 மில்லியனாக இருந்ததுடன், இறைச்சி உற்பத்தியானது 10,094 மெட்ரிக் தொன் ஆகும். நாட்டு முட்டை ஒன்றின் சாதாரண விலையானது ரூ. 18.00 ஆகும. 2020 ஆம் அண்டில் முட்டை உற்பத்தியால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த தொகை 690.84 மில்லியன் ரூபாயாகும். கோழி இறைச்சி ஒரு கிலோவின் சாதாரண விலை ரூ.

310.00 ஆகும் என்பதுடன் இதன் மூலம் 2020 ஆம் ஆண்டில் 3,129 மில்லியன் ரூபாய் தொகையானது மகாவலி வலயத்தின் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மத்தியில் ஈட்டப்பட்டுள்ளது.



**கோழி வளர்ப்பை விருத்தி செய்யும் உத்திகள்.**

1. கோழிக் கூடுகளை அமைப்பதன் மூலம் இறைச்சி மற்றும் முட்டைக்காக காணப்படுகின்ற கோழி வளர்ப்புத் தொழிலை மேம்படுத்துதல்.
2. வீட்டை அண்டிய கோழி வளர்ப்பின் மேம்பாட்டிற்காக ஒரு மாதம் மற்றும் ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளை பகிர்ந்தளித்தல்.
3. உயர் தரத்தைச் சேர்ந்த கோழிக் குஞ்சுகளை விநியோகிப்பதை உறுதி செய்வதற்காக பெற்றோர் பரம்பரையை தாபரித்தல்.
4. கால்நடைகளின் போசணைத் தேவையை பூர்த்தி செய்வதன் ஊடாக உற்பத்திகளை வினைத்திறனாக மற்றும் விளைத்திறனாக மேற்கொள்ளுதல்.
5. தடுப்பூசியேற்றல் மற்றும் உரிய துப்புறவேற்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் கால்நடைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல்.



50% பங்களிப்புடன் கோழிக் குஞ்சுகளை
வர்த்தக ரீதியான கோழி வளர்ப்பிற்காக
கோழிக்
வழங்குதல்.
குஞ்சுகளை வழங்குதல்.



நிவாரண உதவியின் கீழ் கோழிக் கூடுகளை அமைத்துக் கொடுத்தல்



மகாவலி பண்ணையில் பிரேடர் கட்டுப்பாட்டின் மூலம் குஞ்சுகளைப் பெருக்குதல்.



வீட்டை அண்டிய கோழி வளர்ப்பை மேம்பாடு செய்தல்

வர்த்தக ரீதியான கோழி வளர்ப்பு மேம்பாடு

**3. நன்னீர் மீன் உற்பத்தியைக் கட்டியெழுப்புதல்.**

நன்னீர் மீன்பிடித் தொழிலின் இருப்பிற்காக மகாவலி பிரதேசங்களில் பிரதான நீர்த்தேக்கங்கள் 10 உட்பட நடுத்தர மற்றும் சிறிய அளவிலான நீர்த்தேக்கங்கள் 591 பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம், மீன்பிடித் தொழிலை விவசாய குடும்பங்களின் போசணைத் தேவைகள் மற்றும் நாட்டின் உணவுப் பாதுகாப்பை பூர்த்திசெய்வதற்காக உதவுகின்றது. திலாபியா, கெட்லா மற்றும் மிரிகால் நன்னீர் மீன் உற்பத்தியின் முக்கியமான மீன் வகையாக இருப்பதுடன் அவ்வகைகள் மொத்த உற்பத்திக்கு 90% பங்களிப்பை வழங்கி உள்ளது.

இதற்கு மேலதிகமாக ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக் கொண்ட நன்னீர் இறால் வளர்ப்பு முன்னெடுக்கப்படுகின்றது. நீர்த்தேக்கங்களில் தொடர்ச்சியான மீன் குஞ்சுகளை வைப்புச் செய்வதன் மூலம் மீன்பிடித் தொழிலில் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பாரிய பங்களிப்பு வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக அதிகளவான குளங்களில் வலைக் கூண்டுகளில் மீன் குஞ்சு வளர்ப்பு மேற்கொள்ளப்படும். இதன் மூலம் உற்பத்திச் செலவினங்களை இயன்றளவு குறைத்து இத்துறை மூலம் கிடைக்கின்ற இலாபத்தை அதிகரித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நன்னீர் மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள மொத்த மீனவர்களின் எண்ணிக்கை 5,275 ஆகும். 2020 ஆம் ஆண்டில் நன்னீர் மீன் உற்பத்தி 5,511.77 மெட்ரிக் தொன் ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி 1,653.53 மில்லியன் ரூபாயாகும்.

- **நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் உத்திகள்.**

1. நீர்த்தேக்கங்களில் குஞ்சுகளை வைப்புச் செய்தல் மற்றும் உற்பத்தி ஆற்றலை அதிகரித்தல்.
2. பிரதேசத்தில் மீன் குஞ்சுகளின் தேவைப்பாடுகளை உறுதி செய்வதற்காக மீன் இனவிருத்தி மத்திய நிலையங்கள் 11 ஐ நடாத்திச் செல்லுதல்.
3. மீன்பிடி கருவிகள், வலைகள் மற்றும் படகுகள் போன்ற மீன்பிடி உபகரணங்கள் வழங்குவன் மூலம் மீன்பிடி சங்கங்களை ஊக்கப்படுத்துதல்.
4. பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை உற்பத்தி செய்தல் மற்றும் மீன் உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் வலையமைப்பை பலப்படுத்துதல்.
5. மீனவர்களுக்கு தொழில்நுட்பம் சார்ந்த அறிவுகளை வழங்குவதற்காக ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

மகாவலி வலயங்களில் நன்னீர் மீன் உற்பத்தியை விருத்தி செய்வதற்காக 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து விசேட செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. இது மிகவும் வெற்றிகரமாக 2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரையில் அமுல்படுத்தப்பட்டதுடன் அதன் மூலம் 2.53 மில்லியன் மீன் குஞ்சுகள் தெரிவு செய்யப்பட்ட 24 நீர்த்தேக்கங்களுக்கு விடுவிக்க முடியுமானதாக இருந்தது. அவ்வாறே, நீர்த்தேக்கங்களில் மிதக்கின்ற வலைக் கூடுகளுக்குள் நீர் வாழ் உயிரினங்களை வளர்ப்பதன் மூலம் குறுகிய காலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை உபயோகிப்பதனால் விவசாயிகளுக்கு அதிக வருமானத்தை ஈட்ட முடியுமானதாக இருந்தது. 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது மகாவலி பி,சி மற்றும் உடவலவ வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட நீர்த்தேக்கங்கள் 15 இல் அமைக்கப்பட்ட வலைக் கூடுகள் 38 இல் 4.1 மில்லியன் மீன் குஞ்சுத் திரள்கள் பெருக்கம் செய்யப்பட்டு குஞ்சுகள் உற்பத்தி செய்வதற்கு முடியுமானதாக இருந்தது.



நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பதற்காக மீன் குஞ்சுகளை வைப்புச் செய்தல்



நன்னீர் மீன் விளைச்சலைப் பெற்றுக் கொள்ளுதல்.



## 4. அலங்கார மீன் உற்பத்தியை மேம்படுத்துதல்.

மகாவலி பி, சி, டி, எச் மற்றும் உடவலவ வலயங்களில் அலங்கார மீன் உற்பத்தி அதிகளவில் காணப்படுவதுடன் நிகழ்காலத்தில் அலங்கார மீன் வளர்ப்பில் ஈடுபடுகின்ற விவசாயிகளின் எண்ணிக்கை சுமார் 964 ஆகும். குடியேற்றவாசிகளாக காணிகளை உரித்துடைய சமூகத்தின் இரண்டாம், மூன்றாம் தலைமுறைகளின் பிள்ளைகளுக்கு மத்தியில் விவசாய நடவடிக்கைகளுக்காக காணிகளட் மட்டுப்படுத்தப்பட்டமையால் சிறு இடப் பரப்பில் அதிக வருமானம் ஈட்டக் கூடிய தொழிலாக அலங்கார மின் வளர்ப்பு பிரசித்தி பெற்று காணப்படுகின்றது. இத்தொழிலில் அலங்கார மீன் வளர்ப்பாளர்கள், குஞ்சுகளை உற்பத்தியில் ஈடுபடுகின்ற இனவிருத்தியாளர்கள், மீன் உற்பத்திகளை சந்தைகளுக்காக சேகரிப்பவர்கள் மற்றும் மொத்த மற்றும் சில்லறை அளவிலான விற்பனையாளர்கள் என்ற அடிப்படையில் பாரிய தொகையினர் வலையமைப்பாக ஒன்றிணைந்த உற்பத்திச் செயன்முறையை இத்துறையில் காணக்கூடியதாக இருக்கும். அவ்வாறே, 900 குடும்பங்களும் அதிகமானோருக்காக தமது வாழ்வாதாரத்தை தக்க வைத்துக் கொள்ள உதவுகின்ற உற்பத்திப் பிரிவாகவும் கருத்திற் கொள்ள முடியும். அதைப்போலவே, பிரதேச மட்டத்தில் கொள்வனவாளர்களால் தரம் வாய்ந்த உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஆற்றுப்படுத்துவதுடன், அதிகளவான உற்பத்திகள் தற்பொழுது ஆற்றுப்படுத்தப்படுவது உள்நாட்டுச் சந்தைகளுக்காகும். அமெரிக்கா, சீனா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு முக்கியமாக இவ்வுற்பத்தி ஏற்றுமதி செய்யப்படும். இதற்கு மேலதிகமாக வெளிநாட்டுச் சந்தைகளில் அதிக கேள்வி உள்ள தாய் மீன்கள் தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு உற்பத்திச் செயற்பாடுகளுக்காக ஒப்பந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். உள்நாட்டுச் சந்தையில் அதிக கேள்வியுடைய மீனாக பொன் மீன்கள் வர்க்கம் இருப்பதுடன் சர்வதேச சந்தைகளுக்காக கப்பி, ஸ்வட்டேல், ப்ளேடி, மோலி ஆகிய வர்க்கங்களுக்காக அதிக கேள்வி உள்ளது. 2020 ஆம் ஆண்டாகும் போது அலங்கார மீன் சோடிகள் 27.04 மில்லியன்கள் தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளுக்காக விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பெறுமதி 676 மில்லியன் ரூபாயாகும்.

### ➢ அலங்கார மீன் வளர்ப்பை மேம்படுத்தும் உத்திகள்.

1. அலங்கார மீன் உற்பத்திக்காக சேற்றுக் குளங்களை அமைத்தல்.
2. மீன் இனங்களின் நிற விருத்தி மற்றும் தரத்தை உறுதி செய்வதற்காக தனிமைப்படுத்தலுடன் கூடிய தாங்கிகளை நிறுவுதல்.
3. விவசாயிகளுக்கு மீன் குஞ்சுகளை விநியோகிப்பதற்காக இனவிருத்தி மத்திய நிலையங்களைத் தாபரித்தல்.
4. தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் விவசாய சங்கங்களை பலப்படுத்துதல்.
5. சிறு அளவிலான தொழில்முயற்சியாளர்களின் செயற்பாடுகளை பலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.
6. சந்தைப்படுத்தல் வலையமைப்பை விருத்தி செய்தல் மற்றும் ஏற்றுமதிச் சந்தைகள் தொடர்பாக கவனத்தைச் ஆற்றுப்படுத்தி உற்பத்தியின் தரத்தை தக்க வைத்தல்.







தனிமைப்படுத்தப்பட்ட தாங்கிகள் நிறுவுதல்

சேற்றுக் குளங்களை அமைத்தல்





அலங்கார மீன் விளைச்சலைப் பெற்றுக் கொள்ளுதல்

## 5. மகாவலி பண்ணை விருத்தி நிகழ்ச்சித் திட்டம்.

இலங்கை அதிகார சபையின் முகாமைத்துவத்தின் கீழ் பண்ணை அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் நிகழ்காலத்தில் 13 பண்ணைகள் மகாவலி வலயங்களில் பரவிக் காணப்படுகின்றன. அடிப்படை விவசாயப் பயிர்கள் உற்பத்தி அலகுகள் நடாத்தப்பட்டாலும் சீரற்ற மற்றும் நிச்சயமற்ற காலநிலை காரணமாக பயிர்ச் செய்கை முகங்கொடுத்துள்ள ஆபத்தான நிலைமைக்கு தீர்வாக விவசாய பயிர்களுக்கு மேலதிகமாக கால்நடை வளங்கள் மற்றும் மீன்பிடி உற்பத்தி நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒன்றிணைந்த பண்ணையாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பண்ணை விருத்திச் செயற்பாடுகளின் அடிப்படை நோக்கமாக இருப்பது யாதெனில்,**

- அப்பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்காக கமநல மற்றும் கால்நடை வளங்கள் குறித்து பிரயோக மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்கும் பயிற்சிகள் மற்றும் மாதிரி அலகுகளாக பண்ணைகளைச் செயற்படுத்துதல்.
- விவசாய மற்றும் கால்நடை வளத் துறைகளின் உற்பத்திகளின் விளைத்திறனை அதிகரிப்பதற்காக பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளும் அலகாக இருத்தல்.
- மாடுகளின் இனவிருத்தி மத்திய நிலையமாக வலயத்திற்கு அவசியமான ஆட்சியான பரம்பரை இயல்புகள் மற்றும், ஆட்சியான பாற்பசுக் கன்றுகளை வழங்குதல், முட்டைகளை அடைகாக்கும் இயந்திரங்கள் மூலம் விவசாயிகளுக்கு கோழிக் குஞ்சுகள் வழங்குதல் மற்றும் பால் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட துணை உற்பத்திகளை மேற்கொள்ளுதல் மற்றும் சந்தைப்படுத்தல் அலகாகக் காணப்படுதல்.

இவ்வாறு, மகாவலி பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக பிரதேச விவசாயிகளுக்கு பரந்து விரிந்த சேவை கிடைக்கப்பெறும்.

## 06. ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

**மீன்படி மற்றும் கால்நடை வள** துறையில் தொழில்நுட்ப மற்றும் பிரயோக அறிவை வழங்குதல் மற்றும் நவீன உள்ளீட்டுப் பயன்பாட்டிற்காக மனப்பாங்கு விருத்தியை ஏற்படுத்தும் நோக்குடன் ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் மீன்பிடி மற்றும் கால்நடை வள உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்த முடியும் என்பதுடன், செயலாற்றுகையை மேம்படுத்துவதன் மூலம் உற்பத்திச் செயன்முறைக்கு மிகவும் வினைத்திறனாக மற்றும் இலாபகரமான வியாபாரத்தை நோக்கி இட்டுச் செல்கின்றது.

நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள்

- நவீன தொழில்நுட்ப அறிவை வழங்குதல், செயன்முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் மனப்பாங்கு விருத்தி.
- நடைமுறை அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்தல்.
- நிலவுகின்ற வளங்களை நிலைபெறுதகு விதமாக பயன்படுத்துவதற்கு அவசியமான அறிவை வழங்குதல்.
- உற்பத்தி விளைத்திறன் மற்றும் வினைத்திறனை அதிகரித்தல்.

## 07. கருத்துக்கள்

1. தொற்றுப்பரவல் காலத்தில், தரவுகளைச் சேகரிக்கும் செயன்முறையை நாளாந்தம் இற்றைப்படுத்தப்படாததுடன் அது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது விசேடமாக மீன் உற்பத்தியில் குறைந்த பெறுமானத்தைப் பெற்றமைக்கு காரணமாக இருக்கலாம்.

2. கொவிட் தொற்றுப் பரவல் நிலைமையின் கீழ் காணப்பட்ட பயணக் கட்டுப்பாடுக் காலப் பகுதியில் பால் சேகரிக்கும் சில மத்திய நிலையங்கள் நன்றாக இயங்காமையினால் விவசாயிகளுக்கு பாலிற்காக உரிய விலை கிடைக்காமை. விசேடமாக, அதிகமாக தயிர் உற்பத்தி முன்னெடுக்கப்படுகின்ற வலவ வலயத்தில் ஆடை நீக்கிய பாலிற்காக பொதிகட்டும் கொள்கலன்கள் பெற்றுக் கொள்ள முடியாமல் போனவை. ஆகையால் பால் விவசாயிகள் நேரடியாக திரவப் பால் சேகரிப்பவர்களுக்கு விற்பனை செய்து குறைந்த இலாபம் பெறப்பட்டுள்ளது.

3. அலங்கார மீன் வளர்ப்பில் போதியளவு உற்பத்தி காணப்பட்டதாக பி வலயம் அறிவித்துள்ளது. எவ்வாறாயினும், நாட்டில் நிலவுகின்ற தொற்றுப் பரவல் நிலைமையில் வியாபார நிலையங்களைத் தேடுவதில் விவசாயிகளுக்கு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. விசேடமாக டி மற்றும் பி வலயங்களில் மீன்களின் உணவை விநியோகிப்பதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக வடிவம் மற்றும் வர்ணம் ஆகிய மனம் கவரக்கூடிய மீன்களின் மனம் கவரக்கூடிய அடையாளங்கள் குறைந்துள்ளதாக விவசாயிகள் அறிவித்து உள்ளார்கள். ஆகையால் அலங்கார மீன்களின் விலை குறைந்தமையால் கூடியளவு வருமானம் கிடைக்காமை.

4. கோழி வளர்ப்பு விவசாயிகளுக்கு விற்பனை நிலையங்களைத் தேடிக் கொள்ள முடியாமல் போனமையால் முட்டை விலை பாரியளவு வீழ்ச்சி அடைந்தமையால் அவ்விவசாயிகளுக்கு உரிய வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியாமல் போனது.

5. பயணக் கட்டுப்பாடு நிலவிய காலப்பகுதியிலும் நன்னீர் மீன் வளர்ப்பானது வழமையான விதத்தில் இடம்பெற்றதுடன் தொடர்ச்சியான உற்பத்தியைப் பெற்றுக் கொள்ள முடியுமானதாக இருந்தது.

**8. நிதிசார் முன்னேற்றம் - 2020**

அதற்கமைய, 2020 ஆம் ஆண்டிற்காக மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்திப் பிரிவிற்குரிய நிதிசார் முன்னேற்றங்களானது வலயங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட விதமானது பின்வரும் 1.1 அட்டவணைப் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

| தொ. இல. | வலயம் | 2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் | 2020 ஆம் ஆண்டிற்காக மறுசீரமைக்கப்பட்ட நிதிகளை ஒதுக்குதல் | 2020.12.31 ஆம் திகதிக்கு செலவு செய்யப்பட்ட மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 01 | பி வலயம் | 3.80 | 6.74 | 7.54 |
| 02 | சி வலயம் | 3.30 | 6.58 | 4.59 |
| 03 | டி வலயம் | 4.40 | 4.84 | 4.84 |
| 04 | ஜீ வலயம் | 6.00 | 2.06 | 2.06 |
| 05 | எச் வலயம் | 7.60 | 10.50 | 10.5 |
| 06 | ஹுருளுவெவ வலயம் | 1.00 | 2.13 | 1.42 |
| 07 | வலவ வலயம் | 4.10 | 7.35 | 7.35 |
| 08 | மினிப்பே வலயம் | 4.00 | 0.86 | 0.96 |
| 09 | எல் வலயம் | - | - | 1.58 |
| 10 | ரம்பகண் ஓயா வலயம் | - | - | 1.48 |
| **மொத்த கூட்டுத் தொகை** | | **34.20** | **41.06** | **42.32** |

**09. பௌதீக முன்னேற்றம் – 2020**

மீன்பிடி மற்றும் கால்நடை வளங்களின் உற்பத்தி இலக்குகளை எட்டுவதற்காக திட்டமிடப்பட்ட செயற்திட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் மாதிரி அலகுகளாக வலய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட பௌதீக செயற்பாடுகளின் முன்னேற்றத்தைக் குறிப்பிட்ட சாராம்ச குறிப்பு பின்வரும் 1.1 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**1.2**

| தொ. இல. | செயற்பாடுகள் | அலகு | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 01 | மாட்டுத் தொழுவங்களை அமைத்தல் | எண்ணிக்கை | 25 | 17 |
| 02 | நடமாடும் பால் கறக்கும் இயந்திரங்களை விநியோகித்தல் | எண்ணிக்கை | 50 | 48 |
| 03 | உயிர் வாயு உற்பத்தி அலகுகளை நிறுவுதல் | எண்ணிக்கை | 04 | 04 |

| | | | | |
|---|---|---|---|---|
| 04 | புற்தரை அலகுகளை நிறுவுதல் | அலகுக் கணக்குகள் | 20 | 15 |
| 05 | புற்களை துண்டாக்கும் இயந்திரங்களை வழங்குதல் | எண்ணிக்கை | 25 | 24 |
| 06 | புல் வெட்டும் இயந்திரங்களை வழங்குதல் | எண்ணிக்கை | 10 | 20 |
| 07 | மிருக சிகிச்சைகளை நடாத்துதல் | எண்ணிக்கை | 25 | 24 |
| 08 | கால்நடைகளை காப்புறுதி செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள் | எண்ணிக்கை | 10 | 08 |
| 09 | ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளை விநியோகித்தல் | எண்ணிக்கை | 22,000 | 22,248 |
| 10 | நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகள் வைப்புச் செய்தல் | எண்ணிக்கை (மில்லியன்) | 2.50 | 2.53 |
| 11 | விற்பனைக்காக மீன்களை சேகரிக்கும் மத்திய நிலையம் | எண்ணிக்கை | 1 | 1 |
| 12 | | | | |
| 13 | நன்னீர் இறால் வளர்ப்பு | எண்ணிக்கை | 440,000 | 440,000 |
| 14 | ஆட்சியான பரம்பரை இயல்புகளை உடைய பாற்பசுக்களை வழங்குதல் | எண்ணிக்கை | 21 | 22 |
| 15 | செயற்கைக் கருவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் | எண்ணிக்கை | 216 | 274 |
| 16 | மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல் (வலைகள்) | எண்ணிக்கை | 40 | 38 |
| 17 | மாடுகளுக்கான இனவிருத்தி மத்திய நிலையங்களை நிறுவுதல். | எண்ணிக்கை | 1 | 1 |
| 18 | பால் வாரம் நிகழ்சித் திட்டங்களை நடாத்துதல். | எண்ணிக்கை | 10 | 8 |
| 19 | மீன்களுக்கான இனவிருத்தி மத்திய நிலையங்களை நிறுவுதல். | எண்ணிக்கை | 3 | 2 |
| 20 | சேற்றுக் குளங்களை அமைத்தல். | எண்ணிக்கை | 8 | 8 |
| 21 | தனிமைப்படுத்தப்பட்ட தாங்கிகளை அமைத்தல். | எண்ணிக்கை | 10 | 7 |
| 22 | உத்தியோகத்தர்கள்/ விவசாயிகளுக்கான பயிற்சிகள். | எண்ணிக்கை | 90 | 87 |

# 3.4 தாபன அபிவிருத்திப் பிரிவு

**அறிமுகம்**

### தாபன அபிவிருத்திப் பிரிவின் நோக்கு

இலங்கையில் நிலைபெறுதகு அபிவிருத்திக்காக மகாவலி வலயங்களில் மனித வளங்களை சிறப்பான முறையில் இயக்குதல்.

### தாபன அபிவிருத்திப் பிரிவின் குறிக்கோள்

இலங்கையில் நிலைபெறுதகு அபிவிருத்திக்காக மகாவலி வலயங்களின் குடியேற்றவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

**தாபன அபிவிருத்திப் பிரிவின் வகிபாகங்கள்**

**சமூக விருத்தி**

மகாவலி வலயத்தினுள் போதைப் பொருட்கள் அற்ற, துன்புறுத்தல்கள் அற்ற, துஷ்பிரயோகங்கள் அற்ற, ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த ஆரோக்கியமான விவசாய சமூகம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்காக வழிகாட்டுதலானது சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படை நோக்கமாகும்.

இதன் கீழ்,

- போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்காக கிராமிய மட்டத்தில் சுயேட்சைத் தலைவர், தலைவிகளை பயிற்றுவித்தல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு மற்றும் சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டுதல்.
- சிறுவர் துஷ்பிரயோகங்கள், மகளிர் துன்புறுத்தல்கள், வீட்டு வன்முறைகள், குறைந்த வயது திருமணங்கள் மற்றும் குறைந்த வயதில் கர்ப்பம் தரித்தல் போன்றவற்றைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுகள்.
- தொற்றா நோய்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல் மற்றும் சுகாதார சிகிச்சைகள் நடாத்துதல். (விசேடமாக துரிதமாக பரவி வருகின்ற சிறுநீரக நோயில் இருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல் மற்றும் இனங்காணப்பட்ட நோயாளர்களை சிகிச்சைக்காக ஆற்றுப்படுத்துதல்)
- கல்விக் கருத்தரங்குகள் நடாத்துதல் (ஐம்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தர பரீட்சை, கா.பொ.த. உயர்தரப் பரீட்சைகளுக்காக)
- மகாவலி நிதியத்தால் புலமைப்பரிசில்களை வழங்குதல். (பெற்றோர்கள் மிகவும் வறிய, அங்கவீனமான அல்லது உயிரிழந்த, சாதாரண தரத்தில் சித்திபெற்ற மாணவர்களுக்காக வழங்கப்படும்).

2020 ஆம் ஆண்டின் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய இலக்குகளைக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களில் 253 நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னேற்றத்தைப் பெற்றுள்ளதுடன் நிதிசார் முன்னேற்றம் 20.4 மில்லியன் ரூபாயாகும்.

இதன் கீழ் அடிப்படைப் பயிற்சி பெற்ற கிராமிய சுயேட்சை தலைவர் தலைவிகள் 600 பேரை உள்ளடக்கிய மகாவலி போதைப் பொருள் ஒழிப்பு செயலாற்றுகை படையணியானது நிறுவப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் பின்வருமாறு.



## குடியேற்ற திறமைகள் மற்றும் தொழிற் பயிற்சிகள்

- குறைந்த வருமானம் பெறுகின்ற மகாவலி குடியேற்றவாசிகளின் பொருளாதார மட்டத்தை 30,000.00 ரூபாயை விட அதிகரிக்கும் நோக்குடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனங்களின் வளம்சார் பங்களிப்பைப் பெற்று முறையான தொழிற் பயிற்சிகள் வழங்குதல், ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் அதன் ஊடாக அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது அடிப்படை எதிர்பார்ப்பாகும்.

2019 ஆம் ஆண்டினுள் இதன் கீழ் 80 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 18.51 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டது. அதன் கீழ் 2020 ஆம் ஆண்டில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் 1371 அங்கத்தவர்கள் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டனர்.

| **நிகழ்ச்சித் திட்டம்** | **2020 ஆம் ஆண்டில் தொழில்களுக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| தொலைபேசி மீள்திருத்தும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 119 |
| மேசன் (கொத்தனார்) பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 60 |
| கணினி மற்றும் மின் வினைஞர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 52 |
| மின்குமிழ் மற்றும் கமரா பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 25 |
| கிராமிய சிறு கைத்தொழில்கள் நிறுவும் நிகழ்ச்சித் திட்டம் | 25 |
| முச்சக்கர வண்டி/ கனரக வாகனங்கள்/ ஹைபிரிட் மீள்திருத்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 306 |
| கனரக வாகன இயந்திரங்கள் பயிற்சி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் | 50 |
| தவாஷி தூரிகை பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 20 |
| தையல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பற்றிக்கு பயிற்சி | 204 |
| வாயு சீராக்கி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 45 |
| கடதாசி கொம்புக்கோல் மடிப்பிடல் (பேபர் குயிலின்) பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 25 |
| பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி | 15 |
| ஒப்பனைப் பயிற்சி | 115 |
| உணவுத் தொழில்நுட்ப பயிற்சி | 235 |
| பைகள் மற்றும் காலணிகள் உற்பத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 75 |
| **கூட்டுத் தொகை** | **1371** |

## மகளிர் அபிவிருத்தி

- கட்டுமானங்களை மேம்படுத்துதல் மற்றும் வீட்டு நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக வழிகாட்டுதல் என்பன இதன் பிரதான நோக்கமாகும்.
- மகாவலி வலயத்தினுள் உள்ள பெண்களை ஊக்கப்படுத்துவதற்காக இதன் கீழ் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.
- தனது வீட்டில் இருந்தே வருதானத்தை ஈட்டுவதற்காக அவர்களுக்கு செயற்பட முடியுமான விதத்தில் சுய தொழில்கள் மற்றும் பல்வேறு தொழிற் பயிற்சிகளை வழங்குதல் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கு அவசியமான உபகரணங்களை வழங்கும் நடவடிக்கைகளும் இதன் கீழ் மேற்கொள்ளப்படும்.

2020 ஆம் ஆண்டில் இதன் நிகழ்ச்சித் திட்ட இலக்கு 42 ஆக இருந்ததுடன் முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் 36 ஆகும். நிதிசார் செலவு 2.52 மில்லியன் ரூபாயாகும்.

## விவசாய அமைப்புக்களின் முன்னேற்றம்

மகாவலி அதிகார சபையின் பிரதான நிறுவனக் கட்டமைப்பான உழவர் அமைப்புக்களை சிறந்த மட்டத்திற்கு கொண்டு வருவதன் மூலம் நாட்டின் உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பதற்காக உழவர் அமைப்புக்களின் தேர்வுகளை நடாத்துதல் மற்றும் விவசாய அமைப்புக்களுக்காக உரிய கட்டளைச் சட்டங்கள், விதிகளும் ஒழுங்குமுறைகளும், நீர் முகாமைத்துவம் ஆகியவை தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்படும். அவ்வாறே, விவசாயிகளின் மனப்பாங்கு விருத்தி மற்றும் ஆற்றல் விருத்திக்காக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுவதுடன் முகாமைத்துவக் குழுவின் கீழ் விவசாயிகளின் பிரச்சினைகளுக்காக தீர்வுகள் வழங்கப்படுவதும் மேற்கொள்ளப்படும். இதன் கீழ் 1,748 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டு உள்ளன.

### 3.4.5 சமூக பங்களிப்புடன் கூடிய நீர்ப்பாசனத் தொகுதிகளின் முகாமைத்துவம்.

- கால்வாயத் தொகுதிகளை தாபரித்தல் மற்றும் இயக்கல் நடவடிக்கைகளை வினைத்திறனாக்குவதன் மூலம் கெத்எலவை நவீன மயப்படுத்தும் சமூக பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டம்.
- புணரமைப்புச் செய்ய வேண்டிய மட்டத்தில் உள்ள கெத்எலவை சமூக பங்களிப்புடன் மற்றும் ஊழிய ஒத்துழைப்புடன் மூலப் பொருட்களுக்கான செலவினங்களை மாத்திரம் ஏற்று புணரமைத்தல்.

(வினைத்திறனான நீர் பயன்பாட்டிற்காக விவசாயிகளை பழக்கப்படுத்துதல் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை நடைமுறையாகவே இதன் மூலம் ஏற்படுத்தப்படுவதுடன் பாரிய செவலினங்களை ஏற்க வேண்டிய செயற்பாடுகளை சமூகத்தின் உழைப்புடன் மிகவும் விளைத்திறனாக மேற்கொள்ளப்படும்.)

| வலயம் | புணரமைக்கப்பட்ட பிரிப்புக் கால்வாய்களின் அளவு | புணரமைக்கப்பட்ட கால்வாய்களின் நீளம் (மீட்டர்) | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | உழைப்பின் பெறுமதி (மில்லியன் ரூபாய்) | முழுமையான நிறைவுகளின் பெறுமதி (மில்லியன் ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| பி வலயம் | 10 | 1118 | 4.865 | 0.73 | 5.6 |
| சி வலயம் | 23 | 8187 | 9.85 | 3.25 | 13.1 |
| எச் வலயம் | 9 | 820 | 4.97 | 1.37 | 6.34 |
| எல் வலயம் | 1 | 200 | 0.49 | 0.19 | 0.68 |
| வலவ வலயம் | 19 | 2038 | 7.02 | 1.26 | 8.28 |
| ஹுருளுவெவ வலயம் | 1 | 5406 | 0.49 | 0.35 | 0.84 |
| மொரகஹகந்த வலயம் | 4 | 1153 | 1.99 | 1.32 | 3.31 |
| **கூட்டுத்தொகை** | **67** | **18,922** | **29.675** | **8.47** | **38.15** |

2020 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சித் திட்டமானது மகாவலி பி, சி, எச், மொரகஹகந்த, எல், வலவ மற்றும் ஹுருளுவெவ ஆகிய வலயங்களில் செயற்படுத்தப்பட்டன. உயர்ந்த பட்சம் ஐந்து (05) இலட்சத்தின் கீழ் கால்வாய்களை புணரமைப்பதற்காக நிதி வழங்கப்படுவதுடன் சுமார் 18,922 மீட்டர் நீளமான நீர்ப்பாசனத் தொகுதிகள் 8.47 மில்லியன் ரூபாய் சேமிப்புடன் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றின் புகைப்படங்கள் சில பின்வருமாறு,

**முன்னைய நிலைமை**



**பின்னைய நிலைமை**



# 3.5 வியாபார அபிவிருத்திப் பிரிவு

**பின் புலம் –**

வியாபார அபிவிருத்திப் பிரிவானது, இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான முதன்மையான வகிபாகத்தை நிறைவேற்றுகின்ற பிரிவாகும். மகாவலி வலயத்தினுள் ஒவ்வொரு வலயங்களுக்கும் தனித்துவமான மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை உயர்ந்த பட்ச விளைத்திறனாக பயன்படுத்தி தொழில்முயற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக பொறுப்புக்களை ஏற்று செயற்படுகின்றது.

அதற்கமைய மகாவலி வலயங்களில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலா போன்ற உரிய பல்வேறு துறைகளில் சிறிய, நடுத்தரமான மற்றும் பாரியளவிலான பல்வேறுபட்ட தொழில்முயற்சியாளர்களை தோற்றுவிப்பதற்காக செயற்திட்டங்களை திட்டமிடுதல், செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக மூலோபாயங்களை தயாரித்தல் மற்றும் மதிப்பிடுதல், தனியார் பிரிவின் வியாபாரங்களை அபிவிருத்திக்காக ஆற்றுப்படுத்துதல், சந்தைப்படுத்தலுக்காக வியாபார நிலைய இணைப்புக்களை ஏற்படுத்துதல், வியாபார மேம்பாட்டிற்காக கடன் திட்டங்களை விரிவுபடுத்தி தொழில்முயற்சியாளர்களின் மூலதன தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல், அவர்களுக்கு அவசியமான வழிகாட்டல்கள் என்பன இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும்.

**வியாபார அபிவிருத்திப் பிரிவின் நோக்கங்கள் –**

01. சுய தொழில் பயிற்சிகள் மூலம் சிறிய அளவிலான உற்பத்தித் துறைக்கு ஒத்துழைப்பை வழங்குதல்.
02. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களைத் உருவாக்குதல்.
03. மூலதன தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு அவசியமான மத்தியஸ்தராக இருத்தல்.
04. தொழில்முயற்சி ஆற்றல் விருத்தி மற்றும் தொழில்நுட்ப திறமைகளை வழங்குதல்.
05. வியாபார நிலைய ஒருங்கிணைப்புகள் மூலம் மகாவலி அதிகார பிரதேசங்களின் உற்பத்திகளுக்கு அதிகூடிய பெறுமதியைப் பெற்றுக் கொடுத்தல்.
06. மகாவலி அதிகார பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவித்தல்.
07. முதலீடுகள் மூலமான பிரதேச அபிவிருத்தி.
08. தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு வழங்குதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு.
09. வியாபார ஆலோசனைகள்/ வியாபார திட்டங்களைத் தயாரிப்பதற்கு உதவிகளைச் செய்தல் மற்றும் மதிப்பிடுதல்.
10. அதிகார சபையின் வருடாந்த வருமான நிலைமையை அதிகரித்தல்.

**வியாபார அபிவிருத்திப் பிரிவின் வகிபாகங்கள் –**

- கிராமிய ரீதியாக இனங்காணப்பட்ட வளங்களின் பரவல் தன்மையின் கீழ் வியாபார திட்டங்களைத் தயாரித்தல்.
- இனங்காணப்பட்ட சுய தொழில் துறைகளின் அபிவிருத்திக்காக திட்டங்களைத் தயாரித்தல்.
- சிறு அளவிலான வியாபாரிகளின் மூலதன தேவைகளுக்கு அவசியமான கடன் வசதிகளை வழங்குதல் மற்றும் 50% மகாவலி பங்களிப்பின் கீழ் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்.
- விவசாய மற்றும் கால்நடை வளரப்பு செயற்திட்டத்தின் ஊடாக அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துதல்.

- கால்நடை வளர்ப்பு, அலங்கார மீன்கள், தேங்காய்ப் பயிர்ச்செய்கை, ஏனைய பயிர்கள் மற்றும் பழப் பயிர்ச் செய்கை ஆகிய முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக காணிகளை வழங்குவதன் அடிப்படையில் குத்தகை வருமானம் பெற்றுக் கொள்ளுதல்.
- சூரிய மின் சக்தி, உயிர்த் திரள் மின் சக்தி, நீர் மின் சக்தி ஆகிய மின்சாரச் செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட காணிகளின் குத்தகை வருமானம்/ மகாவலி அதிகார சபையுடன் பங்கு வியாபாரமாக ஆரம்பிப்பதன் மூலம் இலாபத்தை ஈட்டுதல்.
- கைத்தொழில் பூங்காக்களை நடாத்திச் செல்வதன் ஊடாக பிரதேச மட்டத்தில் பொருளாதாரத்தைப் பலப்படுத்துதல்.
- மகாவலி அதிகார பிரதேசங்களில் கவர்ச்சி மிக்க இடங்களில் அமைந்துள்ள சுற்றுலா மாளிகைகளை நவீன மயப்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக திறப்பதன் ஊடாக வருமானத்தை ஈட்டுதல்.
- பாரம்பரிய தேசிய உணவுகளை பிரபலமாக்குதல் மற்றும் மகளிர் தொழில்முயற்சி விருத்திக்காக மகாவலி ஹெல போஜுன் விற்பனை நிலையங்களை ஆரம்பித்தல்.
- சுற்றாடல் தோழமையுடைய சுற்றுலா வாய்ப்புக்களை விரிவடையச் செய்வதற்காக நீர்த்தேக்க சுற்றுலாப் படகுச் சேவைகளுக்காக அனுமதி வழங்கி வருடாந்த குத்தகைத் தொகையைப் பெற்றுக் கொள்ளுதல்.

**2020 ஆம் ஆண்டில் வியாபார அபிவிருத்திப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை பலப்படுத்துதல், ஒத்துழைப்புகளை வழங்குதல் மற்றும் சுய தொழில் பயிற்சிக்கு அவசியமான தொழில்நுட்ப அறிமை வழங்குதல்.
- புதிய தொழில்முயற்சியாளர்களை இனங்காணுதல் மற்றும் பயிற்சிக்காக தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்.
- 50% ஒத்துழைப்பின் கீழ் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விநியோகித்தல்.
- “மொரகஹகந்த அத்வெல” கடன் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் “மகாவலி சவிய” கடன் திட்டம்.
- முதலீட்டு மேம்பாடு மற்றும் வியாபார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.
- வெளி முதலீட்டாளர்களுக்கு புதிய முதலீடுகளை மேற்கொள்வதற்கு அவசியமான ஒருங்கிணைப்புகளை முன்னெடுத்தல்.
- இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான சுற்றுலா மாளிகைகளை நவீன மயப்படுத்தும் செயற்திட்டம்.
- “மகாவலி ஹெல போஜுன் விற்பனை நிலைய” செயற்திட்டம்.
- மகாவலி நீர்த்தேக்கங்களில்/ குளங்களில் சுற்றாடல் தோழமையுடைய படகுகளைப் போலவே மிதக்கும் விமான சேவையை ஆரம்பித்தல்.

**சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்.**

மகாவலி வலயங்களில் குடியேற்றவாசிகளின் தொழில்முயற்சிச் செயன்முறைகளுக்கு பங்களிப்பாக கொண்டு குடும்ப பொருளாதார அலகை உருவாக்குதல் மற்றும் அவர்களை தேசிய பொருளாதாரத்தின் பங்குதாரர்களாக மாற்றுதல் இதன் மூலம் முன்னெடுக்கப்படும். அதற்கமைய, தொழில்முயற்சித் துறையில் பயிலுனர்களுக்காக அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கு விருத்திக்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், புது தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்காக அவசியமான வழிகளை உருவாக்கி தொழில்முயற்சிப் பயிற்சிப் பட்டறைகளைப் போலவே தற்பொழுது நிலவுகின்ற தொழில்முயற்சிகளுக்காக சலுகை வட்டி வீதத்தின் அடிப்படையில் கடன் வசதிகளை வழங்குவதானது அரச வங்கிகளுடன் ஒன்றிணைந்து முன்னெடுப்பதும், வியாபாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான தொழில்நுட்ப இயந்திராதிகளை 50% நிதி உதவியின் கீழ் வழங்குவதும் முன்னெடுக்கப்படுகின்றது. இதன் மூலம் தேசிய கைத்தொழில்களை வலுப்படுத்துவதற்கு மற்றும் புது உற்பத்திகளை சந்தைக்குச் சேர்ப்பதற்கு

அவசியமான இளைஞர்களின் உழைப்பை பொருளாதார செயன்முறைகளுக்கு பங்களிப்புப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன் தொழில் இன்மையை இயன்றளவு குறைத்து வறுமையை ஒழிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் இதன் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன.

சிறு மற்றும் நடத்தர அளவிலான கடன் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் மொரகஹகந்த அத்வெல எனும் பெயரில் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட மொரகஹகந்த வலயத்தில் தொழில்முயற்சியாளர்களை இலக்காக கொண்டு சலுகை வட்டி வீதத்தின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஒன்றிணைந்து கடன் நிகழ்ச்சித்

திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் ஒட்டு மொத்த வலயமும் உள்ளடங்கும் விதமாக மகாவலி "சவிய கடன்" திட்டமானது இவ்வருடமும் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய அனைத்து வலயங்களும் உள்ளடங்கும் விதமாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள், தொழில்முயற்சிப் பயிற்சிகள், சந்தைகளை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள், தொழில்முயற்சி அனுபவங்களை பகிரும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கள ஆய்வு செயலமர்வுகள் அமுல்படுத்தப்பட்டு உள்ளன. எனினும், நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று மற்றும் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக மக்களை ஒன்றுகூட்டுதல் மற்றும் குழு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக தடையாக இருந்தாலும் பிரிவின் ஒட்டுமொத்த நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றமானது பின்வருமாறு சாராம்சப்படுத்தப்பட்டு உள்ளது.







- **முதலீட்டு மேம்பாடு**

ஏற்றுமதியை இலக்காக கொண்ட விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு உற்பத்தி செயற்திட்டங்களுக்காக மகாவலி பி வலயத்திற்குச் சொந்தமான கந்தகாடு மற்றும் முதுவெல்ல பிரதேசங்களில் முதலீட்டுக் காணிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு மதிப்பீட்டிற்கு உட்படுத்தி பொருத்தமான முதலீட்டாளர்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

**அறிமுகப்படுத்தப்பட்ட புதிய முதலீட்டு செயற்திட்டங்கள் தொடர்பான விபரம்**

| **தொடர் இலக்கம்** | **வலயம்/ பிரதேசம்** | **வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ள காணிகளின் அளவு (ஹெக்டயர்)** |
|---|---|---|
| 1 | பி வலயம்/ கந்தகாடு/ முதுவெல்ல/ வெலிகந்த | 3062 |
| 2 | சி வலயம் | 50 |
| 3 | டி வலயம் | 171 |
| 4 | வலவ வலயம் | 58 |

அதற்கமைய பொருத்தமான முதலீட்டாளர்களைத் தெரிவு செய்வதற்காக பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்குரிய விண்ணப்ப படிவங்கள் 4138 கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அச்செயற்திட்ட அறிக்கைகளை முறையான மதிப்பீட்டிற்கு உட்படுத்தி மிகவும் உகந்த செயற்திட்டங்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. அதில் மிகவும் திருத்தமான மற்றும் பக்கச் சார்பற்ற மதிப்பீட்டு முறைமையை பின்பற்றி விவசாய திணைக்களம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் முதலீட்டுச் சபை ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் துறைசார் அறிஞர்களை உள்ளடக்கிய குழுவின் மூலம் மதிப்பீட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டு உள்ளன. அதற்கமைய தேசிய தேவைப்பாடுகளின் அடிப்படையில் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்ட பயிர்கள் தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்தி தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களுக்காக மகாவலி வலயங்களில் முதலீடுகளுக்காக 2021 ஆம் ஆண்டு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் தேசிய வருமானத்திற்கு 3000 – 5000 மில்லியன் ரூபாய் பங்களிப்பை வழங்குவதற்கும் 3000 தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.







**<u>சுற்றுலா மாளிகைகள் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்</u>**

தேசிய மற்றும் சர்வதேச சுற்றுலாத் தொழிலில் இலக்ககாக கொள்ளப்பட்ட குழுக்களுக்காக மிகவும் நம்பகத் தன்மையான மற்றும் பாதுகாப்புடன் கூடிய வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடிய மனம் கவரக்கூடிய தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து வருமான தோற்றுவிப்பிற்காக சகல மகாவலி வலயங்களும் உள்ளடங்கும் விதமாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுப் பரவல் நிலைமை காரணமாக விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடு காரணடாக 2020 ஆம் ஆண்டு பூராகவும் நிகழ்நிலை (online) முறையில் அமுல்படுத்தப்பட்ட சுற்றுலா மாளிகைகளை ஒதுக்கும் முறையானது தற்காலிகமாக நிறுத்தி, அத்தியாவசிய கடமைத் தேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்துவதற்கு உரிய வலயத்தின் முகாமைத்துவத்திற்கு சுற்றுலா மாளிகைகளின் முகாமைத்துவத்தை ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்கமைய, கொவிட் தொற்றுப் பரவல் நிலைமையிலும் இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் சமூகத்திற்கு வழங்குகின்ற சேவைகளை தடையின்றி தொடர்ச்சியாக வழங்குவதற்காக உத்தியோகத்தர்களின் கடமைத் தேவைப்பாடுகளுக்காகவும் பயனடபடுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும், மகாவலி பி வலயத்திற்குச் சொந்தமான ருஹுணுகெத சுற்றுலா பங்களாவானது கந்தகாடு தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தின் வைத்தியர்களின் பயன்பாட்டிற்காக தேசிய அனர்த்த நிலைமையின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற சேவையாக காலத்தின் தேவையின் அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருந்தன.

ஒட்டு மொத்தமாக 2020 ஆம் ஆண்டிற்காக இலக்காக கொள்ளப்பட்ட வருமான தோற்றுவிப்பு இலக்குகளை நெருங்குவதற்கு முடியாமல் போனாலும், தேசிய ரீதியாக பயன்மிக்க சேவையானது இதன் கீழ் முன்னெடுக்கப்பட்டு உள்ளதுடன், மேம்பாட்டு வருடத்தில் அத்தியாவசிய தாபரிப்பு மற்றும் நடாத்திச் செல்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.







| தொ. இல. | வலயம் | சுற்றுலா மாளிகையின் பெயர் | | சுற்றுலா மாளிகைகளின் எண்ணிக்கை | அண்மித்த நகரம் | அறைகளின் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பி | ருஹுனுகெத | | 1 | வெலிகந்த | 10 |
| | | பிம்புரத்தேவ | | 2 | அரலகங்வில | 4 |
| 2 | சி | தெஹிஅத்தகண்டிய i | | 3 | தெஹிஅத்தகண்டிய | 10 |
| | | தெஹிஅத்தகண்டிய ii | | 4 | தெஹிஅத்தகண்டிய | 5 |
| | | தெஹிஅத்தகண்டிய iii | | 5 | தெஹிஅத்தகண்டிய | 3 |
| | | கிந்துருகோட்டை பயிற்சி நிலையம் | VIP | 6 | கிந்துருகோட்டை | 1 |
| | | | சாதாரண | | கிந்துருகோட்டை | 3 |
| | | | A தரம் | | கிந்துருகோட்டை | 20 |
| | | | B தரம் | 7 | கிந்துருகோட்டை | 8 |
| | | உல்ஹிடிய / ரத்கிந்த | I | | மெதகம | 2 |
| | | | II | | மெதகம | 3 |
| 3 | டி | சூரியவெவ | | 8 | கந்தளாய் | 6 |
| | | பிசோபுற (புதிய) | | 9 | மெதிரிகிரிய | 6 |
| 4 | ஜீ | மொரகஹகந்த விசேட செயற்திட்டம் | | 10 | மொரகஹகந்த | 4 |
| | | பகமூண | | 11 | பகமூண | 6 |
| 5 | எச் | கலா வாவி | VIP | 12 | கலா வாவி | 2 |
| | | | சாதாரண | | கலா வாவி | 3 |
| | | தம்புத்தேகம | | 13 | தம்புத்தேகம | 4 |
| | | நொச்சியாகம | | 14 | ஏவிடியாகம | 6 |
| | | நிராவிய | | 15 | தம்புத்தேகம | 4 |
| 6 | எல் | வெலிஓயா | | 16 | சம்பத் நுவர | 4 |
| 7 | விக்டோரியா | 222 வதிவிட வியாபார அலுவலக சுற்றுலா மாளிகை | | 17 | திகனை | 4 |
| | | நுவரெலியா | | 18 | நுவரெலியா | 6 |
| | | கொத்மலை 119 | 2 | 19 | கொத்மலை | 3 |
| | | பூவெலகடை | | 20 | கண்டி | 3 |
| 8 | வலவ | உடவலவ | | 21 | எம்பிலிபிடிய | 4 |
| | | எம்பிலிபிடிய | | 22 | எம்பிலிபிடிய | 8 |
| | | மயுரபுற | | 23 | சூரியவெவ | 5 |
| 9 | ரம்பகெண் ஓயா | மகஓயா | | 24 | மகஓயா | 4 |
| | | பதுளை | | 25 | பதுளை | 6 |
| 10 | அடிப்படை பணி நிர்வாக | பொல்கொல்ல | | 26 | கண்டி | 4 |
| | | கொத்மலை 119 | 1 | 27 | கொத்மலை | 4 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | செயற்படுத்து கைகள் மற்றும் தாபரிப்பு | ரன்தெனிகல | VIP 1 | 28 | மஹியங்கனை | 3 |
| | | போவதென்ன | | 29 | நாவுல | 3 |
| | | மாதுறு ஓயா | | 30 | அரலகங்வில | 4 |
| 11 | இரத்மலானை | இரத்மலானை | | 31 | இரத்மலானை | 8 |

**<u>மகாவலி ஹெல போஜுன் விற்பனை நிலைய செயற்திட்டம்.</u>**

பாரம்பரிய தேசிய உணவை பிரபலப்படுத்துதல் மற்றும் மகளிர் தொழில் முயற்சிகளை விருத்தி செய்வதன் மூலம் இல்லத்தார்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்திதல், தேசிய உணவுகளை குறைந்த விலையின் கீழ் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு மற்றும் வலய ரீதியில் நேரடியாக மற்றும் மறைமுகமான தொழில்களைத் தோற்றுவித்தல் ஆகிய அடிப்படை நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய செயற்திட்டமாக மகாவலி ஹெல போஜுன் விற்பனை நிலையங்கள் மகாவலி வலயங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஹெல போஜுன் விற்பனை நிலையங்களை நிறுவுவதன் மூலம் நச்சுப் பொருட்கள் அற்ற தேசிய உணவுகளை ஹெல போஜுன் விற்பனை நிலையங்கள் மூலம் பொது மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மகாவலி வலயங்களில் நேரடியான மற்றும் மறைமுகமான தொழில் வாய்ப்புக்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன.

எனினும் இவ்வருடம் நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக பல தடவைகள் இவ் ஹெல போஜுன் விற்பனை நிலையங்கள் மூட வேண்டி ஏற்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு முடியாமல் போனது. அதற்கமைய நீண்ட காலமாக மூடி வைக்கப்பட்டமையால் அத்தியாவசிய தாபரிப்பு மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மாத்திரம் பிரதானமாக முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

**<u>சுற்றாடல் தோழமைமிக்க சுற்றுலா படகுச் சேவையை செயற்படுத்துதல்.</u>**

**01. சுற்றாடல் தோழமை மிக்க படகுகள்/ வள்ளங்களின் சேவை**

சுற்றாடல் தோழமைமிக்க படகுச் சேவையானது வியாபார அபிவிருத்திப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வருமான தோற்றுவிப்புச் செயற்திட்டமாகும். இதில் விக்டோரியா பொல்கொல்ல, தம்புளு ஓயா மற்றும் லொக்கல ஓயா என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இச்சுற்றாடல் தோழமைமிக்க செயற்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது










**02. மிதக்கும் விமான சேவை –**

விக்டோரியா நீர்த்தேக்கத்தை அண்மித்த மிதக்கும் விமானங்களை தரையிறக்குவதற்காக புதிய ஒப்பந்தம் ஒன்றின் கீழான வருமான தோற்றுவிப்புச் செயற்திட்டமாகும். அதற்கமைய 2020 ஆம் ஆண்டு ஒப்பந்தம் இற்றைப்படுத்தப்பட்டதுடன் நிலவிய கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக செயற்திட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

<u>**மேம்பாட்டு ஆண்டிற்குரிய முன்னேற்ற சாராம்சம்**</u>

| செயற்பாடுகள் | எண்ணிக்கை |
|---|---|
| கந்தகாடு, முதுவெல்ல மற்றும் வலவ பிரதேசங்களை அண்டி புது முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக தொழில்முயற்சியாளர்களை அறிமுகப்படுத்துதல். | விண்ணப்பித்துள்ள எண்ணிக்கை 4197 ஆகும். மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்டு உள்ளது |
| முதலீட்டு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் (மகாவலி பி,சி மற்றும் வலவ வலயங்களை அண்டி முதலீட்டுச் செயற்திட்ட மதிப்பீடுகள், கள ஆய்விற்காக சகல வலயங்களும் உள்ளடங்கும் விதமாக நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவை) | நிகழ்ச்சித் திட்டங்கள் 36 |
| மகாவலி ஹெல போஜுன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் (சகல வலயங்களும் உள்ளடங்கும் விதமாக நடாத்தப்பட்ட கள ஆய்வுகள், கட்டுமானங்கள் மற்றும் தாபரிப்பு, விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவை) | நிகழ்ச்சித் திட்டங்கள் 12 |
| சுற்றுலா மாளிகைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேற்பார்வை நிகழ்ச்சித் திட்டங்கள் (கட்டுமானங்கள் மற்றும் தாபரிப்பு, விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவை) | நிகழ்ச்சித் திட்டங்கள் 10 |

| | |
|---|---|
| 50% நிதி உதவியின் கீழ் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் | தொழில் முயற்சியாளர்கள் 187 |
| பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஒன்றிணைந்து மகாவலி வலயங்களில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்காக நிதி உதவி வழங்குதல் (கள மேற்பார்வை மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவை) | நிகழ்ச்சித் திட்டங்கள் 10 |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள் | நிகழ்ச்சித் திட்டங்கள் 15 |
| சந்தை மேம்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | நிகழ்ச்சித் திட்டங்கள் 6 |

## 3.6 ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விசேட செயற்திட்டப் பிரிவு.

### நோக்கம்

நவீன தொழில்நுட்பம் மற்றும் மூலோபாய முறைகள் மூலம் மகாவலி அதிகார வலயங்களில் பல்-பிரிவுசார் அபிவிருத்தியை சான்றுப்படுத்துதல்.

### குறிக்கோள்

மகாவலி குடியேற்றவாசிகளின் வாழ்வாதாரத்தை வலுவூட்டுவதற்காக மகாவலி பெருந் திட்டத்திற்கு அமைய உள்நாட்டு வெளிநாட்டு செயற்திட்டங்களைச் செயற்படுத்துதல்.

**<u>பிரிவின் வகிபாகங்கள்.</u>**

- மகாவலி குடியேற்றவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக பல்-பிரிவுசார் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக அரச கொள்கைகள், நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் மகாவலி பெருந்திட்டத்திற்கு அமைய மகாவலி அதிகார சபையின் பிரிவுகளுக்கான தேசிய மற்றும் வெளிநாட்டு நிதிசார் ஏற்பாடுகளின் கீழ் செயற்படுகின்ற விசேட செயற்திட்டங்களைத் தயாரித்தல், அதனை அமுலிற்குக் கொண்டு வருவதற்கான வழிமுறைகளைத் தயாரித்தல், உரிய பிரிவுகளின் மூலம் செயற்படுத்துதல், இயக்குதல், மேற்பார்வையிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வுக்கு உட்படுத்துதல் உட்பட மகாவலி அதிகார பிரதேசங்களில் சுற்றுலா வியாபார நடவடிக்கைகளை பிரபலமாக்குதல் மற்றும் மேம்பாட்டிற்கு அவசியமான மூலோபாய திட்டங்களைத் தயாரிப்பதன் மூலம் அபிவிருத்திச் செயற்திட்டங்களைச் செயற்படுத்துதல்.

- மகாவலி குடியேற்றவாசிகளின் வியாபார நிலையங்களை இலக்காகக் கொண்ட விவசாய மற்றும் ஏனைய உற்பத்திகளுக்காக நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் உற்பத்தித் தரத்தை அதிகரிப்பதற்குரிய செயற்திட்டங்களைத் செயற்படுத்துதல் மற்றும் உள்நாட்டு/ வெளிநாட்டு ஆராய்ச்சி

நிலையங்கள்/ பல்கலைக்கழகங்கள்/ உயர் கல்வி நிலையங்கள் ஆகியவற்றுடன் வளங்களின் தன்மை, பொருளாதார நிலைமாறிகள் மற்றும் நிலவுகின்ற இயல்திறன் ஆகியவை தொடர்பாக ஆய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், துறையின் மாதிரி ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் ஆய்வின் பெறுபேறுகளை மகாவலி வலயங்களுக்கு ஏற்புறுத்துவதன் ஊடாக குடியேற்றவாசிகளின் வருமான தோற்றுவிப்பை அதிகரிக்கச் செய்தல்.

**2020 ஆம் ஆண்டின் செயலாற்றுகை திட்டத்திற்கு அமைய நிறைவேற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்**

- நிதிசார் மானியம் 07 மில்லியன்
- காலநிலை தாக்கத்தை இயன்றளவு குறைப்பதற்கான முதன்மையான உயர் தொழில்நுட்ப கொத்மலை உயர் பெறுமதியுடைய பயிர்களுக்காக மாதிரி பச்சை வீடுகளை நிறுவுதல்.
- மகாவலி சி வலயத்தில் கிராந்துரு கோட்டை அபிவிருத்தி மத்திய நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள தகவல் தொடர்பாடல் கிராம செயற்திட்டம்.
- பயிற்சி தொகுதியைத் தயாரித்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.
- மொரகஹகந்த சூழலியல் சுற்றுளாத் தொழில் செயற்திட்டம்
- காலநிலை மாற்றங்களுக்கு தீர்வாக ஸ்மார்ட் (சூட்டிகை) விவசாய தொழில்நுட்ப பூங்கா ஒன்றை மகாவலி சி வலயத்தில் நவ மெதகம பண்ணையில் நிறுவுதல் மற்றும் இலங்கை விவசாய உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்பும் செயற்திட்டம்.

## 2020 ஆம் ஆண்டில் பிரிவின் மூலம் அமுல்படுத்தப்பட்ட மற்றும் இலக்குகளின் முன்னேற்றம்.

**காலநிலைத் தாக்கத்தை இயன்றளவு குறைப்பதற்காக மற்றும் சிறந்த விவசாய ஒழுங்குமுறைகளை பின்பற்றி உயர் தரம் மற்றும் பெறுமதி கொண்ட பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்கான முதன்மையான உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய பச்சை வீட்டுப் பண்ணைச் செயற்திட்டம். ( SMART GREEN HOUSE PROJECT )**

கொத்மலைத் தொகுதி முகாமைத்துவ வளாகத்தில் அரச, தனியார் கூட்டு வியாபாரமாக கொரியா அரசாங்கத்தின் விவசாய திணைக்களத்தின் உதவியுடன் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய பச்சை வீடு ஒன்றை நிறுவி அதில் உயர் தரம் மற்றும் பெறுமதி கொண்ட பயிர்ச் செய்கையை மேம்படுத்துதல். (தக்காளி மற்றும் பெல் பெப்பர்) மற்றும் அதன் பின்னர் விவசாயிகளுக்காக சலுகை கடன் வேலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் விவசாய நிலங்களுக்காக பச்வை வீடுகளை விரிவுபடுத்துதல் இச்செயற்திட்டத்தின் மூலம் செயற்படுத்துவதற்குள்ளது.

செயற்திட்ட செலவினம் 427,200 அமெரிக்க டொலர் (76.5 மில்லியன் ரூபாய்) ஆக இருப்பதுடன் அது தனியார் பிரிவின் மூலம் ஏற்கப்படுகின்றது.

உரிய தனியார் பிரிவின் மூலம் கொரிய அரசாங்கத்தின் மூலம் பச்சை வீட்டுத் தொகுதியை இலங்கைக்கு இறக்குமதி செய்து முடிக்கப்பட்டுள்ளதுடன், உலகில் பரவிய கொவிட் 19 தொற்று காரணமாக கட்டுமான பணிகளுக்காக வருகை தருவதற்கு கொரிய தொழில்நுட்ப குழுவிற்கு முடியாமல் போனதுடன் 2011 ஏப்ரல் முதலாம் வாரம் அவர்கள் வருகை தருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**மகாவலி சி வலயத்தின் கிராந்துரு கோட்டை அபிவிருத்தி மத்திய நிலையத்தில் நிறுவப்பட்ட தகவல் தொடர்பாடல் கிராமம் செயற்திட்டம். (INFORMATION VILLAGE CENTER )**

மகாவலி இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறைகளின் இளைஞர் யுவதிகள் மற்றும் விவசாயிகளுக்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம் விவசாயம், தொழில் உருவாக்கத்திற்காக கொரிய சர்வதேச கூட்டுறவு முகவர் நிறுவனத்தின் (KOICA) உதவியுடன் மகாவலி சி வலயத்தின் கிராந்துரு கோட்டை அபிவிருத்தி மத்திய நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள தகவல் தொடர்பாடல் மத்திய நிலையத்தின் எதிர்வரும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்.

நவீன விவசாய அறிவு, தகவல் தொடர்பாடல் மற்றும் இணையத்தள சந்தைக்காக விவசாயிகள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சி வழங்குதல்.

அமெரிக்கா டொலர் 78,000 KOICA நிதியின் மூலம் நிறுவப்பட்டுள்ளது.

தற்பொழுது உரிய சர்வதேச நிறுவனத்தின் நிதியுடன் பூரணமான கணினி அலகு ஒன்று நிறுவப்பட்டுள்ளதுடன் பயிற்சித் தொகுதிகள் தயாரிக்கப்பட்டு முடிவடைந்துள்ளதுடன் விவசாயிகளுக்காக பயிற்சிப் பாடநெறிகள் ஆரம்பிப்பதற்கு உள்ளன.

இப்பயிற்சியானது ஏனைய மகாவலி வலயங்களிலும் ஆரம்பித்து விவசாயிகளின் சந்தைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக விவசாயிகளை ஆற்றுப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.





**காலநிலை மாற்றங்களுக்கு தீர்வாக ஸ்மார்ட் (சூட்டிகை) விவசாய தொழில்நுட்ப பூங்கா ஒன்றை மகாவலி சி வலயத்தில் நவ மெதகம பண்ணையில் நிறுவுதல் மற்றும் இலங்கை விவசாய உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்பும் செயற்திட்டம். (SMART Agro – Technological Park)**

- காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுக்க முடியுமான விதத்தில் சூட்டிகை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாதுகாப்பான வீட்டிற்குள் பயிர்ச் செய்கை மேற்கொள்வதன் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாயிகளின் வருமான மட்டத்தை மேம்படுத்துதல்.
- இச்செயற்திட்டத்திற்காக பங்குபற்றுகின்ற விவசாயிகளின் வருமான மட்டத்தை இரட்டிப்பாக்குதல்.
- உயர் தொழில்நுட்ப வீட்டிற்குள் பயிர்ச் செய்கைக்காக உயர்ந்த பட்ச இலாபத்தை பெற்றுக் கொள்வதற்கு மற்றும் ஏற்றுமதியை இலக்காக கொள்ள முடியுமான உணவுப் பயிர் வகைகள் குறைந்த பட்சம் 03 ஐ அறிமுகப்படுத்துதல்.
- பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் விவசாயிகளின் ஆற்றல்களை விருத்தி செய்தல்.
- விவசாயிகளுக்கு பரம்பலுக்காக குறைந்த செலவுடைய உயர் தொழில்நுட்ப விவசாய வீடுகளை அறிமுகப்படுத்துதல்.
- பயிற்சி வேலைத்திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்காக (பயிர்ச் செய்கைகள் தொடர்பாக விவசாயிகள் மற்றும் இரண்டாம் தலைமுறையின் விவசாய பிள்ளைகளுக்காக உயர் தொழில்நுட்ப விவசாய வீடுகள் 15 ஐ ஆரம்பித்தல்.

- சூரிய மின் சக்தியைப் பயன்படுத்தி 350 கி.வொ. மின்சாரத்தை உற்பத்தி செய்வதன் மூலம் புதுப்பிக்கத்தகு சக்தி வலு பயன்பாட்டை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்துதல்.
- விவசாய உற்பத்திகளை தயாரிப்பதற்காக தயாரிப்பு மத்திய நிலையம் ஒன்றை ஆரம்பித்தல்.
- குளிரூட்டப்பட்ட உணவுப் பொருட்களின் போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் ஆகியவற்றிற்காக குளிரூட்டப்பட்ட அறை மற்றும் குளிரூட்டியுடன் கூடிய டிரெக் வண்டி ஒன்றைப் பெற்றுக் கொள்ளுதல்.
- கொரிய சர்வதேச கூட்டுறவு முகவர் நிறுவனத்தின் (KOICA) 05 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியாக மேற்கொள்ளப்பட உள்ளது.
- தற்பொழுது கொரிய சர்வதேச கூட்டுறவு முகவர் நிறுவனத்தின் (KOICA) மூலம் செயற்திட்டத்திற்குரிய சாத்தியப்பாட்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டு செயற்திட்டத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.





**<u>மொரகஹகந்த சூழலியல் சுற்றுலா தொழில் செயற்திட்டம்</u>**

- சுற்றுலா மேம்பாடு/ தொழில் உருவாக்கம்/ அந்நியச் செலவானியை ஈட்டுதல்/ மகாவலி வருமானத்தை அதிகரித்தல்/ சூழலியல் பாதுகாப்பு
- தற்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள 400 ஹெக்டயரை முறையாக நீண்ட கால குத்தகை அடிப்படையில் முதலீட்டாளர்களுக்காக வழங்குதல்.
- உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் – (அடிப்படை வசதிகள்)
- சுற்றுலாத் துறை அமைச்சுடன் செயற்திட்ட திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

தற்பொழுது இலங்கை மகாவலி அதிகார சபையானது இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் ஒன்றிணைந்து முன்மொழியப்பட்டுள்ள சுற்றுலா வலயத்தின் உப வலயங்களை பிரித்தல் மற்றும் உப வலயங்கள் உள்ளடங்குகின்ற வரைபடம் ஒன்றானது காணி உபயோக திட்டமிடல் பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ளதுடன் அவ் உப வலயத்திற்காக நிபந்தனைக் கொத்தின் ஒரு பகுதி தற்பொழுது இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் வழங்கப்பட்டு உள்ளதுடன் மேலும் ஒரு பகுதியானது வழங்குவதற்கு எஞ்சியுள்ளது.

**மகாவலி பி மற்றும் மொரகஹகந்த வலயங்களில் இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவுடன் ஒன்றிணைந்து முன்னெடுக்கப்படுகின்ற மின் வேலி அமைக்கும் முன்னோடிச் செயற்திட்டம்.**

தற்பொழுது வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டமாக அமுல்படுத்தப்பட்டு முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய பிரதேசங்கள் மற்றும் ஆனையிறவு பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.



இதில் புணர்நிர்மாணம் செய்யப்பட வேண்டிய கிராமங்கள் 13 இற்குரிய யானை வேலிகளின் அளவானது முன்னோடி ஆராய்ச்சி செயற்திட்டமாக இனங்கண்டு ஒருங்கிணைந்த வேலைத்திட்டமாக அமுல்படுத்தப்பட்டு உள்ளது. (இதன் மூலம் பி வலயத்தில் 32,500 குடும்பங்களுக்காக அரலகங்வில விதைப் பண்ணை மற்றும் களு கங்கை சுற்றுலா வலயம் உட்பட புதிய அபிவிருத்தி வலயத்திற்காக பிரதிபலன்கள் திட்டமிடப்பட்டுள்ளன)

தொடக்க செயற்திட்டமாக மகாவலி பி வலயத்தில் சுமார் 254 கி.மீ. அளவான மொத்த தூரத்தில் 42 கி.மீ. (சிங்ஹபுற) 9 கி.மீ. (அரலகங்கில விதைப் பண்ணை) 28.5 கி.மீ. மொரகஹகந்தவில் உள்ள யானை வேலி பிரதேசங்களில் நிலத்தை சீரமைத்து தாபரிப்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் நிகழ்ச்சித் திட்டமானது தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.



# நான்காவது அத்தியாயம்.

## 4.1. ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவு

**<u>ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வகிபாகங்கள்.</u>**

1. **ஊழியர்களின் தேவைப்பாடுகளை இனங்காணுதல், திட்டமிடுதல் மற்றும் கவர்ந்தெடுத்தல்.**
    - வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்களைக் கோருதல்.
    - பரீட்சைகள்/ நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்.
    - தகுதியானவர்களைத் தெரிவு செய்தல்.
    - ஊழியர்களின் எண்ணிக்கையை மறுசீரமைத்தல். முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலைப் பெற்றுக் கொண்ட பின்னர்)

2. **ஊழியர் பயிற்சி மற்றும் விருத்தி**
    - புதிய உத்தியோகத்தர்களை நிலைப்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.
    - குறுகிய கால மற்றும் நீண்ட கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஆற்றுப்படுத்துதல்.
    - தேசிய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள் வழங்குதல்.

3. **நஷ்டயீடுகள் மற்றும் பிரதிபலன்கள் தொடர்பான நடவடிக்கைகள்**
    - பதவியுயர்வுகள் மற்றும் சம்பள உயர்வுகளை வழங்குதல்.
    - சம்பள மறுசீரமைப்பு நடவடிக்கைகள் (தேசிய சம்பளம் மற்றும் ஊழியர்களிக் எண்ணிக்கைகள் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கு அமைய)
    - பணிக்கொடைக் கொடுப்பனவு பிரதிபலன்களை விடுவித்தல்.
    - ஊழியர் சேமலாப நிதி/ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி ஆகியவற்றை விடுவிப்பது தொடர்பான நடவடிக்கைகள்.

4. **ஊழியர் செயலாற்றுகை முகாமைத்துவம்.**
    - பெயர்வழிக் கோவைகளைத் தாபரித்தல்
    - செயலாற்றுகை மதிப்பீடு.
    - பதவியணியைக் மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல்.
    - ஓய்வு செல்லல்.
    - சேவையை நிறைவு செய்தல்.
    - இடமாற்றங்கள்.
    - ஒழுக்காற்று நடவடிக்கைகள் (தாபன விதிக்கோவை மற்றும் ஒழுக்காற்று செயல்முறைகளுக்கு அமைய)

5. **முகாமைத்துவத் தொடர்புகள் மற்றும் ஊழியர் தொடர்புகள்**
    - ஊழியர் சேமலாப நிதியம்/ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகியவற்றிற்கு அங்கத்தவர்களைப் பதிவு செய்தல்.
    - இலங்கை மகாவலி அதிகார சபைக்காக சட்ட நடவடிக்கைகளுக்காக ஆஜராகுதல்.
    - ஒருங்கிணைப்பு (பல்வேறு பிரிவுகள், வலயங்கள் மற்றும் வெளியாட்களுக்கு இடையில்)
    - மக்கள் தொடர்பு
    - உத்தியோகபூர்வ விழாக்கள் தொடர்பான நடவடிக்கைகள்.
    - நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆலோசனை செயற்குழுவின் நடவடிக்கைகள்
    - பொது மனுக் குழுவின் நடவடிக்கைகள்
    - பாராளுமன்ற வாய்மொழி மூல கேள்விகளுக்கு விடையளித்தல் மற்றும் ஏனைய பிரிவுகளை ஒருங்கிணைத்தல்.

**ஆளணி மற்றும் நிர்வாக பிரிவின் 2020 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றம்**

1. சகல பிரிவுகளின் ஊழியர் வெற்றிடங்களை இனங்காணுதல் மற்றும் வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்களைக் கோருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
2. இலங்கை மகாவலி அதிகார சபையின் சகல பிரிவுகளிலும் வருடாந்த இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்துதல்.
3. சகல பிரிவுகளினதும் பயிற்சித் தேவைப்பாடுகளை இனங்காணுதல் மற்றும் அதற்குரிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

**ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல் 2020.12.31 ஆம் திகதிக்கு**

| சேவை வகுதி | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | நிரந்தரப்படுத்தப்பட்டு உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை | வழிமொழியப்பட்ட/ ஒப்பந்த/ பயிற்சியற்ற | மொத்த ஊழியர்களின் எண்ணிக்க |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை (HM 2-3, HM 1-3, HM 1-1) | 34 | 16 | 3 | 19 |
| மூன்றாம் நிலை (MM 1-1) | 441 | 344 | 2 | 346 |
| மூன்றாம் நிலை (JM 1-1) | 367 | 293 | 2 | 295 |
| இரண்டாம் நிலை (MA 3, MA 2-2, MA 1-2) | 1873 | 1604 | - | 1604 |
| ஆரம்ப நிலை (PL 3, PL 2, PL 1) | 2144 | 2013 | 3 | 2016 |
| **கூட்டுத் தொகை** | **4859** | **4270** | **10** | **4280** |

**2020 ஆம் ஆண்டிற்கான நியமனங்கள்**

**உள்ளக பதவியுயர்வுகள்**

| தொடர் இலக்கம் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பணிப்பாளர் (மகாவலி கேந்திர மையம்) – ஒப்பந்தம் | 01 |
| 02 | உதவிப் பணிப்பாளர் (விவசாயம்) | 03 |
| 03 | உதவிப் பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள்) | 02 |
| 04 | பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (விவசாயம்) | 02 |
| 05 | காணி உத்தியோகத்தர் | 06 |
| **மொத்தம்** | | |

**<u>2020 ஆம் ஆண்டின் பயிற்சிகள்</u>**

| தொடர் இலக்கம் | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | செலவு (ரூ.) |
|---|---|---|---|
| 01 | சம்பள பரிவர்த்தனை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 02 | 17,000.00 |
| 02 | கான்கிரீட் ஒடுக்கு வலுவூட்டல் பற்றிய கருத்தரங்கு | 14 | 56,000.00 |
| 03 | அரச சொத்துக்களின் சேதங்கள், நஷ்டங்கள், காணாமல் போதல் மற்றும் விபத்துக்கள் தொடர்பான நடைமுறைகள் மற்றும் அது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 12 | 72,000.00 |
| | **மொத்தம்** | **28** | **145,000.00** |

## 4.2 சட்டப் பிரிவு

இலங்கை மகாவலி அதிகார சபையின் சட்டப் பிரிவானது பிரதான அலுவலகத்தின் 08 ஆம் மாடியில் அமைக்கப்பட்டு உள்ளதுடன், அதன் தலைவராக பிரதிப் பணிப்பாளர் (சட்டம்) கடமையாற்றுகின்றார்.

**<u>நோக்கு</u>**

மகாவலி குடியேற்றவாசிகளின் வாழ்வை மேம்படுத்துவதற்காக மற்றும் ஒட்டு மொத்த மகாவலி அதிகார சபையில் ஏற்படுகின்ற சட்ட ரீதியான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கும் உயர்ந்தபட்ச பங்களிப்பை வழங்குதல்.

**<u>இலக்கு</u>**

உயர்ந்தபட்ச வினைத்திறனுடன் மற்றும் குறைந்த செலவில் சட்ட ரீதியான பிரச்சினைகளை குறைப்பதற்காக மற்றும் அதிகார சபையின் வருமான தோற்றுவிப்பிற்காக பங்களிப்பு வழங்குதல்.

**<u>சட்டப் பிரிவின் வகிபாகங்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்ற விடயத் துறைகள்.</u>**

- ❖ ஊழியர்களின் சட்ட ரீதியான பிரச்சினைகள் தொடர்பாக தொழில் திணைக்களத்தின், கைத்தொழில் விசாரணை மன்று, ஊழியர் நியாய சபையில் இருந்து உச்ச நீதிமன்றம் வரை உரிய நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.
- ❖ நிறுவனத்திற்கு உரிய சகல சட்ட நடவடிக்கைகளிலும் திணைக்களத்தின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் உரிய நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- ❖ ஒப்பந்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபைக்காக கையொப்பம் இடுகின்ற ஏனைய ஒப்பந்தங்களை சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்கு இணங்கியதாக தயாரித்தல், கையொப்பம் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் எதிர்வரும் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- ❖ இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் தரப்பினர்களுக்கு இடையில் காணப்படுகின்ற ஒப்பந்தங்கள், உடன்பாட்டு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான முரண்பாடுகளின் போது அதற்குரிய மத்தியஸ்த நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும்/ அல்லது அதற்குரியதாக வழக்குத் தாக்கல் செய்தல்.

- ❖ இலங்கை மகாவலி அதிகார சபையின் காணிகள், சொத்துக்கள் தொடர்பாக சட்ட ரீதியான பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது செயற்படுதல் மற்றும் பின் தொடர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- ❖ தொழில்நுட்ப முரண்பாடுகள்,, மத்தியஸ்தம், ஊழியர் நியாய சபை மற்றும் ஏனைய நீதிமன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.
- ❖ வரி செலுத்துவதைப் புறக்கணித்தல், சட்ட விரோதமானவற்றை அகற்றுதல் போன்ற காணிகளின் கடமைகளின் போது அவசியமான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.
- ❖ பிரிவிற்குரிய அறிக்கைகளைத் தயாரித்தல்.
- ❖ இலங்கை மகாவலி அதிகார சபைக்குரிய சகல பிரிவுகளிலும் எழுகின்ற சட்ட ரீதியான பிரச்சினைகளுக்காக ஆலோசனைகளை வழங்குதல்.
- ❖ வாகன விபத்து வழக்குகள்.
- ❖ சிறிய அளவிலான மின் உற்பத்திச் செயற்திட்டங்களுக்கு அவசியமான உரிய ஆலோசனைகளை வழங்குதல்.
- ❖ இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான நிறுவனங்கள் தொடர்பாக செயற்படுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
- ❖ சட்டப் பிரச்சினைகளுக்குரிய பணிப்பாளர் குழாமின் சிற்றிதழ் மற்றும் அமைச்சரவை சிற்றிதழ்களைத் தயாரித்தல்.

**<u>2020 ஆம் ஆண்டில் வைக்கப்பட்ட இலக்குகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றம்.</u>**

**வரி நிலுவை அறவிடுவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்.**

- ❖ அறிவித்தல்களை அனுப்புதல்.
- ❖ விளக்கக் கோரிக்கைக் கடிதம் அனுப்புதல்.
- ❖ அரச காணிகள் (உடைமையை மீளப் பெறுதல்) சட்டத்தின் கீழ் அகற்றல் அறிவிப்புக்களை அனுப்புதல்.
- ❖ பெறுமதி ரூ. 500,000/= ஐ விட குறைவு எனில் அப்பிரச்சினையை மத்தியஸ்தர் சபைக்கு ஆற்றுப்படுத்துதல்.
- ❖ வழக்குத் தாக்கல் செய்தல்.
- ❖ எதிர்வரும் ஆண்டிற்காக தற்பொழுது பணிகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

**<u>2020 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட விசேட பணிகள் மற்றும் அதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு ஆற்றப்பட்ட பங்களிப்பு</u>**

- ❖ இலங்கை மகாவலி அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை வரி மற்றும் ஏனைய புறக்கணிக்கப்பட்ட தொகையை அறவிட்டுக் கொடுத்தல்.
- ❖ ஏதேனும் ஊழியர் பிரச்சினைகள், காணிப் பிரச்சினைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்காக நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் மத்தியஸ்தம் மேற்கொள்ளுதல்.
- ❖ பல்வேறு தரப்பினர்களால் அரசாங்கத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளில் நியாயத்தை நிலை நாட்டுவதற்கு அவசியமான உதவிகளை வழங்குதல், அரசாங்கத்தின் நற்பெயரைப் பாதுகாப்பதற்கு அவசியமான உதவிகளை வழங்குதல்.
- ❖ ஏதேனும் மோசடிகளில் ஈடுபட்ட மகாவலி உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு பங்களிப்பை வழங்குவதன் மூலம் நேர்மையான மகாவலி உத்தியோகத்தர்களை உருவாக்குவதன் மூலம் விளைத்திறன் மிக்க வினைத்திறனுடன் கூடிய சேவையை வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல். அதன் மூலம் அரசாங்கத்தால் ஏற்க வேண்டி ஏற்படுகின்ற செலவுகளைக் குறைத்தல் மற்றும்

அதற்காக செலவாகின்ற அரச உத்தியோகத்தர்களின் நேரம் மற்றும் உழைப்பை விளைத்திறனான பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க முடியுமானதாக இருத்தல்.

- சட்ட ரீதியான பிரச்சினைகளில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் தொழில் ரீதியான உதவி மற்றும் ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் மிகவும் சட்ட ரீதியான வழிகாட்டலை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு வழங்குவதன் மூலம் நிலைபெறுதகு மகாவலியின் எதிர்வரும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் மகாவலியின் ஊழியர்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் தொழில் முன்னேற்றத்தைக் கவனத்தில் கொள்ள முடியுமாகின்றமையால் தேசிய பொருளாதாரத்திற்கு அச்சிறந்த பெறுபேறை வழங்குவதற்கு முடியுமானதாக இருத்தல்.

## 4.3 நிதிப் பிரிவு

நிறுவனத்தின் கூட்டுத்தாபன மற்றும் வருடாந்த திட்டங்களின் பிரகாரம் மதிப்பீடுகளைத் தயாரித்தல், தேசிய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல், மாதாந்த நிதித் தேவைகளை முன்னறிவித்தல் மற்றும் திறைசேரியிடமிருந்து நிதிகளைப் பெறுதல், தேசிய மற்றும் வெளிநாட்டுத் திட்டங்களுக்கான வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்தல், ஊழியர் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், பௌதிக சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல், கணக்காய்வு வினவல்களுக்கு தகவல்களை வழங்குதல் மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய பாராளுமன்றக் குழுவிற்கு தகவல்கள் வழங்குதல் இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அடிப்படை வகிபாகம் ஆகும்.

**நிதிசார் ஒதுக்கீடுகள் மற்றும் செவினங்கள் தொடர்பான விபரங்கள்.**

| | **மூலதன மூலம்** | **ஒதுக்கீடு (Rs.'000)** | **செலவினம்(Rs.'000)** |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | | 1,810,000 | 1,810,000 |
| மூலதனச் செலவினம் | | 720,000 | 720,000 |
| **மகாவலி செயற்திட்டங்கள்** | | | |
| )MCP 'B') மகாவலி ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் "பி" | உள்நாட்டு | 91,000 | 91,000 |
| மாதுறு ஓயா வலது கரை | உள்நாட்டு | 8,448 | 8,448 |
| ரிதீமாலியத்த அபிவிருத்திச் செயற்திட்டம் | உள்நாட்டு | 25,710 | 25,710 |
| ரம்பகன் ஓயா செயற்திட்டம் | உள்நாட்டு | 38,714 | 38,714 |
| வெலி ஓயா ஒருங்கிணைப்புச் செயற்திட்டம் | உள்நாட்டு | 85,161 | 85,161 |
| பிரதான மற்றும் மத்திய நீர்ப்பாசன முறைமையின் மறுசீரமைப்பு | உள்நாட்டு | 112,977 | 112,977 |
| விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்திச் செயற்திட்டம் | உள்நாட்டு | 43,243 | 43,243 |
| **மொத்தம்** | | **1,125,253** | **1,125,253** |

**ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்**

| | | | | | | ரூபாய். '000 |
|---|---|---|---|---|---|---|
| விளக்கம் | 01.01.2020 ஆம் திகதிக்கு செலவினம் | கொள்வனவுகள் | விற்பனைகள், அகற்றல்கள், கைமாற்றல்கள் | 31.12.2020 ஆம் திகதிக்கு செலவினம் | பெறுமானத் தேய்வு | பெறுமானத் தேய்வை கழித்த பின்னர் 31.12.2020 |
| காணிகள் | 296,000 | - | - | 296,000 | - | 296,000 |
| கட்டிடங்கள் மற்றும் அலுவலகங்கள் | 2,212,295 | 624,982 | 4,063 | 2,833,214 | 600,586 | 2,232,628 |
| கட்டிடங்கள் – ஏனையவை | 2,913,241 | 268,453 | 7,675 | 3,174,019 | 1,707,695 | 1,466,324 |
| பிரதான கால்வாய்கள் | 17,941,130 | - | - | 17,941,130 | - | 17,941,130 |
| கிளைக் கால்வாய்கள் | 8,823,180 | - | - | 8,823,180 | - | 8,823,180 |
| பிரிப்புக் கால்வாய்கள் | 19,219,000 | - | - | 19,219,000 | - | 19,219,000 |
| களக் கால்வாய்கள் | 29,005,830 | - | - | 29,005,830 | - | 29,005,830 |
| வாகனங்கள் | 1,148,361 | 564,524 | 287,405 | 1,425,479 | 454,677 | 970,802 |
| அலுவலக உபகரணங்கள் மற்றும் நலன்புரிப் பொருட்கள் | 159,059 | 11,630 | 2,453 | 168,235 | 96,036 | 72,200 |
| மின்பிறப்பாக்கிகள் | 33,143 | 6,535,703 | - | 6,568,847 | 20,169 | 6,548,677 |
| இயந்திராதிகளும் உபகரணங்களும் - வேலைத்தல பணிகள் | 20,139 | 1,333 | 252 | 21,220 | 12,112 | 9,108 |
| இயந்திராதிகளும் உபகரணங்களும் – கட்டுமானங்கள் | 489,968 | 4,844 | 372 | 494,440 | 323,573 | 170,867 |
| இயந்திராதிகளும் உபகரணங்களும் – பொதுவானவை | 179,967 | 45,723 | 1,137 | 224,553 | 91,026 | 133,527 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 297,038 | 24,584 | 4,502 | 317,120 | 62,671 | 254,449 |
| கணினிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் | 204,939 | 145,434 | 199,884 | 150,490 | 29,776 | 120,714 |
| புத்தகங்கள் மற்றும் கையேடுகள் | 5,201 | 105 | - | 5,306 | 94 | 5,212 |
| அணைகள் | - | 31,764,287 | - | 31,764,287 | - | 31,764,287 |
| **மொத்தம்** | **82,948,491** | **39,991,602** | **507,743** | **122,432,350** | **3,398,415** | **119,033,935** |

# 4.4 மகாவலி பாதுகாப்புப் படையணி

## அறிமுகம் –

மகாவலி பாதுகாப்புப் படையானது இலங்கை மகாவலி அதிகார சபையின் பிரதான கட்டுமானங்கள், விருத்தியிலி கட்டிடத் தொகுதி மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதைப் பிரதானமாகக் கொண்டும் மகாவலி உத்தியோகத்தர்கள் மற்றும் பதவியணி / குடியேற்றவாசிகளை பாதுகாப்பதற்காகவும் 1985 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க மகாவலி அதிகார சபை சட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட பாதுகாப்புப் பதவிகள் 10 ஐ உள்ளடக்கிய மகாவலி பாதுகாப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

இந்த கால கட்டத்தில் மகாவலி பொருளாதார முகவர் நிலையம் மற்றும் மகாவலி பொறியியல் மற்றும் வடிவமைப்பு முகவர் நிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அந்த நிறுவனத்தின் மூலம் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சிலர் மூலமாக நிறைவேற்றப்பட்டதுடன், அவ்வெண்ணிக்கை அளவில் மிகவும் சிறிய அளவாகவே காணப்பட்டது. இலங்கை மகாவலி அதிகார சபையின் பாதுகாப்பு நடவடிக்கைகளை பன்முகப்படுத்தும் நோக்குடன் மற்றும் உரிய முறையில் நிர்வாகம் மற்றும் இயக்கற் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மகாவலி அதிகார சபையின் ஆலோசனைக்கு அமைய மகாவலி பொருளாதார முகவர் நிலையம் மற்றும் மகாவலி  மகாவலி பொறியியல் மற்றும் வடிவமைப்பு முகவர் நிலையம் ஆகியவற்றில் சேவையாற்றிய பாதுகாப்புப் பதவிகள் 1989 ஆம் ஆண்டில் மகாவலி பாதுகாப்புப் படையணிக்கு உள்ளடக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டின் ஜூன் மாதம் 15 ஆம் திகதி இப்படையணி நிறுவப்பட்ட காலப்பகுதியில் நிறுவனத் தலைவர் பதவியாக பணிப்பாளர் பதவி காணப்படாததுடன் இலங்கை இராணுவப் படையில் அதிகாரம் பெற்ற பதவி ஒன்றை துணை நிலை அடிப்படையில் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளராக இப்பாதுகாப்பு அமைப்பு இயக்கப்பட்டது. அதற்கமைய முதலாவது பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளராக லெப்டினன் கேர்ணல் திரு. என்.பீ. பெர்ணாண்டோ அவர்களுக்கு 1985 ஜூன் மாதம் 15 ஆம் திகதியில் இருந்து 1988 ஆம் ஆண்டு வரை இந்நிறுவனத்தின் தலைமைப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளராக 1988 ஆம் ஆண்டில் இருந்து 1989 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை கேர்ணல் திரு. பி. மஹிபால அவர்கள் கடமையாற்றி உள்ளதுடன் 1989 ஆம் ஆண்டின் பின்னர் இந்நிறுவனத்தின் செயற்பரப்பு விரிவடைந்த காரணத்தால் மற்றும் இந்நிறுவனம் பயன்படுத்துகின்ற ஆயுதங்கள் போன்றவற்றைப் போலவே அப்பொழுது பிரதானமாக பாதுகாப்பு வழங்கிய விக்டோரியா, ரன்தெணிகல, மாதுறு ஓயா, கொத்மலை, பொல்கொல்ல, போவதென்ன, போன்ற மட்டுப்படுத்தப்பட்ட எனினும் மிகவும் உணர்வு பூர்வமான பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த புள்ளிகளின் பாதுகாப்பு தொடர்பாக நேரடி பொறுப்பு மற்றும் கடமை தொடர்பாக கவனத்தில் கொண்டு 1990 ஆம் ஆண்டு பணிப்பாளர் (பாதுகாப்பு) பதவி நிறுவப்பட்டது.

அதற்கமைய மகாவலி பாதுகாப்பு அமைப்பின் முதலாவது பணிப்பாளராக (பாதுகாப்பு) மேஜர் திரு. திலக் ரத்னசேகர அவர்கள் கடமையாற்றினார்.

அவ்வாறே ஆரம்ப கால கட்டத்தை விட 1990 ஆம் தசாப்தத்தின் இறுதி நடுப்பகுதியாகும் போது இலங்கை மகாவலி அதிகார சபையின் பாதுகாப்புத் தேவைகளை பாரிய அளவில் விரிவடைந்தமையால் அதுவரையில் காணப்பட்ட மகாவலி பாதுகாப்பு அமைப்பானது புது கௌரவப் பெயருடன் **மகாவலி பாதுகாப்பு படையணி** என திருத்தியமைக்கப்பட்டது.

எவ்வாறாயினும், 2011 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளும் செயல்முறைகளின் திருத்தத்தில் இந்நிறுவனத்தில் அதுவரை காணப்பட்ட பணிப்பாளர் (பாதுகாப்பு) பதவியை இரத்துச் செய்து அதற்குப் பதிலாக உதவிப் பணிப்பாளர் (பாதுகாப்பு) பதவியை நிறுவி அப்பொழுது பணிப்பாளர் (பாதுகாப்பு) பதவியில் கடமையாற்றிக் கொண்டிருந்த பணிப்பாளர் அவர்கள்

அவருடைய பதவிக்கு தனிப்பட்ட ரீதியாக வைத்துக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தற்பொழுது மகாவலி பாதுகாப்பு படையணிக்கு தலைமை வகிக்கப்படுவது உதவிப் பணிப்பாளர் (பாதுகாப்பு) அவர்களால் ஆகும்.

அவ்வாறே, இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மற்றும் ஆரம்பிக்கப்பட்ட மொரகஹகந்த, களு கங்கை ஆகிய மாபெரும் நீர்த்தேக்கங்களின் பாதுகாப்புப் பொறுப்பைப் போலவே ரம்பகண் ஓயா, ஈ வலயம், மாதுறு ஓயா வலது கரை, மயுரபுற காட்டு யானை முகாமைத்துவ ஒதுக்கு போன்ற இடங்களினதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்பொழுது இப்படையணி மூலம் நிறைவேற்றப்படுகின்றது. விசேடமாக தற்பொழுது நாட்டில் நிலவுகின்ற நிலைமைக்கு அமைய ஆரம்ப கால கட்டத்தில் காணப்பட்ட வகிபாகங்களை விட பாதுகாப்பு செயற்பரப்பு விரிவடைந்தமையால் அதிவிசேட பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த புள்ளிகள் தொடர்பான பொறுப்புகள் இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளதுடன் அதற்கமைய **விக்டோரியா, கொத்மலை, ரன்தெணிகல, பொல்கொல்ல, ரன்தம்பே, மாதுறு ஓயா, மொரகஹகந்த, களு கங்கை, போவதென்ன, உடவலவ உட்பட மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான பிரதான நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன முறைமை கட்டிடங்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்தல், காணிகள் மற்றும் வனப் பாதுகாப்பு நடவடிக்கைகள், அலுவலகம், வேலைத் தளங்கள், பண்ணைகள் மற்றும் வியாபார நிலையங்களைப் பாதுகாத்தல், சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுத்தல், ஊழல் பெற்றுக் கொள்ளுதல் போன்ற சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துதல், பாதுகாப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல், புலனாய்வுத் தகவல்களைத் திரட்டுதல். விசேட பாதுகாப்பு செயற்பாடுகளை திட்டமிடுதல், மகாவலி அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்பளித்தல், மகாவலி அதிகார சபையின் பொதுத் தேவைகளுக்காக பாதுகாப்புதவி வழங்குதல், முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு உதவி வழங்குதல் போன்ற பொறுப்புக்களுடன் கூடிய வகிபாகங்கள் தற்பொழுது இப்படையணிக்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளது.**

**பிரதான குறிக்கோள்கள் –**

- மகாவலி அபிவிருத்தியின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற பிரதான நீர்த்தேக்கங்கள், கால்வாய் அணைகள் மற்றும் கட்டிடங்கள் உட்பட 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், பதவியணி மற்றும் ஒப்பந்தக்காரர்களினால் ஒப்படைக்கப்படுகின்ற செயற்திட்டங்கள் மற்றும் சொத்துக்களுக்கு பாதுகாப்பு வழங்குதல்.
- மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அனைத்து அலுவலக கட்டிடத் தொகுதிகள், கட்டிடங்கள், களஞ்சிய வளாகங்கள் போன்றவற்றிற்கு அவசியமான பாதுகாப்பை வழங்குளுதல்.
- மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான பதவியணி மற்றும் குடியேற்றவாசிகளுக்கு அவசியமான பாதுகாப்பை வழங்குதல்.

## ஏனைய கடமைகள் மற்றும் வகிபாகங்கள்.

- கௌரவ மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்திப் பிரதி அமைச்சர்கள் உட்பட மகாவலி அபிவிருத்தி அமைச்சின், இலங்கை மகாவலி அதிகார சபையின் முக்கிய பிரமுகர்களுக்கான உபசாரம் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புக் கடமைகளை மகாவலி விளையாட்டு மற்றும் ஏனைய விசேட விழாக்களுக்காக அவசியமான உபசாரங்கள் மற்றும் பாதுகாப்புக் கடமைகளை நிறைவேற்றுதல்.
- இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக இராணுவ வீரர்கள் மற்றும் காவல் துறையுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல்.

- இலங்கை மகாவலி அதிகார சபை வசமுள்ள பணம் மற்றும் பெறுமதியான சொத்துக்களுக்கு போக்குவரத்தின் போது பாதுகாப்பளித்தல்.
- மகாவலி பாதுகாப்புப் படையணிக்கு மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு அவசியமான புலனாய்வுத் தகவல்களை வழங்குதல்.

- மகாவலி நிறுவனங்களின் பிரதான உத்தியோகத்தர்களுக்கு மற்றும் செயற்திட்டப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் பணியாற்றுகின்ற நிறுவனங்களின் காவலாளிகளின் கடமைகளைக் கண்காணிப்பதன் மூலம் ஒத்துழைப்பு வழங்குதல்.
- மகாவலி அதிகார சபையில் மற்றும் அதற்குச் சொந்தமான நிறுவனங்களில் திருட்டுக்கள், தவறான பயன்பாடுகள் மற்றும் மோசடிகளை தடுப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவ்வாறு நடந்து கொள்கின்ற நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.
- மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் மகாவலி பிரதேசங்களில் சட்ட விரோதமாக குடியேறுதல், சட்ட விரோத கட்டுமானங்கள் மற்றும் சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுத்தல்.
- மகாவலி அதிகார சபையின் வசமுள்ள வெடி பொருட்கள், ஆயுதங்கள், வெடி மருந்துகள் ஆகிய பொருட்களை வைத்துக் கொள்ளுதல், பாதுகாத்தல், விநியோகித்தல் மற்றும் கணக்கிடுதல்.
- மகாவலி அதிகார சபைக்கு மற்றும் அதற்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு பாதுகாப்பு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
- மகாவலி அதிகார சபை, பதவியணிகளுக்கு மற்றும் குடியேற்றவாசிகளுக்கு அவசியமான விதத்தில் பாதுகாப்புப் பயிற்சிகளை நடாத்துதல்.

மகாவலி பாதுகாப்புப் படையணியின் பிரதான வகிபாகங்கள் மேற்குறிப்பிட்ட விதத்தில் அமைவதுடன், அது அரசாங்கத்தின் நீர்ப்பாசன அமைச்சின் மகாவலி வலயங்களை அண்டிய கால்வாய் அணைகள் மற்றும் குடியேற்றங்களின் பாது உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் இராஜாங்க அமைச்சின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபையின் பொதுக் கொள்கைகளை அமுல்படுத்தும் போது மற்றும் அதனுடன் ஒன்றிய சொத்துக்கள் மற்றும் நபர்களை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். இதில் வகிபாகங்களை அமுல்படுத்தும் போது மகாவலி பாதுகாப்புப் படையணிக்கு ஆணைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்காக உதவிப் பணிப்பாளர் ஒருவரும், அதன் கீழ் இயக்கற் பிரிவும், களங்களில் அவ்வாணைகள் மற்றும் ஆலோசனைகளை அமுல்படுத்துவதற்காக அதிகார பிரதேசங்கள் 10 உம், அவசியமான விதத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் காவல் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பாரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான 42 அணிவகுப்புக்களும் நிறுவப்பட்டுள்ளன. அவ்வாறே, சகல பதவிகளினதும் நிர்வாகம் மற்றும் சம்பளம் வழங்குதல் ஆகிய கணக்குசார் நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக 50 பேரை உள்ளடக்கிய சிவில் பதவியணி ஒன்றும் நிறுவப்பட்டுள்ளதுடன் திகனையில் அமைந்துள்ள தலைமையகம் மூலம் அதன் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன. அதற்கமைய 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதமாகும் போது எமது படையணியில் முழுமையான பாதுகாப்பு பதவியணியின் எண்ணிக்கை 620 ஆகும்.

அப்பாதுகாப்புக் கடமைகளை நிறைவேற்றுகின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் காவல் உத்தியோகத்தர்/ உத்தியோகத்தர்கள் மிகவும் அடக்கமான முறையில் கடமைகளில் ஈடுபடுவதற்காக அவசியமான நிலையியற் கட்டளைகள் மற்றும் ஆலோசனைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மகாவலி பாதுகாப்புப் படையணியானது அரசாங்கத்தின் ஏனைய சிவில் பாதுகாப்பு நிறுவனங்களை விட மிகச் சிறந்த தேர்ச்சிகளுடன், ஆயுதம் ஏந்தியதாக அமைக்கப்பட்ட முறையான பாதுகாப்புப் பிரிவாகும்.

# 4.5 மகாவலி கேந்திர மையம்

**அறிமுகம்**

மகாவலி கேந்திர மையமானது 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க மகாவலி அதிகார சபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பிரிவாகும்.

இப்பிரிவானது பிரித்தானிய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் அப்போதைய பிரித்தானிய பிரதமர் மாக்கிரட் தெசர் அவர்களால் காணி மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ காமிணி திஸாநாயக்க அவர்களின் தலைமையில் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

மகாவலி கேந்திர மையத்தின் மூலம் ஆரம்பத்தில் இருந்து தற்பொழுது வரை மகாவலி குடியேற்றவாசிகளின் ஆன்மீக, கலாச்சார, ஒழுக்கம்சார் மற்றும் கல்விப் பிரிவுகளை மெருகூட்டி பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தி பாரிய வகிபாகத்தை நிறைவேற்றி உள்ளது.

இப்பிரிவானது ஆரம்பத்தில் அதிகளவான கலைஞர்கள் பலர் சேவையாற்றிய கலாச்சார மத்திய நிலையமாக காணப்பட்டது.

வருடாந்த பணித் திட்டமிடலுக்கு அமைய மகாவலி மையத்தின் வகிபாகங்களானது பிரதான 07 பிரிவுகளின் ஊடாக நிறைவேற்றப்படுகின்றது. கலாச்சாரப் பிரிவின் மூலம் மகாவலி குடியேற்றவாசிகளின் பிள்ளைகளின் அழகியல் மற்றும் கலாச்சார கலைத் திறமைகளை வெளிக் கொண்டுவந்து தேசிய மற்றும் சர்வதேச தரத்திற்குக் கொண்டு செல்வதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

<u>**மகாவலி கேந்திர மையத்தில் நிறுவப்பட்டுள்ள பிரிவுகள்.**</u>

1. நிர்வாகப் பிரிவு
2. கணக்குப் பிரிவு
3. கலாச்சாரப் பிரிவு
4. விளையாட்டுப் பிரிவு
5. தொழில்நுட்ப பிரிவு
6. வெளியீட்டுப் பிரிவு
7. செவிப்புல கட்புலப் பிரிவு
8. நீர்ப்பாசன நூதனசாலை

**2020 ஆம் ஆண்டிற்காக மகாவலி கேந்திர மையத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகை 9,430,000 மில்லியன் ரூபாய் ஆகும்.**

## <u>நிர்வாகப் பிரிவு</u>

இப்பிரிவின் மூலம் அலுவலகத்தின் பணிப்பாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற அனைத்து நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் அலுவலக முறைமைகள் அமுல்படுத்தப்படுகின்றன.

இப்பிரிவின் கண்காணிப்பு உத்தியோகத்தராக நிர்வாக உத்தியோகத்தர் கடையாற்றுகின்றார்.

- 2020 ஆம் ஆண்டில் மகாவலி கேந்திர மையத்திற்கு இணைக்கப்பட்டு இருந்த பதவியணி 27 ஆகும்.
- 2020 ஆம் ஆண்டில் பிரதான அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றவர்களின் எண்ணிக்கை 06 ஆகும்.
- 2020 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றவர்களின் எண்ணிக்கை 01 ஆகும்.

**ஊழியர்களின் எண்ணிக்கை விபரம்**

| தொடர் இலக்கம் | சேவை வகுப்பு | சேவை வகுப்பு | காணப்படுகின்ற எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | **HM 1-1** | பணிப்பாளர் – மகாவலி கேந்திர மையம் | 01 |
| 02 | **MM I-I** | பிரதிப் பணிப்பாளர் (விளையாட்டு) | 01 |
| 03 | **MM I-I** | உதவிப் பணிப்பாளர் (மகாவலி கேந்திர மையம்)<br>(விளையாட்டு உத்தியோகத்தரால் பதில் கடமை முன்னெடுக்கப்படுகின்றது) | **வெற்றிடம்** |
| 04 | **JM 1-1** | நிர்வாக உத்தியோகத்தர் | 01 |
| 05 | **JM 1-1** | கணக்கு உத்தியோகத்தர் | 01 |
| 06 | **JM 1-1** | மக்கள் தொடர்பு அலுவலர் | 01 |
| 07 | **JM 1-1** | சிரேஷ்ட செவிப்புல கட்புல உத்தியோகத்தர் | 01 |
| 08 | **JM 1-1** | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01 |
| 09 | **JM 1-1** | விளையாட்டு உத்தியோகத்தர் | 01 |
| 10 | **JM 1-1** | தாபன அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| 11 | **JM 1-1** | பிரச்சார உத்தியோகத்தர் | 01 |
| 12 | **MA 3** | அபிவிருத்தி உதவியாளர் | 02 |
| 13 | **MA-2-2** | கணக்கு உதவியாளர் | 02 |
| 14 | **MA-2-2** | தொழில்நுட்ப உதவியாளர் | 01 |
| 15 | **MA-1-2** | முகாமைத்துவ உதவியாளர் | 05 |
| 16 | **MA-1-2** | வெளிக்கள உதவியாளர் | 01 |
| 17 | **PL-1** | உதவி செவிப்புல கட்புல தொழில்நுட்பவியலாளர் | 01 |
| 18 | **PL-1** | மின் தொழில்நுட்பவியலாளர் | **வெற்றிடம்** |
| 19 | **PL-1** | சாரதி | 01 |
| 20 | **PL-1** | அலுவலக உதவியாளர் | 03 |
| 21 | **PL-1** | நீர்ப்பாசன ஊழியர் | 01 |

## கணக்குப் பிரிவு

இப்பிரிவின் மூலம் மகாவலி கேந்திர மையத்தின் அனைத்து நிதிசார் முகாமைத்துவம், விநியோகம் மற்றும் களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் கணக்கு நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.
மகாவலி கேந்திர மையத்தின் காமிணி திஸாநாயக்க கேட்போர் கூடத்தை வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினர்களுக்கு வழங்குதல் மற்றும் மகாவலி வெளியீட்டு விற்பனை மூலம் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு பாரிய வருமானம் ஈட்டப்படுகின்றது.

**2020 ஆம் ஆண்டின் வருமான தோற்றுவிப்பு**

| | |
|---|---|
| காமிணி திஸாநாயக்க கேட்போர் கூடத்தை வெளி நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் | - ரூ. 819,950.00 |
| வெளியீட்டு விற்பனை மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் | - ரூ. 65,900.00 |
| மொத்த வருமானம் | **- ரூ. 885,850.00** |

## கலாச்சாரப் பிரிவு

2020 ஆம் ஆண்டின் முன்மொழியப்பட்ட நிகழ்ச்சித்திட்ட திட்டம் – கலாச்சாரப் பிரிவு – ரூ. 6,620,000

1. மறு அவதார மகாவலி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அந்நிகழ்ச்சித் திட்டத்தின் கலாச்சார ரீதியான படைப்புக்களை முன்னெடுத்தல் மற்றும் சமர்ப்பித்தல்.
2. அரை நூற்றாண்டு மகாவலி கிரிகை மறு அவதார மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தை ஒட்டி நடாத்தப்பட்ட சித்திரப் போட்டி
3. மகாவலி அறிவிப்பாளர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – 2020
4. மகாவலி பாடல் நட்சத்திரம் நிகழ்ச்சித் திட்டம் – பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.

கலைத் திறமைகளுடன் கூடிய மகாவலி இளைஞர் தலைமுறையை, திறன்களைப் போலவே ஆன்மீக ரீதியாகவும் பரிபூரணமான கலை ரசனை மிக்க சமூகத்தை உருவாக்குவதற்காக படைப்புக்களின் புதுமையின் ஊடாக கலாச்சார புது உதயத்தின் மூலம் இலங்கையின் கலைத்துறையை வலுவூட்டி நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு கரம் வழங்கக் கூடிய நிலைபெறுதகு மகாவலி தலைமுறையை உருவாக்குவது இலங்கை மகாவலி அதிகார சபையின் அழகியலின் அடிப்படைத் தளமான மகாவலி கேந்திர மையத்தின் கலாச்சாரப் பிரிவு மற்றும் மகாவலி வலயங்களின் கலாச்சார நடவடிக்கைகளை பலமாக தொடர்ச்சியாக நிலைபெறுதன்மை மிகுந்ததாக புது விதத்தில் அமுல்படுத்துவதற்கு உள்ளது.

**இச்செயல்முறையின் முதலாம் கட்டமாக,**

- கலாச்சாரப் பிரிவின் இலக்குகள் மற்றும் அபிப்ராயங்களை நடைமுறை ரீதியாக, வெற்றிகரமாக மற்றும் மிகவும் விளைத்திறன் மிக்கதாக உற்றறிதல்.
- மகாவலி பிள்ளைகள், இளைஞர் சமூகம், உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மாத்திரம் அன்றி மகாவலி வலயங்களில் வாழ்கின்ற அனைத்து மக்களையும் மற்றும் குழுக்களையும் இலக்காக கொண்டதாக நிகழ்ச்சித் திட்டங்களை விரிவுபடுத்துதல்.
- அடி மட்டத்தில் இருந்து நிகழ்ச்சித் திட்டங்களுக்காக கலந்து கொள்ளுதல் மற்றும் அவதானத்தைப் பெற்றுக் கொள்ளுதல்.
- நிலவுகின்ற உள்நாட்டு அழகியற் கலைகளைப் போலவே மங்கி வருகின்ற உள்நாட்டுக் கலைகள், சம்பிரதாயங்கள், மரபுகளை இனங்கண்டு அக்கலைகளை மகாவலி சமூகத்தின் ஊடாக பாதுகாத்து எதிர்வரும் தலைமுறைக்கு கையளித்தல்.

- அமுல்படுத்தப்பட்டுள்ள அனைத்து நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமும் இலக்காக கொண்ட நபர்களுக்கு நிலைபெறுதகு தன்மை மற்றும் நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக பங்களிப்பு வழங்குதல்.

ஆகிய விடயங்களை அடிப்படையாக கொண்டு எதிர்வரும் காலத்தில் அமுல்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.

அதற்கமைய, இக்கலாச்சார நிகழ்ச்சித் திட்டங்களானது மகாவலி வலயங்கள் அனைத்தும் உள்ளடங்கும் விதமாக அமுல்படுத்தப்பட்டு நிறுவன ரீதியாக மீண்டும் வலுவான மற்றும் நிலைபெறுதகு மகாவலி கலாச்சார பிரிவொன்றை கட்டியெழுப்பும் மற்றும் மகாவலி மனிதனை உருவாக்கும் பெரு விளைவுகளை உண்டாக்கக் கூடிய வகிபாகத்தை நிறைவேற்றும் செயற்பாட்டிற்காக இலங்கை மகாவலி அதிகார சபையின் அழகியலின் அடிப்படைத் தளமான மகாவலி கேந்திர மையம் செயற்பட்டு வருகின்றது.

**<u>2020 ஆம் ஆண்டில் கலாச்சாரப் பிரிவினால் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்</u>**

| தொ. இ. | நிகழ்ச்சித் திட்டம் | இலக்கு மற்றும் அபிப்ராயங்கள் | நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படும் விதம் | இடம்பெற்ற இடம் | பங்கெடுப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | **மறு அவதார மகாவலி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அந்நிகழ்ச்சி திட்டத்தின் கலாச்சார ரீதியான படைப்புக்கள் மற்றும் சமர்ப்பித்தல்** | இலங்கை மகாவலி அதிகார சபையின் ஐம்பதாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட அங்குரார்ப்பண நிகழ்ச்சித் திட்டத்திற்காக மகாவலி பிள்ளைகளின் தேசிய தரத்திலான மேடைக்குக்குத் தகுந்த திறமைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்து மகாவலி அடையாளத்தை வெளிப்படுத்துதல். | மகாவலி செயலாற்றல் போட்டிகளில் வெற்றி பெற்ற மற்றும் அனைத்து மகாவலி வலயங்களையும் பிரதிநிதித்தும் செய்யும் விதமாக பிள்ளைகளை ஒன்றிணைத்து நடன மற்றும் இசை விடயத் துறையின் புலமையாளர்களை கொண்டு முன் பயிற்சி அமர்வுகள் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபையின் ஐம்பது ஆண்டு மரபுரிமையின் கலாச்சார பிரிவின் அடையாளத்தை வெளிக் கொண்டு வந்து கலாச்சார நிகழ்வுகள் 05 உருவாக்கப்பட்டு முன்வைக்கப்பட்டது | கொழும்பு மகாவலி கேந்திர மையத்தின் திறந்த வளாகம்<br><br>பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்<br><br>மகாவலி சி வலயம்<br><br>கிராந்துரு கோட்டை அபிவிருத்தி மத்திய நிலையம்<br><br>தெஹியத்தகண்டிய சாலிகா மண்டபம் | மகாவலி பி, சி, எச், டி, எல், ஜீ, ஹுருளு வாவி, விக்டோரியா, வலவ, ரம்பண் ஓயா வலயங்களைச் சேர்ந்த 100 பிள்ளைகள் |
| 02 | **அரை நூற்றாண்டு மகாவலி கிரிகை** | இலங்கை மகாவலி அதிகார சபையின் ஐம்பதாம் ஆண்டு நிறைவை | அனைத்து மகாவலி வலயங்களுக்கும் கருப்பொருள் மற்றும் அதற்குரிய சித்திர | கொழும்பு மகாவலி கேந்திர மையத்தின் திறந்த வளாகம் | மகாவலி பி, சி, எச், டி, எல், ஜீ, ஹுருளு வாவி, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **மறு அவதார மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தை ஒட்டி நடாத்தப்பட்ட சித்திரப் போட்டி** | முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பிரதான நிகழ்ச்சித் திட்டத்தை ஒட்டி நடாத்தப்பட்ட மகாவலி வலய பிள்ளைகளின் பங்கெடுப்பில் சித்திர ஆக்க கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. | ஆக்கத்திற்குரிய படைப்புக்களை முன்வைத்து ஒரு வலயத்தில் 20 சித்திரங்கள் வீதம் 200 சித்திர ஆக்கங்கள் காட்சிப் படுத்தப்பட்டன. | | விக்டோரியா, வலவ, ரம்பண் ஓயா வலயங்களைச் சேர்ந்த 100 பிள்ளைகள் |
| 03 | **மகாவலி அறிவிப்பாளர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்** | மகாவலி வலயங்களில் வாழ்கின்ற வானொலி கலை ஊடகம் மற்றும் அறிவிப்புக் கலைத் துறைக்கு மகாவலி பிள்ளைகளை ஆற்றுப்படுத்துவதி அவ்வாறான பிரிவுகளில் திறமையைக் காண்பிக்கின்ற நபர்களை இனங்காணுதல் மற்றும் அவர்களுக்கு உரிய விடயத் துறையின் அறிவு மற்றும் சரியான வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் மகாவலி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மகாவலி அறிவிப்பாளர்களை அறிமுகப்படுத்தல். | வானொலி கலை ஊடகம், நிகழ்ச்சித் திட்ட தயாரிப்பு மற்றும் அறிவிப்புக் கலை தொடர்பாக அனைத்து பிரிவுகள் தொடர்பாகவும் கோட்பாட்டு ரீதியான நடைமுறைப் பயிற்சி அமர்வுகளை நடாத்தி வதிவிட நிகழ்ச்சித் திட்டமாக மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்படுவதுடன் அனைத்து வலயங்களையும் உள்ளடக்கி தகுதிகளைப் பூரணப்படுத்துகின்ற விண்ணப்ப தாரிகளின் பங்கெடுப்புடன் 02 கட்டங்களின் கீழ் இந்நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்படுகின்றது. | மகாவலி சி வலயம்<br><br>கிராந்துரு கோட்டை அபிவிருத்தி மத்திய நிலையம் | **முதலாம் நிகழ்ச்சித் திட்டம்**<br><br>மகாவலி பி, சி, எச். டி, ரம்பகண் ஓயா வலய பிள்ளைகள் 35 சிரேஷ்ட ஊடகவியலாளர் திரு. சீலரத்ன செனரத் அவர்கள் உட்பட ஊடகத் துறையின் புலமையாளர்கள், புலமை பெற்ற ஒலிச் சேர்க்கை (டப்பிங்) கலைஞர்கள் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் உத்தியோகத்தர்கள் |
| 04 | **மகாவலி செயலாற்றல் பாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களை கொண்டு** | மகாவலி வலயங்களில் உள்ள மகாவலி விவசாய பிள்ளைகளின் கலைத் திறமைகளை இனங்கண்டு அம்மகாவலி | மகாவலி செயலாற்றல் கலாச்சாரப் போட்டிகளில் 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற பாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற | மகாவலி எச் வலயம் | மகாவலி சி, எச், எல் வலய வெற்றியாளர்கள்<br><br>மகாவலி உத்தியோகத்தர்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **பாடல் ஒன்றை தயாரித்தல்** | பிள்ளைகளை தேசிய கலைத் துறைக்கு அறிமுகப்படுத்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல். | வெற்றியாளர்களை இணைத்து செயற்படுத்தப்பட்டது. | | |
| 05 | **மகாவலி பாடல் நட்சத்திரம் நிகழ்ச்சித் திட்டம் – பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.** | மகாவலி விவசாயப் பிள்ளைகள் மாத்திரம் அன்றி மகாவலி பதவியணியினதும் உயர் இரசனைகள் மற்றும் கலைத் திறமைகளை விருத்தி செய்யும் நோக்குடன் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படும் | இலங்கை மகாவலி அதிகார சபையின் பிரதான அலுவலகம் மற்றும் அனைத்து மகாவலி வலய அலுவலகங்களிலும் உள்ள ஊழியர்களுக்கு மத்தியில் பாடும் திறமையுள்ள நபர்களிடம் விண்ணப்பம் கோரப்பட்டது. | மகாவலி கேந்திர மையம் | மகாவலி பிரதான அலுவலகம்<br><br>மகாவலி பி, சி, எச், டி, எல், வலவ, ஹுருளு வாவி, மொரகஹகந்த, விக்டோரியா, ரம்பண் ஓயா வலயங்கள் |

**மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் 50 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தை அழகூட்டிய மகாவலி வலய பிள்ளைகளின் திறமைகள்**





**2020 ஆம் ஆண்டு மகாவலி மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் 50 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட மகாவலி வலய பிள்ளைகளின் “ஐம்பது ஆண்டு மகாவலி அபிமானங்கள்” சித்திரக் காட்சி**





**அறிவிப்பாளர் பயிற்சிச் செயலமர்வு – 2020**







**மகாவலி செயலாற்றல் பாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களைக் கொண்டு பாடல் ஒன்றைத் தயாரித்தல்**







**2816 செலவினத் தலைப்பின் கீழ் அமுல்படுத்தப்பட்ட ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்**

- சுற்றாடல் படையணியை நிறுவுதல்.
- சுற்றாடல் படையணியின் மரம் நடும் நிகழ்ச்சித் திட்டம்.
- மகாவலி கேந்திர மைய வளாகத்தில் ஹெல போஜுன் விற்பனை நிலையத்தை ஆரம்பிப்பதற்காக ஏற்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
  (நாட்டில் நிலவிய கொரோனா தொற்று காரணமாக நாடு முடக்கப்பட்டமையால் இதனை முன்னெடுக்க முடியாது போனது)
- மகாவலி கேந்திர மையத்தில் மரக் கன்றுகளை நடும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் சுற்று வட்டாரத்தில் அமைந்துள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்களுக்காக சுமார் 2000 மரக் கன்றுகளை வழங்குதல்.

## விளையாட்டுப் பிரிவு

2020 ஆம் ஆண்டிற்காக செலவு செய்யப்பட்ட தொகை – ரூ. 345,761.00

கொவிட் – 19 தொற்று காரணமாக 2020 ஆம் ஆண்டு விளையாட்டு விழா நடாத்தப்படவில்லை.

மகாவலி குடியேற்றங்களைச் சேர்ந்த விளையாட்டு வீர வீராங்கனைகளின் திறமைகளை விருத்தி செய்து தேசிய மற்றும் சர்வதேச தரத்திற்கு வீர வீராங்கனைகளை இட்டுச் செல்வது விளையாட்டுப் பிரிவின் வகிபாகமாக உள்ளதுடன், அதன் செயற்பாடுகள் பின்வருமாறு,

- மகாவலி பிரதேசங்களில் விளையாட்டுத் துறையில் திறமை வாய்ந்த இளைஞர் யுவதிகளை இனங்காணுதல் மற்றும் தற்பொழுது விளையாட்டுத் துறையில் ஈடுபட்டு உள்ள விளையாட்டு வீரர்களின் தகவல்களைப் பெற்று நீண்ட கால மற்றும் குறுகிய கால திட்டங்களைத் தயாரித்தல்.
- விளையாட்டு வீரர்களைப் பயிற்றுவிக்கும் குழாம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் அதன் மூலம் விளையாட்டு வீரர்களைப் பயிற்றுவித்தல்.
- விளையாட்டுத் துறை அமைச்சின் மற்றும் மாகாண விளையாட்டுத் துறை அமைச்சின் நிர்ணயங்களுக்கு அமைய பல்வேறு போட்டிகளுக்காக வீரர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் ஆற்றுப்படுத்துதல்.
- மகாவலி விளையாட்டுப் போட்டியில் அணிகளுக்கான போட்டிகள் மற்றும் தடகள/ மெய் வல்லுநர் போட்டிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் அதற்குரிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.
- விளையாட்டு வீரர்களின் நலன்களை மேம்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- விளையாட்டு தொடர்பாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இடையே மற்றும் எமது நிறுவனத்தின் பிரிவுகளுக்கு இடையே சிறப்பான இணைப்புக்களை தக்க வைத்தல்.
- விளையாட்டு வீர வீராங்கனைகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்தல்.
- அலகு ரீதியில் விளையாட்டு வீர வீராங்கனைகளை இனங்காணும் ஒழுங்குமுறை ஒன்றை உருவாக்குதல். (சகல வலயங்களிலும்)

2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் விளையாட்டுப் பிரிவானது பிரதான அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

## தாபரிப்புப் பிரிவு

2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை – ரூ. 785,000

**<u>2020 ஆம் ஆண்டிற்காக வைக்கப்பட்ட இலக்குகளும் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்</u>**

- மகாவலி கேந்திர மைய வளாகத்தில் முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து தொழில்நுட்ப, கட்டுமான மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- பிரதான கேட்போர் கூடத்தின் மேடைக்கு மற்றும் கீழ் மாடியின் முகப்பு அறையின் ஒரு பகுதிக்கு தரை விரிப்பு இடுதல்
  ரூ. 124,132.93 + வெட் – 100%
- துருப்பிடிக்காத உருக்கு மூலம் நூதனசாலையின் கைவேலியை அமைத்தல்
  ரூ. 46,800.93 + வெட் – 100%
- நீர்ப்பாசன நூதனசாலையின் மின் குமிழ்களை புதிதாக இடுதல்.
  ரூ. 99,360.00 + வெட் – 100%
- மகாவலி அதிகார சபையின் 50 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மேடைக்கு விற்பனைக் கூடங்கள் அமைப்பதற்காக மதிப்பீடு தயாரித்தல் மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
  ரூ. 494,999.00 + வெட் – 100%

- மகாவலி கேந்திர மைய வளாகத்தின் மழைநீர் பீலி மற்றும் நீர் இறங்கும் குழாய்களை புதிதாக பொருத்துதல்.
  ரூ. 395,000.00 + வெட்
- அங்கவீனர்களுக்காக நடைபாதை அமைத்தல்
  ரூ. 100,000.00 + வெட்
  (நிலவிய கொரோனா தொற்று காரணமாக நாடு முடக்கப்பட்டமையால் முன்னெடுப்பதற்கு முடியாமல் போனது)

### வெளியீட்டுப் பிரிவு

- மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தினமிண பத்திரிகையுடன் விசேட பிற்சேர்க்கையை அச்சிடுதல்.
  ரூ. 388,800.00
- 50 ஆம் ஆண்டு நிறைவின் உத்தியோகபூர்வ இலச்சினையை தயாரித்தல் உட்பட அனைத்து ஆக்கவியல் நடவடிக்கைகள்
- விசேட தொடக்க தின அட்டை தயாரிப்பு
  தியவர சஞ்சிகை வெளியிடுதல் (6000 பிரதிகள்)
  தியவர சஞ்சிகைக்காக செலவு செய்யப்பட்ட தொகை – ரூ. 166,536.00

### செவிப்புல கட்புலப் பிரிவு

மகாவலி கேந்திர மையத்தின் அனைத்து செவிப்புல கட்புல பதிவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் மகாவலி கேந்திர மையத்தின் காமிணி திஸாநாயக்க கேட்போர் கூடத்தின் நடவடிக்கைகள் முன்னெடுத்தல். இக்கேட்போர் கூடமானது அரச மற்றும் வெளி நிறுவனங்களுக்காக வாடகை அடிப்படையில் வழங்கப்படுகின்றது. இப்பிரிவின் நடவடிக்கைகள் சிரேஷ்ட செவிப்புல கட்புல உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றது.

### நீர்ப்பாசன நூதனசாலை

இலங்கையின் பழைமையான நீர்ப்பாசனக் கைத்தொழிலின் வரலாறு மற்றும் நீர்ப்பாசன தொழில்நுட்பம் தொடர்பாக தகவல்களைப் போன்றே மகாவலி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் இணைந்த சமூக பொருளாதாரம் மற்றும் கலாச்சார நிலைமை தொடர்பாக பார்வையாளர்களின் அறிவு, கிரகித்தல் மற்றும் உத்வேகத்திற்காக காட்சிப்படுத்தல் அறைகளை வடிவமைக்கப்பட்டு உள்ளதுடன், அதனுடன் தொடர்புபட்ட அரும் பொருட்களின் மாதிரியமைப்புக்கள் மற்றும் தரவுகளைப் பாதுகாத்து ஆய்வு மற்றும் ஆராய்ச்சிகளுக்காக கல்வி மத்திய நிலையமாக மகாவலி மையத்தின் தேசிய நீர்ப்பாசன நூதனசாலை நிறுவப்பட்டுள்ளது.

இப்பிரிவின் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற பணிகளை நிறைவேற்றுவதற்காக தாபன அபிவிருத்தி உத்தியோகத்தர் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

50 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜனவரி மாதம் நீர்ப்பாசன நூதனசாலைக்காக கையேடுகள் 5000 அச்சிடுதல்.

2020 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன நூதனசாலையை சுமார் 750 நபர்கள் பார்வையிட்டு உள்ளனர்.

# 4.6 போக்குவரத்துப் பிரிவு

இலங்கை மகாவலி அதிகார சபையின் இலக்குகளை எட்டுவதற்கு அவசியமான சேவைகளின் முதன்மை வகிபாகங்கள் போக்குவரத்துப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காக நிறுவனத்தின் போக்குவரத்துச் சேவை, நிறுவனத்தினுள் நிலவுகின்ற பௌதீக மற்றும் உழைப்புசார் வளங்களை உயர்ந்தபட்ச விதத்தில் பயன்படுத்தி துரிதமான வினைத்திறனுடன் கூடிய போக்குவரத்து சேவைகளாக பொருளாதார, சமூக மற்றும் சூழலியல் தாக்கங்களை இயன்றளவு குறைத்து முறையான விதத்தில் நடாத்திச் செல்வது போக்குவரத்துப் பிரிவின் அடிப்படைப் பணியாக கருத முடியும்.

புது எண்ணக்கருக்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகளுக்கு ஒருங்கிணைந்து சுற்றாடல் தோழமையுடைய சேவைகளாக நடாத்திச் செல்வது யுகத்தின் தேவையாகும். இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான வாகனங்களின் இயக்கல்கள் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக சரியான வழிகாட்டல்கள்,, அவசியமான ஆலோசனைகளை வழங்குதல், கையிறுப்பில் உள்ள வாகனங்களை முகாமைத்துவம் செய்தல், சரியான பாதைக்கு ஆற்றுப்படுத்துவதன் ஊடாக வினைத்திறன் மிக்க சுற்றாடல் தோழமையுடைய வினைத்திறனான சேவைகளை வழங்குவது எமது நோக்கமாகும்.

பகுதியான அரச நிறுவனமாக செயற்படுகின்ற இலங்கை மகாவலி அதிகார சபையானது அரசாங்கத்திற்கு செலவுச் சுமையாக செயற்படக் கூடாது என்றும், அதில் வருமானங்களைத் தோற்றுவிக்கின்ற அல்லது இலாபம் ஈட்டும் நிறுவனமாக எதிர்வரும் காலங்களில் செயற்பட வேண்டும் எனவும் பொதுத் திறைசேரியால் (நிதி அமைச்சு) ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளது.

அதற்கமைய எதிர்வரும் நடவடிக்கைகளைத் திட்டமிடும் போது போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டி உள்ளது. மொத்த பாதீட்டு ஏற்பாடுகளில் 7% இற்கும் அதிகமான தொகையானது இதற்காகச் செலவாகின்றது. எரிபொருள், சாரதிக் கொடுப்பனவு, மேலதிக நேரக் கொடுப்பனவு, வாழ்க்கைப்படிகள், பழுதுபார்த்தல்கள் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகள் மற்றும் இயக்கல் நடவடிக்கைகளுக்காக பாரியளவு தொகை செலவாகின்றதுடன், அவற்றை ஒழுங்குமுறைப்படி நிர்வாகிப்பது நிறுவனத்தின் தலைமை வழங்கப்பட வேண்டிய திசைகளை அறிந்து அதற்காக முன்னுரிமை வழங்கி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான கையிருப்பிலுள்ள வாகனங்களின் எண்ணிக்கை 892 ஆகும். அவை மோட்டார் வாகனங்கள் (கார், ஜீப், இரட்டைத் தொழிற்பாடுகள்) 557 உம், கனரக வாகனங்கள் (லொறி, பேருந்து) 213 உம், இயந்திராதிகள் (லோடர், ஜே.சி.பி. ஆகியவை) 122 உம் காணப்படுகின்றன. (மோட்டார் வாகனங்களின் சாராம்ச குறிப்பு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படுகின்றது)

| | **வாகனங்களின் எண்ணிக்கை** | | | | | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|
| **வாகன வகை** | **0 – 5 ஆண்டுகள் (2021 – 2015)** | **5 – 10 ஆண்டுகள் (2014 – 2010)** | **10 – 15 ஆண்டுகள் (2009 – 2005)** | **15 – 20 ஆண்டுகள் (2004 – 2000)** | **20 > ஆண்டுகள் (1999 <)** | |
| மோட்டார் சைக்கிள் | | 5 | 13 | 5 | 8 | 31 |
| முச்சக்கர வண்டி | | | 1 | | 2 | 3 |
| மோட்டார் கார் | | | 1 | | 9 | 10 |
| ஜீப் | 1 | 3 | 2 | 13 | 197 | 216 |
| இரட்டை கெப் | 38 | 33 | 32 | 79 | 86 | 268 |
| பேருந்து / வேன் | 3 | 3 | 5 | 4 | 14 | 29 |
| **மொத்தம்** | 42 | 44 | 53 | 101 | 317 | 557 |

மேற்குறிப்பிட்ட மோட்டார் வாகனங்கள், இயந்திராதிகள் மற்றும் இழுபொறி வண்டிகளை ஓட்டுதல் மற்றும் இயக்குவதற்காக ஒழுங்குமுறையே சாரதிகள் 413 பேரும், இயந்திர இயக்குனர்கள் 71 பேரும், இழுபொறி சாரதிகள் 13 பேரும், சாரதி உதவியாளர்கள்/கையுதவியாளர்கள் 39 பேரும் கடமையாற்றுகின்றனர்.




**2020 ஆம் ஆண்டில் போக்குவரத்து முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கான பிரதான அலுவலகத்தின் மொத்த செலவு ரூ. 23,652,083.01 ஆகும்.**

| **வருடாந்தம் மீண்டுவரும் செலவு** | **ரூபாய்** |
|---|---|
| எரிபொருளுக்கான செலவு | 8,497,669.00 |
| வாகன பழுதுபார்த்தல்கள் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகளுக்கான செலவுகள் | 10,105,237.07 |
| காப்புறுதி மற்றும் வருமான உத்தரவுப் பத்திரக் கட்டணங்களைச் செலுத்துவதற்கான செலவு | 2,303,322.12 |
| **மீண்டுவரும் செலவினங்களின் கூட்டுத் தொகை** | 20,906,228.19 |
| **வருடாந்த மூலதன செலவினங்கள்** | |
| வாகனங்களை மேம்படுத்துவதற்கான செலவுகள் | 2,745,854.82 |
| **மொத்த செலவு** | 23,652,083.01 |

2020 ஆம் ஆண்டு நிலவிய கொவிட் 19 தொற்று காரணமாக இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டு இருந்த கடமைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்காக போக்குவரத்துப் பிரிவினால் பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டதுடன், அச்சேவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு போக்குவரத்துப் பிரிவின் பதவியணியைப் போலவே சாரதிகளும் (பிரதான அலுவலகம் உட்பட வலய அலுவலகங்களின்) தடையின்றி உதவிகளை வழங்கியதுடன் அது அதிகார சபையின் வருடாந்த இலக்குகளை எட்டுவதற்கு உதவியாக இருந்தது என மிக மகிழ்ச்சியுடன் குறிப்பிட முடியும்.

பிரதான அலுவலகம் உட்பட வலய அலுவலகங்கள் 10 இல் மேற் குறிப்பிட்ட மோட்டர் வாகனங்கள் மற்றும் இயக்குனர்களின் சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் பிரித்து வேறுபடுத்தப்பட்டுள்ளது. அனைத்து வலய அலுவலகங்களிலும் போக்குவரத்துப் பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளதுடன், போக்குவரத்து உத்தியோகத்தர் ஒருவரின் கீழ் அதன் இயக்கல் மற்றும்

தாபரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எச் வலயத்தில், தம்புத்தேகம இயந்திர வேலைத்தளம் மற்றும் சகல வலய அலுவலகங்களிலும் இயந்திர வேலைத்தளம் ஒன்று நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் வாகன தாபரிப்பு மற்றும் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இவ் ஆண்டில் வலய அலுவலகங்களில் தொழில்நுட்ப வேலைத்தளங்கள் செயலூக்கமாக செயற்பட்டு வருகின்றதுடன் அதற்கு அவசியமான மனித வளங்களானது இயன்றளவு பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய புதிய வாகனங்கள் கொள்வனவு செய்வது கடந்த ஆண்டு இடம்பெறவில்லை. ஆகையால்,நிலவுகின்ற கையிறுப்பிலுள்ள வாகனங்களை தாபரித்து ஓடுவதற்குப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிறுவனத்தில் காணப்படுகின்ற வாகனங்களில் 60% இற்கும் அதிகமான வாகனங்கள் 15 வருடங்களுக்கும் அதிகமாக பயன்படுத்துகின்ற பழைய வாகனங்களாக இருப்பதுடன், அவற்றை தாபரிப்பதற்காக பாரியளவு செலவை ஏற்க வேண்டி ஏற்பட்டது.

மேலும் கடந்த ஆண்டில் வேறு நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த பணிப்பாளர் நாயகம், இலங்கை மகாவலி அதிகார சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கும், வேறு நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள எமது நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்டு இருந்து வாகனங்களை உரிய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அல்லது எமக்குக் கையகப்படுத்திக் கொள்வதற்கு முறையான விதத்தில் முன்னெடுக்கப்பட்டது.

நிதி அமைச்சின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் பயன்பாட்டில் இருந்து அப்புறப்படுத்திய கையுதிர்ப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள வாகனங்கள், இயந்திராதிகள் மற்றும் சிதைவுப் பொருட்கள் 376 இனங்காணப்பட்டதுடன் அதில் 244 வாகன இயந்திராதிகள் வகையில் உள்ளடங்கியவை ஆகும். கையுதிர்ப்புக் குழுவினால் அவ்வாறு இனங்காணப்பட்ட வாகனங்களில் மோட்டார் வாகனங்கள் 49 உம், பதிவு இரத்துச் செய்யப்பட்ட சிதைந்த இரும்பாக கையுதிர்ப்பதற்கு வாகனங்கள் 68 உம் பெயரிடப்பட்டுள்ளன. அதில் மேலும் சுமார் 15 வாகனங்கள் மீள் திருத்தம் செய்வதற்கு அகற்றப்பட்டன. கையுதிர்ப்பின் எதிர்வரும் நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கேள்வி கோரல் (டெண்டர்) மூலம் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது.

அரச உத்தியேகத்தர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களுக்காக போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற் உரியதாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய அதிகார சபையின் உயர் முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபையின் கையிறுப்பில் உள்ள வாகனங்களின் முகாமைத்துவமானது சரியான பாதையில் ஆற்றுப்படுத்தப்பட்டது. அச்செயற்பாடுகள் பிரதான அலுவலகத்தில் செயற்படுத்தப்பட்டதுடன் அவ்வொழுங்குளை வலய அலுவலக மட்டத்தில் செயற்படுத்துவதன் ஊடாக விளைத்திறனான சேவைக்கு அளப்பரிய காரணமாக இருந்தது.

பிரதான அலுவலகத்தின் வாகன முகாமைத்துவத்தில் ஒதுக்கப்படுகின்ற வாகனங்கள் (உத்தியோகபூர்வ வாகன உரிமங்கள்) தவிர எஞ்சிய அனைத்து வாகனங்களின் போக்குவரத்தும் குழாமினால் முகாமைத்துவம் செய்யப்படும். நாளாந்த கடமைகளை நிறைவேற்றுவதற்காக நாளாந்த வாகன கோரிக்கையானது மாதம் ஒன்றிற்கு 150 -175 வரையான அளவு முன்வைக்கப்படுவதுடன், மாதம் ஒன்றிற்கு வெளிக்களப் பயணங்கள் சுமார் 70 முன்வைக்கப்படுகின்றன. இவ்வனைத்து கோரிக்கைகளும் குழாமில் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட சாரதி வளங்கள் (சாரதிகள் 18 பேர்) மூலம் முகாமைத்துவம் செய்வதற்கு போக்குவரத்துப் பிரிவிற்கு ஏற்பட்டு உள்ளது.

இவ்வாறு ஒரு குழாமினுள் வாகனங்களை முகாமைத்துவம் செய்வதன் மூலம் சரியான போக்குவரத்து முகாமைத்துவத்தை நிறைவேற்ற முடியுமாக இருப்பதுடன், பெற்றுக் கொள்வதன் மூலம் போக்குவரத்து வசதிகளுக்காக அதிகார சபையினால் ஏற்கப்படுகின்ற எரிபொருள் மற்றும் ஏனைய செலவுகளை நிர்வகிப்பதற்கு முடியுமாக உள்ளது. இதற்கு மேலதிகமாக வாகனங்களின் முறையற்ற பயன்பாடு, மட்டுப்படுத்தப்பட்ட உழைப்பு மற்றும் காலத்தை சேமித்துக் கொள்வதற்கு போன்றே பொருளாதார இலாபங்களை ஈட்டிக் கொள்வதற்கு முடியுமாகி உள்ளது. குழாமில் பணியாற்றுகின்ற அனைத்து சாரதிகளுக்கும் சமமான வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகளை உயர் மட்டத்திற்கு இட்டுச் செல்ல முடியுமாக இருந்ததுடன், கடமைகளை நிறைவேற்றுவதற்காக காண்பிக்கின்ற அர்ப்பணிப்பு மற்றம் பொருத்தமான விதத்தில் சேவைக்கு ஆற்றுப்படுவது என்பவற்றைக் காணக் கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும், இக்காலப் பகுதியில் ஊழியர்கள் குழு உணர்வுடன் பணியாற்றுதல் மற்றும் ஊழியர் உந்துதல்கள் அதிகரிக்கின்ற மற்றும் குறைகின்ற சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

போக்குவரத்து முகாமைத்துவ இயக்கற் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக இக்காலப் பகுதியில் சேவையாற்றிய போக்குவரத்துப் பிரிவுடன் இணைந்த அனைத்து ஊழியர்களும் கொவிட் 19 தொற்றின் ஆபத்துக்களைக் கருத்திற் கொள்ளாது இரவு பகல் பாராது கடினமாக உழைத்தமையை பாராட்ட வேண்டும். வலய அலுவலகங்களில் போக்குவரத்து நடவடிக்கை முகாமைத்துவத்தை முறைப்படுத்தும் நோக்குடன் வெற்றிடம் நிலவிய போக்குவரத்து உத்தியோகத்தர் பதவியில் கடமையை நிறைவேற்றுவதற்காக மிகவும் பொருத்தமான உத்தியோகத்தரை நியமிப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதன் மூலம் போக்குவரத்து முகாமைத்துவ நடவடிக்கைகள் வலய அலுலவலகங்களில் முறைப்படுத்துவதற்கு அவசியமான அடிப்படை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அப்பணிகளின் தொழிற்பாடானது பிரதான அலுவலகத்தின் மூலம் மேற்பார்வையிடப்படும்.

பிரதிப் பணிப்பாளர் (போக்குவரத்து) இன் தலைமையில் தொழில்நுட்ப பொறியியலாளர் (இயந்திரம்), பொறியியல் உதவியாளர்கள் (இயந்திரம்) இருவர், முகாமைத்துவ உதவியாளர்கள், வேலைசெய் தலையாள் உட்பட மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியின் மூலம் நிறைவேற்றப்படுவதுடன், முதன்மையாக போக்குவரத்து உத்தியோகத்தர், நிர்வாக உதவியாளர் பதவிகளுக்காக பிரிவில் நெடுங்காலமாக வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய (சுபீட்சத்தின் நோக்கு) மோசடிகள் அற்ற வினைத்திறனான நிர்வாகத்தை மேற்கொள்வதற்கான கருப் பொருளை முதன்மையாகக் கொண்டு விளைத்திறனான மற்றும் வினைத்திறனான போக்குவரத்துக் குழாம் ஒன்றை முகாமைத்துவம் செய்வதற்கு நவீன/ நடப்புத் தொழில்நுட்ப முறைகளைப் (Information Communication Technology (ICT) , Global Positioning System (GPS), Fleet Management Soft wear (FMS) பின்பற்றுவது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதிகார சபையில் எதிர்வரும் காலத்தில் இத்தொழில்நுட்ப முறைகளுக்கு அமைய செயற்படுவது தொடர்பாக விசே கவனத்தைச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாண்டில் பிரதான அலுவலகத்தில் பிரிக்கப்பட்ட வாகனங்களைத் (உத்தியோகபூர்வ வாகன உரித்துள்ள) தவிர ஏனைய அனைத்து வாகனங்களையும் ஒரு குழுமத்தின் மூலம் முகாமைத்துவம் செய்யப்பட்டதுடன், அதிகார சபையின் கடமைத் தேவைகளுக்காக வாகனங்கள் மற்றும் சாரதிகளைப் பிரிப்பது போக்குவரத்துப் பிரிவின் மூலம் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டது. இதன் காரணமாக முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது முறையற்ற வாகனப் பயன்பாடு, எரிபொருட்களுக்காக செலவிடுகின்ற தொகை, நிலவிய முகாமைத்துவப் பிரச்சினைகளை இயன்றளவு குறைப்பதற்கு முடியுமாக இருந்ததைப் போலவே நிலவுகின்ற குழாமின் மூலம் இயன்றளவு பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்தது. அரசாங்கத்தின் வழிகாட்டல்களுக்கு அமைய ஏற்றுக் கொள்ளப்பட்ட சரியான போக்குவரத்து முகாமைத்துவத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

**2020 ஆம் ஆண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட இலக்குகள் மற்றும் விசேட நிகழ்வுகள்.**

மேலும் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி நாடு பூராகவும் பரவிய உயிர்கொல்லி கொரோனா தொற்று காரணமாக இலங்கை மகாவலி அதிகார சபையின் சிவில் பதவியணியானது உரிய முறையில் கடமைக்கு சமூகமளிக்காத பின்புலத்தில் தமது உயிர் ஆபத்தை கருத்திற் கொள்ளாது, பல சந்தர்ப்பங்களில் தமது தனிப்பட்ட போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்தி பாதுகாப்புக் கடமைகளை தொடர்ச்சியாக மற்றும் முறையாக நடாத்திச் செல்லும் நோக்குடன் பல பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமைக்கு சமூகமளித்து இலங்கை மகாவலி அதிகார சபையின் அனைத்து அசையும் அசையாச் சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக பெரும் முயற்சியுடனும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாக அபிமானத்துடன் நினைவூட்டிக் கொள்கின்றோம்.

இந்த படையணியின் கடமைகளுக்காக இலங்கை இராணுவத்தினால் வழங்கப்பட்ட 7.62mm T 56 மார்க் II துப்பாக்கி 50 இல் பயன்பாட்டின் போது பழுதடைந்த 7.62mm T 56 மார்க் II துப்பாக்கி 05 ஆனது 2020 ஜூன் மாதம் 02 ஆம் திகதி மீண்டும் 111 படையணி தலைமையகம், கம்பளைக்கு சரியான முறையில் ஒப்படைக்கப்பட்டது.

மேலும், பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கு அமைய இப்படையணியின் கடமைகளுக்காக பயன்படுத்திய உப இயந்திர துப்பாக்கிகள் 15 மற்றும் 9mm துப்பாக்கி குண்டுகள் 2000 உம் 2020 செப்டம்பர் மாதம் 03 ஆம் திகதி பொலிஸ் களப் படையணி தலைமையகத்தின் மத்திய ஆயுத களஞ்சிய சாலையில் சரியான முறையில் ஒப்படைக்கப்பட்டது.

அவ்வாறே, மகாவலி பாதுகாப்புப் படையணியின் கையிறுப்பில் இருந்த அனைத்து தானியங்கி துப்பாக்கிகள் "இலங்கை மகாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்டு இருந்த துப்பாக்கிகளை தற்காலிகமாக மீண்டும் இராணுவத்திற்கு பெற்றுக் கொள்ளுதல்" என பிரதான பதவிநிலை உத்தியோகத்தர் 1 (ஒருங்கிணைப்பு) இனால் பணிப்பாளர் நாயகத்திற்கு (இலங்கை மகாவலி அதிகார சபை) அனுப்பப்பட்ட செ/பாம/தொ/பி/ஆயு/351/59 (01) ஆம் இலக்க 2020 செப்டம்பர் 11 ஆம் திகதிய கடிதத்திற்கு இணங்கியதாக 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதி 7.62mm T 56 மார்க் II துப்பாக்கிகள் 44 மற்றும் T 81 துப்பாக்கிகள் 50 ஐ மத்திய ஆயுத களஞ்சிய சாலை, பனாகொடைக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் மகாவலி பாதுகாப்பு படையணியின் பாதுகாப்பு நடவடிக்கைகளை முறையாக மற்றும் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் நோக்கில் இப்படையணியின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ESCORT AIMGUARD வகையைச் சேர்ந்த ரிபீடர் துப்பாக்கிகள் 150 ஐ கொள்வனவு செய்வதற்கும் எதிர்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**2020 ஆம் ஆண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்.**

| **கணக்கு இலக்கம்** | | **ரூபாய்** |
|---|---|---|
| 2003 | கடன் வட்டி வருமானம் | 1,09 |
| 2005 | அபராத வட்டி வருமானம் | 0.00 |
| 2008 | மீளச்செலுத்தாத டெண்ர் வைப்புகள் | - |
| 2010 | பல்வேறு வருமானங்கள் | - |
| **மொத்தம்** | | **1.09** |

| | **மில்லியன்** |
|---|---|
| 2020 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை | 8.20 |
| 2005 ஆம் ஆண்டின் இலக்கு | 8.20 |
| 2008 ஆம் ஆண்டு பிரதான அலுவலகத்தில் கிடைத்த தொகை | 8.20 |
| 2010 ஆம் ஆண்டு செலவு செய்யப்பட்ட தொகை | 8.00 |
| அதற்கமைய நிதிசார் முன்னேற்றம் | 97.50% |

**நிதிசார் முன்னேற்றம்**

| **கணக்கு இலக்கம்** | **ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன்)** | **செலவு செய்யப்பட்ட தொகை (மில்லியன்)** |
|---|---|---|
| 2385 கட்டிடங்கள் | 5.2 | 5.18 |
| 2383 வாகன தாபரிப்பு | 1.5 | 1.42 |
| 2386 அலுவலக உபகரணங்கள் | 0.2 | 0.20 |
| 2112 பாதுகாப்பு உபகரணங்கள் | 1.0 | 1.00 |
| 2706 வீட்டுப் பொருட்கள் மற்றும் கருவிகள் | 0.3 | 0.20 |
| | **8.2** | **8.00** |

# ஐந்தாவது அத்தியாயம்

## இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள்.

நிறுவன சட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட வியாபார நடவடிக்கைகளின் ஒரு பகுதி முகாமைத்துவத்திற்காக பின்வரும் தனியார் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

- வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம்.
  Mahaweli Livestock & Agro Enterprises (Pvt) Ltd
- வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனைச் சேவைப் பணியகம் (தனியார்) நிறுவனம். (MCB)
  Mahaweli Consultancy Bureau (Pvt) Ltd
- இயற்கை வள முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) நிறுவனம். (NRMS)
  Natural Resources Management Services (Pvt) Ltd

**2020 ஆம் ஆண்டில் நிறுவனங்களின் செயலாற்றுகை**

| தொடர் இலக்கம் | நிறுவனம் | வருடத்தினுள் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்/ நிலைமை |
|---|---|---|
| 01 | வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம். | ❖ மாகாணத்தின் பால் விவசாயிகளிடம் இருந்து பால் சேகரித்தல் மற்றும் அவர்களுக்கு அதன் மூலம் சேவைகளை வழங்குதல்.<br>❖ பால் சார்ந்த உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவ்வுற்பத்திகளை மகாவலி வலயங்கள் மற்றும் அண்டிய பிரதேசங்களுக்கு சந்தைப்படுத்துதல்.<br>❖ நாட்டுக் கோழிச் செயற்திட்டத்தின் ஊடாக விவசாயிகளுக்குக் கோழிக் குஞ்சுகளை வழங்குதல்.<br>❖ ஆண் மாடுகளான பயன்படுத்துவதற்காக நீர் எருமைகளின் உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு வழங்குதல்.<br>❖ தரத்தில் உயர்ந்த பிராய்லர் இறைச்சிகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துதல். |
| 02 | வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனைச் சேவைப் பணியகம் (தனியார்) நிறுவனம். | இயலுமை ஆய்வுகள் மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகளின் மூலம் 2018 ஆம் ஆண்டில் செயற்பாடுகளில் இருந்தான வருமானங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 03 | இயற்கை வள முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) நிறுவனம். | பின்வரும் நடவடிக்கைகள் மூலம் வருமானங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.<br>• விக்டோரியா மற்றும் கொத்மலை வலயங்களின் காணிகளை அளவிடுதல் மற்றும் திட்டங்களைத் தயாரித்தல் – ரூ. 213,800.00<br>• மண் ஆராய்ச்சிச் செயற்திட்டம் – ரூ. 1,018,479.01<br>• நானுஓயா மற்றும் கொலதெனிய அளவிடு தானங்களின் H-Q அளவீடு – ரூ. 437,472.00<br>• மாத்தளை மாவட்டத்தின் புவக்பிடிய மற்றும் இலுக்கும்புர சேதன பண்ணைச் செயற்திட்டம் – ரூ. 200,000.00<br>• ஹபுதலை பெருந்தோட்டச் செயற்திட்டம் – ரூ. 160,000.00<br>• அமர லெஷர் ஹோட்டலின் அடிப்படை சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல் – ரூ. 300,000.00 |

# வருடாந்த கணக்குகள்

# பாகம் - II

**31.12.2020 ஆம் திகதிக்கான நிதிக் கூற்றுக்கள்**

| | | குழுமம் | | அதிகார சபை | |
|---|---|---|---|---|---|
| | | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| | | 2020 | 2019 | 2020 | 2019 |
| | குறிப்பு | | | | |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | (1) | 119,033,935 | 79,974,383 | 118,975,474 | 79,911,773 |
| முதலீடுகள் (LT) | (2) | 164,555 | 166,299 | 530,787 | 527,118 |
| புலனாகாத சொத்துக்கள் | | 785 | - | 785 | - |
| மூலதன பணிச் செயல்முறை | | 57,166 | 61,327 | 57,166 | 61,327 |
| மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள் | | 119,256,441 | 80,202,009 | 119,564,212 | 80,500,218 |
| உயிரியல் சொத்துக்கள் – மூலதனம் | (3) | 259,342 | 219,777 | 250,156 | 210,567 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | | |
| சரக்கு இருப்புகள்/ இருப்புகள் | (4) | 166,810 | 170,166 | 162,800 | 166,147 |
| உயிரியல் சொத்துக்கள் – வணிகம் | (3) | 42,721 | 47,178 | 42,363 | 47,004 |
| வணிகம் மற்றும் ஏனைய பெறுவனவுகள் | (5) | 2,594,637 | 3,010,410 | 2,544,653 | 2,953,966 |
| வங்கி உத்தரவாதங்கள் | | 377 | 374 | - | - |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | (6) | 667,498 | 260,557 | 662,746 | 251,079 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 3,472,043 | 3,488,685 | 3,412,562 | 3,418,196 |
| **மொத்த சொத்துக்கள்** | | **122,987,826** | **83,910,471** | **123,226,930** | **84,128,980** |
| | | | | | |
| **பொறுப்புகள்** | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| <u>**நடைமுறை பொறுப்புகள்**</u> | | | | | |
| கொடுப்பனவுகள் | **(7)** | 39,970,622 | 966,518 | 39,956,544 | 940,803 |
| குத்தகை – ஏலியன்ஸ் பினான்ஸ் | | - | - | - | - |
| பெருகிய செலவுகள் | **(8)** | 94,434 | 205,011 | 54,675 | 180,613 |
| **மொத்த நடைமுறை பொறுப்புகள்** | | 40,065,057 | 1,171,529 | 40,011,220 | 1,121,416 |
| <u>**நடைமுறை அல்லாத பொறுப்புகள்**</u> | | | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | **(9)** | 1,500,519 | 1,371,814 | 1,486,519 | 1,359,652 |
| பிற்போடப்பட்ட வரி | | 612 | 612 | - | - |
| **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புகள்** | | 1,501,131 | 1,372,426 | 1,486,519 | 1,359,652 |
| **மொத்த பொறுப்புகள்** | | 41,566,188 | 2,543,955 | 41,497,738 | 2,481,068 |
| | | | | | |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | 81,421,638 | 81,366,516 | 81,729,191 | 81,647,912 |
| | | | | | |
| <u>**தேறிய சொத்துக்கள் / உரிமையான்மை**</u> | | | | | |
| நிதிக் கூட்டுத்தொகை | **(10)** | 76,926,922 | 76,826,891 | 76,926,922 | 76,823,887 |
| ஒதுக்குகள் – வருமான மற்றும் செலவுக் கணக்கின் ஆரம்ப மீதி | | (1,178,028) | (585,814) | (814,764) | (245,703) |
| வருமான ஒதுக்குகள் - நிறுவனங்கள் | | 48,288 | 48,288 | - | - |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் – | | 5,624,456 | 5,077,151 | 5,617,033 | 5,069,728 |
| <u>**மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமையான்மை**</u> | | 81,421,638 | 81,366,516 | 81,729,191 | 81,647,912 |

## 31.12.2020 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கள்.

| | | குழுமம் | அதிகார சபை | குழுமம் | அதிகார சபை |
|---|---|---|---|---|---|
| | | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| | | 2020 | 2020 | 2019 | 2019 |
| | அட்ட. | | | | |
| **வருமானம்** | (01) | | | | |
| வாடகை | | 296,298 | 296,298 | 370,610 | 370,610 |
| ஆதாய உரிமை | | 452,903 | 452,903 | 1,399,617 | 1,399,617 |
| கட்டுமானப் பணிகள் | | - | - | 17,275 | - |
| பண்ணை விளைபொருள் விற்பனை | | 4,911 | - | 5,282 | - |
| முதலீட்டு வருமானம் (நிறுவனங்கள்) | | 10,403 | 6,319 | 9,588 | 2,935 |
| ஏனைய வருமானங்கள் | | 192,489 | 192,489 | 119,240 | 119,162 |
| **தோற்றுவிக்கப்பட்ட வருமானம்** | | 957,005 | 948,010 | 1,921,613 | 1,892,324 |
| | | | | | |
| கருவூல மானியம் - மீண்டுவரும் | (02) | 1,810,000 | 1,810,000 | 2,100,000 | 2,100,000 |
| மூலதனம் | | 823,258 | 823,258 | 1,159,436 | 1,159,436 |
| - விவசாயம் | | 112,977 | 112,977 | 159,500 | 159,500 |
| - வெள்ளம் | | 43,243 | 43,243 | 73,500 | 73,500 |
| | | 3,746,483 | 3,737,489 | 5,414,049 | 5,384,760 |
| **குறைந்த : செலவுகள்** | (03) | | | | |
| தனிப்பட்ட ஊதியம் | | 3,118,130 | 3,103,674 | 2,822,035 | 2,803,412 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| போக்குவரத்து /வாழ்க்கைப்படி | | 80,705 | 80,250 | 106,633 | 106,529 |
| வழங்கல்கள் /போக்குவரத்து | | 132,591 | 132,326 | 137,686 | 136,598 |
| தாபரிப்பு செலவினங்கள் | | 68,195 | 68,149 | 43,659 | 43,597 |
| ஒப்பந்தவியல் பணிகள் | | 111,575 | 110,486 | 129,211 | 127,659 |
| காப்புறுதி | | 1,815 | 1,815 | 237 | 237 |
| ஏனைய செலவுகள் | | 92,125 | 83,795 | 90,301 | 81,326 |
| பெறுமானத் தேய்வு | | 657,078 | 653,007 | 547,475 | 544,714 |
| மறுசீரமைப்பு, மேம்பாடு மற்றும் ஏனைய தாபரிப்புக்கள் | **(04)** | 1,231,123 | 1,231,123 | 1,831,043 | 1,831,043 |
| சமூக விருத்தி மற்றும் குடியேறியோருக்கான சேவைகள் | | | | | |
| சுற்றுப்பயண மாளிகையின் நட்டம் | **(05)** | 16,295 | 16,295 | 14,085 | 14,085 |
| அபிவிருத்தி மத்திய நிலையத்தின் இலாபம் | | 1,471 | 1,471 | (976) | (976) |
| நீர் செயற்திட்ட முகாமைத்துவ நட்டம் | | 4,008 | 4,008 | 3,739 | 3,739 |
| பயிற்சிப் பட்டறையின் நட்டம்/ இலாபம் | | (1,183) | (1,183) | (10,474) | (10,474) |
| நாற்றுமேடையின் நட்டம் | **(06)** | 24,423 | 24,423 | 19,313 | 19,313 |
| பண்ணை நட்டம்/ இலாபம் | **(07)** | (18,389) | (18,389) | (52,049) | (52,049) |
| ஹெல போஜுன்ஹலவின் நட்டம்/ இலாபம் | | 877 | 877 | (82) | (82) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மொரகஹகந்த மின் உற்பத்தி நிலைய நட்டம்/ இலாபம் | | (1,185,952) | (1,185,952) | | |
| **மொத்த செயற்பாட்டுச் செலவுகள்** | | 4,334,886 | 4,306,175 | 5,681,837 | 5,648,669 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான மிகை/ (பற்றாக்குறை)** | | (588,403) | (568,686) | (267,788) | (263,909) |
| நிலையான ஆதனங்களை அகற்றியமை – மேல. இலாபம் / நஷ்டம் | **(08)** | (375) | (25,960) | (25,960) | (10,191) |
| பங்குலாபம் | | - | 573 | 573 | |
| **வரியின் பின்னரான வருமானம்** | | (588,778) | (569,061) | (293,175) | (289,295) |
| | | | - | | - |
| 2020.01.01 ஆம் திகதிக்கு கொண்டு வரப்பட்ட மீதி | | cc | (245,703) | (364,354) | (32,290) |
| **தேறிய மிகை (பற்றாக்குறை) முன் கொண்டுவரப்பட்ட** | | **(1,178,028)** | **(814,764)** | **(657,528)** | **(321,585)** |

**2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று**

| | குழுமம் | | அதிகார சபை |
|---|---|---|---|
| | | | |
| | **ரூ.'000** | | **ரூ.'000** |
| | | | |
| **இயக்கச் செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | (588,778) | | (569,061) |
| **பணமல்லாத நகர்வுகள்** | | | |
| | | | |
| பெறுமானத் தேய்வு | 663,923 | | 659,852 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 128,705 | | 126,867 |
| உயிரியல் ஆதனங்களின் ஆதாய அதிகரிப்பு | (39,565) | | (39,589) |
| ஆதனங்களின் உரிமை மாற்றங்கள் | (39,031,763) | | (39,031,763) |
| ஆதன விற்பனைகள் மற்றும் | 438 | | 438 |
| NRMS PL மற்றும் WDV | (3,358) | | - |
| | | | |
| **இயக்கச் செயற்பாடுகள்** | | | |
| இருப்புக்களின் அதிகரிப்பு/ குறைவு | 3,356 | | 3,347 |
| உயிரியல் ஆதனங்களின் அதிகரிப்பு/ குறைவு – வணிகம் | 4,457 | | 4,641 |
| ஏனைய பெறுகைகளின் அதிகரிப்பு/ குறைவு | 415,773 | | 409,313 |
| வங்கி உத்தரவாதங்களின் அதிகரிப்பு/ குறைவு | (3) | | - |
| கொடுப்பனவுகளின் அதிகரிப்பு/ குறைவு | 39,004,104 | | 39,015,741 |
| அட்டுறுச் செலவுகளின் அதிகரிப்பு/ குறைவு | (110,577) | | (125,938) |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| **இயக்கச் செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **446,713** | | **453,848** |
| | | | |
| **முதலீட்டுச் செயற்பாடுகள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (145,775) | | (145,775) |
| புலனாகாத சொத்துக்களின் அதிகரிப்பு | (785) | | (785) |
| சொத்து விற்பனைகளின் மூலமான உருவாக்கங்கள் | 852 | | 852 |
| முதலீடுகளின் அதிகரிப்பு/ குறைவு | 1,744 | | (3,670) |
| பணி முன்னேற்றங்களின் அதிகரிப்பு/ குறைவு | 4,161 | | 4,161 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **(139,803)** | | **(145,217)** |
| | | | |
| **நிதிசார் செயற்பாடுகள்** | | | |
| திரண்ட நிதி மற்றும் ஒதுக்குகளின் அதிகரிப்பு/ குறைவு | 100,031 | | 103,035 |
| **நிதிசார் செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | **100,031** | | **103,035** |
| **காசு மற்றும் காசு உரிமையாண்மைகளின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | **406,941** | | **411,667** |
| 01.01.2020 ஆம் திகதிக்கு காசு மற்றும் காசு உரிமையாண்மைகள் | 260,557 | | 251,079 |
| 31.12.2020 ஆம் திகதிக்கு காசு மற்றும் காசு உரிமையாண்மைகள் | **667,498** | | **662,746** |

## உரிமையாண்மை மாற்றங்களின் கூற்றுக்கள் – குழுமம்

| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
|---|---|---|---|---|
| | | | | |
| விபரம் | ஒருங்கிணைக்கப்பட்ட நிதி | ஒதுக்குகள் | வருமானங்கள் மற்றும் செலவினங்கள் | மொத்தம் |
| | | | | |
| 01.01.2019 ஆம் திகதிக்கு மீதி | 1,606,957 | 4,401,212 | (293,175) | 5,714,994 |
| ஆண்டின் போது | 253,563 | 698,857 | (364,354) | 588,066 |
| மாறுபட்ட வருமானம் | (22,769) | | | (22,769) |
| **31.12.2019 ஆம் திகதிக்கு மீதி** | **1,837,751** | **5,100,069** | **(657,528)** | **6,280,292** |
| | | | | |
| 01.01.2020 ஆம் திகதிக்கு மீதி | **76,826,891** | **5,077,151** | **(585,814)** | **81,318,228** |
| ஆண்டின் போது | 145,774 | 547,305 | (588,778) | **104,301** |
| மாறுபட்ட வருமானம் | (42,740) | - | - | **(42,740)** |
| NRMS | (3,003) | - | (3,436) | **(6,439)** |
| **31.12.2020 ஆம் திகதிக்கு மீதி** | **76,926,922** | **5,624,456** | **(1,178,028)** | **81,373,350** |

## உரிமையாண்மை மாற்றங்களின் கூற்றுக்கள் – மகாவலி அதிகார சபை

| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
|---|---|---|---|---|
| | | | | |
| | ஒருங்கிணைக்கப்பட்ட நிதி | ஒதுக்குகள் | வருமானங்கள் மற்றும் செலவினங்கள் | மொத்தம் |
| | | | | |
| 01.01.2019 ஆம் திகதிக்கு மீதி | 1,603,953 | 4,401,212 | (289,295) | 5,715,870 |
| ஆண்டின் போது | 253,563 | 691,434 | (32,290) | 912,707 |
| மாறுபட்ட வருமானங்கள் | (22,769) | - | - | (22,769) |
| **31.12.2019 ஆம் திகதிக்கு மீதி** | **1,834,747** | **5,092,646** | **(321,585)** | **6,605,808** |

| | | | | |
|---|---|---|---|---|
| 01.01.2020 ஆம் திகதிக்கு மீதி | 76,823,887 | 5,069,728 | (245,703) | 81,647,912 |
| ஆண்டின் போது | 145,774 | 547,305 | (569,061) | 124,018 |
| மாறுபட்ட வருமானங்கள் | (42,740) | - | - | (42,740) |
| **31.12.2020 ஆம் திகதிக்கு மீதி** | **76,926,921** | **5,617,033** | **(814,764)** | **81,729,190** |

# நிதிக் கூற்றிற்கான பிரமாணக் குறிப்புக்கள்

## 1.) அறிக்கையிடல் நிறுவனம்

இலங்கை மகாவலி அதிகார சபை (MASL) 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிகள் 12 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. (MDP.)

மகாவலி சட்டத்தின் பிரகாரம், எந்தவொரு விசேட பிரதேசத்திலும் அல்லது அது தொடர்பில் அதிகார சபையின் பணிகள் பின்வருமாறு இருக்கும்.

அ) நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்துதல், நீர்ப்பாசன விநியோக முறைமை மற்றும் மின் சக்தி உற்பத்தி மற்றும் வழங்கல் போன்ற மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்தை திட்டமிட்டு அமுல்படுத்துதல்.

ஆ) எவ்வாறாயினும், மின் சக்தி விநியோகம் தொடர்பான செயல்பாட்டை வேறு எந்த எழுத்துப்பூர்வ சட்டத்தின் கீழும் செய்யத் தகுதிவாய்ந்த எந்த அதிகாரியும் விடுவிக்கலாம்.

இ) எந்தவொரு சிறப்புப் பகுதியின் முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை வளர்த்தல் மற்றும் பாதுகாத்தல்.

ஈ) விவசாய உற்பத்தித் திறனையும் வேலைவாய்ப்பு திறனையும் மேம்படுத்துதல் மற்றும் எந்தவொரு சிறப்புப் பகுதிக்குள் பொருளாதார மற்றும் விவசாய அபிவிருத்தியை உருவாக்குதல் மற்றும் பாதுகாத்தல்;

உ) ஏதேனும் ஒரு சிறப்புப் பகுதிக்குள் பௌதிக சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.

ஊ) எந்தவொரு விசேட பிரதேசத்திலும் சமூகத்தின் பொது நலன் மற்றும் கலாச்சார முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் அத்தகைய பகுதியின் விவகாரத்தை நிர்வகித்தல்.

எ) எந்தவொரு சிறப்புப் பகுதியின் பொருளாதார மற்றும் விவசாய அபிவிருத்தியிலும் உள்நாட்டு மற்றும் வெளி மூலதனத்தின் பங்களிப்பை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் மற்றும்

எ) மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்தைத் திட்டமிடுதல் மற்றும் அமுல்படுத்துதல் மற்றும் ஏதேனும் விசேட பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்தில் அரசாங்க

திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச நியதிச் சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நபர்களின் ஒத்துழைப்பை தனியார் அல்லது பொது மக்களின் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக அதிகார சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் அதே சட்டத்தின் 12 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கை மகாவலி அதிகாரசபையானது மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம், இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) நிறுவனம், மகாவலி கால்நடை மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம், மகாவலி ஆலோசனை பணியகம் (தனியார்) நிறுவனம், மற்றும் மகாவலி கால்நடை தொழில் முயற்சிகள் நிறுவனம் ஆகிய நான்கு துணை நிறுவனங்களையும் ஒரு இணை நிறுவனத்தையும் கொண்டுள்ளது.

அனைத்து துணை நிறுவனங்களும் மற்றும் இணை நிறுவனமும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவன சட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு பின்வரும் கொள்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் பங்கு மூலதனத்தின் விளக்கங்கள் பின்வருமாறு

| **நிறுவனம்** | **ஒரு பங்கிற்கான பெறுமதி** | **வழங்கப்பட்ட மற்றும் பூரணமாக செலுத்தப்பட்ட பங்கு மூலதனங்களிக் பங்குகளின் எண்ணிக்கை** | **மகாவலி அதிகார சபைக்கு வழங்கபட்ட பங்குகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1)மகாவலி ஆலோசனைப் பணியகம் (தனியார்) நிறுவனம். | ரூ. 10.00 | 6385 | 6384 |
| 2)இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) நிறுவனம் | ரூ. 10.00 | 1502 | 1500 |
| 3) மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம் | ரூ. 10.00 | 1,039,803 | 1,039,800 |
| 4)மகாவலி கால்நடை மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம். | ரூ. 10.00 | 3 | - |

**<u>மகாவலி நிறுவனங்களின் கொள்கை நடவடிக்கைகள்</u>**

**துணைமை அலகுகள்.**

அ) மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம்

- மகாவலி தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல்.
- நிறுவனத்திற்கான நிதியை உருவாக்க வணிக முயற்சியை மேற்கொள்ளுதல்.

ஆ) இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) நிறுவனம்

- இயற்கை வளங்கள் துறையில் தொழில்முறை ஆலோசனை மற்றும் சேவைகளை வழங்குதல்
- மேலாண்மை வடிவமைப்பு மற்றும் பயிற்சி, நீரியல் கண்காணிப்பு, நிலப் பயன்பாட்டு வரைபடம், நீர்ப் பிடிப்பு பாதுகாப்பு மற்றும் வனவியல் போன்றவை.
- தகவல் மற்றும் தரவுகளை வழங்குதல் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வுகளை தயாரித்தல்,

- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஆய்வுகள் (சு.தா.ம), ஆரம்ப சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகள் (இ.இ.இ.ஆர்) போன்றவை.

இ) மகாவலி கால்நடை மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம்.
- மகாவலி விவசாயிகளுக்கு உயர்தர விலங்குகளை கிடைக்கச் செய்வது.
- பால் மற்றும் இறைச்சி பொருட்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.

ஈ) மகாவலி ஆலோசனைப் பணியகம் (தனியார்) நிறுவனம்.
- கட்டிடங்கள், நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால் மற்றும் சாலைகள் கட்டும் துறைகளில் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- கட்டிடங்கள், நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால் மற்றும் சாலைகள் கட்டும் துறைகளில் கட்டுமான ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல்.

**இணைக்கப்பட்ட நிறுவனங்கள்**

அ) மகாவலி கால்நடை தொழில் முயற்சிகள் (நிறுவனம்)
- பிராய்லர் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.
- மகாவலி விவசாயிகளுடன் பிராய்லர் மீள் கொள்வனவு ஏற்பாடுகள்.

எனினும், மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையானது 2012 ஆம் ஆண்டில் மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனத்தை கலைக்க முடிவு செய்தது. இதன் மூலம் இந்த நிறுவனத்தின் கணக்குகள் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளில் சேர்க்கப்படவில்லை. பின்னர் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறிப்பு அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டன.

## 2) தயாரிப்பு அடிப்படை

### 2.1 இணக்கக் கூற்று

நிதிக் கூற்றுக்களானது நிதி நிலைமை, நிதிச் செயல்திறன் கூற்றுக்கள், உரிமையாண்மை மாற்றங்களின் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்,மற்றும் நிதி கூற்றுக்களின் குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத் துறை கணக்கியல் தரத்திற்கு (SLPSAS) இணங்க இந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் முந்தைய நிதியாண்டில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் ஒத்திருக்கின்றன.

### 2.2 அளவீட்டு அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்கும் எந்தவொரு சீராக்கலும் மேறகொள்ளப்படவில்லை.

### 2.3 செயல்பாட்டு மற்றும் விளக்கக்காட்சி நாணயம்

இலங்கை ரூபாயிலேயே நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. ரூபாய்களில் அளிக்கப்பட்ட அனைத்து நிதித் தகவல்களும் மிக அருகில் உள்ள ஆயிரத்திற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

### 2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளின் பயன்பாடு

இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை (SLPSAS) உடன் இணங்கிய நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு, கணக்கியல் கொள்கைகளின் பயன்பாடு மற்றும் அறிவிக்கப்பட்ட சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகள் ஆகியவற்றை பாதிக்கும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை நிர்வாகம் செய்ய வேண்டும். தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள், வரலாற்று அனுபவம் மற்றும் சூழ்நிலைகளில் நியாயமானவை என்று நம்பப்படும் எதிர்பார்ப்புகள் உட்பட பிற காரணிகளை அடிப்படையாகக் கொண்டவை. எனவே உண்மையான அனுபவமும் முடிவும் இந்த தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.
மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்களைத் தொடர்ந்து அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கியல் மதிப்பீடுகளின் திருத்தமானது அந்த காலகட்டத்தையும் எதிர்கால காலங்களையும் மட்டுமே பாதிக்கும் பட்சத்தில் மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்ட காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 2.5 கணக்கியல் கொள்கைகளின் மாற்றங்கள்

பின்பற்றப்பட்ட கணக்கியல் கொள்கைகள் பின்வருனவை தவிர முந்தைய நிதியாண்டின் கணக்குக் கொள்கைகளுடன் ஒத்திருக்கின்றன.

**2.5.1** தனிப் பண்ணைகள், தாவர நாற்று மேடைகள் மற்றும் சுற்றுலா மாளிகைகள் ஆகியவை குறிப்பிட்ட மகாவலி அமைப்புகளின் கீழ் தனித்தனி வருமானம் மற்றும் செலவினக் கணக்குகளாக கணக்கிடப்பட்டு உள்ளன.

**2.5.2** உயிரியல் சொத்துக்கள் நியாயமான மதிப்பில் மதிப்பிடப்படுகின்றன. விவசாய கணக்கிலிருந்து ஆதாயம் அல்லது இழப்பு அடையாளம் காணப்படுகிறது.

**2.5.3** நடப்பு நிதியாண்டில் மோட்டார் வாகனங்களின் மீள் மதிப்பீடு காரணமாக மீள் மதிப்பீட்டு உபரி ரூ. 691,434 மில்லியனாக உயர்த்தப்பட்டுள்ளது.

## 3) குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள் அந்த நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து காலத்திற்கும் தொடர்ந்து பொருந்தும்.

### 3.1 ஒருங்கிணைப்பு அடிப்படை

**3.1.1** ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களானது ஒருங்கிணைக்கப்பட்ட நடைமுறைகளை தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் தயாரிக்கப்படுகின்றன. இதில் பெற்றோர் மற்றும் துணை நிறுவனங்களின் நிதி அறிக்கைகளை ஒருங்கிணைப்பது அறிக்கையின் முடிவு மற்றும் பங்கு முறையின் அடிப்படையில் அடங்கும். இவ்வாறாக, ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களானது இ.மா.அ.ச. பற்றிய நிதித் தகவல்களை ஒற்றைப் பொருளாதார அலகாக முன்வைக்கின்றன.

### 3.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

**3.2.1** சொத்துக்கான செலவானது அதன் மீள் மதிப்பீட்டு விலை, கொள்முதல் விலை அல்லது கட்டுமானச் செலவு மற்றும் அதன் நோக்கமான பயன்பாட்டிற்காக சொத்தை வேலை நிலைக்குக் கொண்டு வருவதற்கு நேரடியாகக் கூறப்படும் செலவு ஆகியவற்றை உள்ளடக்கியது. 2020.01.01 ஆம் திகதி முதல் அனைத்து

மோட்டார் வாகனங்களும் மீள் மதிப்பிடப்பட்டு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**3.2.2** ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் செலவு அல்லது மீள் மதிப்பீட்டின் அடிப்படையில் பெறுமானத் தேய்மானத்தின் ஏற்பாடு கணக்கிடப்படுகிறது. இதனால் சொத்து வகையின் மதிப்பிடப்பட்ட வாழ்க்கைக்கு பொருத்தமான காலத்தில் சொத்துச் செலவு சீர் செய்யப்படுகிறது. சொத்துக்கள் பயன்படுத்துவதற்குக் கிடைக்கும் போது தேய்மானம் வசூலிக்கப்படுகிறது மற்றும் சொத்து விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள விதத்தில் தெளிவுபடுத்தப்படும் திகதியின் தொடக்கத்தில் நிறுத்தப்படும். மோட்டார் வாகனங்களின் 10% காட்சித் திரை மதிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேய்மான விகிதங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அனுமதிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) கட்டிடங்கள் – அலுவலகம் | 2 ½ % | ஆண்டொன்றிற்கு |
| - மற்றவை | 5% | ஆண்டொன்றிற்கு |
| 2) மோட்டார் வாகனங்கள் | 20% | ஆண்டொன்றிற்கு |
| 3) ஆலை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | | |
| அலுவலக உபகரணங்கள் மற்றும் நலன்புரி பொருட்கள் | 15% | ஆண்டொன்றிற்கு |
| 4) ஆலை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | | |
| - மின் பிறப்பாக்கிகள் | 15% | ஆண்டொன்றிற்கு |
| 5) ஆலை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | | |
| - நிர்மாணம் | 15% | ஆண்டொன்றிற்கு |
| 6) ஆலை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | | |
| - பொது | 15% | ஆண்டொன்றிற்கு |
| 7) தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் | 10% | ஆண்டொன்றிற்கு |
| 8) கணினி மற்றும் துணைக்கருவிகள் | 20% | ஆண்டொன்றிற்கு |

**3.3 முதலீடுகள்**

**3.3.1 இணை நிறுவனங்களில் முதலீடு செய்தல்.**

இணை நிறுவனத்திலான முதலீடானது செலவுக் கணக்கில் மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் ஒரு நீண்ட கால முதலீடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. முதலீட்டு நிறுவனத்தின் நிதி மற்றும் இயக்க கொள்கை முடிவுகளில் அதிகார சபைக்கு குறிப்பிடத்தக்க செல்வாக்கு இல்லை, எனவே உரிமையாண்மை முறையை ஏற்றுக்கொள்வது பொருத்தமற்றது.

**3.3.2 பிற முதலீடுகள்**

பிற முதலீடுகள் இருப்புநிலைக் குறிப்பில் நீண்ட கால முதலீடாகக் கருதப்பட்டு, செலவில் குறிப்பிடப்படுகின்றன.

**3.4 சரக்கு இருப்புகள்**

சரக்கு இருப்புகளானது குறைவான செலவு மற்றும் தேறிய உணரக்கூடிய பெறுமதியாக மதிப்பிடப்படுகின்றன. மெதுவாக நகரும், குறைபாடுள்ள மற்றும் காலாவதியான பங்குகளுக்கு தேவையான இடங்களில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**3.5 வணிக மற்றும் பிற பெறுகைகள்**

வணிகம் மற்றும் பிற பெறுகைகள் அடைய மதிப்பிடப்பட்ட பெறுமதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3.6 பணம் மற்றும் பண உரிமையாண்மை.**

பணம் மற்றும் பண உரிமையாண்மை என்பன பண மீதிகள் மற்றும் வங்கி மேலதிகபற்று ஆகியவற்றிற்கு இணங்கியது ஆகும், அவை தேவைக்கேற்ப திருப்பிச் செலுத்தப்படுகின்றன மற்றும் இ.ம.அ.ச. இன் பண முகாமைத்துவத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளன. அவை பணப் பாய்ச்சல் அறிக்கையின் நோக்கத்திற்காக பணத்தின் ஓர் அங்கமாக சேர்க்கப்பட்டுள்ளது.

**3.7 வெளிநாட்டு உதவி**

2012 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நன்கொடை முகவர் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த கொடுப்பனவுகளில் அறிவிக்கப்பட்ட வெளிநாட்டு உதவிகளைப் பயன்படுத்துதல். வெளிநாட்டு நாணயங்களில் செலவீனங்களானது கொடுப்பனவு திகதிகளில் நிலவும் செலாவணி வீதங்களின் மீது ரூபாவுக்கு மாற்றப்பட்டன.

**3.8 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்**

இருப்புநிலைக் குறிப்பில் தற்போதைய பொறுப்புகள் என வகைப்படுத்தப்படும் பொறுப்புகள், இருப்புநிலைக் குறிப்பு திகதியில் இருந்து தேவையின் பேரில் அல்லது ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய கடப்பாடு ஆகும். நடப்புப் பொறுப்புகள் என வகைப்படுத்தப்படும் விடயங்கள் இருப்புநிலைக் குறிப்புத் திகதியில் இருந்து ஓராண்டு காலத்திற்கு மேல் காலாவதியாகும் கடப்பாடுகள் ஆகும்.

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் அறியப்பட்ட அனைத்து பொறுப்புகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**3.9 ஓய்வு பெறும் உதவித் திட்டம்**

அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வுப் பணிக்கொடைகளை பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டின் கணக்கீடு, நிதியாண்டின் இறுதியில், சேவையின் முதல் ஆண்டிலிருந்து தொடங்கும் ஒவ்வொரு ஆண்டினதும் அரை மாத தகுதிச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டது.

**3.10 வருமானக் கூற்றுக்கள்**

**3.10.1.** இ.ம.அ.ச வருவாய் என்பது பொது கருவூலத்திலிருந்து பெறப்பட்ட மீண்டும் மீண்டும் கிடைக்கும் மூலதன மானியம் மற்றும் குத்தகை வாடகை வருவாய், அரசு நிலத்திலிருந்து குத்தகை வாடகை வருமானம், குடியிருப்புகளிலிருந்து பெறப்பட்ட வாடகைகள் மற்றும் பங்குவீத உரிமை மற்றும் முதலீடு மற்றும் வட்டியிலிருந்து பெறப்பட்ட வருமானம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**3.10.2** வருவாய் என்பது, அந்த பொருளாதார நன்மைகள் இ.ம.அ.சபைக்கு பாயும் என்றும், நம்பத்தகுந்த வகையில் அளவிடப்பட முடியும் என்றும் அறியப்படுகின்றது.

மற்ற வாடகைகள், பங்குவீத உரிமைகள், வட்டி வருமானம் ஆகியவை ஒரு திரட்டல் அடிப்படையில் அறியப்படுகின்றது.

**3.10.3** அரச மானியங்களானது 'மூலதன மானியம் மற்றும் மீண்டுவரும் மானியங்கள்' என அறியப்படுகின்றது.

மானியங்களானது ஈடுசெய்ய உத்தேசித்துள்ள தொடர்புடைய செலவினங்களாக அறியப்படுவதுடன், இ.ம.அ.ச. அங்கீகரிக்கும் காலகட்டங்களில் முறையான அடிப்படை ரீதியில் மீண்டுவரும் மானிய இலாபம் அல்லது இழப்பாக அறியப்படுகின்றது.

நிதி நிலை கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான மூலதன மானியங்களானது வேறுபட்ட வருமானமாக மானியங்களாக இருந்து பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. சொத்துக்களின் பயனுள்ள வாழ்க்கை மீதுள்ள முறையான அடிப்படை மீதான நிதி செயல்திறன் அறியப்படுகின்றது.

**3.11 செலவினம்**

நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகள் மற்றும் செயல்திறன் நிலையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைப் பராமரிப்பதற்கான அனைத்து செலவுகளும் ஆண்டுக்கான இலாபம் / இழப்பை அடைவதில் வருமான அறிக்கைக்கு வசூலிக்கப்பட்டுள்ளன. மோசமான மற்றும் சந்தேகத்திற்குரிய கடன்கள், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான அனைத்து அறியப்பட்ட பொறுப்புகள் மற்றும் பெறுமானத் தேய்மானம் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**3.12 இருப்புநிலைக் குறிப்புக்குப் பிந்தைய நிகழ்வுகள்**

இருப்புநிலைக் குறிப்புத் திகதிக்குப் பிறகு நிகழும் அனைத்து பொருள் நிகழ்வுகளும் தேவையான இடங்களில் சீர் செய்யப்பட்டன.

**3.13 தற்செயல் நிகழ்வுகள்**

31.12.2020 ஆம் திகதியாகும் போது இலங்கை மகாவலி அதிகார சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு வழக்குகளின் மீதான தொடர்ச்சியான தற்செயல் பொறுப்பு ரூ.34,858 (M) ஆகும்.

**3.14 முடிவுருத்தல்**

வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிறுவனமானது கடன் வழங்குனர் தன்னார்வ முடிவுருத்தலின் கீழ் உள்ளது.

**மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம்,**

**2020.12.31 ஆம் திகதியின் போதான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்**

**(கடன்வழங்குனர் தன்னார்வ முடிவுருத்தலின் கீழ்)**

| | குறிப்பு | 2020 | 2019 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 02 | 3 | 3 |
| முதலீடு | 03 | 2,794,671 | 2,794,671 |
| | | 2,794,671 | 2,794,671 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| சிங்கர் இயந்திர இருப்புக்கள் | | 29,480 | 29,480 |
| வட்டிப் பெறுகைகள் | 04 | 380,726 | 380,726 |
| அழுத்தமான கட்டுப்பாட்டு கணக்கு | | 28,336 | 28,336 |
| வருமான வரி மீளளிப்பு | 09 | 62,008 | 62,008 |
| ஏனைய பெறுகைகள் | 05 | 25,000 | 25,000 |
| கருவூல கட்டணப் பட்டியல்கள் | | 9,455,896 | 9,455,896 |
| வங்கியல் உள்ள தொகை | 06 | 4,068,828 | 3,598,807 |
| கையிருப்பில் உள்ள தொகை | | 2,521 | 2,521 |
| | | 14,052,795 | 13,582,774 |
| **மொத்த சொத்துக்கள்** | | **16,847,469** | **16,377,448** |
| | | | |
| **உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **உரிமையாண்மை மற்றும் ஒதுக்குகள்** | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | 07 | 10,398,000 | 10,398,000 |
| பெறப்பட்ட நிதி | 08 | 10,150,325 | 10,150,325 |
| இ.ம.த.ச. இருந்தான பங்களிப்பு | | 432,000 | 432,000 |
| வைத்திருக்கப்படும் இலாபங்கள் (இழப்புக்கள்) | | (4,594,021) | (5,116,862) |
| **மொத்த உரிமையாண்மை** | | 16,386,304 | 15,863,463 |
| | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| அட்டுறுச் செலவுகள் | 10 | 381,208 | 381,208 |
| மொ.மீ. முன்கூட்டிப் பெறப்பட்ட வட்டி | | 79,957 | 132,777 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 461,165 | 513,985 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | **16,847,469** | **16,377,448** |

## 3.15 அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், வீதிகள், குளங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் மற்றும் காணிகளின் சொத்துக்கள்.

2020.12.31 ஆம் திகதியாகும் போது மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், வீதிகள், குளங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் மற்றும் காணிகள் ஆகியவற்றின் சொத்துக்களின் சாராம்சம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3.15.1 குளங்களின் எண்ணிக்கை

| வலயம் | குளங்களின் எண்ணிக் கை | குளத்தின் கொள்ளளவு (AC,FT) | அணையின் உயரம் (M) | அணையின் நீளம் (M) | குளத்தின் பரப்பளவு (HA) |
|---|---|---|---|---|---|
| பி வலயம் | 76 | 10,204 | - | - | 18,214 |
| சி வலயம் | 52 | 20,461 | 132 | - | 399 |
| டி வலயம் | 52 | 28,110 | - | - | - |
| ஜி வலயம் | 17 | 708 | 277 | 6,567 | - |
| எச் வலயம் | 127 | 23,031 | 253 | 11,682 | 2,888 |
| எல் வலயம் | 31 | 30,426 | - | - | - |
| வலவ வலயம் | 22 | 54,948 | - | - | - |
| ரம்பகண் ஓயா | 73 | 48,270 | - | - | - |
| ஹுருளு வெவ | 13 | 6,511 | 31 | - | 1,090 |
| **கூட்டுத் தொகை** | **463** | **222,669** | **693** | **18,249** | **22,591** |

### 3.15.2 கால்வாய்களின் எண்ணிக்கை

| வலயம் | விநியோகக் கால்வாய் (km) | களக் கால்வாய் (km) | பிரதான கால்வாய் (km) | கிளைக் கால்வாய் (km) |
|---|---|---|---|---|
| பி வலயம் | 480 | 1,265 | 53 | 66 |
| சி வலயம் | 560 | 1,326 | 29 | 125 |
| எச் வலயம் | 363 | 1,212 | 103 | 80 |
| எல் வலயம் | 50 | 100 | 610 | (வடிகால் கால்வாய்) |
| வலவ வலயம் | 416 | 1,324 | 90 | 106 |
| ஹுருளு வெவ | 100 | 212 | 34 | 4 |
| **கூட்டுத் தொகை** | **1,969** | **5,439** | **919** | **381** |

### 3.15.3 வீதிகள்

| வீதிகள் | எல் வலயம் (km) | வலவ வலயம் | பி வலயம் (km) |
|---|---|---|---|
| பிரதான வீதிகள் | 100.0 | 51.0 | 549.0 |
| சிறு கிராமிய வீதிகள் | 250.0 | - | - |
| சந்தை வீதிகள் | 12.5 | - | - |
| விவசாய வீதிகள் | 25.0 | - | - |
| பாலங்கள் | 5.0 | - | - |
| மதகுகள் | 125.0 | - | - |
| ஆற்றிடைப் பாதை | 10.0 | - | - |
| **கூட்டுத் தொகை** | **527.5** | **51.0** | **549.0** |

### 3.15.4 நீர் விநியோகம் மற்றும் கிணறுகள்

| வீதிகள் | எல் வலயம் (எண்ணிக்கை) | ஹுருளுவெவ (எண்ணிக்கை) |
|---|---|---|
| குடிநீர்க் கிணறுகள் | 350.0 | - |
| விவசாயக் கிணறுகள் | 150.0 | 297.0 |
| ஆழ் துளைகள் | 100.0 | - |
| மேல் நிலைத் தொட்டிகள் | 100.0 | - |
| விவசாய ஆலை | - | 1.0 |
| குழாய்க் கிணறுகள் | - | 48.0 |
| **கூட்டுத் தொகை** | **700.0** | **346.0** |

### 3.15.5 அணைக்கட்டுக்களின் எண்ணிக்கை

| அணைக்கட்டு | செலவினம் (பில்லியன் ரூபாய்) |
|---|---|
| கொத்மலை | 13.0 |
| விக்டோரியா | 9.8 |
| ரன்தெனிகல | 5.8 |
| ரண்தம்பே | 3.2 |
| பொல்கொல்லை | 0.09 |
| போவதென்ன | 0.05 |
| மினிப்பே | 0.65 |
| ரத்கிந்த | 1.9 |
| மாதுறு ஓயா | 2.6 |
| உடவலவ | 0.14 |
| சந்திரிக்கா வாவி | 0.08 |
| மொரகஹகந்த | 45.3 |
| **கூட்டுத் தொகை** | **82.61** |

### 3.15.6 இலங்கை மகாவலி அதிகார சபையின் காணிகள்

| வலயம் | மொத்த காணிகள் (HA) | கையுதிர்க்கப்பட்ட காணிகள் (HA) | எஞ்சியுள்ள காணிகள் (HA) |
|---|---|---|---|
| பி வலயம் | 95,687.0 | 28,448.0 | 67,239.0 |
| சி வலயம் | 52,564.0 | 41,024.0 | 11,540.0 |
| டி வலயம் | 16,396.0 | 1,597.0 | 14,799.0 |
| எச் வலயம் | 80,803.0 | 33,191.0 | 47,612.0 |
| ஜி வலயம் | 11,940.0 | 9,560.0 | 2,350.0 |
| எல் வலயம் | 37,338.0 | 4,762.0 | 32,576.0 |
| விக்டோரியா | 311,118.0 | 3,384.0 | 307,576.0 |
| வலவ வலயம் | 57,775.0 | 34,506.0 | 23,296.0 |
| ஹுருளு வெவ | 9,704.0 | 6,904.0 | 2,800.0 |
| ரம்பகண் ஓயா | 134,002.0 | 6,111.0 | 127,891 |
| **கூட்டுத் தொகை** | **807,327.0** | **169,517.0** | **637,810.0** |

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

# பாகம் - III

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை - 2020

## தேசிய கணக்காய்வு அலுவலகம்

பணிப்பாளர் நாயகம்,

இலங்கை மகாவலி அதிகார சபை.

**இலங்கை மகாவலி அதிகார சபையின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று மற்றும் ஏனைய சட்ட மற்றும் பிரமாண அவசியங்கள் குறித்து 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 ஆவது உறுப்புரைக்கு அமைவான கணக்காய்வாளர் நாயக அறிக்கை.**

------------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

-------------------

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

--------------------------------------------------------------

இலங்கை மகாவலி அதிகார சபையின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் தினத்துடன் நிறைவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்தினத்துடன் நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுடன் தொடர்புடைய குறிப்புக்கள், சாராம்சப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்கியல் கொள்கைகளைக் கொண்ட 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டது. அரசியமைப்பு யாப்பின் 154 (6) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையானது பகுதியில் விளக்கப்பட்டுள்ள விடயங்கள் மூலம் ஏற்படுகின்ற தாக்கங்களைத் தவிர, இலங்கை மகாவலி அதிகார சபையின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமை மற்றும் அத் தினத்துடன் நிறைவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினை மற்றும் காசுப் பாய்ச்சல்கள் என்பன இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையாக மற்றும் நியாயமான நிலைமையை உறுதி செய்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

------------------------------------------------------------------------

(அ) மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம் மற்றும் மகாவலி ஆலோசனைச் சேவைகள் பணியகம் (தனியார்) நிறுவனங்களின் மீளாய்வு ஆண்டின் நிதின் கூற்றானது 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதியாகும் போதும் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. இதனால் அதிகார சபையின் நிதிக் கூற்றை அந்நிறுவனங்களின் நிதிக்

கூற்றுகளுடன் ஒருங்கிணைக்கும் போது கணக்காய்வு செய்யப்படாத நிதிக் கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டு இருந்தது.

(ஆ) அதிகார சபையினால் 8,708 கிலோ மீட்டர் நீளமான கால்வாயை ரூ. 74,989,140,000 தொகைக்கு முதல் தடவையாக நிலையான ஆதனமாக நிதிக் கூற்றிற்கு உள்ளடக்கி இருந்தாலும் 01 ஆம் இலக்க இலங்கை அரச துறையின் கணக்கியல் தர நியமத்தின் பிரகாரம் அக்கால்வாயானது விலை மதிப்பீடு செய்யப்பட்ட விதம் மற்றும் அதற்குரிய கணக்கியல் கொள்கையானது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாமல் இருந்ததுடன் அக்கால்வாயானது நிலையான ஆதனத்தில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

(இ) இலங்கை அரச துறையின் கணக்கியல் தர நியம இலக்கம் 07 இன் பிரகாரம் அரச துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி ஆதனங்களை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டுமாக இருந்தாலும் மகாவலி அதிகார சபையினால் தாபரிப்பு செய்யப்படுகின்ற பிரதான அணைகள் 12 மற்றும் குளங்கள் 463 இற்காக விலை மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) 2015 – 2018 காலப் பகுதியில் ரூ. 80,000,000 செலவில் வெலிகந்த மற்றும் வெலிஓயா வலயங்களில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் 30 நிலையான ஆதனமாக கணக்கீடு செய்யப்படுவதற்கு மாற்றமாக செலவினமாக பதிவழிக்கப்பட்டு இருந்த காரணத்தால் வருடத்தின் பற்றாக்குறையானது அத்தொகையை விட அதிகமாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருந்தது. அவ்வாறே, அவற்றின் நிர்வாக நடவடிக்கைகள் ஒப்பந்தம் இடப்படாமல் விவசாய அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டு இருந்தன.

(உ) அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல் செயற்திட்டத்தின் மூலம் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டு இருந்த செலவினம் ரூ. 671,503,748 ஆன நிலையான ஆதனத்தின் ஒரு பகுதியானது ரூ. 537,950,118 இற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு இருந்தாலும் எஞ்சிய ரூ. 13,355,630 பெறுமதியான ஆதனம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. இவ் ஆதனங்கள் மற்றும் மொரகஹகந்த செயற்திட்டத்தின் மூலம் கையளிக்கப்பட்டு இருந்த ரூ. 31,764,267,274 பெறுமதியான மொரகஹகந்த நீர் மின் உற்பத்தி நிலையத்திற்குச் சொந்தமான ஆதனங்களானது மானியமாக கணக்கீடு செய்யப்படாமல் பற்றாளர்கள் என கணக்கீடு செய்யப்பட்டு இருந்தன. இதனால் அதிகார சபையின் நடமாடும் பொறுப்புக்கள் மற்றும் தேறிய ஆதனங்கள் முறையே ரூ. 32,302,237,392 அதிகமாக மற்றும் குறைவாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருந்தன.

(ஊ) பெறுமதி ரூ. 20,477,000 ஐ உடைய முதலீடுகளுக்குரிய பகுதிச் சான்றிதழ் மற்றும் ரூ. 3,360,389 பெறுமதியான சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்களுக்குரிய மீதிகளை உறுதி செய்தல் மற்றும் வைப்புச் சான்றிதழானது கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை.

(எ) இலங்கைப் அரச துறைகளின் கணக்கீட்டு நியமங்களின் இலக்கம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் நியாயமான பெறுமதி கருத்திற் கொள்ள வேண்டிய அளவு மாற்றம் அடைகின்ற மற்றும் அவசரமாக மாற்றங்களுக்கு உள்ளாகின்ற ஆதனங்களை மீள் மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டுமாக இருந்தாலும், அதிகார சபையினால் 1984 – 1989 ஆம் காலப்

பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட செலவினமான ரூ. 64,320,853 பெறுமதியான காணித் துண்டுகள் 02 தொடர்பாக அவ்விதத்தில் செயற்பட்டு இருக்கவில்லை என்பதுடன், அவற்றின் செலவினமோ கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே, அதிகார சபையினால் தமது வலய அலுவலகங்கள், பிரிவுகள், உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் சுற்றுலா மாளிகைகள் என்பன அமைந்துள்ள காணிகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஏ) மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு செய்யும் செலவுகளில் தோற்றுவிக்கப்படுகின்ற மூலதனத்தின் தன்மையைச் சேர்ந்த ஆதனங்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு உகந்த கணக்கியல் தர நியமமானது அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க இயக்கற் பிரிவின் ரூ. 15,023,938 வருமான செலவின மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு செய்யும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. இதனால் வருடத்தின் பற்றாக்குறையானது அப்பெறுமதியில் இருந்து அதிகமாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(ஐ) மகாவலி அதிகார சபையினால் அமுல்படுத்தப்படுகின்ற கடன் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அதிகார சபையினால் பரிந்துரைக்கப்படுகின்ற குடியேற்றவாசிகளுக்கு கடன் வழங்குவதற்காக பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த தொகையில் ரூ. 150,703,811 பெறுமதியான கடன் வெளியிடப்பட்டு இருந்தாலும் அதற்குரிய ஒவ்வொரு கடன்பட்டோர் மீதிகள் மற்றும் நேரப் பகுப்பாய்வானது நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்கியதாக என்னால் கணக்காய்வு முன்னெடுக்கப்பட்டது. இக்கணக்காய்வு நியமத்தின் கீழான எனது பொறுப்பு, இவ் அறிக்கையின் நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் தெளிவுபடுத்தப்பட்டு உள்ளது. எனது முனைப்பழியுள்ள அப்பிப்பிராயத்திற்காக அடிப்படை ஒன்றை வழங்கும் நோக்குடன் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் பொருண்மையானது மற்றும் பொருத்தமானது என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய விபரங்கள்

---

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கி உள்ள எனினும், நிதிக் கூற்று மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் மூலம் கருதப்படுகின்றது. இவ் ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்.

நிதிக் கூற்று தொடர்பான எனது கருத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாது என்பதுடன், நான் அது தொடர்பாக எவ்விதத்திலும் உறுதியளிக்கவோ கருத்து தெரிவிக்கவோ மாட்டேன்.

நிதிக் கூற்று தொடர்பான எனது கணக்காய்விற்கு உரியதாக, எனது பொறுப்பாக இருப்பது யாதெனில் மேற்குறிப்பிட்ட இனங்காணப்பட்ட ஏனைய தகவல்கள் பெற்றுக் கொள்ள முடியுமான போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுடனோ அல்லது கணக்காய்வின் போதோ வேறு விதத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவிற்கு அமைய பொருண்மையான விதத்தில் பொருத்தம் அற்றதா என்று கருத்தில் கொள்வதாகும்.

அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை வாசிக்கும் போது, அதில் பொருண்மையான அளவு பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளது என நான் ஊகித்தால் பிழை திருத்தம் செய்வதற்காக நிர்வகிக்கின்ற தரப்பினருக்கு அவ்விடயம் தொடர்பாடல் செய்யப்படல் வேண்டும். மேலும் பிழை திருத்தம் செய்யப்படாமல் பிழையாக குறிப்பிடப்பட்டு இருப்பின் அவை அரசியலமைப்பு யாப்பின் 154 (6) ஆம் உறுப்புரைக்கு அமைய என்னால் காலப்போக்கில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### 1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வாகிக்கின்ற தரப்புகளின் பொறுப்புக்கள்.

---

இந்நிதிக் கூற்றானது இலங்கைப் பொதுத் துறைகளின் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்கியதாக தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் முன்வைத்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தேவைப்படுகின்ற உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகார சபையைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதுடன், முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு எண்ணுவதாயின் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாத வேளைகளில் தொழிற்பாடுகளை இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பட்சத்தைத் தவிர தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் அடிப்படையின் கீழ் கணக்கு வைத்தல் மற்றும் அதிகார சபையை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகார சபையின் நிதிகளை ஆவணமாக்கும் செயன்முறைகள் தொடர்பான பொறுப்பானது நிர்வாகிக்கும் தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டில் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) உப உறுப்புரைக்கு அமைய அதிகார சபையின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயன்ற வகையில் சுய வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்து உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களைப் பராமரித்து வர வேண்டும்.

### 1.5 நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்.

---

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றைப் பெற்றுக் கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது

எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்பொழுதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகமோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார தீர்மானங்களில் ஏற்படுகின்ற தாக்கங்களில் தங்கியுள்ளன.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புரை மற்றும் தொழில்சார் சந்தேக கண்ணோட்டத்துடன் முன்னெடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அப்பிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்துக்களை இனங்காணுதல் மற்றும் விலை மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படும். பிழையாக குறிப்படுவதால் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, பிழையான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டைத் தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக நிர்வாகத்தின் பயனுறுதி தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமலாயினும்,, சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக நிர்வாகம் தொடர்பாக பரிந்துணர்வு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களின் பொருத்தமுடைமையும் மதிப்பீடு செய்யப்பட்டது.

  பயன்படுத்தப்பட்ட கணக்கியல் முறைமைகளின் பொருத்தமுடைமை, கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக அதிகார சபையின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தும் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதாக நான் அனுமானிப்பதாயின் நிதிக் கூற்றுக்களுக்கு அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனத்தை ஆற்றுப்படுத்த வேண்டும் என்பதுடன், அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையானதாக இல்லை எனில் எனது அபிப்பிராயத்தை திரிவுபடுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பானது முடிவடையக் கூடும்.

நீதிக் கூற்றுக்களின் கட்டமைப்புக்கள் மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாக இருந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்டு உள்ளமை மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக நிர்வாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகத் தரப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது.

**2. ஏனைய சட்ட மற்றும் பிரமாணத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை.**
---------------------------------------------------------------------------------------------------

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (அ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படுவதுடன், எனது பரிசீலனையின் மூலம் விளங்குகின்ற விதத்தில் உரிய நிதி அறிக்கைகளை அதிகார சபையானது பேணி வந்துள்ளது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய அதிகார சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றானது கடந்த ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட 1.2 (அ),(இ),(ஈ),(உ),(எ),(ஏ) மற்றும் (ஐ) பந்திகளில் உள்ளடக்கப்பட்டு உள்ள பரிந்துரைகளைத் தவிர ஏனைய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு உள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளுக்கு அமைய மற்றும் பொருண்மையான காரணிகளுக்கு மட்டுப்படுத்துவதன் மூலம், பின்வருவனவற்றை பிரகடனப்படுத்தும் அளவிற்கு எதுவும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (இ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய அதிகார சபையின் கட்டுப்பாட்டுச் சபையில் எவரேனும் ஒரு உறுப்பினரிற்கு அதிகார சபை சம்பந்தப்பட்டு ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாக அல்லது வேறு விதமாக பொதுவான வியாபார நிலைமையைத் தாண்டி தொடர்பு உள்ளதாக.

.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஊ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர வேறு ஏதேனும் உரிய எழுத்து மூல சட்டம் ஒன்றிற்கோ அல்லது அதிகார சபையின் கட்டுப்பாட்டுச் சபையின் மூலம் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஆணைகளுக்கு இணங்காத விதத்தில் செயற்பட்டுள்ளதாக.

| சட்ட திட்டங்கள்/ ஆணைக்கு ஆற்றுப்படுத்துல் | | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | 2002 ஆம் ஆண்டின் 14 இலக்க சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு ஏற்ப வரிச் (மறுசீரமைக்கப்பட்ட) சட்டத்தின் 10 (ஆ) உறுப்புரை. | 12 மாத காலப்பகுதியில் பொருட்கள் மற்றும் சேவை வழங்கல்களின் மொத்தப் பெறுமதியானது 12 மில்லியன் ரூபாயை மீறும் பட்சத்தில் சட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு ஏற்ப வரிக்காக பதிவு செய்யப்பட வேண்டும் என்றாலும், அதிகார சபையால் உரிய வருமானத் தோற்றுவாய்களினால் கடந்த ஆண்டில் 1,920 மில்லியன் ரூபாய் மற்றும் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் 755 மில்லியன் ரூபாய் பெறுமதியான வருமானங்கள் கிடைக்கப்பெற்று இருந்தாலும் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு ஏற்ப வரிக்காக பதிவு செய்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் 3.8.2 உறுப்புரை | ஒவ்வொரு வகைக்கும் சொந்தமான அலுவலக நியைத்தில் பணியாற்ற வேண்டிய உயர்ந்தபட்ச காலப் பகுதியை நிர்ணயிக்க வேண்டி இருந்தாலும், இலங்கை மகாவலி அதிகார சபையின் இடமாற்றக் குழுவினால் தயாரிக்கப்பட்ட இடமாற்ற செயல்முறையில் அவ்விதமாக உயர்ந்தபட்ச காலப்பகுதியானது நிர்ணயிக்கப்பட்டு இருக்காத காரணத்தால் கணக்காய்வு தினமான 2021 ஆம் ஆண்டின் பெப்ரவரி 02 ஆம் திகதியாகும் போது மகாவலி பாதுகாப்புப் படையணியில் சிவில் பதவியணியின் ஊழியர்கள் 11 பேர் 05 வருடங்களுக்கும் அதிகமான காலமும், ஊழியர்கள் 13 பேர் 10 வருடங்களுக்கு அதிகமான காலமும், 06 பேர் 20 வருடங்களுக்கும் அதிகமான காலம் பணியாற்றி வந்துள்ளனர். |
| (இ) | 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 02 ஆம் திகதி பீ.இ.டி. 12 ஆம் இலக்க அரச வியாபார சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் உறுப்புரை | நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்று மற்றும் ஆண்டறிக்கையின் வரைவு என்பன கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வேண்டும் எனினும், மீளாய்வு வருடத்தின் நிதிக் கூற்றுடன் ஆண்டறிக்கையின் வரைவு முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை. |
| (ஈ) | கணக்குத் தணிக்கைப் பணிப்பாளர் அலுவலகத்தின் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வெளியிடப்பட்டு இருந்த நிதிசாரா சொத்துக்களை விலை மதிப்பீடு செய்யும் வழிகாட்டல்கள் | |

| | |
|---|---|
| 2.1 ஆம் பந்தி | அரசாங்கத்திற்குச் சொந்தமான சகல காணிகளையும் விலை மதிப்பீடு செய்வது அத்தியாவசியமானது என்பதுடன், அதில் அரச அலுவலகங்கள், விடுமுறை விடுதிகள், வேலைத் தளங்கள் என்பன அமைந்துள்ள அரச காணிகளை விலை மதிப்பீடு செய்து கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். எனினும், இலங்கை மகாவலி அதிகார சபையின் அலுவலகங்கள், விடுமுறை விடுதிகள், வேலைத் தளங்கள் என்பன அமைந்துள்ள காணிகளை விலை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. |
| 2.2 ஆம் பந்தி | புராதன மரபுரிமையாக அடையாளம் காணப்பட்ட கட்டிடங்கள் தவிர ஏனைய அனைத்து கட்டிடங்களும் விலை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குத் தணிக்கையாளர் நாயகம் அவர்களுக்கு கட்டிடங்கள் தொடர்பாக தவகல்கள் முன்வைக்கப்பட வேண்டும் எனினும் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போதும் அத்தகவல்கள் முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை. |
| (உ) 2009 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதிய 2009/12/04/நிர்வாகம் ஆம் இலக்க மகாவலி அதிகார சபையின் உள்ளக சுற்றறிக்கையின் 3.1 ஆம் உறுப்புரை | பிற நிறுவனங்களின் அரச ஊழியர்களிடம் இருந்து உத்தியோகபூர்வ இல்ல வாடகையாக மாதாந்த சம்பளத்தில் இருந்து12.5 % மாதாந்த வாடகையாக அறவிடப்பட வேண்டும் எனினும் அதற்கு முரணாக கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 08 ஆம் திகதியாகும் போது திகன பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க இயக்கற் பிரிவிற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்கள் 39 இற்காக பல்வேறு விதமான மாதாந்த சாடகை அறவிடப்பட்டு இருந்தது. |

(ஊ) 2017 மே 09 ஆம் திகதிய டிஜீ/05/2017 ஆம் இலக்க மகாவலி அதிகார சபையின் உள்ளக சுற்றறிக்கை

i. ஏ 1-1- ஆம் உறுப்புரை

வலயத்தின்/பிரிவின் வீட்டுக் குழு மூலம் உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களின் தேவைப்பாடுகளை இனங்கண்டு பணிப்பாளர் நாயகம் அவர்களின் முன் அனுமதியுடன் மாத்திரம் வெளி அரச உத்தியோகத்தர்களுக்கு உத்தியோக பூர்வ இல்லங்களை வழங்க வேண்டி இருந்தாலும் அதற்கு முரணாக பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க இயக்கற் பிரிவினால் உத்தியோகபூர்வ இல்லங்கள் 05 மூன்றாம் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டு இருந்தன.

ii. ஏ 1-1 7 ஆம் உறுப்புரை

முறையான எழுத்து மூல ஒப்படைப்பு ஆவணம் அல்லது உடன்பாட்டு ஒப்பந்தத்திற்கு உட்பட்டு மாத்திரம் உத்தியோகபூர்வ இல்லங்கள் வெளி அரச உத்தியோகத்தர்களுக்கு உத்தியோக பூர்வ இல்லங்களை வழங்க வேண்டி இருந்தாலும் அதற்கு முரணாக பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க இயக்கற் பிரிவிற்குச் சொந்தமான 24 உத்தியோகபூர்வ இல்லங்கள் எவ்வித ஒப்பந்தங்களும் இல்லாமல் இலங்கை மின்சார சபையின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன. இவ் உத்தியோகபூர்வ இல்லங்கள் 1985/ 1986 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டு இருந்ததுடன் அவற்றின் தற்போதைய குடியிருப்பாளர்களை இனங்கண்டு அவர்கள் உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக உரிமை உள்ள ஊழியர்கள் எனில் அவர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு அல்லது சட்ட விரோத குடியிருப்பாளர்கள் எனில் சட்ட விரோத குடியிருப்பை அகற்றுவதற்கு அவசியமான சட்ட ரீதியான நடவடிக்கைகள் பின்பற்றி இருக்கவில்லை.

| | |
|---|---|
| iii. ஏ – 3 மற்றும் சி - 1 ஆம் உறுப்புரைகள் | அதிகார சபையின் வீடுகள் மற்றும் கட்டிடங்களை வகைப்படுத்தி வெவ்வேறாக ஆதன ஆவணங்கள் பேணப்பட வேண்டும் எனினும் பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் இயக்கற் பிரிவினால் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் கட்டிடங்கள் வகைப்படுத்தப்பட்டு நிலையான ஆதன ஆவணங்கள் தாபரிக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும், நடாத்திச் செல்வது பொருளாதார ரீதியில் விளைத்திறன் அற்ற வீடுகள் அல்லது கட்டிடங்களை உரிய முறையில் இனங்கண்டு அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான பிரேரணைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமாக இருந்தாலும் அவ்விதமாக செயற்பட்டு இருக்கவில்லை. உரிய முறையில் தாபரிக்காமையினால் காடு முளைத்து கைவிடப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் 03 ஆகும். |

(எ) 2017 மார்ச் மாதம் 08 ஆம் திகதிய DG/04/2017 ஆம் இலக்க மகாவலி அதிகார சபையின் உள்ள சுற்றறிக்கை

விவசாய அமைப்பு ஒன்றிற்கு ஒப்பந்தம் ஒன்றை வழங்கும் போது அலகு முகாமையாளர், தாபன அபிவிருத்தி உத்தியோகத்தர், பொறியியல் உதவியாளர், தொகுதி முகாமையாளர்,

பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (அபிவிருத்தி), பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (தொழில்நுட்ப சேவைகள்) ஆகிய உத்தியோகத்தர்களால் ஒப்பந்தத்தை வழங்குவது தொடர்பாக தமது பரிந்துரையை எழுத்து மூலம் வதிவிட வணிக முகாமையாளர்/ செயற்திட்ட பணிப்பாளரிற்கு முன்வைக்கப்பட்ட பின்னர் ஒப்பந்தம் வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு இருப்பினும், போவதென்ன விடயப் பொறுப்பு பொறியியல் அலுவலகத்தினால் கண்டலம குளத் தடுப்புச் சுவரை தாபரிக்கும் நடவடிக்கைகளுக்கு உழைப்பாளர்களைப் பெற்றுக் கொண்டமைக்காக ரூ. 1,430,000 பெறுமதிக்கு கண்டலம இடது கால்வாய் மகாவலி விவசாய அமைப்பிற்கு நேரடி ஒப்பந்தத்தை வழங்கும் போது மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் பரிந்துரை இல்லாமல் தொகுதி முகாமையாளரின் பரிந்துரையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டு இருந்தது.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (எ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய அதிகார சபையின் அதிகாரங்கள், பணி வினைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத விதத்தில் செயற்பட்டுள்ளதாக.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஏ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர அதிகார சபையின் வளங்களை சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமானதாக கால வரையறைகளுக்குள் உரிய சட்ட திட்டங்களுக்கு இணங்கியதாக கொள்முதல் செய்து பயன்படுத்தி இல்லாமை.

(அ) அதிகார சபையினால் ரூ. 3,386,358 இற்கு ரண்தம்பே விடயப் பொறுப்பு பொறியியல் அலுவலகத்தை மீள் திருத்தம் செய்வதற்காக ஒப்பந்தம் இட்டிருந்தாலும் ஒப்பந்த காலத்தில் பணிகள் நிறைவு செய்யப்படாது இருந்ததுடன், 08 சந்தர்ப்பங்களில் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டு இருந்தாலும் பணிகள் நிறைவு செய்யாத காரணத்தால் ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனினும் ஒப்பந்தத்திற்குரியதாக ரூ. 169,318 பெறுமதியான செயலாற்றுகை பிணை முறி மற்றும் ரூ. 1,015,907 பெறுமதியான முற்பண பிணை முறியின் பணம் அறவிடப்பட்டு இருக்கவில்லை. இதன் காரணமாக செய்யப்பட்ட பணிகளுக்கு மேலதிகமாக கொடுப்பனவு வழங்கப்பட்டு இருந்த ரூ. 949,015 தொகையை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு வேண்டி ஏற்பட்டது. எஞ்சிய பணிகளை மதிப்பீடு செய்து புதிய ஒப்பந்ததாரி ஒருவருக்கு வழங்குவதற்கு அல்லது உகந்த செயன்முறைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாத காரணத்தால் இவ் அலுவலக கட்டிடம் பயன்படுத்த முடியாமல் காணப்பட்டது.

(ஆ) ஒப்பந்தப் பெறுமதி ரூ. 2,376,972 ஆன மகாவலி பாதுகாப்பு படையணியின் உத்தியோகபூர்வ இல்லத்தின் மீள் திருத்த ஒப்பந்தத்திற்காக தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரிக்கு 2020 ஆம் ஆண்டு 30 ஆம் திகதி ஒப்புக் கொள்ளல் கடிதம் அனுப்பப்பட்டு இருந்தாலும் அத்தினத்தில் இருந்து 14 நாட்களுக்குள் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமாக இருந்தாலும் அவ்வாறு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை. பின்னர் ஒரு வருட காலத்திற்கும் அதிகமான காலம் செலவாகிய பின்னர் அதிகார சபையினால் 2021 பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி அவ் ஒப்பந்த வழங்கல் இரத்துச் செய்யப்பட்டு இருந்தது. மீள் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்படாத காரணத்தால் இவ் உத்தியோகபூர்வ இல்லமானது மேலும் சிதைவடைந்து பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற தன்மைக்கு மாற்றமடைந்து இருந்தது.

**2.3 ஏனைய விடயங்கள்**

-----------------------------------------------------

(அ) அணைப் பாதுகாப்பு மற்றும் நீரியல் வள திட்டமிடல் செயற்திட்டத்தின் மூலம் 2017 ஆம் ஆண்டு அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்று தெஹிஅத்தகண்டிய வதிவிட வணிக முகாமையாளர் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட வாகனம் ஒன்று மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் ஆலோசனை நடவடிக்கைகளுக்காக மெதிரிகிரிய வலயத்தின் சாரதி ஒருவருக்கு வழங்கப்பட்டு இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி வாகனம் விபத்து ஒன்றிற்கு உள்ளாகி உள்ளது. நிதிப் பிரமாணம் 104 (4) இற்கு அமைய சேத நஷ்டம் ஏற்பட்ட தினத்தில் இருந்து 03 மாத காலத்திற்குள் சேதம் தொடர்பாக பூரண அறிக்கை ஒன்று முன்வைக்கப்பட வேண்டுமாக இருந்தாலும் மேற்குறிப்பிட்ட விபத்து இடம்பெற்று 11 மாதங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருந்தாலும் அறிக்கை தொடர்பாக பூரண அறிக்கை முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை. வாகனத்திற்கு நேர்ந்த ரூ. 6,915,484 நஷ்டமானது உரிய பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) மகாவலி பாதுகாப்பு படையணியைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 25 பேர் பிற வெளி நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டு வருவதுடன் அவ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சம்பளமான ரூ. 6,187,072 ஆனது அந்நிறுவனங்களில் இருந்து மீள் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(இ) 2020 ஆம் ஆண்டி டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மகாவலி பாதுகாப்பு படையணியின் 04 பதவிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 15 பேரின் மிகையும், 07 பதவிகளின் 77 பேரின் வெற்றிடங்களும் காணப்பட்டன. மேலும், மகாவலி பாதுகாப்பு படையணிக்குரிய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 11 பேர் பாதுகாப்புக் காவலர்கள் துணைப்பிரிவுகளுக்கு இணைக்கப்படாது பாதுகாப்புக் கடமைகளுக்குப் பதிலாக திகன பாதுகாப்புப் படையணியின் பிரதான அலுவலகத்தில் கடமையில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

(ஈ) அணைப் பாதுகாப்பு மற்றும் நீரியல் வள திட்டமிடல் செயற்திட்டத்தின் மூலம் ரூ. 339,584,727 செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டில் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டு இருந்த பொல்கொல்ல நீர்த்தேக்க நிர்வாக மத்திய நிலைய கட்டிடமானது 02 மாடிகளைக் கொண்டிருந்தாலும், போதியளவு பதவியணி அங்கு இணைக்கப்படாமையினால், அக்கட்டிடமானது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(உ) அதிகார சபைக்குச் சொந்தமான களஞ்சிய சாலைகள் 43 ஆனது 2009 ஆம் ஆண்டில் இருந்து நெல் சந்தைப்படுத்தல் சபையால் பயன்படுத்தப்பட்டாலும், அக்களஞ்சிய சாலைகளுக்காக எவ்வித வாடகைத் தொகையும் 2020 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போதும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. அக்களஞ்சிய சாலையை நெற் களஞ்சியப்படுத்துவதற்காக தர நியமத்திற்கு அமைய மீள் திருத்தம் செய்யும் தேவை இருக்கின்றமையால், அக்களஞ்சிய சாலைகளின் உரிமையை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு கையகப்படுத்துமாறு நெல் சந்தைப்படுத்தல் சபையின் தவிசாளர் அவர்களால் மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும், அக்காணியை ஒப்படைப்பதற்கோ அல்லது வரி அறவிடுவதற்கோ 2020 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போதும் முடியாமல் போயுள்ளது.

(ஊ) 2020 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அதிகார சபையின் காணிகளானது முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவது தொடர்பாக கணக்காய்வில் 10 வலயங்களில் இருந்து தகவல்கள் கோரி இருந்தாலும் 05 வலயங்களில் இருந்து மாத்திரமே உரிய மாதிரிக்கு அமைய தகவல்கள் முன்வைக்கப்பட்டு இருந்தன. இதன் காரணமாக அதிகார சபையினால் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக கையுதிர்க்கப்பட்ட காணிகளின் அபிவிருத்தி தொடர்பான ஒட்டு மொத்த நிலைமையானது கணக்காய்வு செய்வதற்கு முடியாமல் போனது. தகவல்கள் முன்வைக்கப்பட்ட 05 வலயங்களின் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட காணிகளின் பரப்பானது 5,755 ஏக்கராக இருந்ததுடன் அதில் எவ்வித அபிவிருத்தியும் செய்யப்படாத காணிகளின் பரப்பானது 2,121 ஏக்கர்களும், அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற காணிகளின் பரப்பானது 496 ஏக்கர்களும், முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளின் பரப்பானது 3,138 ஏக்கர்களுமாக காணப்பட்டன. அதற்கமைய வழங்கப்பட்ட மொத்த காணிகளின் பரப்பில் 37% ஆனது எவ்வித அபிவிருத்திகளும் செய்யப்பட்டு இருக்கவில்லை.

(எ) கணக்காய்விற்கு தகவல்கள் வழங்கிய 07 வலயங்களின் காணிகள் வழங்கப்பட்ட முதலீட்டாளர்கள் 123 பேரிடம் இருந்து 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது ரூ. 68,598,808 வரித் தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது.

(ஏ) 1947 ஆம் ஆண்டின் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 199 (3) ஆம் பந்தியின் பிரகாரம் அரச காணிகள் தொடர்பான அனைத்து முன்னுரிமை வரிகளுக்கும் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட 21 (1) ஆம் பிரமாணத்தின் கீழ் அமைச்சரின் எழுத்து மூல முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டுமாக இருந்தாலும் எழுத்து மூல முன் அங்கீகாரம் இன்றி

ரம்பகண் ஓயா வலயத்தின் காணிகள் 3,750 ஏக்கர்களின் உடைமையானது முதலீட்டாளர்கள் 07 பேரிற்கு வழங்குவதற்கு பணிப்பாளர்கள் குழாம் அங்கீகாரம் வழங்கி இருந்தது. அவ்வாறே, இக்காணிகளின் உடைமையை வழங்குவதற்கு முன்னர் எவ்வித சூழலியல் தாக்க மதிப்பீடுகளும் முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும், இக்காணிகளுக்காக போட்டித் தன்மை மற்றும் ஒளிவு மறைவற்ற நிலையில் விண்ணப்பங்கள் கோரப்படாமல் தேசிய உணவு உற்பத்தி செயலாற்றுகை குழுவிற்கு ஆற்றுப்படுத்தி முதலீட்டாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. 1947 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 199 (4) ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சர் அவர்களால் வேறு விதமாக கட்டளை இடப்பட்டு இருந்தால் தவிர முன்னுரிமை கொடைப் பத்திரம் அல்லது குத்தகைப் பத்திரத்தை வெளியிடுவதற்கு எண்ணுகின்ற அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அது தொடர்பாக அறிவித்தல் ஒன்றை 21 (2) ஆம் இலக்க அரச காணிகள் பிரமாணத்தின் கீழ் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டுமாக இருந்தாலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. காணிகளை கையுதிர்ப்பதற்கு எதிராக மூன்றாம் தரப்பினரால் நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமையால் முதலீட்டுச் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் முடியாது போயிருந்தது.

டப்லியூ. பீ. சி. விக்ரமரத்ன,
கணக்காய்வாளர் நாயகம்.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான பணிப்பாளர் நாயகத்தின் விளக்கம்.

# பாகம் IV

## இலங்கை மகாவலி அதிகார சபை

### இல. 500, டி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

IEN/ B/ MASL/ 01/ 20/ 12

2021.08.17

கணக்காய்வாளர் நாயகம்,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இலக்கம் 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை

**இலங்கை மகாவலி அதிகார சபையின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் பிரமாணத் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆவது உறுப்புரைக்கு அமைய கணக்காய்வாளர் அறிக்கை.**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக உங்களால் எனக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட _IEN/ B/ MASL/ 01/ 20/12 மற்றும் 2021.07.16 ஆம் திகதிக்குரிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆவது உறுப்புரைக்கு அமைய கணக்காய்வாளர் அறிக்கை தொடர்பான எனது பதில்கள் பின்வருமாறு அமையும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) இலங்கை மகாவலி அதிகார சபையானது தனது நிர்வாக நிறுவனங்களின் கணக்குகளை, ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கும் போது எல்லா ஆண்டுகளிலும் கணக்காய்வு செய்யப்படாத கணக்குகள் பயன்படுத்தப்பட்டு உள்ளன. நிர்வாக நிறுவனங்களும் எல்லா ஆண்டுகளும் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் தமது நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்காக முன்வைத்துள்ளன. எவ்வாறாயினும், நிர்வாக நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைந்த நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டால் எல்லா ஆண்டுகளிலும் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்கு அமைய ஒருங்கிணைந்த நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு முன்வைக்க முடியாமல் போகின்றது.

வரை/ மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில்முயற்சி (தனியார்) நிறுவனமானது 2021.02.24 ஆம் திகதி அந்நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் வரை/ மகாவலி ஆலோசனைச் சேவைகள் பணியகம் (தனியார்) நிறுவனமானது அந்நிறுவனத்தில் நிலவிய சட்ட ரீதியான பிரச்சினைகள் சிலவற்றை தீர்த்ததன் பின்னர் தனது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நிதிக் கூற்றினை கணக்காய்விற்காக முன்வைத்து இருந்தது. *

(ஆ) கால்வாய்களின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியானது "ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின்" கீழ் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டு உள்ளதுடன் இது தொடர்பாக கணக்கியல் கொள்கைக் குறிப்பு இலக்கம் 3.2 இன் மூலம் தெளிவுபடுத்தப்பட்டு உள்ளது.

கால்வாய்களை வளங்குறைப்பதற்கு ஆதனத்தின் ஆக்க வளமுடைய வாழ்வுக் காலம் அவசியம் என்பதால் அது தொடர்பாக தொழில்நுட்ப காரணிகளின் அடிப்படையில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டு 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுடன் முன்வைக்கின்றேன்.

(இ) இலங்கை மகாவலி அதிகார சபையினால் தாபரிக்கப்படுகின்ற பிரதான அணைகள் 12 மற்றும் குளங்கள் 463 இன் உரிமை தொடர்பாக விரிவாக பரிசீலித்து அவற்றை வேறு திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் ஏதேனும் உரிமையின் அடிப்படையில் இறுதிக் கணக்குகளில் நிலையான ஆதனமாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்று பரிசீலித்து எதிர்வரும் காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

(ஈ) இலங்கை மகாவலி அதிகார சபையின் மானியத்தின் அடிப்படையில் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து மகாவலி பி மற்றும் எல் வலயங்களில் மறு இயங்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் 30 ஆனது 80 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டு நிறுவப்பட்டதுடன் அவ்வியந்திரங்கள் சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு உரிய முறையில் ஒப்படைக்கப்பட்டு (கையுதிர்க்கப்பட்டு) உள்ளன. அவற்றின் தாபரிப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகளானது இலங்கை மகாவலி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் அச் சமூக அடிப்படை அமைப்பினால் முன்னெடுக்கப்படுகின்றது. அதற்கமைய செலவின பாதீட்டு குறியீட்டு இலக்கம் 2815 இன் கீழ் செலவினமாக 2020.12.31 இறுதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(உ) இதுவரை கணக்கீடு செய்யப்படாத நிலையான ஆதனங்களின் பெறுமதியில் ரூ. 12,561,000.00 பெறுமதியான நிலையான ஆதனங்கள் (ரூ. 4,187,000.00 வீதமான இலக்கம் WPLL – 5253, WPLL – 5254 மற்றும் WPLL – 5249 ஆம் இலக்க டிபர் வண்டிகள் 03) மொரகஹகந்த செயற்திட்டத்திற்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளதுடன், அந்நிலையான ஆதனங்கள் அச்செயற்திட்டத்தின் நிலையான ஆதனங்கள் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டு உள்ளன.

மேலும், இவ் ஆதனங்கள் செயற்திட்டத்தின் மூலம் ஒப்படைக்கும் போது முறையான அனுகுமுறைகளை பின்பற்றி இல்லாத காரணத்தால் எஞ்சியுள்ள ஆதனங்களை கணக்கீடு செய்வதற்குரியதாக சிக்கல்கள் காணப்பட்டன. அச்சிக்கல்களை தீர்த்து மொத்த பெறுமதியும் "மானியம்" ஆக 2021 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றேன்.

மொரகஹகந்த செயற்திட்டமானது தற்பொழுது செயற்படு நிலையில் உள்ள செயற்திட்டமாகும். இச்செயற்திட்டத்தின் மூலம் ரூ. 31,764,284,274 பெறுமதியான "மொரகஹகந்த நீர் மின் உற்பத்தி நிலையம்" இலங்கை மகாவலி அதிகார சபைக்கு கையகப்படுத்தும் போது மொரகஹகந்த செயற்திட்டத்தின் கணக்குகளில் நிலையான ஆதன கணக்குகளில் இருந்து நீக்கப்பட்டுள்ள "கடன்பட்டோர்கள்" என காட்டப்பட்டுள்ளதுடன் செயற்திட்டம் செயற்படு நிலையில் உள்ளதால் இலங்கை மகாவலி அதிகார சபையினால் அதற்குப் பதிலாக அது "கடன்கொடுத்தவர்கள்" என குறிப்பிடப்பட்டுள்ளது. செயற்திட்டம் முடிவடையும் தினத்தில் செயற்திட்ட கணக்குகளில் வருமானத்திற்கு/ நிதியத்திற்கு எதிராக பதிவழித்தல் முன்னெடுக்கப்படுவதாயின் அப்பொழுது "மானியம்" என இலங்கை மகாவலி அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட முடியும் என அறிவித்துக் கொள்கின்றேன்.

(ஊ) இது தொடர்பாக தேடிப் பார்த்து எதிர்வரும் காலத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(எ) இக்காணித் துண்டுகள் 02 இற்குரிய விலை மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. அவ்விலை மதிப்பீட்டு நடவடிக்கைக்காக இலங்கை மகாவலி அதிகார சபைக்கு அதன் காணி உரிமை தொடர்பாக சான்றுக் கடிதம் (உரிமைப் பத்திரம்) முன்வைப்பதற்கு முடியாமல் போனமையால் உரிய விலை மதிப்பீட்டு அறிக்கையானது இதுவரையில் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் போயுள்ளது. ஆகையால் உரிய உரிமைப் பத்திரத்தின் பிரதியைப் பெற்றுக் கொண்டு 2021 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவித்துக் கொள்கின்றேன்.

காணிகள், அரச காணிகள் என்பதால் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்காக மாத்திரம் மகாவலி அதிகார சபைக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அதற்கமைய மகாவலி அதிகார சபைக்காக வர்த்தமானி பத்திரிகை மூலம் வெளியிடப்பட்டுள்ள அதிகார பிரதேசத்தில் காணப்படுகின்ற காணிகளில் மகாவலி அதிகார சபையின் அலுவலக வளாகத்தை நடாத்திச் செல்லுதல், சேவைகளை வழங்குவதற்கு அவசியமான கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் சமூகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணி உபயோக உரிமை காணப்படுவதுடன் அக்காணிகளின் பிரத்தியேக உரிமை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமற்றது.

அதைப் போலவே அபிவிருத்திப் பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற காணிகள், மகாவலி குடியேற்றவாசிகள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு கையுதிர்க்கப்படும். இதில் விவசாய வகுப்பைச் சேர்ந்த நபர்களுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கரைப்படுத்தப்பட்ட, நீர்ப்பாசன, விவசாய மற்றும் மானாவாரி காணிகளை இலவசமாக வழங்கப்படுவதுடன் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் அதிக வருமானம் வகுதியைச் சேர்ந்த நபர்களுக்கு அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வர்த்தக மற்றும் முதலீட்டுக் காணிகளாக அரச விலை மதிப்பீட்டின் அடிப்படையில் வரி அறவிடப்பட்டு மற்றும் வீட்டுக் காணிகளாக அரச விலை மதிப்பீட்டை அறவிட்டு கையுதிர்ப்பது முன்னெடுக்கப்படும்.

குத்தகை அடிப்படையில் கையுதிர்க்கப்படுகின்ற காணிகளை விலை மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கோரிக்கையை ஆற்றுப்படுத்திய பின்னர் ஒரு காணிப் பகுதியை விலை மதிப்பீடு செய்வதற்காக நீண்ட காலம் செலவிடப்பட்டு உள்ளது.

(ஏ) ஏற்றுக் கொள்கின்றேன். நாளேட்டுப் பதிவு மூலம் பிழை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

(ஐ) 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுடன் ஒவ்வொரு கடன்பட்டோர் மீதிகள் மற்றும் நேர பகுப்பாய்வை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பேன்.

**சட்ட திட்டங்கள்/ ஆணைக்கு ஆற்றுப்படுத்துல்**

(அ) இலங்கை மகாவலி அதிகார சபையின் பிரதான வருமான தோற்றுவாய்களான காணிகள், மணல், மண், நீர் ஆகிய இயற்கை வளங்கள் மூலம் கிடைக்கப் பெறுகின்ற காணி வரிகள் மற்றும் பங்கு வீத உரிமை (காணி உபயோக கட்டணம்) இயற்கை வளங்கள் மூலம் கிடைக்கப் பெறுகின்ற வருமானங்களாக இருப்பதுடன் இவ் இயற்கை வளங்கள் அவ்விதத்திலேயே அதாவது பெறுமதியை அதிகரிப்பதற்கு மீண்டும் உற்பத்தியை முன்னெடுக்காமல் (No Manufacturing) சேவைகளை வழங்குவதன் மூலம் கிடைக்கின்ற வருமானம் என்பதால் அவ்வருமானமானது பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் கீழ் வராது என அறிவித்துக் கொள்கின்றேன்.

எனினும், இயற்கை வளமான நீரை பிற நிறுவனத்திற்கு/ நபருக்கு விற்பனை செய்யும் பட்சத்தில் அவ் இயற்கை வளத்திற்கு குறிப்பிட்ட அளவு பெறுமதி சேர்க்கப்படும். அவ்வாறு நீரை குத்தகைக்கு விடுதலின் (விற்பனை) அடிப்படையில் ஈட்டப்படுகின்ற பங்கு வீத உரிமை வருமானமானது, பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு கீழ்ப்பட்டாலும் இலங்கை மகாவலி அதிகார சபையின் வருடாந்த பங்கு வீத உரிமை வருமானமானது 300 மில்லியன் ரூபாயைத் தாண்டாமையினால் 2020.01.06 ஆம் திகதி அரசாங்கத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் கீழ் வராது என அறிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) இடமாற்ற செயல்முறைக்கு அமைய வருடாந்த இடமாற்றமானது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நிலவிய கொரோனா தொற்று காரணமாக முன்னெடுப்பதற்கு முடியாமல் போனாலும் தற்பொழுது பாதுகாப்பு சிப்பாய்கள் பொருத்தமான விதத்தில் உள்ளக செயல்முறைக்கு ஏற்ப நிலைப்படுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறே, சிவில் பதவியணியும் உரிய விதத்தில் நிலைப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றேன்.

(இ) ஏற்றுக் கொள்கின்றேன். 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுடன் முன்வைப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன்.

(ஈ) (i) அரச காணியாக இருப்பதுடன் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்காக மாத்திரம் மகாவலழ அதிகார சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய மகாவலி அதிகார சபைக்காக வர்த்தமானி பத்திரிகை மூலம் வெளியிடப்பட்டுள்ள அதிகார பிரதேசத்தில் காணப்படுகின்ற காணிகளில் மகாவலி அதிகார சபையின் அலுவலக வளாகங்களை நடாத்திச் செல்லுதல், சேவை வழங்குவதற்கு அவசியமான கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் சமூகத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக காணி உபயோக உரிமை காணப்படுவதுடன் அக்காணிகளின் பிரத்தியேக உரிமை மகாவலி அதிகார சபைக்கு இல்லை.

அதைப் போலவே அபிவிருத்திப் பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற காணிகள், மகாவலி குடியேற்றவாசிகள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு கையுதிர்க்கப்படும். இதில் விவசாய வகுப்பைச் சேர்ந்த நபர்களுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கரைப்படுத்தப்பட்ட, நீர்ப்பாசன, விவசாய மற்றும் மானாவாரி காணிகளை இலவசமாக வழங்கப்படுவதுடன் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் அதிக வருமானம் வகுதியைச் சேர்ந்த நபர்களுக்கு அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வர்த்தக மற்றும் முதலீட்டுக் காணிகளாக அரச விலை மதிப்பீட்டின் அடிப்படையில் வரி அறவிடப்பட்டு மற்றும் வீட்டுக் காணிகளாக அரச விலை மதிப்பீட்டை அறவிட்டு கையுதிர்ப்பது முன்னெடுக்கப்படும்.

குத்தகை அடிப்படையில் கையுதிர்க்கப்படுகின்ற காணிகளை விலை மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கோரிக்கையை ஆற்றுப்படுத்திய பின்னர் ஒரு காணிப் பகுதியை விலை மதிப்பீடு செய்வதற்காக நீண்ட காலம் செலவிடப்பட்டு உள்ளது.

(ii) 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான உரிய தகவல்களை இற்றைப்படுத்தப்பட்டு தற்பொழுது கணக்குத் தணிக்கையாளர் நாயகம் அவர்களுக்கு முன்வைக்கப்பட்டு உள்ளது.

(உ) அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக வீட்டு வாடகையாக சுற்றறிக்கை பிரகாரம் மாதாந்த சம்பளத்தில் 12 ½ % தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. அவ்வாறு செய்யப்படாத உத்தியோகபூர்வ இல்லங்களைப் பெற்றுக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களின் உடைமையை மீள கையகப்படுத்துவதற்கு 2018 ஆம் ஆண்டு சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு உள்ளது. அதன் பெறுபேறாக CECB

நிறுவனத்தால் வாடகை வழங்கப்படாமல் குடியிருப்பாளர்கள் தொடர்பாக அறிவிக்காமல், CECB நிறுவனத்தின் பதவியணி வசித்து வந்த 14 உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக முறையான அங்கீகாரத்தின் கீழ் எமது நிறுவனத்துடன் வருடாந்தம் ஒப்பந்தம் இட்டு 2018 ஆம் ஆண்டில் இருந்து மாதாந்த வாடகை செலுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கை மின்சார சபையின் உத்தியோகத்தர்களுக்காக 24 உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக சுற்றறிக்கை பிரகாரம் 12 ½ % கொடுப்பனவிற்குப் பதிலாக 2002 ஆம் ஆண்டில் குழு ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட "வாடகைத் தொகை" மகாவலி அதிகார சபைக்கு குறிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டு உள்ளது. (இலங்கை மின்சார சபையின் ஊழியர்களுக்கும் சுற்றறிக்கை பிரகாரம் 12 ½ % வாடகைத் தொகையைச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டு இருந்தாலும் அவர்கள் இல்லங்களுக்காக முறையான வழிமுறையைப் பின்பற்றாமை தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.)

அடிப்படை ஆய்வு நிறுவனத்திற்கும் ஆரம்பத்தில் இருந்தே உத்தியோகபூர்வ இல்லங்கள் 06 ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டு உள்ளன. அவற்றின் வாடகைத் தொகையும் இற்றைப்படுத்தப்படாததுடன் ஆரம்பத்தில் இருந்தே தீர்மானிக்கப்பட்ட உறுதியான மாதாந்த வாடகைத் தொகையானது வசிப்பவர்களிடம் இருந்து அறவிடப்பட்டு இதுவரையில் எமக்கு நிறுவனத்திற்குக் கிடைக்கப் பெறுகின்றது. எனினும், இவ்வாடகைத் தொகையானது சம்பளத்தில் 12 ½ % இதுவரையில் செலுத்துவதற்கு அந்நிறுவனம் நடவடிக்கை முன்னெடுத்து இல்லை.

இக்கட்டிடம் மிகவும் சிதைவடைந்த நிலையில் காணப்படுவதால் மற்றும் எமது நிறுவனத்தின் மூலம் அனைத்து தாபரிப்புப் பணிகளும் முன்னெடுக்கப்படாமையினால் அவ்வவ் ஊழியர்கள் மாதாந்தம் 12 ½ % வீட்டு வாடகை செலுத்துவது நியாயமற்றது என அறிவிக்கப்பட்டு உள்ளது.

மேலும், இவ் இல்லங்கள் 06 ஐயும் நிறுவனத்திற்கு கையகப்படுத்திக் கொடுக்குமாறும் அப்பொழுது அவர்களுடைய நிறுவன ரீதியான மானியத்தைப் பயன்படுத்தி உத்தியோகபூர்வ இல்லங்களின் தேவையான மீள் திருத்தப் பணிகளை முன்னெடுக்க முடியும் எனவும் தெரிவித்து உள்ளனர்.

அதற்கமைய, இல்லங்களின் மாதாந்த வாடகையை விலை மதிப்பீடு செய்வதற்காக இரு தரப்பினரினதும் உடன்பாட்டின் அடிப்படையில் அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டதுடன் அண்மையில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் அக்கட்டிடம் தொடர்பாக களப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அக்கணிப்பீட்டிற்குரிய அறிக்கையானது இதுவரையில் எமக்குக் கிடைக்கப் பெறாததுடன் அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களமானது நிர்ணயிக்கின்ற வாடகைத் தொகையுடன் கூடிய அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர் அதற்கமைய எதிர்வரும் காலத்தில் செயற்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

புனர்வாழ்வு வைத்தியசாலைகள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகிய அரச நிறுவனங்கள் இரண்டிற்கும் சிற்றூழியர்கள் பதவியணிக்காக நீண்ட காலமாக உபயோகிக்கப்படாத (எமது நிறுவனத்தின் ஊழியர்கள் கோரிக்கை முன்வைக்காத) உத்தியோபூர் இல்லங்கள் 02 இற்காக அரச விலை மதிப்பீட்டுத் தொகைக்கு அண்மித்த தொகையை அறவிடுவதன் மூலம் முறையான ஒழுங்குமுறைகளை கையாண்டு ஒப்பந்தம் இட்டு வழங்கப்பட்டு உள்ளன. இவ் உத்தியோகபூர்வ இல்லங்கள் இரண்டும் ஒற்றை அறையுடன் கூடிய ஒற்றை இல்லங்களாக உள்ளதுடன் சிற்றூழியர்களுக்காக செயற்திட்டம் மூலம் நிர்மாணிக்கப்பட்டு உள்ள சுமார் 40 ஆண்டுகள் பழைமையான இரண்டு சிறு வீடுகள் ஆகும். அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மூலம் இவ்வகையைச் (JSQ) சேர்ந்த வீடுகளுக்காக மாதாந்த வாடகையாக ரூ. 400.00 – ரூ. 500.00

நிர்ணயிக்கப்பட்டு உள்ளதாக விலை மதிப்பீட்டுத் திணைக்களம் வழங்கிய கடந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாடகைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு இவ் ஒற்றை வீடுகள் இரண்டும் வழங்கப்பட்டு உள்ளன.

(ஊ)(i) திகன, உத்தியோகபூர்வ இல்ல முகாமில் இலங்கை மகாவலி அதிகார சபையின் ஊழியர்களுக்கு வதிவிட வசதி வழங்கியதன் பின்னர் மேலதிகமாக காணப்படுகின்ற உத்தியோகபூர்வ இல்லங்கள் இருப்பின் வெளி அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் கோரிக்கைக்கு அமைய தற்காலிகமாக வழங்குமாறு உள்ளக சுற்றறிக்கையில் A 1-2 ஆம் உறுப்புரை மூலம் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாட்டிற்கு அமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. சுமார் 40 ஆண்டுகளை விடவும் பழைமையான இவ் உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்பாடற்றுக் காணப்படுகின்றமையால் அவை அழியக் கூடிய அபாயத்திற்கு முகங்கொடுத்து உள்ளன. ஆகையால், கோரிக்கைக்கு அமைய தற்காலிக குடியிருப்பிற்காக முறையாக மற்றும் ஒப்பந்தம் இட்டு வாடகை அடிப்படையில் வழங்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைப்பது மாத்திரமன்றி ஆதனமும் பாதுகாக்கப்படும்.

இதுவரையில் ஆரம்பத்தில் இருந்து வெளி நிறுவனங்களுக்கு இல்லங்களை வழங்கும் போது இல்லக் குழுவின் ஊடாக தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், சுற்றறிக்கைக்கு அமைய இவ் இல்லங்களுக்கு உரியதான அரச நிறுவனங்களின் தலைவர்களின் பரிந்துரைக்கு அமைய தற்காலிக அடிப்படையில் முறையாக வருடாந்த ஒப்பந்தங்களுக்கு அமைய தற்காலிகமாக வழங்கப்பட்டு உள்ளன. எவ்வாறாயினும், எதிர்வரும் காலத்தில் அதாவது 2021 ஆம் ஆண்டில் இருந்து உள்ளக சுற்றறிக்கையின் A 1-2 ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஒழுங்குமுறைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றேன்.

(ii) இலங்கை மின்சார சபையின் ஊழியர்களின் குடியிறுப்பிற்காக 1985 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான திகன, நிலகம இல்ல முகாமில் 24 இல்லங்கள் வழங்கப்பட்டு உள்ளன. இதற்காக உறுதியான வாடகைத் தொகையை குடியிறுப்பாளர்களிடம் இருந்து அறவிட்டு இதுவரையிலும் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. இலங்கை மகாவலி அதிகார சபையின் DG/05/2002 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கைக்கு அமைய இல்லங்களின் குடியிறுப்பாளர்களை இனங்கண்டு அவர்களுக்கு எமது நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுமாறு எழுத்து மூலம் பல தடவைகள் அறிவிக்கப்பட்டாலும், அவ் ஆலோசனைகளுக்கு எவ்வித பதில்களும் கிடைக்கப் பெறவில்லை. எனினும், இல்லங்களில் குடியிறுப்பவர்கள் 2002 ஆம் ஆண்டளவில் தீர்மானிக்கப்பட்ட நிலையான தொகையை இல்ல வாடகையாக மாதாந்தம் அறவிட்டு அத்தொகையை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் ஒப்பந்தத்தை கைச்சாத்திடாமை தொடர்பாக பணிப்பாளர், பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க இயக்கற் பிரிவின் மூலம் பல தடவைகள் கடிதங்கள் அனுப்பப்பட்டாலும் அதற்கு பதில்கள் கிடைக்காத காரணத்தால் என்னால் இலங்கை மின்சார சபையின் தவிசாளர் அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. இதுவரையில் அக்கடிதங்களுக்கும் மகிழ்ச்சிகரமான பதில்கள் எதுவும் கிடைக்கப் பெறாததுடன், இலங்கை மின்சார சபையின் மத்திய மாகாண பிராந்திய முகாமையாளர் அவர்களால் அவ் ஊழியர்கள் மின்சார சபையுடன் உள்ளக ஒப்பந்தத்திற்கு எட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. மேலும், மின்சார சபையினால் இவ் உத்தியோகபூர்வ இல்லங்களை கையகப்படுத்தி உள்ளதாகவும் அவர்களால் தாபரிப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் எம்முடன் ஒப்பந்தம் இடுவதற்கு அவசியம் இல்லை எனவும் மேலும் குறிப்பிடப்பட்டு உள்ளது.

எவ்வாறாயினும், இது தொடர்பாக அறிவித்து எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக செயலாளர், மின்சக்தி அமைச்சிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு உள்ளது.

(iii) திகன உத்தியோகபூர்வ இல்ல முகாமில் உத்தியோகபூர்வ இல்ல நிர்வாகத்தின் பராமரிப்புப் பொறுப்பானது மகாவலி அதிகார சபையின் மூன்று பிரிவுகள் மூலம் அமுல்படுத்தப்படுகின்றது. அதாவது, வதிவிட வணிக முகாமையாளர் (இ வலயம்), மகாவலி பாதுகாப்புப் படையணி, மற்றும் பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க இயக்கற் பிரிவு ஆகும். அந்த விதத்தில் திகன, பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க இயக்கற் பிரிவின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற மற்றும் தாபரிக்கப்படுகின்ற இல்லங்களின் எண்ணிக்கை 85 ஆகும். எதிர்வரும் காலத்தில் இவ் இல்லங்கள் மற்றும் கட்டிடங்களை உரிய முறையில் தாபரிப்பதற்காக காணப்படுகின்ற மானிய மட்டுப்படுத்தல்களின் அடிப்படையில் அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அறிவித்துக் கொள்கின்றேன்.

உள்ளக சுற்றறிக்கை வழிகாட்டல்களுக்கு அமைய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குரிய உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டதுடன், அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் இருந்து நிலையான ஆதனங்கள் ஆவணத்தை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

(எ) விடயப் பொறுப்பு பொறியியல் அலுவலகம் மூலம் சமூர்த்தி சங்கங்கள், கமநல சேவைகள் அமைப்புக்கள் மற்றும் மகாவலி அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள விவசாய அமைப்புக்கள் மற்றும் ஏனைய பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்படும். மகாவலி விவசாய அமைப்புக்களுக்கு ஒப்பந்தத்தை வழங்கும் போது உரிய ஆவணங்கள் விவசாய அமைப்புக்கள் உட்படுகின்ற வலயத்தில் அமைந்துள்ள தொகுதி முகாமையாளர் அவர்களுக்கு ஆற்றுப்படுத்தப்படுவதுடன், அதில் தொகுதி முகாமையாளரால் உரிய சுற்றறிக்கைக்கு அமைய பரிசீலிக்கப்பட்டு பரிந்துரைகள் முன்வைக்கப்படும்.

அதற்கமைய இவ் ஒப்பந்தமானது சுற்றறிக்கை பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களின் பரிந்துரைக்கு அமைய வழங்கப்பட்டுள்ளது.

**2.2.2**

(அ) ஒப்பந்தத்திற்குரிய ரூ. 169, 317.90 பெறுமதியான செயலாற்றுகை பிணை முறித் தொகையை அறவிடுவதற்காக முகாமையாளர், மக்கள் வங்கி இற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

அவ்வாறு இவ் ஒப்பந்தத்திற்குரிய முற்பண பிணை முறியான ரூ. 1,015,907.00 தொகையை அறவிடுவதற்காக முகாமையாளர், மக்கள் வங்கி இற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு உள்ளது.

ஒப்பந்ததாரியிடம் இருந்து பணத்தை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. மேலும், இவ் ஒப்பந்தத்தை முடிவுறுத்தி ஒப்பந்தத்தின் “மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்காக” கொடுப்பனவை நிறுத்துவதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

ஒப்பந்ததாரியிடம் இருந்து உரிய பணத்தை அறவிட்டதன் பின்னர் எஞ்சிய பணிகளை 2021 ஆம் ஆண்டில் வேறு ஒப்பந்ததாரி ஒருவர் மூலம் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது.

(ஆ) எனது இலக்கம் DDG/CON/MSO/DIG/B3 மற்றும் 2021.02.17 ஆம் திகதிய கடிதம் மூலம், உரிய ஒப்பந்த வழங்கல் இரத்துச் செய்யப்பட்டு உள்ளது. எஸ்.எஸ்.பீ. இன்ஜினியர்ஸ் லிமிடட்

இற்கு செலுத்துவதற்கு இருந்த DDG/CON/MSO/DIG/B/04 ஆம் இலக்க ஒப்பந்தத்தின் இறுதிக் கொடுப்பனவுத் தொகையில் உரிய விலை மனு காப்புறுதிக் கட்டணமான ரூ. 35,000/= அறவிடப்பட்டது.

எதிர்வரும் ஆண்டில் முன்மொழியப்பட்டுள்ள மானியங்களுக்கு அமைய மீள் திருத்தப் பணிகளை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது.

**2.4 ஏனைய விடயங்கள்**

(அ) இவ்விபத்து தொடர்பாக உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

அவ்வாறே, இவ்விபத்தின் பின்னர் என்னால் நியமிக்கப்பட்ட உள்ளக குழுவின் மூலம் வாகனம் பரிசீலிக்கப்பட்டு முழுமையான அறிக்கை முன்வைக்கப்பட்டு உள்ளது.

(ஆ) விவசாய அமைச்சினால் மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையைக் கருத்தில் கொண்டு பாதுகாப்புச் சிப்பாய்கள் வேறு அமைச்சுக்கள் மற்றும் சேவை நிலையங்களுக்காக இணைக்கப்பட்டுள்ளனர். அவ் உத்தியோகத்தர்களின் சம்பளமானது, இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் செலுத்தப்பட்டு அத்தொகையை மீள் நிரப்புவதற்காக தற்பொழுது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

(இ) மகாவலி பாதுகாப்பு படையணிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை காணப்பட்டாலும் அவ் ஊழியர்களின் எண்ணிக்கையை அங்கீகரிக்கும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஊழியர்களின் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக தற்பொழுது விசேடமாக மொரகஹகந்த களு கங்கை போன்ற அபிவிருத்திச் செயற்திட்டங்களின் ஊடாக அபிவிருத்தி செய்யப்படுகின்ற மொரகஹகந்த மற்றும் மெதிரிகிரிய புதிய அபிவிருத்தி வலயங்களில் பாதுகாப்புக் கடமைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட உத்தியோகத்தர்களின் தேவைப்பாடு தற்பொழுது ஏற்பட்டு உள்ளது. அதற்கமைய இலங்கை மகாவலி அதிகார சபையின் அனைத்துப் பிரிவுகளுடனும் தற்பொழுது கலந்துரையாடி அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை மறுசீரமைத்து ஒவ்வொரு பிரிவிற்கும் ஒதுக்கப்பட வேண்டிய பதவியணி தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அன்புடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

அவ்வாறே, பொறியியல் உதவியாளர் பதவியானது மகாவலி பாதுகாப்பு படையணிக்கு அங்கீகரிக்கப்படாவிட்டாலும் அப்படையணியின் உப வகுதிகள் மற்றும் அதிகார பிரதேசத்தின் அலுவலகங்கள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் கட்டிடங்களின் தாபரிப்புப் பணிகள் தொடர்பாக பொறியியல் உதவியாளர் ஒருவரின் தேவை எழுந்தமையால் பிற சேவை நிலையங்களுக்கு இடையூறு எற்படாத விதமாக "பொறியில் உதவியாளர்" ஒருவர் இணைக்கப்பட்டு உள்ளார். அவ்வாறே, பிராந்திய முகாமையாளர் பதவிகள் இரண்டும் 2011.08.22 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு உள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் ஊழியர்களின் எண்ணிக்கையில் உள்ளடங்காவிட்டாலும் அப்பொழுது சேவையாற்றி வந்த பிராந்திய முகாமையாளர்கள் இருவரும் அவர்களுக்கு மாத்திரம் பிரத்தியேகமான முறையில் அவர்கள் ஓய்வு செல்லும் வரையில் அல்லது பதவி உயர்வு பெறும் வரையில் அப்பதவியிலேயே வைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. மேலும் "சமையல்காரர்" பதவியானது விசேடமாக பாதுகாப்புப் பிரிவிற்கு உள்ளடங்காவிட்டாலும் பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க இயக்கற் பிரிவின் கீழ் பாதுகாப்புச் சேவைகள் வழங்குகின்ற சிப்பாய்களின் (விசேடமாக பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களை அண்மித்து) உணவு பானங்களை தயாரிக்கும் செயற்பாடுகள் இவ் ஊழியர்கள் மூலம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

மேலும் 77 பதவி வெற்றிடங்கள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டு இருந்தாலும் உதவிப் பணிப்பாளர், கணக்காளர், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்குப் பதிவாளர் ஆகிய பதவிகளுக்காக தற்பொழுது நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு பொருத்தமான உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு உள்ளதாக அறிவித்துக் கொள்கின்றேன். பாதுகாப்பு மேற்பார்வையாளர் பதவிக்காக 2013.06.12 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு செயல்முறையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் தொடர்பாக மீண்டும் திருத்தம் மேற்கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டு உள்ளது. (பழைய ஆட்சேர்ப்பு செயல்முறையின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்ட பாதுகாப்புச் சிப்பாய்கள் எட்டாம் வகுப்பு சித்தியடைந்தவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டமையால் அவர்களுடைய பதவி உயர்வாக இதனை வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமாக இருந்தாலும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பானது க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களை இணைத்துக் கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது)

சாரதிகள் மற்றும் பாதுகாப்பு காவலாளர்கள் பதவிகள் இரண்டும் PL சேவை வகுதியின் கீழ் உள்ளமையால் தற்பொழுது அவ் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் ஆலோசனை கிடைக்கப் பெற்று உள்ளது.

அவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவது தற்பொழுது அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்டுள்ள நாட்டைக் கட்டியெழுப்பும் “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பல்நோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களம் மூலம் என்பதனை அன்புடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

பின்வரும் காரணங்களால் அவ்வாறு செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளதாக அறிவித்துக் கொள்கின்றேன்.

- அனைத்து மகாவலி அதிகார சபை பிரதேசங்களிலும் அமுலில் உள்ள பாதுகாப்பு வலையமைப்பு அமுல்படுத்தப்படுவது தலைமையகம் என்பதால் செயற்பாட்டு உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் உதவியாளர் ஒருவர் (எண்ணிக்கை 02) தலைமையகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

- பதவியணியின் உத்தியோகபூர்வ இல்லங்கள், கொண்டாட்ட வீடுகள், அலுவலகம் மற்றும் களஞ்சியக் கட்டிடத் தொகுதி உட்பட முகாமின் தாபரிப்பிற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியானது இப்பிரிவிற்கு அங்கீகரிக்கப்படாது என்பதால் பாதுகாப்பு மேற்பார்வையாளர் ஒருவர் (எண்ணிக்கை 01) தலைமையக்த்திற்கு இணைக்கப்பட்டு உள்ளார்.

- வழங்கல் உத்தியோகத்தர் பதவியானது இப்பிரிவிற்கு அங்கீகரிக்கப்படாத பதவி என்பதால் மற்றும் வழங்கல் உத்தியோகத்தர் ஒருவர் இல்லாமையினால் அப்பணிகளை உதவிப் பாதுகாப்பு மேற்பார்வையாளர் ஒருவருக்கு (எண்ணிக்கை 01) ஒப்படைத்து தலைமையக்த்திற்கு இணைக்கப்பட்டு உள்ளார்.

- 35 வருடங்களாக இப்பிரிவின் ஆயுதங்கள்/ சன்னங்களை வழங்குவது தொடர்பான தகவல்கள், பாதுகாப்பு தொடர்பாடல் உபகரணங்களின் தகவல்கள், நிர்வாக நிதி மற்றும் கணக்குத் தகவல்கள், ஊழியர் சேமலாப நிதியத்துடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளடங்கிய ஆவணக் காப்பகத்தின் பொறுப்பாளராக பாதுகாப்பு காவலர்

ஒருவருக்குப் பயிற்சி வழங்கி தலைமையகத்திற்கு இணைக்கப்பட்டு உள்ளார். (எண்ணிக்கை 01)

- தலைமையக களஞ்சிய கட்டிடத் தொகுதியில் களஞ்சிய உத்தியோகத்தருக்கு கடமை உதவிகளுக்காக தொழிலாளர் ஒருவர் இல்லாமையால் பாதுகாப்புக் காவலர் ஒருவர் இணைக்கப்பட்டு உள்ளார். (எண்ணிக்கை 01)

- தலைமையக பதவியணிக்கு இணைக்கப்பட்டு இருந்த பாதுகாப்பு காவலர் ஒருவர் (எண்ணிக்கை 01) களு கங்கை துணை வகுதிக்கு இணைக்கப்பட்டு உள்ளார்.
- மேற்குறிப்பிட்ட இலக்கம் 02 மூலம் காட்டப்பட்ட விதத்தில் முகாமைத்துவ உதவியாளர்களில் போதுமான ஊழியர்கள் எண்ணிக்கை இல்லாமையால் நிர்வாக பிரிவிற்கு மற்றும் போக்குவரத்துப் பிரிவிற்கு மகளிர் பாதுகாப்பு காவலர்களின் மற்றும் பதுகாப்பு காவலர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. (எண்ணிக்கை 02)

- உதவிப் பாதுகாப்பு அலுவலகத்தில் உதவிக் கடமைகளுக்காக பாதுகாப்பு காவலர்கள் இருவர் தலைமையகத்திற்கு இணைக்கப்பட்டு உள்ளனர். (எண்ணிக்கை 02)

(ஈ) இம்மத்திய நிலையமானது 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து பொல்கொல்லை விடயப் பொறுப்பு பொறியியலாளர் அவர்களின் மேற்பார்வையின் கீழ் மின்னியல் பொறியியலாளர் மூலம் நிர்வகிக்கப்படுவதுடன், பின்வரும் நடவடிக்கைகளுக்காக தற்பொழுது பயன்படுத்தப்படுகின்றது.

a. விசேடமான அனைத்து ஆண்டுகளிலும் இறுதிப் பாதியில், அதாவது நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிலும், காலநிலை மாற்றங்கள் காரணமாக நிச்சயமற்ற விதத்தில் ஏற்படுகின்ற அதிக மழை வீழ்ச்சி காரணமாகவும் ஏற்படுகின்ற வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக சகல நீர்த்தேக்கங்க முறைமைகளுடனும் அவசியமான செயற்பாட்டு ஒருங்கிணைப்பு.

b. 2020 ஆம் ஆண்டின் ஆரம்ப பகுதியில் இருந்து கொவிட் 19 தொற்று நோய் பரவலின் கட்டுப்படுத்தல் நிலைமையின் கீழ், பதவியணியானது வருகை தருவதை மட்டுப்படுத்தப்பட்ட கால எல்லையில் சகல அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை தடையின்றி முன்னெடுப்பதற்கு அவசியமான ஒருங்கிணைப்பு.

c. பாரிய அணைகளுக்கான சர்வதேச ஆணைக்குழு (ICOLD) மூலம் நடாத்தப்படுகின்ற சர்வதேச கருத்தரங்குகளுக்கு Zoom தொழில்நுட்பம் மூலம் பொறியியலாளர்களை பங்கேற்கச் செய்தல், (CFRD Webinar கருத்தரங்கு மற்றும் 2020.10.26, 27,28 ஆம் திகதிகளில் இடம்பெற்ற Hydro 2020 கருத்தரங்கு)

d. கௌரவ அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள், இலங்கை மகாவலி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் கலந்து கொள்கின்ற ஒன்றுகூடல்கள் மற்றும் விடயப் பொறுப்பு பொறியியலாளர்களின் ஒன்றுகூடல்களை நடாத்துதல்.

e. நிகழ்நேர காலநிலைத் தரவுகள், நீர்த்தேக்கங்களின் மட்டங்கள் மற்றும் கொள்ளளவு உள்ளடங்கிய தகவல்கள், அணைப் பாதுகாப்பிற்காக பொருத்தப்பட்டுள்ள உபகரணங்களின் தரவுகள் ஆகியவற்றின் விடயப் பொறுப்பு பொறியியலாளர்களின் ஒன்றுகூடல்களை நடாத்துதல்.

எவ்வாறாயினும், இக்கட்டிடத்திற்கு பதவியணியை இணைப்பதற்காக அருகில் உள்ள கட்டிடத்தை விடுவிப்பதற்காக சுற்றாடல் அமைச்சிற்கு அடிக்கடி அறிவித்தாலும், அக்கட்டிடத்தை விடுவிக்காமையினால், திகன அலுவலகத்தின் பதவியணியானது இதற்காக இணைப்பதற்கு முடியாது உள்ளது.
இது தொடர்பாக என்னால், பல சந்தர்ப்பங்களில் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டாலும், இதுவரையில் உரிய கட்டிடமானது மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் விடுவிக்கப்பட்டு இல்லை.

(உ) இவ் ஒப்படைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டு உள்ள களஞ்சிய கட்டிடங்களின் விலை மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு உரிய தகவல்கள் ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளன. விலை மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அறிவித்துக் கொள்கின்றேன்.

(ஊ) மகாவலி எல், ரம்பகண் ஓயா, மொரகஹகந்த ஆகிய வலயங்களில் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக 60 காணிகள் கையுதிர்க்கப்பட்டு உள்ளதுடன் அவற்றின் விதைக்கும் பரவெல்லை சுமார் 2600 ஏக்கர்கள் ஆகும். ரம்பகண் ஓயா வலயத்தில் முதலீட்டாளர்கள் 04 பேரிற்காக சுமார் 1250 ஏக்கர்கள் போகப் பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்டு உள்ளதுடன் அவர்கள் காணிகளை பயிர்ச் செய்கைக்காக தயாரிக்கும் போது அதற்கு எதிராக ஏற்பட்ட மக்களின் எதிர்ப்பு காரணமாக அபிவிருத்திப் பணிகளுக்கு தடைகள் ஏற்பட்டன. அதற்கமைய, உரிய காணிகள் 1250 ஏக்கர்களை முதலீட்டாளர்கள் 04 பேரிற்கு வழங்குவது தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரம் முன்வைக்கப்பட்டதுடன் சுற்றாடல் பரிந்துரை மற்றும் செயலாற்றுகையின் அடிப்படையில் மற்றும் செயற்திட்ட காணிகளைக் கையுதிர்ப்பதற்கு நடவடிக்கைகளை முன்வைக்குமாறு அறிவிக்கப்பட்டு உள்ளது. அதற்கு மேலதிகமாக ரம்பகண் ஓயா வலயத்தில் காணிகள் கையுதிர்க்கப்பட்ட முதலீட்டார்கள் மத்தியில் வரியைப் புறக்கணித்த முதலீட்டாளர்களுக்கு வரி செலுத்தாமையினால் வரியைச் செலுத்துமாறு விளக்க கோரிக்கைக் கடிதம் ஆற்றுப்படுத்தப்பட்டதுடன் அதற்கமைய வரியை அறவிடுவதற்கு வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். நிலவுகின்ற கொவிட் தொற்று காரணமாக அறிவித்தல்களை அனுப்புதல் மற்றும் நபர்களை விசாரணைக்காக அழைத்தல் என்பன பயணக் கட்டுப்பாடு காரணமாக வரி செலுத்துவதை புறக்கணித்த முதலீட்டாளர்கள் 06 பேரின் வரி உரிமையானது செப்டம்பர் மாதம் இரண்டாம் வாரமாகும் போது இரத்துச் செய்வதற்கு வதிவிட வணிக முகாமையாளர், ரம்பகண் ஓயா அவர்களால் கால வரையறையுடன் கூடிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டு உள்ளது. அதற்கமைய செப்டம்பர் மாதமாகும் போது வரி செலுத்தாத அனைத்து முதலீட்டுச் செயற்திட்ட காணிகளையும் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

எல் வலய முதலீட்டாளர்கள் 29 பேரிற்கு பன்சல் கந்த பிரதேசத்தில் மற்றும் மேலும் முதலீட்டாளர்கள் 09 பேரிற்கு ஹெலம்ப வாவி பிரதேசத்தில் 1035 ஏக்கர்கள் வழங்கப்பட்டு உள்ளதுடன் அக்காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக சுற்றாடல் அதிகார சபை, தொல்பொருளியல் திணைக்களத்தின் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்காமையால் அபிவிருத்தி செய்ய முடியாது உள்ளது. இது தொடர்பாக உரிய நேரியல் நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டதுடன் சுற்றாடல் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக வனஜீவராசிகள் திணைக்களத்தின் உடன்பாட்டைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். பன்சல் கந்த பிரதேசத்தில் கையுதிர்க்கப்பட்டு உள்ள முதலீட்டாளர்கள் 05 பேரின் காணிகள் அரசாங்கத்தால் மீள கையகப்படுத்தப்பட்டு வன விலங்குகள் இடப்பெயர்ச்சி

செய்கின்ற இடமாக நடாத்திச் செல்லுதல் அவசியம் எனவும் அதனை நிறைவேற்றியதும் அத் திணைக்களத்தின் உடன்பாட்டைப் பெற்றுக் கொள்ள முடியுட் எனவும் அறிவிக்கப்பட்டு உள்ளது. அதற்கமைய தற்பொழுது கையகப்படுத்தப்பட்ட காணிப் பகுதிகள் 05 இற்காக மாற்றுக் காணிகளை வழங்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு வருகின்றது. அதற்கமைய உரிய நேரியல் நிறுவனங்களின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற பின்னர் உரிய காணிப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு முடியுமானதாக இருக்கும்.

மொரகஹகந்த வலயத்தில் முதலீட்டாளர்கள் 08 பேரிற்காக சுமார் 80 ஏக்கர்கள் கையுதிர்க்கப்பட்டு உள்ளதுடன், அதில் காணிப் பகுதிகள் 04 இல் வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சுற்றுலாச் செயற்திட்டங்களுக்காக காணிப் பகுதிகள் 03 கையுதிர்க்கப்பட்டு உள்ளதுடன் அச்செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் பூரணப்படுத்தப்படாமையால் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை. அதற்கமைய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக தற்பொழுது அதிகார சபையானது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. ஒரு செயற்திட்டமானது எரிபொருள் நிரப்பு நிலையமாக உள்ளதால் அதன் நீண்ட கால குத்தகை முறியானது அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கையொப்பத்திற்காக ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிறுவுவதற்காக குத்தகை முறி தேவையாக உள்ளது. குத்தகை முறி கிடைக்கப் பெற்ற பின்னர் எரிபொருள் நிரப்பு நிலையத்தை ஆரம்பிப்பதற்கு மற்றும் வரி செலுத்துவதற்காக முதலீட்டாளர் உடன்பட்டுள்ளார்.

அவ்வாறே, பி, சி, இ, எச், வலவ, ஹுருளு வாவி வலயங்களில் முதலீட்டுச் செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்களும் உரிய கோரிக்கைக்கு அமைய கணக்காய்வாளரிற்கு முன்வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

(ஏ) ரூ. 68,598,808.00 பெறுமதியில் ரூ. 4,551,474.00 தொகையானது பின்வருமாறு தற்பொழுது அறவிடப்பட்டு உள்ளது.

| | | |
|---|---|---|
| ➢ சி வலயம் | - | ரூ. 459,729.00 |
| ➢ எச் வலயம் | - | ரூ. 208,017.00 |
| ➢ விக்டோரியா | - | ரூ. 562,951.00 |
| ➢ கொத்மலை | - | ரூ. 1,286,199.00 |
| ➢ மொரகஹகந்த | - | ரூ. 1,288,478.00 |
| ➢ ரம்பகண் ஓயா | - | ரூ. 472,500.00 |
| ➢ வலவ | - | ரூ. 273,600.00 |
| | | ரூ. 4,551,474.00 |

**குறிப்பு**

எல் வலயத்தில் 2020 ஆம் ஆண்டு வரை முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக காணிகள் கையுதிர்க்கப்பட்டு இருந்தாலும் உரிய நேரியல் நிறுவனத்திடம் இருந்து உரிய அங்கீகாரம் கிடைக்கப் பெறாதமையால் அச் செயற்திட்டங்களை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு முடியாது என்பதால் அவற்றை இரத்துச் செய்து அச்செயற்திட்டங்களுக்காக நிலுவை வரித் தொகையான ரூ. 10,027,663.00 ஐ பதிவழிப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பணிப்பாளர் சபைக்கு மகஜர் முன்வைக்கப்பட்டு உள்ளது.

(ஏ) ரம்பகண் ஓயா வலய முதலீட்டாளர்கள் நால்வருக்கு சுமார் 1250 ஏக்கர்கள் அரச கொள்கைகளுக்கு அமைய இறக்குமதி உணவுப் பயிர்கள் உற்பத்தி இலக்கை எட்டுவதற்காக தேசிய உணவு உற்பத்தி செயலாற்றுகைக் குழு மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பணிப்பாளர் நாயகத்தினால் தற்காலிகமாக போகங்களுக்காக குத்தகைக்கு வழங்குதல் முன்னெடுக்கப்பட்டு உள்ளது. குத்தகைக்கு வழங்கியதன் பின்னர் ஏற்பட்ட பொது மக்களின் எதிர்ப்பு காரணமாக உரிய காணிப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதில் தடைகள் ஏற்பட்டன. ஆகையால், இக் காணிப் பகுதிகளை குத்தகைக்கு விடுவதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவைக்கு மகஜர் முன்வைக்கப்பட்டதுடன் அதில் இக் காணிகளை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு முன்பு சூழலியல் மதிப்பீடு உள்ளடங்கலாக பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுபேறுகள் தொடர்பாக விரிவான அறிக்கையை கருத்திற் கொள்ளும் பொருட்டு அமைச்சரின் மூலம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளது. அதற்கமைய, ரம்பகண் ஓயா வலயத்தில் இம் முதலீட்டாளர்கள் 07 பேரிற்கும் நீண்ட கால குத்தகை அடிப்படையின் கீழ் காணிகள் வழங்கப்பட்டு இல்லை.

காணிகள் வழங்கும் முறையை ஒழுங்குபடுத்துதல்.

மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான விசேட பிரதேசங்களில் காணிகளை கையுதிர்ப்பது தொடர்பாக நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் 1/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் அரச காணிகளை கையுதிர்ப்பு செய்யும் போது பின்பற்ற வேண்டிய செயன்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவது தொடர்பாக சகல வதிவிட வணிக முகாமையாளர்கள் மற்றும் காணிகளை கையுதிர்ப்பு செய்வது தொடர்பாக பணியாற்றுகின்ற பிரிவுகளுக்கு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. அதற்கமைய அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் மற்றும் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் மகாவலி அதிகார சபையினால் காணிகளை வழங்கும் செயன்முறையானது ஒளிவு மறைவுகள் இன்றியும் ஒழுங்கு முறைப்படியும் முன்னெடுப்பது தொடர்பாக அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

கீர்த்தி பி. கொடகம,
பணிப்பாளர் நாயகம்,
இலங்கை மகாவலி அதிகார சபை

பிரதி –
செயலாளர் – நீர்ப்பாசன அமைச்சு – மே.க.

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2020

# பகுதி - V

# 2020 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள்.

1. **மகாவலி ஒருங்கிணைந்த செயற்திட்டம்**

- **குறிக்கோள்கள்:** மதுரு ஓயா இடது கரைப் பிரதேசத்தில் குடியேறிய கிராமிய சமூகங்களின் வருமான மட்டங்களை அதிகரித்தல் அவர்களின் விவசாயத்திற்கு நீர்ப்பாசன நீர் வழங்கலை உறுதிப்படுத்துதல்.
- **செயற்திட்ட காலம்:** 2007-2021
- **பயனடைந்த மாவட்டங்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை:** பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் 20,000 குடும்பங்கள்
- **மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு:** ரூபா 4,910 மில்லியன்
- **ஒட்டுமொத்த செலவு (டிசம்பர் 2020):** ரூ . 4,555.55 மில்லியன்
- **31 டிசம்பர் 2020 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம்**

| ஒதுக்கீடு (மில். ரூ.) | பெறப்பட்ட முற்பணம் (மில். ரூ.) | செலவினம் (மில். ரூ.) |
|---|---|---|
| 129.00 | 91.00 | 91.00 |

- **31 டிசம்பர் 2020 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

| விபரம் | பௌதீக முன்னேற்றம் |
|---|---|
| விநியோகிப்புக் கால்வாய்களை நிர்மாணித்தல்/ புனரமைத்தல் | 3.1Km |
| களக் கால்வாய்களை நிர்மாணித்தல் / புணரமைத்தல் | 31.2Km |
| பொதுக் கட்டிடங்களின் தாபரிப்பு | 01 |
| பங்கேற்பு களக் கால்வாய் புனரமைப்பு | 1.25Km |





**2. பி வலயத்தின் மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திச் செயற்திட்டம் (மல்வென்ன மற்றும் மகவெலிதென்ன)**

- **குறிக்கோள்கள்:** நீர்ப்பாசன விவசாய அபிவிருத்தியின் ஊடாக மல்வென்ன மற்றும் மகாவலிதென்ன அலகில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 859 குடும்பங்களின் சமூக பொருளாதார நிலைமையை மேம்படுத்துதல்.
- **செயற்திட்ட காலம் :** 2014-2022
- **பயனடைந்த மாவட்டங்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை:** பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு (கோறளைப்பற்று வடக்கு, வெலிகந்த) மாவட்டங்களில் 847 குடும்பங்கள்
- **மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு :** ரூ. 935.5 மில்லியன்
- **ஓட்டு மொத்த செலவினம் :** ரூ. 707.92 மில்லியன்
- **31.12.2020 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம்**

| ஒதுக்கீடு (மில். ரூ.) | பெறப்பட்ட நிதி (மில். ரூ.) | செலவினம் (மில். ரூ.) |
|---|---|---|
| 13.50 | 8.45 | 8.45 |

- **31.12.2020 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

| விபரம் | பௌதீக முன்னேற்றம் 31.12.2020 |
|---|---|
| களக் கால்வாய்களை நிர்மாணித்தல் | 2.9 Km |
| விநியோகிப்புக் கால்வாய்களை நிர்மாணித்தல் | 1.5 Km |
| பெட்டி மதகுகளை நிர்மாணித்தல் | 1 |





## 3. ரிதிமாலியத்த ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம்

- **குறிக்கோள்கள்:** உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி மற்றும் மகாவலி வலயங்களின் கீழ் உள்ள பிரதேசங்களில் உள்ள குடும்பங்களுக்கு நிலைபேறான வருமான வாய்ப்புகளைத் திறந்து வைத்தல்.
- **செயற்திட்ட காலம்:** 2012-2022
- **பயன்பெற்ற மாவட்டங்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை :** பதுளை மாவட்டத்தின் ரிதிமாலியத்த பிரதேசத்தில் 14,782 குடும்பங்கள்
- **மதிப்பிடப்பட்ட மொத்த முதலீடு:** ரூ. 1,100 மில்லியன்
- **மொத்த செலவினம்:** ரூபா 699.13 மில்லியன்
- **2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம்**

| ஒதுக்கீடு (மில். ரூ.) | பெறப்பட்ட முற்பணம் (மில். ரூ.) | செலவினம் (மில். ரூ.) |
|---|---|---|
| 35.00 | 25.71 | 25.71 |

- **2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

| விபரம் | பௌதீக முன்னேற்றம் 31.12.2020 |
|---|---|
| நீர்ப்பாசன கால்வாய் முறைமையை புனரமைத்தல் | 3.74 கி.மீ. நீர்ப்பாசன கால்வாய்கள் மற்றும் 03 அணைக்கட்டுக்கள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன. |
| வீதிகளைப் புனரமைத்தல் | 250 மீட்டர் நிறைவடைந்துள்ளன மற்றும் 03 மதகுகள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன. |
| பொதுக் கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் தாபரித்தல் | 2 கட்டிடங்கள் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்து உள்ளன,<br>03 கட்டிடங்களின் தாபரிப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்து உள்ளன. |
| நிறுவன ரீதியான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 29 நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. |
| விவசாய மற்றும் கால்நடை வள அபிவிருத்தி | 2500 குடும்பங்களுக்காக விவசாய மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் |

  

4. ரம்பகண் ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம்

- **குறிக்கோள்கள்:** காணி, விவசாயம் மற்றும் குடியமர்வுச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக ரம்பகண் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தின் மீதியான கீழ்நிலை அபிவிருத்தியை நிறைவு செய்தல்
- **செயற்திட்ட காலம்:** 2012-2023
- **பயனடைந்த மாவட்டங்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை:** அம்பாறை மாவட்டங்களின் மஹா ஓயா மற்றும் பதியதலாவையைச் சேர்ந்த 3,550 குடும்பங்கள்
- **மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு :** ரூபா 1,086 மில்லியன்
- **ஓட்டுமொத்த செலவினம் (டிசம்பர் 2020):** ரூ .487.38 மில்லியன்
- **31 டிசம்பர் 2020 இற்கு நிதி முன்னேற்றம்**

| ஒதுக்கீடு (மில். ரூ.) | பெறப்பட்ட முற்பணம் (மில். ரூ.) | செலவினம் (மில். ரூ.) |
|---|---|---|
| 53.60 | 38.714 | 38.714 |

- **2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

| விபரம் | பௌதீக முன்னேற்றம் 31.12.2020 |
|---|---|
| வீதிகளைப் புனரமைத்தல் | 05 வீதிகளைப் புணரமைத்தல் |
| கட்டிடங்களை நிர்மாணித்தல் | 10 கட்டிடங்கள் |
| காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி (நஷ்டயீடு செலுத்துதல்) | • 540 துண்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன.<br>• 22 துண்டங்களின் கடின மட்டுப்படுத்தல் |
| விவசாய மற்றும் மிருக வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம் | 3550 குடும்பங்களுக்கான மேம்பாடுகள் |

| | |
|---|---|
| நிறுவன ரீதியான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 42 நிகழ்ச்சித் திட்டங்கள் |
| வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 01 நிகழ்ச்சித் திட்டங்கள் |
| சுற்றாடல் | மின்சார வேலிகள் மற்றும் உயிர் வேலிகளின் தாபரிப்பு – 10km<br>மீள் நடுகை – 9550 மரக் கன்றுகள் |







5. **வெலி ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் – எல் வலயம்**

- **குறிக்கோள்கள்:** இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வீட்டுமனை, நீர்ப்பாசன நிலங்கள் மற்றும் தேவையான பௌதீக, சமூக- பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
- **செயற்திட்ட காலம்**: 2012-2023
- **பயனடைந்த மாவட்டங்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை :** அனுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் 6,788 குடும்பங்கள்
- **மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு:** ரூ. 3,957.10 மில்லியன்
- **ஒட்டுமொத்த செலவு (டிசம்பர் 2020):** ரூ .2,288.75 மில்லியன்
- **31 டிசம்பர் 2020 இற்கு நிதி முன்னேற்றம்**

| ஒதுக்கீடு (மில். ரூ.) | பெறப்பட்ட முற்பணம் (மில். ரூ.) | செலவினம் (மில். ரூ.) |
|---|---|---|
| 53.60 | 38.714 | 38.714 |

- **2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்**

| பூர்த்தி செய்யப்பட்ட பணிகளின் விபரம் | பௌதீக முன்னேற்றம் 31.12.2020 |
|---|---|
| காணிகளை புள்ளியிடுதல் மற்றும் அளத்தல் | 1200 துண்டங்கள், 2637 உரிமைப் பத்திரங்கள் |

| | |
|---|---|
| நீர்ப்பாசனக் கால்வாய்களை புனரமைத்தல் | 46 கட்டமைப்புக்கள் மற்றும் 13 மதகுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன |
| கட்டிடங்களை நிர்மாணித்தல் | 14 கட்டிடங்கள் |
| விவசாய மற்றும் கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 4,800 குடும்பங்களுக்காக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் |





**6. அவசர உட்கட்டமைப்பு வசதிகளின் புனர்நிர்மாணம் உட்பட பாரிய மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசன செயற்திட்டங்களை புனரமைத்தல்.**

- **குறிக்கோள்கள்:** பிரதான தலைமைப் பணிகள் மற்றும் நீர்த்தேக்கங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல், நீர்ப்பாசன உட்கட்டமைப்புகளை புனரமைத்தல் மற்றும் மகாவலி முறைமைகளில் நீர்ப்பாசன விநியோக வாய்க்கால்களை அண்மித்த வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல்.
- **செயற்திட்ட காலம் :** 2020 (வருடாந்த அடிப்படையிலான செயற்திட்டம்)
- **பயனடைந்த மாவட்டங்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை:** அனைத்து மகாவலி வலயங்களிலும் உள்ள குடும்பங்கள்
- **மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு :** ரூபா 825 மில்லியன்
- **மொத்த செலவினம் :** ரூபா 704.39 மில்லியன்
- **31 டிசம்பர் 2020 இற்கு நிதி முன்னேற்றம்**

| ஒதுக்கீடு (மில். ரூ.) | பெறப்பட்ட நிதி (மில். ரூ.) | செலவினம் (மில். ரூ.) |
|---|---|---|
| 64.00 | 43.24 | 43.24 |

- **2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு  பௌதீக முன்னேற்றம்**

| விபரம் | பௌதீக முன்னேற்றம் 31.12.2020 |
|---|---|
| பாரிய நீர்த்தேக்கங்களின் உட்கட்டமைப்புப் பணிகள் தொடர்பான புனரமைப்புப் பணிகள் | 98% பிரதான நீர்த்தேக்கங்கள் 08 |

**7. விவசாய  மற்றும் கால்நடை வள அபிவிருத்திச் செயற்றிட்டம்**

- **குறிக்கோள்கள்:** நாட்டிற்கான விவசாய இறக்குமதிகளைக் குறைப்பதற்கும் உள்ளூர் உணவுப் பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உள்ளூர் உணவுப் பாதுகாப்பு மேம்பாட்டையும் அதிகரித்தல்.
- **செயற்திட்ட காலம்:** ஜனவரி முதல் டிசம்பர் 2020 வரை (வருடாந்த அடிப்படை திட்டமாசெயறப்படுத்துவதற்கு   NPD க்கான கோரிக்கை)
- **பயனடைந்த மாவட்டங்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை:** மகாவலி முறைமைகளில் உள்ள அனைத்து விவசாயக் குடும்பங்களும்
- **மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு :** ரூ. 138.10 மில்லியன்
- **ஒட்டுமொத்த செலவு (டிசம்பர் 2020):** ரூ .112.98 மில்லியன்
- **31 டிசம்பர் 2020 இற்கு நிதி முன்னேற்றம்**

| ஒதுக்கீடு (மில். ரூ.) | பெறப்பட்ட முற்பணம் (மில். ரூ.) | செலவினம் (மில். ரூ.) |
|---|---|---|
| 138.10 | 116.18 | 112.98 |

**விவசாயப் பயிர்கள் வளர்ப்பு**

- 2019/ 2020 பெரும் போகத்தின் போது மகாவலி பிரதேசங்களில் நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு உள்ள காணிகளின் நிலப்பரப்பு 94,778 ஹெக்டயராக இருந்ததுடன் மகாவலி வலயங்களில் நெல் உற்பத்தியானது பருமட்டாக 551,956 மெட்ரிக் தொன் ஆக இருந்தது. 2020 ஆம் ஆண்டின் சிறு போகத்தில் நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு உள்ள காணிகளின் நிலப்பரப்பு 74,363 ஹெக்டயராக இருந்ததுடன் பதிவாகியுள்ள நெல் உற்பத்தி 418,235 மெட்ரிக் தொன் ஆகும். 2019/ 2020 பெரும் போகம் மற்றும் 2020  சிறு போகம் ஆகியவற்றில் பதிவு  செய்யப்பட்டுள்ள மொத்த நெல் உற்பத்தி 970,191 மெட்ரிக் தொன் ஆகும். மகாவலி பிரதேசங்களில் நெல்லின் சராசரி விளைச்சல் ஹெக்டயருக்கு 5.7 மெட்ரிக் தொன்னாக இருந்தது.
- ஏனைய பயிர்களை பயிர்ச் செய்கை செய்தல் (ஏனைய துறைகளைச் சேர்ந்த பயிர்கள், பழங்கள், மரக்கறிகள் மற்றும் நிலையான பயிர்கள்) தோராயமாக 42,827 ஹெக்டயர் பரப்பளவில் 23,711 ஹெக்டயரில் ஏனைய துறைகளைச்

சேர்ந்த பயிர்களும், 13,298 ஹெக்டயரில் பழங்களும், 5,818 ஹெக்டயரில் நிலையான பயிர்களும் பயிரிடப்பட்டுள்ளன.

- விவசாயத் திணைக்களத்தின் தரவுகளின்படி, நாட்டின் உள்ளூர் விவசாய உற்பத்தி மற்றும் அபிவிருத்தியில் இ.ம.அ.ச. ஆனது ஒரு செயலூக்கமான பாத்திரத்தை வகிக்கின்ற அதே நேரத்தில் நெல் உற்பத்தியில் 19%, சோயா அவரை உற்பத்தியில் 74%, நிலக்கடலை உற்பத்தியில் 4%, மிளகாய் உற்பத்தியில் 9% பங்களிப்பையும் வழங்குகின்றது. (பயிர் முன்னறிவிப்பு 2019/20 பெரும் போகம் மற்றும் 2020 சிறு போகம்)






### 2.2. ஒவ்வொரு துறையாலும் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளின் முன்னேற்றம்

#### 2.2.1. விவசாயத் துறையின் முன்னேற்றம்

கால்வாய்கள் மற்றும் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் மூலம் மகாவலி வலய குடியேற்றங்களில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றை "சௌபாக்ய (சுபீட்சம்)" தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக ஆரம்பித்துள்ளதுடன், உணவு இறக்குமதி செய்வதற்கான வெளிநாட்டுச் செலாவணி வெளியேற்றத்தைக் குறைப்பதற்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களில் தன்னிறைவை அடையும் நோக்குடன் இலங்கை மகாவலி அதிகாரச பை ஊடாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாய தொழில்நுட்பங்கள் மூலம் தரமான உணவுகள் கிடைப்பதை அதிகரித்தல்.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டம் பின்வரும் நோக்கங்களை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- மகாவலி வலயங்களில் நெல் பயிர்ச்செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் அல்லது குறைந்த பட்சம் தேசிய நெல் உற்பத்திக்கான மகாவலி வலயத்தின் பங்களிப்பை அதே மட்டத்தில் (20% தொடக்கம் 22%) பேணுதல்.
- தேசிய தேவைப்பாடுகளின் அடிப்படையில் மகாவலி நீர்ப்பாசன காணிகளின் ஒரு பகுதியை ஏனைய களப்பயிர்கள், பழங்கள் மற்றும் மரக்கறி உற்பத்திக்காக பன்முகப்படுத்தல்.
- உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக வீட்டுத் தோட்டங்களின் அபிவிருத்தியை அதிகரித்தல்
- அபாயகரமான பொருட்களிலிருந்து விடுபட்டு தரமான உணவு உற்பத்தியை உறுதிப்படுத்துவதற்காக நல்ல விவசாய நடைமுறைகளை விரிவுபடுத்துதல்
- பசளைப் பாவனையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு இரசாயனப் பசளைக்குப் பதிலாக சேதனப் பசளையைப் பயன்படுத்துதல் மற்றும் சேதன விவசாய வலயத்தை மேலும் விரிவுபடுத்துதல்.
- புதிய ஆராய்ச்சிகள் மற்றும் நவீன விவசாய தொழினுட்பங்களின் விரைவான ஒருங்கிணைப்பாக மகாவலி பண்ணைகளை விருத்தி செய்தல்.
- மகாவலி வலயத்தினுள் விதை நெல் மற்றும் ஏனைய நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல்.

**2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம்**

- இலங்கை மகாவலி அதிகாரசபையினால் விவசாயிகளுக்கு மேலதிக பயிர்ச்செய்கைக்கான நடுகைப் பொருட்களையும் விதைகளையும் சலுகை விலையில் வழங்குதல்.
- "சுபீட்சமான வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை வழங்குதல்
  - ஒவ்வொரு பொதியிலும் 5 வகையான விதைகள் உட்பட 99,100 பொதி விதைகளை வழங்குதல்
    (தண்டுக் கீரை, முள்ளங்கி, கீரை, வெண்டைக்காய், வெள்ளரிக்காய், இறகு அவரை)
  - 4 வகையான தாவரங்கள் (கத்தரி, மிளகாய், தக்காளி, குடைமிளகாய்) உட்பட 61,309 தொகுதி தொட்டி செடிகளை வழங்குதல்.
- விவசாய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் விவசாய உபகரணங்களை வழங்குதல் (புதிய விவசாய கிணறுகள் அமைத்தல் (20), விவசாய கிணறுகளை புனரமைத்தல் (300), நுண்ணீர் பாசன அமைப்புகளை அமைத்தல் (110), பசுமை இல்லம் / நிழல் இல்லம் அமைத்தல் (20), மழை உறைகள் அமைத்தல் (20), காளான் உற்பத்தி இல்லம் (20), தேனீ பெட்டி (300), பறக்குடைத் தட்டு (40,000) முதலியன)
- விவசாயிகளுக்கும் கள உத்தியோகத்தர்களுக்கும் விஸ்தரிப்பு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

- மேம்பட்ட விவசாய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்காக 14 மாதிரி தடங்களை நிறுவுதல் (மண் பரிசோதனை மற்றும் உரப் பரிந்துரை, இயந்திர மயமாக்கலுக்கான பெரிய மனை, ஆழமான உழவு, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை)

**மகாவலி வலயத்தின் உணவு உற்பத்தி**

**மகாவலி வலயங்களில் பாரிய விவசாய உற்பத்திகளை உற்பத்தி செய்தல் (2019/20 – பெரும் போகம் மற்றும் 2020- சிறு போகங்கள் உள்ளடங்கலாக)**

| பயிர்கள் | பரப்பளவு (ஹெக்.) | உற்பத்தி (மெ.தொ.) |
|---|---:|---:|
| நெல் | 169,141 | 970,191 |
| சோளம் | 2,831 | 7,434 |
| பச்சை மிளகாய் | 831 | 6,273 |
| சோயா | 3,228 | 7,419 |
| பெரிய வெங்காயம் | 1160.3 | 22,162 |
| பயறு | 1,252 | 1,917 |
| கவ்பி | 911 | 1,072 |
| நிலக்கடலை | 1,161 | 2,202 |
| உளுந்து | 1,378 | 2,026 |
| குரக்கன் | 360 | 614 |
| எள்ளு | 254 | 173 |
| கிழங்குகள் | 1,828 | 28,266 |
| மரக்கறிகள் | 8,358.6 | 113,812 |
| பழங்கள் | 13,298 | 169,355 |

**மகாவலி வலயங்களின் விவசாய் மற்றும் கால் நடை வள உற்பத்திகள்**

| உற்பத்தி | அடைவுகள் 2020 | பெறுமதி (மில்.ரூ.) |
|---|---|---|
| திரவப் பால் | 26.4 (மில்லியன் லீட்டர்) | 1,925 |
| கோழி இறைச்சி | 10,094 (மெ.தொ) | 3,499 |
| நன்னீர் மீன்கள் | 5,275 (மெ.தொ) | 1,515 |
| அலங்கார மீன்கள் | 27 (மில்லியன் சோடிகள்) | 682 |

**2.2.2. வியாபார அபிவிருத்தி**

| **செயற்திட்ட பயப்பு** | **2020 ஆம் ஆண்டின் இலக்குகள்** | **2020 இல் முன்னேற்றம் (2020.12.31 ஆம் திகதிக்கு)** |
|---|---|---|
| | **அலகுகளின் எண்ணிக்கை** | **பூர்த்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை** |
| முதலீட்டு ஊக்குவிப்புகள் | 556 | 420 |
| மகாவலி ஹெல போஜுன் விற்பனை நிலைய அபிவிருத்திச் செயற்திட்டம் | 53 | 40 |
| சுற்றுலா மாளிகைகளின் அபிவிருத்தி மற்றும் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 20 | 10 |
| SMe களுக்கு நிதி உதவி வழங்குதல் | 50 | 65 |
| சுற்றுச் சூழல் சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 15 | 8 |
| தொழில்முயற்சியாளர் மேம்பாடு நிகழ்ச்சித்திட்டங்கள் | 15 | 15 |
| புதிய வியாபாரங்களைத் தொடங்குவதற்காக மனித மூலதனத்தை விருத்தி செய்தல் | 70 | 30 |
| சந்தை ஊக்குவிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 10 | 6 |

**2.2.3. காணிகளின் விநியோகம்**

| **செயற்திட்ட பயப்பு** | | **2020 ஆம் ஆண்டிற்கான இலக்குகள்** | **2020 ஆம் ஆண்டின் முன்னேற்றம் (2020.12.31 ஆம் திகதிக்கு)** |
|---|---|---|---|
| | | **அலகுகளின் எண்ணிக்கை** | **பூர்த்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை** |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் | உத்தரவுப் பத்திரங்கள் | 11,500 | 11,416 |
| | கொடைப் பத்திரங்கள் | 35,300 | 15,591 |

| | | | |
|---|---|---|---|
| அரச காணிகள் கட்டளைச் சட்டம் | வரி | 2,270 | 90 |
| | கொடைப் பத்திரங்கள் | 2,660 | 105 |
| | நிவேதனங்கள் | 68 | 6 |
| | அரச நிறுவனங்கள் | 202 | 8 |

**2.2.4. சுற்றாடல் பாதுகாப்பு**

| செயற்திட்ட பயப்பு | 2020 ஆம் ஆண்டின் இலக்குகள் | 2020 இல் முன்னேற்றம் (2020.12.31 ஆம் திகதிக்கு) |
|---|---|---|
| | **அலகுகளின் எண்ணிக்கை** | **பூர்த்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை** |
| **தேசிய வன மூடுகைகளை 30% வரை அதிகரித்தல்** | | |
| மரக்கன்றுகளின் உற்பத்தி | 1,600,000 (மரக் கன்றுகள்) | 851,602 மரக் கன்றுகள் |
| மர நடுகைகள் | 1,000,000 (மரக் கன்றுகள்) | 557,661 மரக் கன்றுகள் |
| மரக்கன்றுகளின் உற்பத்தி (இழைய வளர்ப்பு) | 300,000 (மரக் கன்றுகள்) | 120,000 மரக் கன்றுகள் |
| **யானை மனித மோதல்களை முகாமைத்துவம் செய்தல்** | | |
| மின் வேலிகளைத் தாபரித்தல் | 10 கி.மீ. | 10 கி.மீ. |
| உயிர் வேலிகளை நிர்மாணித்தல் | 04 (கி.மீ.) இ வலயம்<br>25 (கி.மீ.) பி.வலயம் | 04 (கி.மீ.) இ வலயம் |
| உயிர் வேலிகளைத் தாபரித்தல் | 04 (கி.மீ.) | 04 (கி.மீ.) |
| **உயிர் பல்வகைமைப் பாதுகாப்பு மற்றும் நீரேந்துகளின் தர மேம்பாடு** | | |
| மேல் நீரேந்துகளின் மண் பாதுகாப்பு | 20,000 (மீ.) | 17,991 (மீ.) |
| மேல் நீரேந்துகளின் நீரின் தன்மையைக் கண்காணித்தல் (மாதாந்தம்) | 25 இடங்கள் | 25 இடங்கள் |
| குளங்கள் மற்றும் (கொம்போஸ்ட்) உர உற்பத்தியின் IAS கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம் | 25 குளங்கள் | 13 குளங்கள் |
| **சுற்றாடல் கல்வி மற்றும் ஊக்குவிப்பு** | | |
| சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வுகள் | 120 (நிகழ்ச்சித் திட்டங்கள்) | 38 நிகழ்ச்சித் திட்டங்கள் |
| மகாவலி மரங்களின் விருத்தி (திருஇதுறும்) நிகழ்ச்சித் திட்டம் | 10 (நிகழ்ச்சித் திட்டங்கள்) | 09 நிகழ்ச்சித் திட்டங்கள் |






